MALLIKA MANIVANNAN'S UN PAARVAI NAANARIVAEN

MALLIKA MANIVANNAN

உன் பார்வை நானறிவேன்

காலையில் வீடு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. எல்லோரும் எழுந்து அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க அதன் சாயல் சிறிதும் இல்லாமல் நல்ல உறக்கத்தில் இருந்தாள் கீர்த்தி.

இந்த எல்லோரும் என்பதில் அவள் அன்னை இந்துமதி, தந்தை ராஜேந்திரன், அண்ணன் தண்டபாணி அடக்கம். கீர்த்தியின் அண்ணன் தண்டபாணி பெயருக்கு சற்றும் பொருத்தமில்லாமல் நல்ல அல்ட்ரா மாடர்ன் லுக்கில் இருப்பான்.

ப்ரெஞ்ச் தாடி வைத்து, ஸ்டைலாக ஹேர்கட் செய்து, ஹான்ட்சம் ஆக இருப்பான். அவன் பெயரைக் குறித்து அவனுக்கு மிகுந்த வருத்தம். அவன் அன்னையிடமும் தந்தையிடமும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சண்டையிடுவான்.

“யார்மா உங்களை இவ்வளவு பழைய பேரா வைக்கச் சொன்னது.”

“அப்படி எல்லாம்

சொல்லக்கூடாது தண்டபாணி சாமிக்கு வேண்டி வச்ச பேரு.”

“அந்த பேரை வச்சிட்டு வேற பேரைக் கூப்பிடறது தானே.”

“வச்ச பேரே கூப்பிட்டாதான்டா அதன் பலனை முழுமையா கொடுக்கும்.”

“என்ன பலன் கொடுக்குதோ தெரியலை” என்று சலித்துக் கொண்டான்.

“என்ன பலன் கொடுக்கலை எம்.பி.ஏ. படிச்சிருக்க... ஒரு பெரிய கம்பெனில மார்க்கெட்டிங் லைன்ல இருக்க... கை நெறைய சம்பாதிக்கற... அப்புறம் என்ன?”

“அப்புறம் என்னவா?... மார்க்கெட்டிங் என்ன சாதாரண வேலையா. போய் ஒருத்தன் கிட்டயும் தொண்ட தண்ணி வத்த பேசணும். அவனை எங்க தயாரிப்பு வாங்க ஒத்துக்க வைக்கணும். எவ்வளவு வேலை செய்யணும் தெரியுமா... எத்தனை கேள்வி கேப்பானுங்க தெரியுமா...” என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

“அதுக்கு தானே தண்டம் உனக்கு

இவ்வளவு சம்பளம் கொடுக்கறாங்க...” என்று அவள் துயில் கலை எழுந்து வந்த கீர்த்தி சொன்னாள்.

பதில் பேசாமல் அவன் அன்னையைப் பார்த்து முறைத்தான் தண்டபாணி, “சொன்னேனே கேட்டீங்களா” என்பதுபோல்.

இதைப் பார்த்த அவர்களின் அன்னை கடிந்தார். “காலைல எழுந்திரிக்கும்போதே அவன் கூட வம்பு பண்ண ஆரம்பிக்கறியா.”

“ஓ அப்ப கொஞ்ச நேரம் கழிச்சு பண்ணினா பரவாயில்லைபா” என்றாள் கீர்த்தி.

“ஏய் காலைல வம்பிழுக்காத ஒழுங்கா இரு இல்ல, என்கிட்ட அடி வாங்குவ.”

“போடா தண்டம்” என்று அவனிடம் அகப்படாமல் தன் தந்தையின் பின் ஒளிந்தாள்.

“கீர்த்திம்மா இப்படி பண்ணக்கூடாது” என்று அவள் தந்தை கடியும் போதே...

“நானாவது பேர்ல மட்டும்தான் தண்டம் வெச்சிருக்கேன். நீ மொத்தமாகவே பெரிய தண்டம்டி” என்று அவள் அண்ணன் கத்தினான்.

“ஸாரி தண்டு கோபிக்காதே” என்று சட்டென்று அடங்கி கீழே இறங்கி வந்தாள். அவளின் அந்த த்வனியே ஏதோ வேலையாக வேண்டும் அது தான்.

அவள் இறங்கி வருகிறாள் என்று தண்டபாணிக்கு உணர்த்த என்ன கெஞ்சினாலும் வேலைய செய்யக் கூடாது என்று முடிவெடுத்தவனாக... “எந்த வேலையும் செஞ்சி குடுக்க மாட்டேன் போடி” என்று சொல்லிச் சென்று விட்டான்.

அவன் பின்னாடியே ஓடினாள். “அண்ணா, என் செல்ல அண்ணா இல்ல, காலேஜ் வரைக்கும் ட்ராப் பண்ணேன். நான் சீக்கிரம் நீ கிளம்பறதுக்குள்ள குளிச்சி ரெடியாயிடறேன். நான் இன்னைக்கு சீக்கிரம் போகணும். என் ப்ராஜெக்ட் ப்ரெசன்டேஷன்” என்று கெஞ்சலில் இறங்கினாள் கீர்த்தி.

கீர்த்தியும் எம்.பி.ஏ. மாணவியே.

அவள் அண்ணனைப் பின்பற்றியே அந்த படிப்பை எடுத்தாள். அவள் அண்ணனை எழும்போதே சீண்டினாலும், அவன் தான் அவளுக்கு எல்லா விஷயத்திலும் ரோல் மாடல். மிகுந்த பாசம் அவள் மீது. வெளியில் சீண்டினாலும், சண்டையிட்டாலும் அண்ணன் சொல்லே வேதவாக்கு.

"என்னைக்குதான் திருந்துவாங்களோ" என்று இருவரையும் பற்றிப் புலம்பியபடியே அவர்கள் அன்னை டிபன் வேலையைப் பார்க்கச் சென்றார்.

கீர்த்தி அவன் பின்னோடு சென்று பார்க்க, யாருடனோ தொலைபேசியில் அவள் அண்ணன் உரையாடிக் கொண்டிருக்க,

"என்னை கொண்டு போய் விடறேன்னு சொல்லு" என்று அவனை தொலைபேசியில் பேசவிடாமல் நச்சரிக்க, "சரி விடறேன்... இப்போ போன் பேச விடு" என்று அவன் எரிந்து விழுந்த பிறகே இடத்தை விட்டு அகன்றாள்.

அதுதான் கீர்த்தி சின்ன

விஷயமாக இருந்தாலும் வேலையை முடித்த பிறகே இடத்தை விட்டு நகர்வாள்.

அவள் அந்த இடத்தை விட்டு அகன்றதும், "என் வீட்டு குட்டி பிசாசு என்னை காலையிலேயே டென்ஷன் பண்ணிட்டா" என்று உரிமையோடு யாரிடமோ போனில் பேசிக்கொண்டு இருந்தான்.

அந்த யாரோ அவன் புது நண்பன் அரவிந்த். இந்த ஒரு மாதமாக தான் பழக்கம். அது நல்ல நட்பாக இருவருக்குள்ளும் உருவெடுத்துக் கொண்டிருந்தது.

அவன் போன் பேசி முடித்து வரும்போதே கீர்த்தி தயாராகி வந்து விட்டாள். "ஏன் கீர்த்தி குளிச்சியா, இல்ல... சும்மா தண்ணிய வேடிக்கை பார்த்துட்டு வந்துட்டியா."

"என்னை என்ன உன்னை மாதிரின்னு நெனச்சியா... ஆமா நீ யாரோட காலைல இவ்வளவு நேரம் போன் பேசுற" என்றவள்... அவன் பதிலை எதிர்பாராது,

"அம்மா எதுக்கும் உன் பையன்

மேல ஒரு கண்ணு வெச்சிக்கோ. ரொம்ப நேரம் இப்ப எல்லாம் யார் கூடவோ போன்ல பேசறான்" என்று அவன் அன்னையிடம் வத்தி வைத்தாள்.

உடனே அவன் அம்மா அவனைப் பார்க்க "அம்மா" என்று அவரைப் பார்த்துக் கத்தினான். "சும்மா இந்த பிசாசு சொல்லுதுன்னு அப்படிப் பார்க்காத. அது என் ப்ரெண்ட் அர்விந்த்" என்றான்.

"ஓ, பையனோடவே நீ இவ்வளவு நேரம் பேசினா, இன்னும் பொண்ணுங்க கூட எவ்வளவு நேரம் பேசுவ" என்று அதற்கும் வாரினாள் கீர்த்தி.

"ஏய் காலைல உயிரை எடுக்காத அடங்கி தொலைடி" என்று கீர்த்தியைப் பார்த்து கத்தியவன், "முதல்ல நீ கொட்டிக்கோ, உன்னைக் கொண்டு போய் காலேஜ்ல தள்ளிட்டு வர்றேன். அப்புறம் தான் நான் வேற வேலையே பார்ப்பேன்" என்று மிகவும் டென்ஷனாகிக் கத்தினான்.

தண்டபாணி நிஜமாகவே மிகவம் டென்ஷன் ஆகி விட்டான் என்று உணர்ந்த கீர்த்தி, சற்று அமைதியானாள்.

அவன் அவளை வண்டியில் ஏற்றிக் கிளம்பும்போது, “ஸாரி அண்ணா” என்றாள்.

அவள் சாரியால் சற்று கோபம் மட்டுப்பட்டவன், “சரி விடு” என்றான்.

கீர்த்தியைக் கொண்டு போய் அந்த பிரபலமான பெண்களுக்கான கல்லூரியில் இறக்கிவிட்டு, “பெஸ்ட் ஆஃப் லக்” என்றவன் “நல்லா பண்ணு கீர்த்தி. இதில் விளையாட்டுத் தனமெல்லாம் காட்டாத. இது உன்னோட எதிர்காலம்” என்றான்.

‘சரி’ என்பதுபோல் தலையாட்டினாள்.

காலேஜ் வந்ததும் விளையாட்டுத் தனமெல்லாம் போய் ஒரு தீவிரம் வந்துவிட்டது. ப்ரெஷன்டேஷன் நன்றாகவே செய்தாள். அது அவளின் கடைசி வருடம், கடைசி பரீட்சை. அதனால் தான் ப்ராஜெக்ட் ப்ரெஷன்டேஷன்.

பிறகு தோழிகளிடம் விடைபெற்று வீட்டிற்குக் கிளம்பினாள்.

பஸ் விட்டு இறங்கி, வீட்டை

நோக்கி நடந்தாள். வீட்டை நெருங்கும் சமயம் தான் கவனித்தாள். அந்த வீட்டிற்கு வெளியே சற்று தள்ளி ஒரு இளைஞன், வண்டியில் உட்கார்ந்தபடியே ஒரு காலை தரையில் ஊன்றி அவள் வீட்டையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

யாரது தங்களுடைய வீட்டை இப்படி உற்று உற்று பார்ப்பது என்று அவனைப் பார்த்தாள்.

அவன் இவளைக் கண்டு கொண்ட மாதிரியே தெரியவில்லை. வீட்டிற்குள் நுழைந்தவள் கேட்டை சாத்தி விட்டு அவனை பார்த்தாள். அப்போதுதான் இவளைப் பார்த்தான் அவன்.

கேட்டிற்கு உள்ளே நின்று அவனையே சற்று நேரம் பார்த்தாள். அவன் பார்வையை வேறுபுறம் திருப்பினான். உள்ளே செல்வதுபோல் சென்றவள், சட்டென்று வெளியே வந்து பார்த்தாள், இன்னும் அவன் தங்கள் வீட்டைதான் பார்த்துக் கொண்டிருக்கிறானா என்று பார்க்க... அவன் அவர்கள் வீட்டை தான் பார்த்துக் கொண்டு இருந்தான்.

இவள் திடீரென்று திரும்ப வந்ததும், முகத்தை வேறுபுறம் மறுபடியும் திருப்பினான். இவன் தங்கள் வீட்டை தான் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நிச்சயமாக நினைத்த கீர்த்தி... "யார் நீங்க, உங்களுக்கு என்ன வேண்டும்" என்றாள் அவனைப் பார்த்து,

கீர்த்தி கேள்வி கேட்பாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை போலும், அவளைப் பார்த்தவாறு இருக்க...

"ஹலோ, மிஸ்டர்! யார் நீங்க? எதுக்கு எங்க வீட்டையே பார்த்துட்டு இருக்கீங்க" என்று மறுபடியும் சற்று சத்தமாகக் கேட்க...

"தண்டபாணி" என்றான் ஒற்றை வார்த்தையாக.

திரும்பி வீட்டைப் பார்த்தாள் அவன் வண்டி நின்று கொண்டு தானிருந்தது.

"அவனைப் பார்க்கணுமா" என்றாள் மறுபடியும் சத்தமாக.

"ஆமாம்" என்பதுபோல் தலையசைத்தான்.

வீட்டிற்கு உள்ளே சென்று பார்த்தாள், தண்டபாணி அவசரமாக கிளம்பிக் கொண்டிருப்பது தெரிந்தது.

“யார் தண்டு அது வீட்டுக்கு வெளியே நம்ம வீட்டையே பார்த்துட்டு நிற்பது.”

“என் பிரெண்ட், என்னை கூப்பிட வெயிட் பண்றான்.”

“ஏன் வீட்டுக்குள்ள கூப்பிட வேண்டியது தானே.”

“அவன் வரமாட்டான், ரொம்ப ரிசர்வ் டைப்.”

“அதுக்கும் வீட்டுக்குள்ள வர்றதுக்கும் என்ன சம்பந்தம்.”

“வரமாட்டேங்கறான்னா விடேன் நீ ஏன் நோன்டற” என்று கீர்த்தியிடம் எரிந்து விழ...

“போடா ஏதோ உன் பிரெண்ட்ன்னு மதிச்சு கேட்டேன் பாரு, என்னைச் சொல்லணும்” என்று பதிலுக்குக் கீர்த்தியும் கத்திவிட்டுப் போனாள்.

கீர்த்தி கத்தும்போதே தண்டபாணி கிளம்பி விட்டிருந்தான்.

“காலையில் அவ்வளவு அட்வைஸ் பண்ணுனான். இப்போ எக்ஸாம் எப்படி எழுதியிருக்கன்னு கேட்காம கூட போறான். என்னைவிட அந்த பிரெண்ட் அவ்வளவு முக்கியமா” என்று சற்றுமுன் பார்த்த அந்த மனிதனை அளவிட ஆரம்பித்தாள்.

மாநிறமாக இருந்தான். வண்டியில் இருந்ததால் உயரம் சரியாகத் தெரியவில்லை. அவன் அவளைப் பார்த்தது சில நொடிகளே. கீர்த்தியின் அண்ணன் பெயரை சொல்லும்போது பார்த்தான். அந்தப் பார்வை தீர்க்கமான பார்வை. பார்ப்பவரை கட்டிப் போடும் பார்வை.

பார்வையின் தீட்சண்யத்தை கீர்த்தி உணர்ந்தாலும் தைரியமாக கீர்த்தி அவனைப் பார்த்துக் கேள்வி கேட்டாள்.

அப்போது அதைத்தான் அவனும் நினைத்துக் கொண்டிருந்தான். அவன் அரவிந்த், தண்டபாணியின் நண்பன். தண்டபாணி அவனை வீட்டினுள்

பலமுறை அழைத்தும், அவன் தான் சங்கோஜப்பட்டு வராமல் வெளியேயே நின்றிருந்தான். அதுவும் சற்று தள்ளிதான் நின்றிருந்தான். அப்படியும் விட்டேனா என்று அவனை பார்த்துவிட்டாள் கீர்த்தி.

கீர்த்தி தன்னை பார்த்து "யார் நீங்க, என்ன வேணும்" என்பது மாதிரியான கேள்விகளை கேட்டதை, அரவிந்த் தண்டபாணியிடம் சொல்லவில்லை. ஏனோ சொல்லத் தோன்றவில்லை. ஆனால் கீர்த்தி மிகவும் தைரியமான பெண் என்று மனதினுள் நினைத்தான்.

கீர்த்தியும் வெகு நேரம் அவனைப் பற்றி தான் நினைத்துக் கொண்டிருந்தாள். "என்ன மாதிரியான பார்வை அது. ஆட்களை அச்சுறுத்தும் பார்வை. அப்படிப் பார்த்தால் பயந்து விடுவார்களா என்ன? நான் பயப்பட மாட்டேன்" என்று மனதினுள் அவளுக்கு அவளே சொல்லிக் கொண்டாள்.

இரவு தண்டபாணி வீட்டிற்கு வந்ததுமே, அவனை பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள். "யார் உன் அந்த

பிரெண்ட். என்னை விட முக்கியமான பிரெண்ட். என்னோட ப்ரெசன்டேஷன் எப்படி இருக்குன்னு கூட கேட்காம அப்படி ஓடற.”

“ஆமா, எப்படி பண்ணின” என்றான் தண்டபாணி.

“என்ன எப்படி பண்ணின. நீ இனிமேல் ஒண்ணும் கேட்க வேண்டாம். நான் கேட்டதுக்கு பதில் சொல்லு. யார் உன் அந்த பிரெண்ட். பார்க்கறதே பயமுறுத்தற மாதிரி பார்க்கிறான். அவன் பேர் என்ன. என்ன பண்றான்?

“உனக்கு அவனைப் பத்தி தெரியணும்னு சொல்லு.”

“ஆமா என்னை விட முக்கியமா அவனைப் பார்க்க போன இல்ல. யார் அவன்னு எனக்குத் தெரியணும்.”

“தெரிஞ்சு நீ என்ன பண்ணப்போற.”

“என்னவோ பண்றேன். அதுவா பேச்சு யார் அவன்.”

“அதற்குள் அவர்களின் அம்மா வந்து, “என்னடா இங்க சத்தம்” என்று

கேட்டுக் கொண்டே வந்து பார்த்தார்.

“ஒண்ணுமில்லைமா என் பிரெண்ட் பத்தி நோண்டி கேட்கற.”

“அவன் பிரெண்ட் யாரு என்னன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா, தெரிஞ்சா என்ன தப்பு” என்றாள் கீர்த்தி. அவளுக்கு தண்டபாணி விவரங்கள் தராமல் இருக்க, இருக்க, அரவிந்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது.

“நீ தான் சொல்லேண்டா யாரு என்னன்னு” என்று அவன் அம்மா இப்போது அவனைப் பார்த்துக் கேட்க...

“நீ என்னம்மா மாத்தி மாத்தி பேசற” என்றான் தண்டபாணி.

“அம்மா பேச்சை மாத்தறான் விடாதே” என்று காரியத்திலேயே கண்ணாக இருந்தாள் கீர்த்தி.

“அவன் என் பிரெண்ட் அரவிந்த் மா. அவங்கப்பாவோட பர்னிச்சர் ஷோரூம் இருக்கு பார்த்துக்கறான்.”

“உனக்கு எவ்வளவு நாளாடா பழக்கம்.”

“இப்போ கொஞ்சம் மாசமா தான். என் பிரெண்டோட பிரண்ட் அப்படி தான் பழக்கமாச்சு. அப்பறம் அவனை எனக்கு ரொம்பப் பிடிச்சிடுச்சு மா. ரொம்ப அமைதி. ரொம்ப நல்ல மாதிரி. அதிகம் பேசவே மாட்டான்.”

“என்ன படிச்சிருக்கான்” என்றாள் கீர்த்தி.

“தெரிஞ்சு நீ என்ன பண்ணப்போற.”

“நான் என்னவோ பண்றேன். எத்தனை தடவைதான் என்ன பண்ணப் போற கேட்ப, சொல்ற மாதிரி படிக்கலையா” என்று நக்கலாய் கேட்க, ரோஷம் வந்த தண்டபாணி, “அவன் பி.ஈ. முடிச்சிருக்கான் போதுமா. இன்னும் எதுவும் நான் சொல்ல மாட்டேன்” என்றான் தண்டபாணி.

“ஏன் சொல்லமாட்டேன்னு நான் சொல்றேன்” என்றாள் கீர்த்தி.

“ஏன்” என்பது போலப் பார்த்த தண்டபாணியிடம், “ஏன்னா உனக்கே தெரியாது” என்றாள் நக்கலாய்.

அதுதான் உண்மையும் கூட... ஆனால் அதைப் பற்றி சொல்ல பிரியப்படாத தண்டபாணி, "போடி உன்னை மதிச்சு சொன்னேன் பாரு, என்னைச் சொல்லணும்" என்றான் அவளைப் போலவே.

"நீ எங்க சொன்ன, நானே சொல்ல வச்சேன்னு சொல்லு" என்று கீர்த்தி பதிலுக்கு வாய் பேச...

"ரெண்டு பேரும் பேசாம வந்து சாப்பிடுங்க" என்று ஒரு அதட்டல் போட்டார் அவர்களின் அன்னை.

"கேக்கறது எல்லாம் அவளோட சேர்ந்து கேட்டுட்டு இப்போ என்ன சாப்பிடுங்க. எனக்கு ஒண்ணும் வேண்டாம் போ" என்று தண்டபாணி எழுந்து செல்ல... அவன் பின்னாலேயே அவன் அன்னை, "டேய் கொஞ்சமாவது சாப்பிடுறா" என்று கெஞ்சிக் கொண்டே சென்றார்.

"போட்டாண்டா ஒரு சீனை" என்றாள் கீர்த்தி.

"அம்மா அவ சொல்றான்னு என்னைக் கேள்வி கேக்கறியா" என்று

தண்டபாணி அன்னையிடம் சண்டையிட்டுக் கொண்டிருக்க...

அதே வேலையாய் தான் அரவிந்தும் அவன் வீட்டில் செய்து கொண்டிருந்தான். அவன் அன்னை ராணியிடம்,

"என்ன அம்மா சும்மா எங்க போன, ஏன் இவ்வளவு நேரம் கேள்வியா கேட்டுத் தள்ளுறீங்க."

"அப்பா எத்தனை தடவை போன் பண்ணிட்டார் தெரியுமா அப்படி எங்கடா போன."

"எங்க போனா உங்களுக்கென்ன, நான் என்ன பொண்ணா, எங்கயும் போகக்கூடாது வரக்கூடாதுன்றதுக்கு."

"போயேண்டா யாருடா வேண்டாம்ன்னு சொன்னா, லீவு நாள்ல போ, அதை விட்டுட்டு ஷோரூம் கவனிக்காம சும்மா சுத்திட்டு இருந்தா என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தம், எனக்கு பிடிக்கலைன்னு அர்த்தம்."

"இந்தப் பேச்சு பேசாதன்னு

எத்தனை தடைவ சொல்லியாச்சு. என்ன பிடிக்கலை. நீ பாத்துக்காம வேற யாருடா பார்ப்பா."

"யாரோ பாக்கட்டும் எனக்கு என்ன?"

"இப்படி நீ பேசறதுக்கா உங்கப்பா தொழிலை இவ்வளவு வளர்த்து வச்சிருக்கார். இங்க இருக்கிறது மட்டுமில்லாம இன்னும் ரெண்டு வேற வேற சிட்டில வேற ஆரம்பிச்சிருக்கார். இப்படியெல்லாம் பேசாத நீதான் பார்த்துக்கணும்" என்றார் அவன் அன்னை.

2

அரவிந்தின் குடும்பம் முன்பு மிகவும் பணக்கார வகையைச் சேர்ந்த குடும்பம். ஆனால்... இப்போதும் அவர்கள் வசதியானவர்களே, முன்பு அளவு இல்லை. முப்பாட்டன், பாட்டன் என்று அழித்தது போக எஞ்சியிருந்தது சொற்பமே.

அதில் அரவிந்தின் தந்தை புத்திசாலித்தனமாக பிஸினெஸ்

ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

சென்னை சிட்டியில் இரண்டு கிளைகள் இருக்க, அதே பர்னிச்சர் ஷோரூம் இப்போது கோவையிலும், மதுரையிலும் ஆரம்பித்திருக்கிறார். நல்ல லாபம் தரும் தொழில்.

ஆனால் ஏனோ அரவிந்திற்கு அதில் நாட்டமில்லை. அவன் பி.ஈ. முடித்து மேலே படிக்கவேண்டும் என்று விரும்பினான். அவன் அப்பா விடவில்லை. அவனது கனவே பாரின் போய் வேலை செய்வதுதான்.

அவனது தந்தையோ மிகவும் தேசப்பற்று மிக்கவர். தான் உயிருடன் இருக்கும்வரை மகன் அன்னிய நாட்டில் போய் வேலை செய்வதை அனுமதிக்க முடியாது என்று விட்டார்.

இப்படி தனது அத்துணை ஆசைகளுக்கும் தடை போட்ட தன் தந்தையின் எந்த ஆசையையும் நிறைவேற்றக் கூடாது என்ற ஒரே ஆசைதான் அரவிந்திற்கு.

அதனாலேயே தங்கள் தொழிலில்

தனக்கு விருப்பம் உள்ளதா இல்லையா என்றே இதுவரை அரவிந்த் ஆராய முற்பட்டதில்லை. நித்தமும் தன் அன்னையுடனும், தன் தந்தையுடனும் போராட்டம்தான்.

காலையில் போய் சிறிது நேரம் இருப்பான். அதுவே பெரிய விஷயம் அவனிற்கு. பின்பு தன் நண்பர்களுடன் ஊர் சுற்றக் கிளம்பிவிடுவான்.

நிறைய நண்பர்கள் அரவிந்திற்கு. அதில் தற்போது அறிமுகமாகி இருப்பவன்தான் தண்டபாணி. அவனை அரவிந்திற்கு மிகவும் பிடித்துவிட்டது. அதே மாதிரி தண்டபாணிக்கும் மிகவும் அரவிந்தைப் பிடித்து விட்டது.

இந்த ஒரு மாத காலப் பழக்கமே, இருவருள்ளும் ஒரு மிகச் சிறந்த நட்பை ஏற்படுத்திக் கொண்டு விட்டது.

அரவிந்தின் தந்தை சிதம்பரம், தாய் ராணி, ஒரே ஒரு தங்கை நளினி. அவளுக்கு திருமணம் ஆகிவிட்டது. நளினியின் கணவர் மாதவனுக்கு ஒரு தங்கை உண்டு. அவள் வனஜா, அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் அரவிந்த்

என்பது தான் அவனது குடும்பத்தார் அனைவரின் விருப்பமும்.

அதை சமீப காலமாக ஜாடை மாடையாக அரவிந்தின் காதுகளில் அவனது குடும்பத்தார் போட ஆரம்பித்திருந்தனர். அது வேறு அரவிந்திற்கு எரிச்சலைக் கிளப்பிக் கொண்டிருக்க, ஷோரூமிற்கு போவதைத் தவிர்க்க ஆரம்பித்தான்.

இதற்கு வனஜா, அரவிந்திற்கு நல்ல சினேகிதி கூட. ஆனாலும் இந்தப் பேச்சு அரவிந்திற்கு ரசிக்கவில்லை. அரவிந்தின் தங்கை நளினிக்குத் திருமணமாகி ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு பெண் குழந்தை ஆறு வயதில் இருக்கிறாள் பெயர் அகல்யா.

நளினிக்கு திருமணமானபோது வனஜா சிறு பெண், பதிமூன்றோ, பதினான்கோ அந்த வயதில் தான் இருந்தாள். அரவிந்த் அவளிடம் சிறு பெண் என்ற முறையிலேயே பழகி வந்தான். அவள் வளர வளர இருவருக்குள்ளும் ஒரு நல்ல நட்பு உருவானது.

அரவிந்திற்கு நன்கு தெரியும். வனஜாவிற்கும் அதை மீறி தன் மேல் எந்த அபிப்பிராயமும் இருக்காது என்று. எப்படி இதை தவிர்ப்பது, இந்தக் கல்யாணத்தில் தனக்குச் சிறிதளவும் உடன்பாடில்லை என்று தன் பெற்றோர் ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள் என்று அந்தக் கோபாம் வேறு அதிகமாக அவன் பெற்றோரின் மீது அவனுக்கு இருந்தது.

அதனாலேயே ஷோரூமிற்கும் போகாமல் தன் தந்தையை அலைக்கழித்துக் கொண்டிருந்தான். அவன் அன்னையையும் அவனுடன் வழக்காட வைத்தான்.

அவன் பெற்றோர்களுக்குமே அவனை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று தெரியவில்லை. அதுவும் அவன் அப்பாவிற்கு மிக நிச்சயமே, அவன் வெளிநாடு போய் சம்பாதிக்க நினைப்பதை விட அதிகமாக... பல மடங்கு அதிகமாக அவருடைய ஷோரூம் பிஸினெஸ் ஈட்டிக் கொடுக்கும் என்று.

அதனால் அவன் என்ன சொன்னாலும், செய்தாலும் அவனை

வெளிநாடு அனுப்பும் உத்தேசம் அவருக்கு சற்றும் இல்லை. இந்த குழப்பங்களினால் எந்த வேலையிலும் ஈடுபடாமல் நண்பர்களோடு வெட்டியாக சுற்றுவதைத்தான் பல வருடமாக செய்து கொண்டிருந்தான்.

இப்போது புதிதாக கிடைத்துள்ள நண்பன்தான் தண்டபாணி. அவன் மார்க்கெட்டிங் லைனில் இருப்பதால் அவன் செல்லுமிடமெல்லாம் அரவிந்தும் அவனோடு சுற்றிக் கொண்டிருந்தான்.

அவன் அம்மா திட்டிய பிறகு அந்த இரவு நேரத்திலும், தன் நண்பனை அழைத்தான் அரவிந்த்.

“டேய் பாணி, செம திட்டுடா வீட்ல இன்னைக்கு. ஆனா அவங்க திட்டத் திட்டதான் எனக்கு வெளில சுத்தணும்னே ஆசை வருதுடா” என்றான்.

‘எங்க வீட்ல மட்டும் உன் கூட சேர்ந்த பிறகு கம்மியாவா திட்டு வாங்கறேன்’ என்று மனதிற்குள் நினைத்த தண்டபாணி அதை அரவிந்திடம் சொல்லாமல், வேறு பேசி பேச்சை மாற்றினான்.

அதுதான் அரவிந்த் ஒன்றை நினைத்து விட்டால் அதிலேயே நிற்பான்.

கீர்த்திக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவ்வளவு திட்டிய பிறகும் இவன் அந்த அரவிந்திடம் பேசுகிறானே என்று சற்று சுவாரசியம், ஏற்பட... அன்றுதான் பார்த்த அரவிந்தை நினைத்தபடியே உறங்கிப் போனாள்.

மறுநாளும் வாயடித்தபடியே பொழுது நன்றாக விடிந்தது கீர்த்திக்கு. தண்டபாணியை வம்புக்கு இழுத்துக் கொண்டிருந்தாள் காலையிலேயே.

அவளுடைய அம்மா கூட அவளை திட்டினார். "வேலைக்குப் போற பையனை, காலையில் அமைதியா வேலைக்குப் போக விடு கீர்த்தி அவனை வம்பிழுக்காத" என்று அதட்டினார்.

"அப்போ என்னை இன்னிக்கு வெளில கூட்டிட்டுப் போக சொல்லு" என்று டீலிங் பேசினாள்.

"எங்கடி வெளில" என்று தண்டபாணி கேட்க...

"எங்கேயாவது, நான் வெளில

போய் ரொம்ப நாள் ஆகுது.”

“அடிப்பாவி டெய்லி காலேஜ் போயிட்டு வர்றது எல்லாம் என்ன?”

“அதெல்லாம். உன் கூட வெளில போன மாதிரி கணக்கா... நம்ம போறோம்” என்று பேச்சை முடித்தாள்.

தண்டபாணியும் அதை அறிந்துதான் இருந்தான். தன் தங்கையை அவன் வெளியே கூட்டிச் சென்று நிறைய நாட்கள் ஆகி விட்டதால்

“சரி” என்றான்.

“நான் வெயிட் பண்ணிட்டே இருப்பேன். அண்ணா சீக்கிரம் வந்துடு” என்று பலமுறை அவனிடம் கீர்த்தி சொல்லி அனுப்பினாள்.

“சரி, சரி” என்று அவளிடம் சொல்லி சென்ற தண்டபாணியை மாலையில் எங்கோ அரவிந்த் கூப்பிட, கீர்த்தியிடம் “வருகிறேன்” என்று சொன்னதையே மறந்து அவனோடு சென்று விட்டான் தண்டபாணி.

இரவு எட்டு மணிக்கு மேல் தண்டபாணி வீடு திரும்ப, அங்கே

வாசலிலேயே அமர்ந்திருந்தாள் கீர்த்தி. அப்போதுதான் தண்டபாணிக்கு அவளை வெளியே அழைத்துச் செல்கிறோம் என்று சொன்ன ஞாபகமே வந்தது.

“சாரி, சாரி! கீர்த்தி, மறந்துட்டேன்... ஒரு போன் பண்ணியிருக்கலாம் இல்லை” என்று அவள் அண்ணன் எவ்வளவு சமாதானப்படுத்தியும் இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை. அவர்கள் அம்மாகூட சொன்னார், “சாயந்தரம் ஆறு மணி இருந்து இங்கதாண்டா உட்கார்ந்திருக்கா. உனக்கு போன் பண்ணறன்னு சொன்னாலும் விடமாட்டேங்கறா. அப்படி என்னைவிட என்ன ஞாபகம் அவனுக்குங்கறா. உயிரை எடுக்கறீங்கடா ரெண்டு பேரும்” என்று அவனின் அன்னை கோபமாக வருத்தப்பட...

“இப்போ போயிட்டு வரட்டுமா அம்மா” என்று அவன் அம்மாவிடத்தில் அனுமதி கேட்க... அவள் அமர்ந்திருந்த கோலத்தைப் பார்த்த அவள் அன்னையும், “சரி போயிட்டு வாங்க, ஆனா ரொம்ப தூரம் போகாதீங்க” என்று அனுமதி

கொடுத்தார்.

அப்போதும் இருந்த இடத்தை விட்டு கீர்த்தி அசையவில்லை. “வா கீர்த்தி” என்று கட்டாயப்படுத்தி அவளை அழைத்துக் கொண்டு போனான் தண்டபாணி.

அவன் சென்ற இடம் சற்று தூரத்தில் உள்ள ஐஸ்க்ரீம் பார்லர்.

கீர்த்திக்கு ஐஸ்க்ரீம் என்றால் மிகவும் இஷ்டம் அதை அறிந்தே அங்கே அழைத்துச் செல்ல... அவள் முகம் சற்று தெளிந்தது. கோபத்தை விட்டது.

“காலையில் எத்தனை தடவ சொல்லி அனுப்பினேன், அப்புறமும் ஏன் தண்டு இப்படி பண்ணின” என்று அவள் பொறிய... மறுபடியும் தண்டபாணியின் போன் ஒலித்தது.

அவன் எடுத்துப் பார்க்க மீண்டும் அரவிந்த்... எடுத்து, “என்னடா” என்றவுடனே, “எங்கேடா இருக்க” என்றான்.

“இங்கே தான்” என்று லேண்ட் மார்க் சொல்ல... யாரோடு இருக்கிறான்

என்று கேட்காமலேயே போனை வைத்தான் அரவிந்த்.

எதற்கு அழைத்தான் என்று குழப்பத்தோடே இருந்தவனை கீர்த்தியின் குரல் கலைத்தது. “என்னை விட உனக்கு அப்படி என்ன முக்கியமான வேலை... அதுக்குள்ளேயே என்னை மறக்க ஆரம்பிச்சிட்டியா” என்று கத்திக் கொண்டிருந்தாள்.

இவன் அவளை சமாதானப்படுத்திக் கொண்டு இருக்கும் போதே அரவிந்த் அங்கே வந்துவிட்டான், “ஹாய் பாணி” என்றழைத்தபடியே.

“என்னது பாணியா” என்று கீர்த்தி பார்க்க, அப்போது தான் தண்டபாணி கீர்த்தியுடன் இருந்ததையே பார்த்தான் அரவிந்த்.

“சாரி நீ உன் தங்கையோட இருக்கியா” என்று சொல்லியபடி அவன் திரும்பி போகப் போக...

“டேய் இருடா, ஒண்ணும் பிரச்சனையில்லை” என்று அவன் கையைப் பிடித்து இழுத்து அமர வைத்தான் தண்டபாணி.

“இந்த அண்ணா ஏன் இவனுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறான்” என்று அரவிந்தையே ஆராயும் பார்வை பார்த்திருந்தாள் கீர்த்தி.

கீர்த்தி தன்னை ஆராயும் பார்வை பார்ப்பது அரவிந்திற்கும் புரிந்தது. அதனால் அவனுக்குப் பேச வாய் வரவில்லை. அமைதியாக அமர்ந்து கொண்டான்.

அங்கே சட்டென்று ஒரு கனமான அமைதி நிலவியது. தண்டபாணி தான் அந்த அமைதியைக் கலைத்தான். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தான்.

“கீர்த்தி இது அரவிந்த் என்னோட ப்ரெண்ட், அரவிந்த் இது கீர்த்தி என்னோட தங்கை.”

வேறு வழியில்லாமல் ஒருவருக்கொருவர், “ஹலோ” சொல்லிக் கொண்டனர்.

இருவரும் ஒருவருக்கொருவர் “ஹலோ” சொல்லிக் கொண்டதோடு சரி, அதன் பிறகும் ஒருவரை ஒருவர் பார்வையால் அளவெடுத்தபடி

அமர்ந்திருந்தனரே தவிர்;த்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. மீண்டும் கனமான ஒரு அமைதி நிலவியது.

“சொல்லு அரவிந்த், எதுக்கு கூப்பிட்ட” என்றான் தண்டபாணி.

அரவிந்த் அவனை சும்மாதான அழைத்திருந்தான். ஆனால் அதைச் சொல்ல பிரியப்படாமல், “ஒரு வேலை அதான் கூப்பிட்டேன். ஒண்ணும் அவசரமில்லை. அப்புறம் பார்த்துக்கலாம்” என்று பேச்சை முடித்தான்.

“நான் உங்களை டிஸ்டர்ப் பண்ணறேனா” என்றான். அரவிந்த் பொதுவாக அண்ணன் தங்கை இருவரையும் பார்த்து.

“ஆமான்னு சொன்னா எழுந்தா போயிடுவான், கேள்வியைப் பாரு” என்று மனதிற்குள்ளேயே கீர்த்தி கரித்துக் கொட்ட,

“அதெல்லாம் ஒண்ணுமில்லை” என்றான் தண்டபாணி அரவிந்தைப் பார்த்து...

அதற்கு நேர்மாறான ஒரு

விஷயத்தை, அதாவது “ஆமாம் நீ எங்களை டிஸ்டர்ப் பண்ணற” என்பது மாதிரியான பார்வையை கீர்த்தி அரவிந்தை நோக்கி பார்க்க, முதலில் அந்தப் பார்வையைப் பார்த்து துணுக்குற்ற அரவிந்த்...

அதன் பிறகு அப்படிதான் நான் டிஸ்டர்ப் பண்ணுவேன் என்பது மாதிரியான ஒரு பதில் பார்வையை கீர்த்தி நோக்கிப் பார்த்தான்.

இருவரும் ஒருவர் பார்வையை ஒருவர் உணர்ந்தனர். அதற்கு சற்றும் அசராமல் பதில் பார்வையும் பார்த்தனர்.

அதன் பிறகு சற்று நேரம் அரவிந்தும், தண்டபாணியும் பேச... அமைதியாக அதை பார்வையிட்டபடி ஒரு அவசரமுமில்லாமல் அந்த ஐஸ்கிரீமை உண்டு முடித்தாள் கீர்த்தி.

பின்பு ஒருவருக்கொருவர் விடைபெற்றுக் கிளம்பினர். அப்போதும் ஒருவரை ஒருவர் அளவிடும் பார்வையோடு தான் விடை பெற்றனர். கீர்த்தியும் அரவிந்தும்.

வீட்டுக்குத் திரும்பும் வழியில்,

“ஏன் கீர்த்தி அவனை முறைச்சு முறைச்சு பார்த்த” என்றான் தண்டபாணி.

“ஓ நீ கண்டுபிடிச்சிட்டியா” என்றாள் கீர்த்தி.

“அதான் அப்படி முறைச்சி முறைச்சி பார்க்கறியே எப்படி தெரியாம இருக்கும்.”

“அப்படி யார் கூட நீ இவ்வளவு ஒரு திக் ப்ரெண்ட் ஷிப் டெவலப் பண்றன்னு அனாலிஸிஸ் பண்ணினேன். ஆமா நான் முறைச்சுப் பார்த்தது மட்டும் சொல்ற, அவனும் அப்படித்தானே பார்த்தான்.”

“அவன் ஒண்ணும் அதிகமா பார்க்கலை நீதான் பார்த்த” என்று தன் நண்பனுக்கு பரிந்து தண்டபாணி” பேசினான்.

‘சரி நான்தான் பார்த்தேன். இப்போ என்ன அதுக்கு” என்று கீர்த்தி சட்டென்று எகிற, “இதுக்கு மேல பேசினா இவ சாமியாடிடுவா’ என்று மனதிற்குள்ளேயே நினைத்த தண்டபாணி அப்படியே அமைதியாகி விட்டான்.

இருவரும் அதை விடுத்து வேறு பேசியபடியே வீடு வந்து சேர்ந்தனர்.

அரவிந்தும் கீர்த்தியை நினைத்தபடியே தான் வீடு போய் சேர்ந்தான். எவ்வளவு தைரியம் அவளுக்கு என்னை முறைத்துப் பார்க்கிறாள். கோபம் வருவதற்கு பதிலாக ஒரு மெச்சுதல் தான் அவனில் தோன்றியது.

அந்த பார்வை அதில் தெரிந்த அலட்சியம், தைரியம் அரவிந்தை வெகுவாக ஈர்த்தது. இருந்தாலும் நண்பனின் தங்கை என்பதை அரவிந்த் ஒரு க்ஷணம் கூட மறக்கவில்லை.

கீர்த்திக்கும் வீடு போய் சேர்ந்த பிறகும் அரவிந்த் ஞாபகம்தான். எப்படி என் பார்வையை எதிர்கொள்கிறான். ஒரு சிறு தயக்கமும் இல்லை. தைரியம் தான் என்று அவளும் அரவிந்த் மாதிரியே நினைத்தாள்.

இருவரும் ஒருவரைப் பற்றி மற்றொருவர் ஒரே மாதிரிதான் நினைத்தனர்.

அதன் பிறகு கீர்த்தியும், அரவிந்தும் பார்க்கவேயில்லை. ஆனால்

தினமும் தண்டபாணி, அரவிந்த் சந்திப்பு மட்டும் தவறாமல் நிகழ்ந்தது.

கீர்த்திக்கு இரண்டொரு முறை அவனைப் பார்க்கும் ஆவலும் எழுந்தது. எங்கேயாவது வாசலில் தென்படுகிறானா என்று தண்டபாணி கிளம்பும் சமயங்களில் வெளியில் சென்று பார்ப்பாள். ஆனால் அவன் எங்கும் தென்படவேயில்லை. சற்று ஏமாற்றமாகக் கூட உணர்ந்தாள்.

தண்டபாணியிடம் அடிக்கடி வாய் கொடுப்பாள். "எங்கே உன் நண்பன். இப்போ எல்லாம் ஆளையே காணோம்" என்று சீண்டுவாள்.

ஆனால் நண்பன் என்று வந்துவிட்டாள், தண்டபாணி வாய் பேசாமல் அப்படியே கிளம்பிவிடுவான். அவளிடம் வாயே கொடுக்க மாட்டான்.

"ஏதாவது தெரிஞ்சுக்கலாம்னு நினைச்சா, அந்த தண்டம் வாயைத் தொறக்குதா பாரு" என்று மனதிற்குள்ளேயே தண்டபாணியைத் திட்டுவாள் கீர்த்தி.

இப்போதெல்லாம் அரவிந்த் தண்டபாணியுடனே சுற்றிக் கொண்டு

இருந்ததால், அவன் ஷோரூம் பக்கம் செல்வது கூட இல்லை. அதில் அவன் தந்தைக்கு மிகுந்த வருத்தம்.

அவரும் அரவிந்தை எப்படியாவது கடைக்கு இழுத்து விட வேண்டும் என்று அவனிடம் கெஞ்சிப் பார்த்தார். மிஞ்சிப் பார்த்தார். திட்டிப் பார்த்தார். என்ன செய்தாலும் அரவிந்த் மட்டும் அசையவில்லை. அவர் சொல்லச் சொல்ல சற்று நேரம் சென்று கொண்டு இருந்தவன், ஷோரூம் புறம் செல்வதை அடியோடு தவிர்த்தான்.

இவனுக்கு ஒரு கால் கட்டு போட்டாளாவது அடங்குவானா என்று நினைத்த அவனின் தந்தை, வனஜாவுடனான அவனது திருமணத்தைப் பற்றி அதிகம் பேசத் துவங்கினார்.

அன்று காலையிலும் வீட்டில் ஒரே வாக்குவாதம். அவன் தந்தை சிதம்பரம் அவனிடத்தில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

“டேய், இங்கேயே ரெண்டு ப்ராஞ்ச் இருக்கு. இப்போ கோவைலயும்,

மதுரைலயும் வேற ஆரம்பிச்சுட்டேன். என்னால ஒரு ஆளா சமாளிக்க முடியலைடா. நீ ஒழுங்கா வந்து சார்ஜ் எடுத்துக்கோ. எதுக்கு நீ இப்படி வெட்டியா சுத்திட்டு இருக்க...”

“உங்களால பார்க்க முடியலைன்னா எதுக்கு நீங்க ஆரம்பிச்சீங்க. நானா உங்களை ஆரம்பிக்கச் சொன்னேன். நீங்களா ஆரம்பிச்சிட்டு இப்போ சும்மா வந்து என்னைப் பார்த்துக்கோ என்னைப் பார்த்துக்கோன்னு உயிரை எடுக்கறீங்க.”

“இப்பக்கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை அப்பா. ஒரு அஞ்சு வருஷம் விடுங்க. நான் பாரின் போய் இருந்துட்டு வர்றேன். அதுக்கப்புறமா வந்து தொழிலை நான் சார்ஜ் எடுத்துக்கறேன்” என்றான் வேண்டும் குரலில்.

3

அவனை கடுமையாகப் பார்த்தார் அவன் தந்தை. “டேய் நீ தேவையில்லைடா. நானே பார்த்துக்கறேன். உனக்கு மட்டும் இல்லை

உன் பசங்களுக்கும் சேர்த்து சொத்து சம்பாதிச்சு வெச்சிருக்கேன். நீ இப்படி வெட்டியாவே சுத்திட்டு இரு. எனக்கு இனிமே அதைப்பத்தி கவலையில்லை. ஆனா நான் உயிரோட இருக்கற வரைக்கும் நீ வெளிநாடு போறதுன்றது நடக்காது."

"ஆமா காலம் போன காலத்துல நான் வெளிநாடு போனா எவன் எனக்கு வேலை கொடுப்பான்."

"எவன்டா உனக்கு வேலை கொடுக்கணும். நம்ம நாட்ல இல்லாதது அப்படி என்ன இருக்கு உனக்கு அங்க. இங்க வராத வருமானமா உனக்கு அங்க வரப் போகுது. நம்ம ஷோரூம் டர்ன்-ஓவர் உனக்குத் தெரியாததா என்ன? அப்புறம் ஏன்டா அடம் பிடிக்கிற."

பதிலே பேசாமல் வண்டியை எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டான். அவன் நேரே வந்த நின்ற இடம் தண்டபாணியின் வீடு. வாசலுக்கு வந்த பிறகு தான் வீட்டிற்கே வந்த விட்டதை உணர்ந்தான் அரவிந்த்.

தள்ளி நின்று அவனுக்கு

தொலைபேசியில் அழைப்போம் என்று எண்ணி... வண்டியை திருப்பப் போக...

“ஹலோ” என்ற குரல் கேட்டது.

“யாரது” என்று திரும்பிப் பார்த்தாள்... “கீர்த்தி.”

“என்ன அண்ணனைத் தேடி வந்தீங்களா” என்றாள்.

“ஆமாம்” என்பது போலத் தலையசைத்தான்.

“வாயைத் தொறந்து பேசினா என்னவாம், பெரிய இவன் மாதிரி தலையை மட்டும் ஆட்டுறான்” என்று மனதிற்குள்ளேயே திட்டியவள்... வெளியில் சிரித்தாள்.

“வாங்களேன் உள்ள, அண்ணா இப்போ தான் குளிக்கப் போனான். அவன் குளிக்கப் போனா எப்படியும் லேட் ஆகும். அதுவரைக்கும் வெளிலயா நிப்பீங்க... வாங்க...”

“இல்லை பரவாயில்லை நான் வெயிட் பண்றேன்.”

“அட வாங்க சும்மா ரொம்ப பிகு

பண்ணாதீங்க. எங்க வீட்ல இருக்கறவங்க யாரும் மனுசங்களை சாப்பிட மாட்டோம்" என்றாள் இலகுவாக.

ஏற்கனவே வீட்டிலிருந்து கடுப்பில் வந்த அரவிந்திற்கு இன்னும் கடுப்பாக இருந்தது. இவள் வேறு ஏன் உயிரை எடுக்கிறாள் என்று நினைத்தவன், "நான் வரலை இங்கயே நிற்கறேன்" என்றான் கடுமையாக.

அவன் கடுமை ஏனோ கீர்த்திக்கு சிரிப்பை கொடுக்க... "ஓகே, அஸ் யூ விஷ்" என்றாள்.

அந்தச் சிரிப்பும் அந்த அலட்சியமும் நிறைய கோபத்தைக் கொடுக்க... வண்டியை அப்படியே திருப்ப... அது சறுக்கி, அவன் சாய்ந்து, மேலேயே வண்டியும் சாய்ந்தது.

வண்டி சாய்ந்ததில் அவன் கால் எசகுபிசகாக மாட்டிக் கொண்டது. எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்துவிட்டது.

"அண்ணா" என்று குரல் கொடுத்தபடியே, கீர்த்தி அவசரமாக கேட்டைத் திறந்து ஓடி வந்தாள் அவள்.

போட்ட சத்தத்தில், தண்டபாணியும், அவன் அம்மாவும் கூட விரைந்து வந்தனர்.

அரவிந்தால் காலை வெளியே எடுக்க முடியவில்லை. கீர்த்தி வந்து வண்டியை தூக்க முயல, அவளால் முடியவில்லை. அதற்குள் தண்டபாணி வந்திருந்தான். அவன் வந்து வண்டியைத் தூக்க...

அரவிந்திற்கு காலில் நல்ல வலி, கீர்த்தி அவனுக்கு கை கொடுக்க முற்பட, அவன் கையைப் பிடிக்கவில்லை. அவனே எழ முயற்சித்தான். அதற்குள் தண்டபாணி வந்து அவனையும் கை கொடுத்துத் தூக்க, மெதுவாக எழுந்து நிற்க முயற்சித்தான்.

கால் ஊன்றினாலே பயங்கரமாக வலித்தது. கீர்த்தி முன் கீழே விழுந்தது வேறு அவமானமாக இருந்தது. அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை அவன். அவள் அங்கே இருப்பது மாதிரியே கண்டு கொள்ளவில்லை.

கீர்த்திக்கு வேறு ஒரே குற்ற உணர்ச்சியாக இருந்தது. தன்னால் தான் இப்படியாகி விட்டதோ.

தண்டபாணி அவனை வீட்டிற்குள்

அழைத்து வந்து அமர வைத்தான். பிறகுதான் அவன் அம்மாவிடம் கூட “அம்மா, இது என் ப்ரெண்ட் அரவிந்த்” என்று அறிமுகம் செய்து வைத்தான்.

“என்னடா ஆச்சு” என்று அரவிந்திடம் கேட்க,

“ஒண்ணுமில்லைடா வண்டியை கொஞ்சம் கவனிக்காம திருப்பிட்டேன் ஸ்லிப் ஆகிடுச்சு” என்றான்.

கீர்த்தியிடம் பேசியது மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை.

கீர்த்தியுமே அவன் விழுந்த பதட்டத்தில் இருந்ததால் ஒன்றும் சொல்லாமல் அமைதி காத்தாள்.

உடனேயே காலுக்கு ஐஸ் ஒத்தடம் கொடுக்க, வலி சற்று மட்டுப்பட்டது அரவிந்திற்கு.

கீர்த்தியின் அம்மா அரவிந்திற்கு ஒரு காபி கொடுத்து உள்ளே அகல... வேறு வழியில்லாமல் கீர்த்தியும் உள்ளே போக நேர்ந்தது.

கீர்த்தி உள்ளே சென்றாலுமே அவள் கண்ணும் காதும் ஹாலிலேயே

இருந்தது.

“என்னடா காலையிலேயே இவ்வளவு டென்ஷன்” என்றான் தன் நண்பனை உணர்ந்தவனாக அரவிந்த்.”

“ப்ச், ஒண்ணுமில்லைடா.”

“ஒண்ணுமில்லாமையா என் வீடு வரைக்கும் வருவ சொல்லுடா.”

“காலையில வீட்ல அப்பாவோட சண்டை. நான் வெளிநாடு போறதுக்கு எப்பவும் போல் பர்மிஷன் கேட்டேன். அவர் ஷோரூம் வரச் சொல்லி கட்டாயப் படுத்தறார். அதுல சண்டை போட்டு உன்னைப் பார்க்கலாம்னு வந்தனா... வண்டியை நிறுத்தி திரும்பும்போது ஸ்லிப் ஆகி விழுந்துட்டேன்.”

கவனமாக கீர்த்தியிடம் பேசியது, அவள் அவனை எரிச்சல் படுத்தியது என்று எதுவும் சொல்லவில்லை. கீர்த்தியின் மேல் கோபம் இருந்தாலும் அதை தண்டபாணியிடம் சொல்லவில்லை. கீர்த்தியும் இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவன் தன்னைப் பற்றி

அண்ணனிடம் சொல்லாதது புரிந்தது. “இவளைப் போய் விழுந்தா நானா பொறுப்பு. நான் என்ன பண்ணினேன் இவனை” என்றெண்ணினாள்.

தண்டபாணி உடை மாற்ற அவனை விட்டு வந்தபோது மெதுவாக அரவிந்த் இருக்குமிடம் சென்றவள், “சாரி” என்றாள். ஆனால் அதை அவன் கண்டு கொண்ட மாதிரியே தெரியாமல் போக... மறுபடியும் அவனை முறைத்துப் பார்த்து உள்ளே சென்றாள்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அரவிந்தை நேரில் பார்க்கும் வாய்ப்பு கீர்த்திக்கு உடனடியாக கிடைக்கவில்லை. அவன் காலைப் பற்றி மட்டும் தண்டபாணியிடம் விசாரிப்பாள்.

“ஒரே ஒரு க்ரெப் பாண்டேஜ் மட்டும் போட்டுட்டு அப்படியே தான் கீர்த்தி அவன் சுத்துறான். கொஞ்சம் கூட அடங்கவேயில்லை” என்றான் அரவிந்தைப் பற்றி தண்டபாணி.

அவன் ஏன் தன்னிடம் அப்படி முகம் காட்டினான் என்று கீர்த்திக்குப் புரியவேயில்லை. அதே யோசனையாக

இருந்தது.

முயன்று தன் யோசனைகளை ஒதுக்கி வைத்து தன் தோழிகளோடு அங்கே இங்கே என்று வெளியே சென்று வந்தாள்.

இதற்கிடையில் ஆளுடைய பரீட்சை முடிவுகளும் வர நல்ல மதிப்பெண்களில் தேர்ச்சி பெற்றிருந்தாள்.

“அப்பா நான் வேலைக்கு ட்ரை பண்ணட்டா” என்று தயங்கித் தயங்கி தந்தையிடம் கேட்டாள்.

“வேண்டாம் கீர்த்திமா, நான் உனக்கு கல்யாணத்துக்கு பார்க்கலாம்னு இருக்கேன். வர்ற வரன் எப்படி வருதோ... உள்ளூர் வருதோ, இல்லை வெளியூர் வருதோ... அவசரப்பட்டு வேலைக்குப் போக வேண்டாம். முதல்ல நீ கல்யாணம் பண்ணிக்கோ. அதுக்கப்புறம் நீயும் உன் கணவரும் சேர்ந்து முடிவெடுங்க” என்றார் கறாராக...

“நீங்க எப்படி பண்றீங்களோ பண்ணுங்கப்பா, அதுவரைக்கும் டெம்ப்ரவரியாகவாவது நான் வேலைக்கு முயற்சி பண்றேன்” என்று மறுபடியும்

மறுபடியும் கேட்க...

“சரி பக்கத்துலயே ஏதாவது வேலை தேடிக்கோ... பெரிய கன்சர்ன் எல்லாம் எதுவும் இப்பத்திக்கு வேண்டாம்” என்றார்.

அவளும் அப்பொழுதில் இருந்தே பேப்பரில் வரும் எல்லா வேலைக்கான விளம்பரத்தையும் பார்க்கத் துவங்கினாள்.

அதில் பார்த்தது தான் “ராணி பர்னிச்சர்ஸ்”க்கு மேலாளர் தேவை என்ற விளம்பரம். அவளுடைய வீட்டில் இருந்து வந்து போய்விடும் தூரம் தான். நடந்து போகும் அளவு தூரம் எல்லாம் கிடையாது. அதைவிட தூரம், ஆனால் வண்டியில் போனால், ட்ராபிக் இல்லாது இருந்தால் பத்து நிமிட ட்ராவல் தான்.

கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. உடனே விண்ணப்பித்தாள். தண்டபாணி வேலை விஷயமாக வெளியூர் சென்றிருந்ததால், அவனிடம் ஆலோசனை எதுவும் கேட்கவில்லை, அப்பாவிடமும் சொல்லவில்லை.

ஆரம்பிக்கும் போதே

அபசகுனமாக ஏதாவது சொல்லி விடுவர். கிடைத்த பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று விட்டு விட்டாள்.

அவள் விண்ணப்பம் அனுப்பி இரண்டு நாட்களிலேயே தொலைபேசி மூலமாக நாளை நேர்முகத் தேர்வு என்றனர்.

அதன் பிறகு தான் தன் தந்தையிடம் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்திருப்பதைப் பற்றித் தெரிவித்தாள்.

பெரிய மல்டிநேஷனல் கம்பெனி மாதிரி எதுவும் இல்லை, ஒரு ஷோரூம் தானே என்று அவள் தந்தையும் அனுமதி கொடுத்தார்.

இரண்டு நாட்களாக தண்டபாணி வேறு அவளை தொலைபேசியில் கூட அழைக்கவில்லை. அதனால் இவளும் கோபப்பட்டு அவனை கூப்பிட்டுச் சொல்லவில்லை.

தன் தந்தையிடமும் அன்னையிடமும் மட்டும் சொல்லி "ராணி பர்னிச்சர்ஸ்"க்கு நேர்முகத் தேர்வுக்கு சென்றாள். தண்டபாணியிடம் ஒரு

வார்த்தை சொல்லியிருந்தால் அது அரவிந்தின் ஷோரூம் என்று தெரிந்திருக்கும்.

ஆனால் சொல்லாததினால் யாருடைய பர்னிச்சர் ஷோரூம் என்று தெரியாமலேயே நேர்முகத் தேர்வுக்குச் சென்றாள்.

ஷோரூம் பிரம்மாண்டமாக இருந்தது. கொஞ்சம் பெரிய ஷோரூம் எதிர்பார்த்து தான் வந்தாள். ஆனால் இவ்வளவு பெரிய ஷோரூம் எதிர்பார்க்கவில்லை. இத்தனை பெரிய ஷோரூமிற்கு மேலாளர் என்றால் பெரிய வேலை தான் நினைத்தாள்.

அங்கே இருந்த நிலைக்கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். ஒரு வேளை இந்த வேலைக்கு சிறிய பெண்ணாகத் தெரிகிறோமோ என்று. பரவாயில்லை புடவையில் வந்திருக்கிறோம் என்று தன்னைத்தானே மெச்சிக் கொண்டாள்.

அவள் எண்ணங்களுக்கு தடை போடும் வகையில் அவள் இன்டர்வியூ ஹாலுக்குப் போக, அங்கே இவளைப்

போலவே நான்கு இளைஞர்கள் இருந்தனர். அவர்களும் இன்டர்வியூவிற்கு வந்தவர்களைப் போல் தான் தெரிந்தனர்.

அவர்கள் ஐந்து பேரும் அமர வைக்கப்பட... அனைவரும் இளைஞர்கள் என்பதால் அறிமுகப்படுத்தி பேசிக் கொண்டிருக்க, இவள் தனித்து பெண் என்பதால் யாரோடும் பேசாமல், அந்த ஹாலில் என்ன என்ன பொருட்கள் இருக்கிறது என்று ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து ஒரு பெரியவர் வந்தார். அவர் அங்கே இருந்த பொருட்களைப் பற்றியே அதிக கேள்வி கேட்க... எல்லோரும் தடுமாறினர். ஆனால் கீர்த்தி ஓரளவு சரியான பதில்களே சொன்னாள்.

பின்னர் ஒருவர் ஒருவராக தனியாகக் கூப்பிட்டு கேள்விகள் கேட்டார் அந்தப் பெரியவர். அவர் மிஸ்டர். சிதம்பரம், அரவிந்தின் தந்தை. யாருடைய சிபாரிசும் இல்லாமலேயே, அது அரவிந்தின் கம்பெனி என்று தெரியாமலேயே... கீர்த்தி அங்கே

மேலாளராகத் தேர்வு செய்யப்பட்டாள்.

கீர்த்தியை அவருக்கு முதல் பார்வையிலேயே பிடித்துவிட்டது. அதனாலேயே அவர் தேர்வு செய்தார். இத்தனை வருட காலத்தில் என்றுமே அவர் உள்ளுணர்வு பொய்த்ததில்லை.

அடுத்த நாளில் இருந்தே பணியில் சேருமாறு பணித்துவிட, கீர்த்திக்கு பயங்கர சந்தோஷம். சம்பளம் சிறிது குறைவு தான். மற்ற பெரிய பெரிய கம்பெனிகள் தரும் அளவிற்கு இல்லை. இருந்தாலும் அது ஒரு வேலையைத் தொடங்குபவர்களுக்கு நல்ல சம்பளமே.

இந்த சந்தோஷமான விஷயத்தை முதன் முதலில் தண்டபாணியிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் போலத் தோன்ற அவனை அழைத்தாள்.

“அண்ணா எனக்கு வேலை கிடைச்சிடுச்சு” என்றாள் உணர்ச்சி மிகுந்த குரலில். “அப்படியா! என்ன வேலை எங்கே” என்று தண்டபாணி கேள்வி கேட்க...

“நம்ம ஏரியாக்கு பக்கத்துலயே தான் அண்ணா, “ராணி பர்னிச்சர்ஸ்”ல

மேனேஜர் வேலை” என்றாள்.

“என்ன அங்கயா” என்றான் ஆச்சர்யத்தோடு தண்டபாணி.

“ஆமாம் தண்டு, உனக்குத் தெரியுமா.”

“ஏன் தெரியுமா, அதுதான் நம்ம அரவிந்தோட ஷோரூம்” என்றான்.

“என்ன அரவிந்த் ஷோரூமா” என்றாள் இந்த முறை அவள் அதிர்ந்து.

“ஆமாம் அது அரவிந்த் ஷோரூம் தான். ஆனா அவன் அங்க அதிகம் போக மாட்டான்.”

“வேற பிஸினெஸ் பண்றாங்களா?”

‘வேற பிஸினெஸ்ஸா? வெட்டியா சுத்திட்டு இருக்கான்” என்று மனதிற்குள் நினைத்தவன் அதை வெளியில் சொல்லவில்லை.

பேச்சை மாற்றி, “எப்போ இருந்து ஜாயின் பண்ணனும்.”

“நாளையில் இருந்து அண்ணா” என்றாள் உற்சாகமாக,

“ஆல் த பெஸ்ட் நான் வர்றதுக்கு இன்னும் ரெண்டு நாள் ஆகும் பார்த்துக்கோ, பார்த்துப்போய், உன் விளையாட்டுத் தனமெல்லாம் விட்டு கொஞ்சம் சீரியஸாக இரு” என்று ஒரு ஐந்து நிமிடம் தொலைபேசியிலேயே அறிவுரை வழங்கிய பிறகு தான் விட்டான்.

“அண்ணா போதும்” என்று அவள் அலறிய பிறகே விட்டான்.

அவள் தந்தையிடமும், தாயிடமும் பகிர்ந்து கொண்டாள். தந்தையும் ஒன்றும் சொல்லாமல் சரி என்று விட்டார்.

கீர்த்தியினுடைய சற்று பிரச்சனையான ஜாதகம்.

நட்சத்திரம் வேறு மூல நட்சத்திரம். அதனால் ஜாதகம் அமைவது தட்டித் தட்டிப் போனது.

அமையும்போது அமையட்டும் அதுவரை அவள் வேலைக்காவது செல்லட்டும் என்று அவள் தந்தை விட்டுவிட்டார். ஆனால் மும்முரமாக வரன் தேடும் பணியில் ஈடுபட்டுதானிருந்தார்.

தண்டபாணி தன் தங்கை அரவிந்தின் பர்னிச்சர் ஷோரூமில் செலக்ட் ஆனதை, அரவிந்தை அழைத்துச் சொன்னான்.

அரவிந்த், "அப்படியா" என்பதோடு நிறுத்திக் கொண்டான். அதுதான் அரவிந்த். அவன் அப்படித்தான் சொல்லுவான் என்று தண்டபாணிக்கும் தெரியும். இருந்தாலும் அவனிடம் தெரிவிக்க வேண்டும் என்றே அவனை அழைத்து விஷயத்தைத் தெரிவித்தான்.

அன்று இரவு அரவிந்த் வீட்டிற்கு வந்தபோது, அவன் தந்தையும் வந்திருந்தார்.

"இந்தக் காலத்துல பொம்பள புள்ளைங்க எல்லாம் எவ்வளவு விவரமாகவும், புத்திசாலியாவும் இருக்கு, நீ இப்படி சும்மா சுத்திட்டு இருக்கியேடா" என்றார்.

ஒரு பார்வை பார்த்ததைத் தவிர அரவிந்த் பதில் ஏதும் பேசவில்லை. மீண்டும் அவரே, "நம்ம கம்பெனிக்கு மேனேஜரா ஒரு பொண்ணை செலக்ட் பண்ணியிருக்கேன். என்ன ஒரு

புத்திசாலித்தனம் தெரியுமா நீயும் தான் இருக்கியே" என்று அவனை சாடிச் சென்றார்.

அவர் பேசியதை நினைத்து அவர் மேல் கோபம் வந்தாலும், அதையும் விட கீர்த்தி மேல் கோபம் வந்தது.

"பெரிய இவ இவ... இவளுக்கு ஊர் உலகத்துல கம்பெனியே கிடைக்கலியா என்ன? என் கம்பெனி தானா கிடைச்சது வேலை பார்க்க" என்று மனதிற்குள்ளேயே சலித்துக் கொண்டான்.

தண்டபாணி வேறு அவனை அழைத்து "டேய் பார்த்துக்கோடா" என்றிருந்தான். அது வேறு இன்னும் எரிச்சலாக இருந்தது.

'அவளுக்கு இருக்கும் தைரியத்திற்கு அவளே பத்து பேரை பார்த்துக் கொள்ளுவாள் நான் அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டுமா' என்று தனக்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டான்.

"இவள் நிஜமாகவே இவள் அண்ணன் சொன்னது போல் குட்டிப்பிசாசு தான். கொஞ்சமும் அசராத

என்னையே சறுக்கி விழ வைத்து விட்டாளே" என்றிருந்தது.

"அவளைப் பார்த்த நாளில் இருந்து அடிக்கடி அவளை நினைக்கிறோம். ஏதாவது ஒரு வகையில் என்னை அவள் நினைக்க வைக்கிறாள். அதிகமாக கோபப்பட்டு தான் நினைக்கிறோம். ஆனாலும் என்ன நினைக்க வைக்கிறாளே" என்றிருந்தது.

"அவளும், அவள் பார்வையும்... என்னைப் பார்ப்பதே அலட்சியமாக, முறைத்து தான் பார்க்கிறாள். இதுவரை என்னை யாரும் அப்படிப் பார்த்ததில்லை" என்றும் இருந்தது. அவளைப் பற்றி யோசித்தவாறே தூங்கிப் போனான்.

4

மறுநாள் காலை, அன்று தான் புதிதாக கீர்த்தி வேலைக்குச் சேரும் தினம் சற்று படபடப்பாக உணர்ந்தாள். அதை விட படபடப்பாக உணர்ந்தான் அரவிந்த், ஏனென்றால் அவன் ஷோரூம் செல்வதே கிடையாது. இன்று தண்டபாணியிடம் கீர்த்தியை பார்த்துக் கொள்வதாக வாக்கு

கொடுத்தாகி விட்டது.

அதற்காகவாவது சென்று தான் ஆக வேண்டும். ஏன் ஒத்துக் கொண்டோம் என்று அவன் மேலேயே அவனுக்குக் கோபம் வந்தது.

கீர்த்தி ஒன்பதரை மணிக்கு ஷோரூமை அடைந்து அதற்கு முன்னரே சிதம்பரம் வந்திருந்தார்.

“வணக்கம் சார்” என்று அவருக்கு முகமன் வைத்தாள்.

சிறு தலையசைப்போடு அதனை ஏற்றார்.

பின்பு வேலை சம்பந்தமாக, “என்ன என்ன செய்ய வேண்டும்” என்று அவளுக்கு விளக்கம் கொடுத்தார்.

கொடுத்தவர், “நீ இனிமே பார்த்துக்கோம்மா, எந்த சந்தேகம்னாலும் உடனே என்னைக் கூப்பிடு, நான் இன்னொரு ப்ராஞ்ச்சுக்கு போறேன்” என்று கிளம்பினார்.

அவர் கிளம்பும் சமயம் அரவிந்த் பிராஞ்சினுள் நுழைந்தான். அவனைப் பார்த்தவுடன் அவருக்கு மிகுந்த

ஆச்சரியம். நிறைய நாட்களுக்குப் பிறகு அரவிந்த் ஷோரூம் வந்திருந்தான்.

“ஷோரூம் பார்த்துக்கோடா. நான் நேத்து புதுசா வந்த பொண்ணுகிட்ட தான் சொல்லியிருக்கேன். கோ-ஆர்டினேட் பண்ணிக்கோ” என்று சொல்லி, வேறு எதுவும் சொல்லாமல் அவன் வந்ததே சந்தோஷம் என்று நினைத்துச் சென்றுவிட்டார்.

அவருக்கு என்ன தெரியும், தண்டபாணிக்குக் கொடுத்த வாக்குறுதிக்காக அரவிந்த் ஷோரூம் வந்திருக்கிறான் என்று.

அவர் சென்று விட, அரவிந்த் உள்ளே நுழைந்தான். அவன் கண்கள் கீர்த்தியைத் தேட, அவள் அங்கிருந்த பொருட்களையெல்லாம் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.

கண்கள் அவளை அளவெடுத்தது. பச்சை கலர் சுடிதாரில் எளிமையாக அழகாக இருந்தாள். ஒரு வசீகரம் தெரிந்தது அவளிடம். இதென்ன அவளின் உருவத்தை அசை போட்டுக் கொண்டிருக்கிறேன் என்று அவனுக்கு

அவனே கடிந்தவன், எம்.டி. என்று எழுதப்பட்ட கேபின் உள் சென்று அமர்ந்து கொண்டான்.

அவன் உள்ளே செல்லும் போதுதான் அவனைப் பார்த்தாள் கீர்த்தி, “தெரிந்தவள் தானே நான். ஒரு நிமிடம் நின்று பேசி விட்டால் என்ன? இப்போது இவன் எம்.டி.யா, நான் சென்று இவனை விஷ் செய்ய வேண்டுமா” என்று கோபமாக நினைத்தாள்.

பிறகு விஷ் செய்வது தான் மரியாதை என்று நினைத்தவள் எம்.டி. கேபினுக்குள் சென்றாள்.

“குட்மார்னிங் சார்” என்றாள்.

அவனும் அவளை அன்று தான் புதிதாகப் பார்ப்பவன் போலத் தலையாட்டினான்.

மேலே என்ன பேசுவது என்று இருவருக்குமே தெரியவில்லை.

“சாரி அன்னைக்கு நடந்ததுக்கு” என்றாள் ஞாபகம் வந்தவளாக,

“எதுக்கு” என்றான் புரியாதவனாகவே...

“அது அன்னைக்குக் கீழே விழுந்ததுக்கு...”

“நான் விழுந்ததுக்கு நீ என்ன பண்ணுவ” என்றான். போய் வேலையைப் பார் என்று இருந்தது.

மேலே என்ன பேசுவது என்று தெரியாமல், “தாங்க்யூ சார்” என்று சொல்லி வெளியே வந்து விட்டாள்.

“கொஞ்சமாவது தெரிஞ்ச மாதிரி காட்டிக்கிறானா பாரேன்” என்று கீர்த்திக்கு வருத்தமாக இருந்தது.

அதற்குள் கஸ்டமர்கள் வர ஆரம்பிக்க, அதை அங்குள்ள பணியாளர்கள் கவனிக்கச் செல்ல, அதை மேற்பார்வை பார்க்க ஆரம்பித்தாள்.

மதியம் வரை இருந்தான். அரவிந்த் ஆனால் வேறு எதுவும் கீர்த்தியிடம் பேசவில்லை.

கீர்த்தியும் அதன் பிறகு அவனைப் பற்றி யோசனை செய்ய நேரமில்லாமல், கஸ்டமர்கள் வந்து கொண்டே இருக்க... அவர்களைப் பார்ப்பதிலேயே நேரம் போனது.

மதிய நேரத்தில் தண்டபாணி அவளை அழைக்க... அவனிடம் பொரிந்து தள்ளிவிட்டாள். “என்ன உன் பிரெண்ட் பெரிய பிரெண்ட், என்னைத் தெரிஞ்ச மாதிரி கூட காட்டிக்கலை. நீதான் உன் ப்ரெண்ட் ப்ரெண்ட்ன்னு உருகுற.”

“அவன் அப்படிதான் கீர்த்தி எப்பவுமே. ஆக்சுவலா அவன் ஷோரூம் பக்கமே தலையை வச்சி படுக்க மாட்டான். இப்போ என்கிட்ட சொல்லிட்டான். உன்னை பார்த்துக்கறேன்னு. அனேகமா அதுக்கு தான் வந்திருப்பான்” என்று சமாதானம் சொல்ல...

“என்னவோ போ, உன் ப்ரெண்டை பத்தி உனக்கு தான் தெரியும்” என்று பழிப்பு காட்டினாள்.

நாட்கள் வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. புது வேலை கீர்த்திக்கும் பிடித்தது. நிறைய புதுப் புது ஆட்களை அவள் தினமும் பார்ப்பதால் அவளுக்கு அது பிடித்துவிட்டது. தண்டபாணிக்கு, “நான் பார்த்துக்கறேன்” என்று சொன்னதினால் தினமும் காலையில் சிறிது நேரம் மட்டும் ஷோரூம் வருவதை

வழக்கமாகக் கொண்டிருந்தான் அரவிந்த்.

ஆனால் வருவான், போவான். கீர்த்தியோடு அதிகம் பேச மாட்டான். “என்ன? ஏது” என்ற அளவிலேயே அவன் பேச்சுகள் நிற்கும்.

இப்போது கீர்த்திக்கும் அது பழகி விட்டது. அதற்கு மேல் அவளிடமிருந்து எதையும் எதிர்பார்க்க மாட்டாள் கீர்த்தி.

வரும்போது, போகும் போது எல்லாம் ரகசியமாக கண்கள், கீர்த்தியை அளவெடுக்கும். அரவிந்தினால் என்ன முயன்றாலும் தன்னைத் தானே தடுத்துக் கொள்ள முடியவில்லை.

அவள் கஸ்டமர்களை கன்வின்ஸ் பண்ணும் அழகை அவனையறியாமல் ரசித்துக் கொண்டிருப்பான். அவள் பேச்சில் எப்போதும் ஒரு போல்ட்நெஸ் இருக்கும். அவனையறியாமல் கீர்த்தியின் தைரியத்தை எப்போதுமே மெச்சுவான. அதையே தான் தினமும் செய்து கொண்டிருந்தான். ஆனால் அதற்கு மேல் எதுவும் யோசிக்கவில்லை.

கீர்த்தியும் அவள் சிறிது நேரமே வந்தாலும், அவளையறியாமல் அந்த

நேரத்தில் கண்கள் அவனைத் தேடும். அவனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்று நினைத்தாலும் கண்கள் அவனைத் தேடுவதை அவளால் தவிர்க்க முடியாது. மனம் அவனை நாடுவதையும்... அவளால் யோசிக்காமல் இருக்க முடியாது.

இதற்குள் தண்டபாணி வெளிநாடு செல்கிறான் என்றவுடன் மீண்டும் அவனும் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற ஆசை தலைவிரித்தாட ஆரம்பித்து விட்டது.

அது அவனுள் இருக்கும் கோபத்தை தூண்டி விட, யார் மேல் கோபத்தைக் காட்டுவது என்று தெரியாமல், எல்லோரிடத்திலும் கோபத்தைக் காட்டினான்.

தந்தையிடம் பேசுவதைத் தவிர்த்தான். தாயிடம் எதற்கெடுத்தாலும் கோபப்பட்டான். அவனை எப்படி சமாளிப்பது என்று பெற்றோருக்கு பெருங்கவலை கொடுத்தான்.

ஷோரூமிலும் பணியாளர்களிடத்தில் எதற்கெடுத்தாலும்

எரிந்து விழுந்தான். எல்லோரும் அவனைப் பற்றி பேச... அதைக் கேட்க முடியவில்லை கீர்த்திக்கு.

அன்றுதான் சற்று அமைதியாக இருப்பது மாதிரி தோற்றமளித்தது கீர்த்திக்கு.

அவனோடு பேச வேண்டும் என்று நினைத்த கீர்த்தி அவன் கேபின் கதவைத் தட்டி உள்ளே போனாள்.

அவன் என்ன என்பது மாதிரியான ஒரு பார்வை மட்டுமே பார்த்தான். அவன் பார்வையை நன்கு அறிவாள் கீர்த்தி. அதில் தொக்கி நின்ற கேள்வியை உணராதது போல், அவன் அமரச் சொல்லாமலேயே அமர்ந்தாள்.

அவள் அமர்ந்தவுடன் சற்று ஆச்சரியத்தை அவன் பார்வை காட்டியது. இதுவரையில் வருவாள், என்ன கேட்க வேண்டுமோ, கேட்பாள். உடனே போய் விடுவாள். அமர்ந்தெல்லாம் அவனோடு பேசியதேயில்லை.

அவள் அமரவும் ஆச்சரியமாக, “எதற்கு” என்பது போலப் பார்த்தான்.

மெதுவாக அவனைப் பார்த்து சிறியதாக புன்னகைத்தாள். பதிலுக்கு அரவிந்த் புன்னகைக்கவேயில்லை.

ஆனாலும் அசராமல், “ஏன் இப்படி எல்லோர்கிட்டயும் எரிஞ்சு எரிஞ்சு விழறீங்க” என்றாள் தைரியமாக.

“நான் எரிஞ்சு விழுந்தா உனக்கென்ன, எரிஞ்சு விழலைன்னா உனக்கு என்ன?” என்பது போல பார்வை பார்த்தான்.

அவன் பார்வை நன்கு புரிந்தது கீர்த்திக்கு. இருந்தாலும் “இல்ல, அது வேலை செய்யறவங்ககிட்ட ஒரு அதிருப்தியை கொடுக்குது. அப்படிப் பேச வேண்டாமே” என்றாள்.

அதற்கும் பதில் பேசாமல் அமைதியாக இருந்தான்.

“இப்படி பதில பேசாம இருந்தா, நான் என்னன்னு எடுத்துக்கறது, இனிமே விழ மாட்டீங்கன்னு எடுத்துக்கறதா, இல்லை விழுவீங்கன்னு எடுத்துக்கறதா.”

“பதில் தெரிஞ்சே ஆகணுமா” என்பது போல ஒரு பார்வை பார்த்தான்.

அவன் பார்வையை உணர்ந்தவள் “பதில் தெரிஞ்சா பரவாயில்லை” என்றாள்.

இப்போது அரவிந்தின் பார்வையில் ஒரு மெச்சுதல் தெரிந்தது. எப்படி தன் மனதில் இருப்பதை, தன் பார்வையை வைத்து இவள் எடை போடுகிறாள் என்று.

அவன் பார்வையின் மாறுதல்களையெல்லாம் உணர்ந்த கீர்த்தி, “என்ன பிரச்சனை என்கிட்ட சொல்றதுன்னா சொல்லுங்களேன்” என்றாள்.

“உன்கிட்ட எதுக்கு சொல்லணும்” என்ற வார்த்தை வாய் வரை வந்துவிட்டது, இருந்தாலும் அவளை வருத்தப்படச் செய்ய மனமில்லாமல், “உன்கிட்ட சொல்ற மாதிரி ஒண்ணுமில்லை” என்றான்.

“முடியாதுன்னா எரிஞ்சு விழறதை அட்லீஸ்ட் கொறச்சுக்கவாவது செய்யலாம்” என்றாள் விடாமல்.

அவனையறியாமல் ஒரு பெருமூச்சு எழுந்தது. “முயற்சி பண்றேன்” என்றான்.

இந்த வார்த்தையாவது வாயிலிருந்து வந்ததே என்று கீர்த்தியிடம் இருந்து ஒரு பெருமூச்சு வெளியேறியது.

இப்படி மாற்றி மாற்றிப் பெருமூச்சு தான் விட்டனரே தவிர மேலே இருவருமே பேசவில்லை. அரவிந்த் ஏதாவது பேசினால் பேச்சை வளர்க்கலாம் என்று கீர்த்தி நினைத்திருக்க... அவன் வாயே திறக்கவில்லை.

அவன் ஏதாவது பேசுவானா என்று இரண்டு நிமிடம் பார்த்தவள், அவன் எதுவும் பேச மாட்டான் என்றுணர்ந்து... "இது சொல்லதான் வந்தேன்" என்று சொல்லிச் சென்று விட்டாள்.

"எவ்வளவு தைரியம் இவளுக்கு, என்னிடமே வந்து எனக்கு அட்வைஸ் செய்கிறாள், என்ன பிரச்சனை என்று கேட்கிறாள்" என்று புன்னகை தோன்றியது. மனம் சற்று அமைதியாக உணர்ந்தது.

வீட்டில் அரவிந்துக்கும், வனஜாவுக்குமான திருமண பேச்சை மறுபடியும் ஆரம்பித்தனர்.

இந்த முறை நேரடியாக அவன்

தந்தை அவனிடம் கேட்டார். “டேய் அரவிந்த் முகூர்த்த நாள் பார்க்கலாம்னு இருக்கோம்” என்றார்.

“யாருக்கு” என்றான்.

“என்னடா நக்கலடிக்கற உனக்கு தான்டா.”

“யாரோட”

“என்ன அரவிந்த் இப்படி கேட்கற நம்ம நளினியோட நாத்தனார் வனஜாவோட தான்” என்றார் அவன் அன்னை ராணி.

அப்படியே தணிந்தான் அரவிந்த். “அப்பா நீங்க எனக்கு வெளிநாடு போக பெர்மிஷன் குடுங்க. நீங்க யாரை சொன்னாலும் கல்யாணம் பண்ணிக்கறேன்.”

அவன் வழியிலேயே போய் தான் அவனை அணுக வேண்டும் என்று நினைத்த அவன தந்தை...

“நீ முதல்ல வனஜாவைக் கல்யாணம் பண்ணிக்கோ அப்புறம் அதைப் பத்தி யோசிக்கலாம்” என்றார்.

“நிஜமாவா அப்பா சொல்றீங்க” என்றான் முகம் மலர்ந்தது.

“முதல்ல நீ கல்யாணத்துக்கு சரின்னு சொல்லுடா அப்புறம் பார்க்கலாம்.”

“நான் எப்படி உங்களை நம்பறது”

“நான் மட்டும் எப்படிடா உன்னை நம்பறது.”

இருவரும் வாக்குவாதத்தில் இறங்க... திருமணம் என்ன இவர்களுக்கு விளையாட்டா என்று அவன் அன்னை ராணி இருவரையும் பார்த்து விழி விரித்தார்.

“என்ன முட்டாள்தனம்; பண்றீங்க ரெண்டு பேரும்” என்று அதட்டினார். “இவன் வெளிநாடு போறதுக்கும் இவன் கல்யாணத்துக்கும் ஒரு சம்பந்தமும் இருக்கக் கூடாது...” என்று ஏறக்குறைய கர்ஜித்தார்.

“என்ன பேசறீங்க ரெண்டு பேரும் கல்யாணம் என்ன விளையாட்டா. உன் வாழ்க்கை மட்டுமில்லை... ஒரு பொண்ணோட வாழ்க்கையும் இதுல

அடங்கியிருக்கு... யாரும் கல்யாணத்தை வச்சி எல்லாம் வெளிநாடு போறதைப் பத்தி பேச வேண்டாம்" என்றார் முடிவாக.

"அப்போ எனக்கு கல்யாணமும் வேண்டாம்" என்றான் அரவிந்த்.

"பிடிவாதம் பிடிக்காத அரவிந்த்" என்று கத்தினார் அவன் அன்னை. "உனக்கு வெளிநாடு போறதுன்னா போ...

போகலைன்னாலும் போ... ஆனா அதை கல்யாணத்தோட சம்பந்தப்படுத்தாத" என்று மிகவும் உட்ச பட்ச டென்ஷனில் கத்தினார்.

அவருக்கு ஏதாவது ஆகி விடுமோ என்று பயந்து சிதம்பரமும் அரவிந்தை நோக்கிக் கத்தினார்... "டேய் எதுனாலும் அப்புறம் பேசலாம், சரின்னு சொல்லுடா" என்று...

"சரி நான் வெளிநாடு போறதையும், கல்யாணத்தையும் இணைக்கலை... ஆனா எனக்குக் கல்யாணத்துல இஷ்டமில்லை" என்றான்.

"ஏன்? இன்னும் எப்ப கல்யாணம்

பண்ணலாம்னு இருக்க! இப்பவே இருபத்தி ஏழு வயசாகுது. இது தான் கல்யாணத்துக்கு சரியான வயசு. அதனால நீ கட்டாயம் கல்யாணத்துக்கு சம்மதிக்கணும்" என்றார் கோபமாக அவன் அன்னை.

"அம்மா! சும்மா கத்தாதீங்க... எதுவும் உங்க இஷ்டம் கிடையாது, எல்லாம் என் இஷ்டம் தான். நான் கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டேன்" என்றான் அடமாக...

"ரெண்டு பேரும் முதல்ல சத்தம் போடறதை நிறுத்துங்க" என்றார் அவன் தந்தை.

இருவரும் கத்திக் கொள்வதைப் பார்த்து பயந்த அவன் தந்தை, அவன் அன்னைக்கு ஏதாவது ஆகி விட்டாள் என்ன செய்வது என்று பேச்சை ஒத்திப் போட்டார்.

"எல்லாம் வேலையைப் பாருங்க அப்புறம் பேசலாம்" என்று விட்டார்.

அதே டென்ஷனோடு ஷோரூம் வந்தான். அவன் முகத்தைப் பார்த்தவுடனே கீர்த்திக்குத் தெரிந்து

விட்டது.

அவன் மிகுந்த கோபத்தில் இருக்கிறான் என்று. அப்படி என்னதான் வீட்டில் தினமும் சண்டை போட்டு வருவானோ என்று எண்ணினாள். இவன் வீட்டு ஆட்களாவது இவன் குணம் தெரிந்து சற்று தணிந்து போகக் கூடாதா என்று இருந்தது கீர்த்திக்கு.

ஏதோ பணியாளன் வேறு அரவிந்திடம் மாட்டிக் கொண்டான். அவனிடம் ஏதோ சத்தம் போடப் போக... வேகமாக அங்கே விரைந்த கீர்த்தி... அந்த பணியாளனை அனுப்பினாள்.

“நீங்க போங்க” என்றவுடனே அவசரமாக அவன் அங்கே இருந்து அகன்றான்.

“இப்போ எதுக்கு அவனை அனுப்பின” என்று கோபத்தை நேரடியாக கீர்த்தி மேல் திருப்பினான் அரவிந்த்.

“ஏன் அனுப்பினா என்ன? அவன் இங்க இருந்தா நீங்க இப்போ கடிச்சுக் குதறி இருப்பீங்க... நேத்து தான் அவ்வளவு சொன்னேன். மறுபடியும் கத்தறீங்க” என்று பதிலுக்கு வாயடித்தாள்.

“ஏய்! நீ இங்க ஒரு மேனேஜர் மட்டும்தான். உனக்கு யாரும் என்னை அதிகாரம் பண்ற உரிமையை கொடுக்கலை.

யாரும் உங்களை இந்த அதிகாரம் பண்ணலை. அதுக்குன்னு நீங்க சும்மா சும்மா வொர்க்கர்ஸ கூப்பிட்டு திட்டுனா அதையெல்லாம் பார்த்துட்டு இருக்க முடியாது.”

“என்ன பண்ணுவ.”

“நான் என்ன பண்ணவன் நான் ஒண்ணும் பண்ணமாட்டேன். ஆனா வேலை பார்க்கறவங்க...”

“யாரும் ஒழுங்கா வேலை பார்க்க மாட்டாங்க, நஷ்டம் உங்களுக்குத்தான்.”

“என் நஷ்டத்தைப் பத்தி நீ ஒண்ணும் கவலைப்படாத.”

“நான் கவலைப்படாம வேற யார் படுவா” என்றாள் அவளையுமறியாமல்.

“நீ ஏன் கவலைப்படணும்” என்றான்.

இதற்கு என்ன பதில் கொடுக்க

முடியும். “நான் வேலை செய்யற இடம் நல்லா இருக்க வேண்டாமா” என்றாள் சலிப்பாக...

அப்போது தான் சுற்றுப்புறத்தைப் பார்த்தான்... எல்லோரும் அவர்களையே பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

அவசரமாக அவள் கையைப் பற்றி இழுத்து கேபினுக்குள் சென்றான்.

“நீ என்ன தான் நினைச்சிட்டிருக்க உன் மனசுல... என்னைக் கேள்வி கேட்கற உரிமை யாரு உனக்குக் கொடுத்தா... தண்டபாணியோட தங்கச்சின்னு பாக்கறேன். இல்லை நடக்கறதே வேற” என்றான் மிகுந்த கோபமாக...

அவனையே விழி எடுக்காமல் பார்த்தவள்... “பேசி முடிச்சாச்சா நான் போகலாமா” என்றாள் சற்று அலட்சியமாக.

அப்படியே அவளை ஒரு அறை விட வேண்டும் போல ஆத்திரமாக வந்தது அரவிந்திற்கு... மிகவும் முயன்று அடக்கினான்... அப்படியும் முடியாமல், “போடி...” என்று சொல்லி வெளியே சென்று விட்டான்.

“நீ போடா பெரிய இவன் நீ... சும்மா எல்லார்கிட்டேயும் வள்ளு வள்ளுன்னு விழுந்துட்டு” என்று வாய்க்குள் முணுமுணுத்தவாறே வேலையைப் பார்க்கச் சென்றாள்.

எப்போதும் அவன் தங்கையைப் பற்றி தண்டபாணியிடம் அரவிந்த் பேச மாட்டான். இன்று நேரே அவன் இருக்குமிடம் வந்தவன், அவனையும் மீறி... “டேய், ஒரே டார்ச்சர்டா உன் தங்கச்சி... வீட்ல தான எங்கப்பன் தொல்லைன்னா... இவ தொல்லை ஷோரூம்ல... அப்படி வொர்க்கர்ஸ்கிட்ட பேசாதீங்க... இப்படி வொர்க்கர்ஸ்கிட்ட பேசாதீங்கன்னு கடுப்படிக்கிறாடா” என்றான்.

“அப்படியா” என்ற தண்டபாணி... “அவ வீட்டுக்கு வரட்டும் நான் பேசறேன்” என்றான். அது அவனுக்காக சொன்ன வார்த்தைகள்... அவனுக்கு தெரியும் கீர்த்தி. மிகவும் நியாயவாதி... அநியாயம் பொறுக்க மாட்டாள். இவன் தான் ஏதாவது கலாட்டா செய்திருப்பான் என்று தெரியும். இருந்தாலும் உடனே சொன்னால், அவன் கோபம் தான்

அதிகமாகும் என்று தெரிந்தவன், எதுவும் சொல்லாமல் அமைதி காத்தான்.

அரவிந்த் அப்படித்தான். அவனுக்கு சரியென்று பட்டதை உடனே செய்ய வேண்டும். நியாய-அநியாயங்கள் பார்க்க மாட்டான். ஆனால் அவனுக்கு நேர் எதிர் கீர்த்தி, சின்ன விஷயத்திலும் நியாய அநியாயங்கள் பார்த்துதான் செய்வாள்.

ஆனால் இந்த விஷயங்களையும் மீறி அரவிந்த் நல்லவன். அது தண்டபாணிக்கு நன்கு தெரியும். அதனால் தான் இருவருக்குள்ளும் ஒரு நல்ல நட்பு புரிதல் இழையோடியது.

அரவிந்தும் தண்டபாணிக்காக எதுவும் செய்வான். ஏனென்று கேட்டால்... அவனுக்கே தெரியாது. மிகவும் குறுகிய காலத்திற்குள் இருவருக்குள்ளும் இணைபிரியாத நட்பு உருவாகி இருந்தது.

5

அன்றிலிருந்து ஷோரூமிற்கு வந்தால், கீர்த்தியோடு பேசமாட்டான்.

வெறும் பார்வை பரிமாறல் மட்டுமே. கீர்த்தியும் அவனோடு பேச விழையவில்லை. அவளுக்கு நிச்சயமே, அவன் தவறு செய்கிறான், அந்த மாதிரியான நடத்தையால் என்று. அதனால் அவன் உணரட்டும் என்று அவளும் அவளிடத்தில் சற்று அலட்சியப் போக்கையே காட்டினாள்.

அந்த அலட்சியப் போக்கு, அவளை திமிர் பிடித்தவளாகவே அரவிந்திடம் உருவகப் படுத்தியது. அவனுக்கு ஏனோ கீர்த்தியின் அந்தப் பரிமாணம் மனதிற்கு பிடிக்கவேயில்லை.

என்ன மாதிரி கீர்த்தியை எதிர்பார்த்தான் என்று தெரியவில்லை. ஆனால் இந்த திமிர் பிடித்த, அவனை அலட்சியப் பார்வை பார்க்கும் கீர்த்தியை அவனுக்குப் பிடிக்கவில்லை.

தண்டபாணியும் கீர்த்தியிடம் கூறினான். “ஒரு நேரம் நல்லா நடந்துப்பான். ஒரு நேரம் எப்படி நடந்துப்பான்னு சொல் முடியாது கீர்த்தி, எதுக்கும் அவன் விஷயத்துல தலையிடாத” என்றான்.

“என்னவோ போ நல்ல ப்ரண்ட் பிடிச்சிருக்க, என்ன அவன் பிரச்சனை. ஏன் அவன் இப்படி இருக்கான்.”

“அவனுக்கு இந்த பர்னிச்சர் பிஸினஸ் பிடிக்கலை. அவன் கூட படிச்ச மத்த பசங்க மாதிரி வெளிநாடு போகணும் சம்பாதிக்கணும். அதை அவன் அப்பா அனுமதிக்க மாட்டேங்கறார். அவர் மறுக்க மறுக்க இவனுக்கு போகணும்ன்ற வெறி அதிகமாயிடுச்சு. நல்லவன் தான் நட்புக்காக என்ன வேணா செய்வான். அதே சமயம் பிடிக்கலைன்னாலும் பிடிக்கலைதான்” என்று தன் நண்பனைப் பற்றிக் கூறினான்.

“உனக்கு எப்போ அண்ணா கிளம்பணும்” என்றாள்.

“எனக்கு இன்னும் ஒரு வாரத்துல கிளம்பணும், லண்டன்” என்றான் சிரிப்போடு.

“அங்க காஸ்ட் ஆஃப் லிவ்விங் எல்லாம் ரொம்ப அதிகம் சொல்றாங்களே தண்டு, ஏதாவது மிச்சம் ஆகுமா, அதுக்காக நீ அவ்வளவு தூரம் போகணுமா.”

“போ கீர்த்தி! நல்ல ஆஃபர் இது. தனியாள் தானே. நிச்சயம் நிறையவே சேவ் பண்ணலாம்.”

“என்னவோ போ” என்று அமைதியாக அவன் பக்கத்தில் அமர்ந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

அவள் தண்டபாணியை நிறைய மிஸ் செய்வாள் என்று அவளுக்கும் தெரியும், தண்டபாணிக்கும் தெரியும். அதற்கு தான் இந்த பில்ட்-அப் என்றும் தெரியும்.

இருவரும் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

“இந்தப் பிரிவு இனிமே நமக்குள்ள நிரந்தரம் தான் கீர்த்தி” என்றான் தண்டபாணி.

“ஏன் என்பதுபோல பார்த்தவளிடம், “நான் இப்போ ஊருக்குப் போறேன். நான் வரும்போது அப்பா எப்படியும் உன் கல்யாணத்துக்குப் பார்த்திருப்பார் இல்லை முடிச்சிருப்பார். ஸோ நமக்குள்ள இனிமே இப்படிதான். நாமே இனிமே சேர்ந்திருந்தாலும், அது ஒரு வாரமோ, பத்து நாளோ தான்”

என்றான் கனத்த குரலில்...

தன் அண்ணன் வருந்துகிறான் என்பதை உணர்ந்து... "ப்ச், விடப்பா" என்று பேச்சை மாற்றினாள் கீர்த்தி.

"என் டார்ச்சர் இல்லாம இனிமே நீ ப்ரியா இருப்பன்னு சொல்லு."

"என்ன சொல்லு, நீ எனக்கு டார்ச்சரா! போடி..." என்று நெற்றியில் தட்டினான்.

"இல்லையா, எப்போ இருந்து?"

"இப்போ இருந்து! இந்த நிமிஷம் இருந்து!" என்று தண்டபாணி சொல்ல, இருவரும் மலர்ந்து சிரித்தனர்.

அவர்கள் சிரிப்பதைப் பார்த்துக் கொண்டே வந்த அவர்களின் அன்னை, "என்ன? என்ன கொஞ்சல்ஸ் அண்ணனும், தங்கச்சியும்" என்று கேட்க...

"அது ஒண்ணுமில்லையம்மா! நான் போறதுக்குள்ள அவ கல்யாணத்தை நீங்க முடிப்பீங்கன்னு இவ நினைச்சாம்மா. நீங்க தான் ஒண்ணுமே பண்ணலை" என்றான் தன் தங்கையை சீண்டும் எண்ணத்தோடு.

“இல்லைம்மா அப்படி எல்லாம் எதுவும் இல்லை. இவன் சும்மா சொல்றான். டேய்” என்று அவனை அடிக்க வர... அவன் ஓட ஆரம்பித்தான்.

இந்த ஓடிப் பிடித்தல் விளையாட்டை, அவர்களின் தந்தை ராஜேந்திரனும் பார்க்க... அருகில் வந்த தாய் இந்துமதி... “என்னங்க இன்னும் அவ கல்யாணத்துக்கு எதுவும் அமைய மாட்டேங்குது” என்று குறைபட...

“இனமேலா இந்து பொறக்கப் போறான். எல்லாம் பொறந்திருப்பான். என்ன நம்ம கண்ல பட கொஞ்ச நாள் ஆகுது” என்றார் சலிப்பாக.

ஆமாம், அவருமே சற்று சலிப்பாக உணர்ந்தார். அவர் பெண் கீர்த்தி நன்றாக அழகாக இருக்கிறாள், படித்திருக்கிறாள். ஓரளவு வசதியானவர்களே. ராஜேந்திரனும் தன் பெண்ணிற்கு நிறையவே செய்வார். இருந்தாலும் வரன் அமையாமல் தட்டித் தட்டிச் சென்றது.

அவருக்கும் அதில் மிகுந்த வருத்தம் தான். ஆனால் அமைய மாட்டேன் என்கிறதே.

கீர்த்தியின் அன்பையும், தந்தையும் அது தந்த மன உளைச்சலில் அப்படியே சிறிது நேரம் அமர்ந்து விட்டனர்.

இந்த கிரக தோஷங்கள், அவளுடைய பிறந்த மூல நட்சத்திரம் அவளையும், அவர்களையும் பாடாய் படுத்திக் கொண்டிருந்தது, எந்த வரனும் தகையாமல்.

இதற்குள் தண்டபாணி ஊருக்குச் செல்லும் நாளும் வர... அவனை சென்ட் ஆப் செய்ய... அவன் பெற்றோர், கீர்த்தி செல்ல... அங்கே அரவிந்தும் வந்து இருந்தான்.

கீர்த்திக்கு என்ன முயன்றும், தன் அண்ணனை பிரிவதை நினைத்து கண்களில் கண்ணீர் தேங்கியது.

அவளை தண்டபாணி சமாதானப்படுத்துவதைப் பார்த்த அரவிந்திற்கு சிரிப்பு வந்தது. எவ்வளவு தைரியமாக என்னையே அலட்சியப் பார்வை பார்க்கிறாள். அவள் அண்ணன் ஊருக்குப் போகும் போது இப்படி சின்னப் பெண் மாதிரி அழுகிறாள் என்று நினைத்து அவனுக்கு சிரிப்பு வர... அதை

மறைக்காது முகத்தில் அவளைப் பார்த்து சிரிப்பைக் காட்டினான்.

இவன் தன்னைப் பார்த்து சிரிப்பதை உணர்ந்து,

“என்ன சிரிப்பு” என்று நேரடியாக அவனிடம் சண்டையில் இறங்கினாள்.

“இதென்ன வம்பா இருக்கு எனக்கு சிரிப்பு வருது. நான் சிரிக்கிறேன். ஏன் உன்கிட்ட பெர்மிஷன் வாங்கணுமா” என்றான் அரவிந்த் தண்டபாணியைப் பார்த்து சிரித்தவாறே, கீர்த்தியை நோக்கி.

“ஒண்ணும் என்கிட்ட பெர்மிஷன் வாங்க வேண்டாம், அதே சமயம் என்னைப் பார்த்துச் சிரிக்கவும் வேண்டாம்.”

“நீ சிரிக்கிற மாதிரி செஞ்சா சிரிக்காம, என்ன செய்வாங்க?” என்றான் அரவிந்த்.

தண்டபாணி இப்போது அரவிந்தை ஆச்சரியமாகப் பார்த்தான். இப்படி பெண்களிடத்தில் வாயடிப்பவன் அல்ல அரவிந்த். அமைதியாக இருவரையும் பார்வையிட்டான்.

“நான் என்ன சிரிக்கற மாதிரி செஞ்சேன்.”

“உங்க அண்ணன் ஊருக்குப் போறான். சின்ன பொண்ணு மாதிரி அழறியே.”

“வருது அழறேன்! உங்களுக்கு என்ன?”

“எனக்கும் சிரிப்பு வருது சிரிக்கறேன்.”

“சே! சே! உங்க கிட்ட போய் பேசினேன் பாரு” என்று முகத்தைத் திருப்பி பெற்றோர்களுடன் போய் அமர்ந்து கொண்டாள்.

அது இன்னும் அரவிந்திற்குச் சிரிப்பைக் கொடுத்தது. அதே சமயம் தன்னுடைய செய்கையை நினைத்து அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒரு பெண்ணைத் தான் இவ்வளவு கிண்டல் செய்து பேசிக்கிறோமே என்று. பிறகு அமைதியாகி விட்டான்.

தண்டபாணி அரவிந்திடம் தன் தங்கை வேலையில் ஏதாவது சிறு பிள்ளைத்தனம் செய்தாலோ, அல்லது

அவனிடம் வாயடித்தாலோ பொருத்துப் போகுமாறு சொன்னான். அப்படியே அவளைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லி... பெற்றோர்களிடத்திலும், தங்கையினிடத்திலும் விடைபெற்று லண்டன் செல்லும் விமானத்தில் ஏறினான்.

தன் அண்ணன் வீட்டில் இல்லாததை நிறைய மிஸ் செய்தாள் கீர்த்தி. அரவிந்தும் தன் நண்பன் இல்லாததால் அவனுக்குப் பொழுதே ஓடாத மாதிரி உணர்ந்தான். இருவரையும் ஒரு வகையான தனிமை தாக்கியது. அது இருவரையும் சற்றே நெருங்கி வர வைத்தது.

இப்போதெல்லாம் கீர்த்தியைப் பார்க்கும்போது ஒன்றிரண்டு வார்த்தை நின்று பேசிப் போனான் அரவிந்த். கீர்த்தியும் அரவிந்தினிடத்தில் தன்னுடைய பார்வைகளை சற்று மாற்றியிருந்தாள். முன்பு போல அலட்சியமான பார்வை எல்லாம் பார்ப்பதில்லை. சற்று மரியாதையோடு பார்க்கப் பழகியிருந்தாள்.

அரவிந்தும் முன்பு போல எல்லோரிடத்திலும் எரிந்து விழுவதில்லை. சற்று அடக்கியே வாசித்தான். அதனால் பெரிதாகப் பிரச்சனைகள் என்று அரவிந்துக்கும் கீர்த்திக்கும் வரவில்லை.

அரவிந்தின் தந்தையும் கீர்த்தி வந்த பிறகு அந்த ஷோரூம் பற்றிய கவலை எதுவும் இல்லாமல் இருந்தார். கீர்த்தியே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டாள்.

கீர்த்தியின் பெற்றோரும் தீவிரமாக மாப்பிள்ளை வேட்டையில் இறங்கியிருந்தனர். ஆனால் மாப்பிள்ளை தான் அமைவதாகக் காணோம்.

இப்படியே தண்டபாணி போய் எட்டு மாதங்கள் ஆகிவிட்டது. மாப்பிள்ளைகள் வந்தனர் தான். இவர்களுக்கு சரி என்று பட்டால் அவர்களுக்கு சரி என்று படவில்லை. இவர்கள் வேண்டாம் என்று நினைக்கும் மாப்பிள்ளைகள் மோதினர் திருமணத்திற்கு.

கீர்த்தியின் பெற்றோர்களுக்கு அவள் திருமணம் பெருங்கவலையாகிப்

போனது. நாட்கள் வேறு வேகமாக போகிறது என்ற கவலை ஏறிக் கொண்டே போனது.

அரவிந்தின் வீட்டில் வனஜாவுடன் திருமணத்திற்கு நச்சரித்துக் கொண்டே இருந்தனர். அரவிந்த் முடிவாக சொல்லி விட்டான், "என்னை ஒரு முறையாவது வெளிநாட்டிற்கு அனுப்பினால் தான் திருமணத்தைப் பற்றியே யோசிப்பேன்" என்று கூறிவிட்டான்.

அவன் தந்தை சிதம்பரமும் அவன் பிடிவாதத்தை பார்த்து செய்வதறியாது திகைத்தார்.

அன்று ஷோரூமில் அவரையுமறியாமல் கீர்த்தியிடமே புலம்பி விட்டார்.

"இவனை என்ன பண்ணறதுன்னே தெரியலையேம்மா. வெளிநாட்டு மோகம் இவனை இப்படி புடிச்சு வாட்டுது. எனக்கு எப்படி இப்படி ஒரு பையன் வந்து பொறந்தான் தெரியலையே" என்றார்.

கீர்த்தி அரவிந்துக்காக பரிந்து பேசினாள்...

“அவருக்கு அதுதான் ஆசைன்னா ஒரு வாய்ப்பு குடுத்து பாருங்களேன் சார். கண்டிப்பா அவர் நோக்கம் பணம் கிடையாது, ஏன்னா அதைவிட பல மடங்கு வருமானம் இங்க இருக்கு.”

“பணம் நோக்கமில்லாத பட்சத்துல வெளிநாட்டு மோகம் சீக்கிரம் தீர்ந்திடும் சார். ரொம்ப நாள் நிற்காது. நீங்க வேண்டாம் வேண்டாம்ன்னு சொன்னா, போகணும்ன்ற பிடிவாதம் தான் அதிகம் ஆகும். யோசிங்க சார்” என்றாள்.

சிதம்பரத்தின் முகமும் யோசனைக்குப் போனது. அவரும் அதை மனதில் யோசித்துக் கொண்டுதானிருந்தார். வேலைக்கு அனுப்பாமல் சுற்றி பார்ப்பது மாதிரியாவது ஒரு ஆறு மாதமோ, மூன்று மாதமோ அனுப்பி வைக்கலாமா என்ற யோசனை ஓடிக் கொண்டுதான் இருந்தது.

அன்று மாலையே அரவிந்தை அழைத்த சிதம்பரம், “வேலைக்கு எல்லாம் அனுப்ப மாட்டேன்பா... ஒரு ஆறு மாசம் டூர் மாதிரி வேணா எங்கயாவது போயிட்டு வா. ஆனா வந்ததுக்கு அப்புறம்

பிஸினெஸ். ஃபுல் சார்ஜ் எடுத்துக்கணும். அப்புறமும்; அதையும் இதையும் பேசி வெட்டியா சுத்திட்டு இருக்கக் கூடாது" என்றார்.

அரவிந்தும் சற்று இறங்கி வந்தான். அந்த மட்டிலுமாவது தன்னை அனுப்ப அவர் ஒத்துக் கொண்டாரே என்று... அந்த யோசனையை யோசிக்க ஆரம்பித்தான்.

அவன் யோசிப்பதைப் பார்த்ததும், அவன் தந்தை அவன் முன் ஒரு நிபந்தனை வைத்தார்.

"நீ அப்படி வெளிநாட்டுக்குப் போற மாதிரி இருந்தா, வனஜாவோட கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டு தான் போகணும்" என்று,

"அதெல்லாம் முடியாது" என்றான். "ஏன் முடியாது" என்றார் பதிலுக்கு அவன் தந்தை.

"நாங்க உன்னை ஊருக்கு அனுப்பறோம். நீ கல்யாணத்துக்கு ஒத்துக்கோ" என்று பேரம் பேசினார்.

எவ்வளவோ வாதாடிப் பார்த்தான்

அரவிந்த். அவன் தந்தை, “நீயே யோசிச்சு ஒரு பதில் சொல்லு. நான் மாறமாட்டேன்” என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

6

பெரும் குழப்பத்தில் ஆழ்ந்தான் அரவிந்த்... தான் வனஜாவை திருமணம் செய்வதா. திருமணம் என்றதுமே அவன் முன் கீர்த்தியின் முகம் மின்னி மறைந்தது.

அவன் உணர்ந்தான், கீர்த்தியை அவனுக்குப் பிடித்திருந்ததை. ஆனால் அது சரி வருமா என்று தெரியவில்லை. அவளுக்கு தன்னைப் பிடிக்குமா தெரியவில்லை.

கீர்த்தியை அவனுக்கு மிகவும் பிடித்தது. அது திடீரென்று இப்போதுதான் தோன்றியது. முன்பெல்லாம் அவன் இதைப்பற்றி யோசிக்கக்கூட இல்லை.

என்ன செய்வது எப்படி இதை நடத்திக் கொள்வது. அதுவும் உயிர் நண்பனின் தங்கை வேறு.

வனஜாவை வேண்டாம் என்று எப்படிச் சொல்வது... வீட்டில் ஒத்துக்

கொள்வார்களா, இரவு முழுவதும் இதே யோசனைகள் ஆக்கிரமித்தன.

கீர்த்தியிடம் சென்று உன்னைப் பிடித்திருக்கிறது என்று சொல்வதா, தண்டபாணியிடம் சொல்வதா அல்லது தன் தந்தையிடம் சொல்வதா அவனுக்குத் தெரியவில்லை.

தந்தையிடம் சொல்லி... கீர்த்தி வேண்டாம்.. என்று மறுத்துவிட்டாலும் பிரச்சனை. கீர்த்தியிடம் சொல்லி, தந்தை வேண்டாம் என்று மறுத்து விட்டாலும் பிரச்சனை.

யார் ஒத்துக் கொண்டாலும் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் கீர்த்தி ஒத்துக் கொள்ள வேண்டுமே. மனதில் ஒரு இனம் புரியாத அவஸ்தையை உணர்ந்தான்.

இரவு முழுவதும் இப்படி பலதும் யோசித்துக் கொண்டிருந்ததால் காலையில் எழுவதற்கே மிகுந்த நேரமாகி விட்டது.

அவன் அம்மாவும் எழுப்பவில்லை. எழும்போதே மணி ஒன்பது.

எழுந்தவுடனேயே அவன் அப்பா

கேட்டார். “என்னடா என்ன முடிவு பண்ணியிருக்க... நீ என்ன முடிவு பண்ணியிருக்கன்னு சொன்னாதான் நான் பொண்ணு வீட்ல பேச முடியும்.”

“அவசரப்பட வேண்டாம் அப்பா பொறுமையா யோசிச்சுச் செய்வோம்” என்றான் பணிவாக.

இப்படி பணிவாகப் பேசும் மகனை ஆச்சரியமாக பார்த்தார் சிதம்பரம். இது அவன் இயல்பு அல்லவே. ஏன் இப்படி பேசுகிறான். காதல் கீதல் என்று எதிலேயாவது மாட்டி விட்டானா என்று முதன் முறையாகத் தோன்றியது.

அவனையே பார்த்தார். அவர் பார்வையைச் சந்திக்காமல் வேறு திக்கில் பார்த்தான். இப்படி அவன் இருந்ததே இல்லை. தப்பு செய்தாலும் தைரியமாகச் செய்வான், அதையே சொல்வான். என்றும் கண்களைப் பார்த்துப் பேசத் தயங்கியதில்லை. என்னவாயிற்று இவனுக்கு என்று அவனையே கவனித்தார்.

அவரிடம் பேசியவன், அவர் தன்னையே கேள்வியாகப் பார்ப்பதை

உணர்ந்து ரூமிற்குள் புகுந்து கொண்டான். அவனுக்கு அவனே என்ன செய்வது என்றறியாமல் ரெஸ்ட்லெஸ்ஸாக உணர்ந்தான்.

அவனுக்கு கீர்த்தியை பிடித்திருக்கிறது என்று உணர்ந்த பிறகு அவளைப் பார்க்க வேண்டும் போலத் தோன்ற... அவசரமாகக் குளித்துவிட்டுக் கிளம்பினான்.

அவன் ஷோரூமில் நுழையும்போதே... அவனுக்கு முன்னே அவன் தந்தை இருந்தார். இவர் எதுக்கு இன்னைக்கு இங்க காலையிலேயே வந்திருக்கார் என்று எரிச்சலாக மனதிற்குள் நினைத்தபடி அவரைப் பார்த்தான்.

அவர் மும்முரமாக கீர்த்தியிடம் பேசிக் கொண்டிருந்தார். அவன் பார்வை கீர்த்தியை சிறையெடுத்தது பொறாமையாக. அவன் கண்களுக்குப் புதிதாய் தெரிந்தாள். புத்தம் புதிதாய். அப்போதுதான் கீர்த்தியின் அழகே அவன் கண்களில் பட்டது.

இத்தனை நாட்கள் கீர்த்தியைப்

பார்த்திருக்கிறான். ஏன் சில சமயம் அவளை ரசித்தும் இருக்கிறான் தான். ஆனால் அவள் அழகை உணர்ந்து பார்த்ததில்லை. சராசரிக்கும் சற்று உயரமாக, அளவான உடற்கட்டில், நல்ல முகட்டில் அழகாகத் தோன்றினாள்.

இப்படி அழகாக இருப்பவளை எப்படி தான் இவ்வளவு நாட்கள் கவனிக்காமல் போனோம் என்று நினைத்தான். அவனை அவன் தந்தை கவனித்து விட்டார். உள்ளே அவன் வேகமாக நுழைந்ததையும், தன்னை பார்த்து சட்டென்று வேகம் குறைந்ததையும், பின்பு கீர்த்தியையே அவன் கண்கள் அளவெடுப்பதையும் பார்த்தார்.

இதையெல்லாம் கீர்த்தி உணரவில்லை. அவனை பார்த்தவள் அவனுக்கு விஷ் செய்துவிட்டு, தன் வேலையைப் பார்க்க போய்விட்டாள்.

இதைப் பார்த்த சிதம்பரம் நிமிடத்தில் உணர்ந்தார், எதுவாகினும் பிரச்சனை தன் மகனிடமே என்று. கீர்த்தி அவனைச் சற்றும் கண்டு கொள்ளவில்லை

என்று அன்று மற்றொரு ஷோ ரூமிற்கு போகாமல் அங்கேயே அமர்ந்து கொண்டார்.

தினமும் சிறிது நேரமே இருக்கும் சார் ஏன் இன்று இங்கேயே அமர்ந்து கொண்டார் என்று கீர்த்திக்குப் புரியவில்லை. ஆனால் அரவிந்த் தன் தந்தை எதையோ உணர்ந்து விட்டார். அதனால் தன்னை நோட்டம் விடுவதற்காகவே இங்கே அமர்ந்து கொண்டார் என்று அரவிந்த் கண்டு கொண்டான்.

கண்டு கொண்டவன் அதைப் பற்றி சிறிதும் கவலைப் படாமல் கீர்த்தியைப் பார்க்கத் துவங்கினான்.

இந்த விளையாட்டு அரவிந்திற்குப் பிடித்திருந்தது. என்னவோ கண்டு பிடிக்கிற மாதிரி தன் தந்தை தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவன், அப்படியே தான் கீர்த்தியை விரும்புவதை தெரிந்து கொள்ளட்டும் என்று அவளையே விடாமல் பார்க்க துவங்கினான்.

அவன் விடாமல் கீர்த்தியை பார்க்கத் துவங்கியவுடனே அவன் தந்தை

கண்டு கொண்டார். அவன் ஏதோ முடிவெடுத்து விட்டான் என்று. அதை தனக்கு உணர்த்துவதற்காகவே அவன் விடாமல் பார்க்கிறான் என்றும் கண்டு கொண்டார்.

இப்பொழுது என்ன செய்வது என்று அவருக்கு தெரியவில்லை. அவனை ஏதாவது கேட்கலாம் என்றால், அவர் கேட்க வேண்டும் என்பதற்காகவே அவன் எல்லாம் செய்வது போலத் தோன்றியது. இவர்களின் பார்வை பரிமாற்றங்களை உணராத கீர்த்தி, கஸ்டமர்களிடம் மிகவும் பிஸியாக இருந்தாள். அவள் கஸ்டமர்களிடம் பிஸியாக இருப்பதை பார்த்த அரவிந்த், தன் தந்தையிடம் வந்தான்.

“என்ன அப்பா இன்னும் கிளம்பாம இருக்கீங்க...”

“இன்னைக்கு எனக்கு பதிலா நீ அந்த ஷோரூம் போறயா.”

“ஏன் அப்பா தினமும் நீங்க தானே போவீங்க.”

“ஒரு சேஞ்ச்க்கு நீ போ அரவிந்த்.”

“எனக்கு எந்த சேஞ்சும் வேண்டாம்பா. நான் எதையும் சேஞ்ச் பண்ணற மாதிரி இல்லை” என்றான் பூடகமாக.

“எதை சேஞ்ச் பண்ணற மாதிரி இல்லை அரவிந்த்.”

“நீங்க எதைக் கேக்கறீங்க அப்பா.”

“நீ எதைச் சொல்ற.”

“அப்பா” என்றான் சின்ன சிரிப்போடு.

“உங்களுக்கு ஏதாவது கேட்கணும்னா நேரடியா கேளுங்க... ஏன சுத்தி வளைக்கறீங்க.”

“அதே தான் அரவிந்த் உனக்கும் நீ ஏதாவது சொல்லணும்னா சொல்லு... நீயும் சுத்தி வளைக்காத.”

“நீங்க தான் என்னை ஆராய்ச்சி பார்வை பார்த்தீங்களே நீங்க என்ன கண்டு பிடிச்சீங்க” என்றான்.

“பச் அரவிந்த் சொல்ல வர்றதை தெளிவா சொல்லு” என்று அவர் கோபப்பட.

“நீங்க என்ன நினைக்கிறீங்களோ அதுதான்பா” என்றான் தீர்மானமாக...

“என்ன விஷயம்” என்று நேரடியாகப் பேசிக் கொள்ளாமலேயே ஒரு அனுமானத்திற்கு இருவரும் வந்தனர்.

“வனஜாவோட கல்யாணம் பேசாதீங்கப்பா... ஏதாவது சொல்லி தட்டி விடுங்க. இவளோட என் கல்யாணம் நடக்குதோ இல்லையோ அது வேற விஷயம், எங்கப்பா அம்மாவும், அவ அப்பா அம்மாவும் அவளும் சேர்ந்து முடிவெடுக்க வேண்டிய விஷயம்.”

“ஆனா வனஜாவோட என் கல்யாணம் சரி வராதுப்பா... சின்ன வயசுல இருந்தே அவளைப் பார்த்திருக்கேன். அவ எனக்கு நல்ல ப்ரெண்ட் கூட. அது சரி வராதுப்பா.”

“நான் சொல்றபடி எல்லாம் நடக்கமாட்டேன்னு நினைக்காதீங்கப்பா... புரிஞ்சுக்கோங்க. எனக்கும் வனஜாவுக்கும் கட்டாயம் சரி வராது.”

“என்னை நீங்க வெளிநாடு அனுப்பறீங்களோ, இல்லையோ தனிச்சு

முடிவெடுங்க... என் கல்யாணத்தோட அதை சேர்க்காதீங்கப்பா... ப்ளீஸ்பா என்னைப் புரிஞ்சுக்கோங்க" என்றான் மன்றாடியபடி.

தன்னுடைய மகன் நீண்ட நாட்களுக்குப் பிறகு தன்னுடன் மனம் விட்டுப் பேசுகிறான் என்பது புரிந்தது. இவ்வளவு தெளிவாக வனஜாவை திருமணம் செய்ய மாட்டேன் என்று சொல்லுபவனிடத்தில் என்ன பேசுவது என்றும் தெரியவில்லை.

வேறு யாராவது இருந்தால் தட்டிக் கழித்து விடலாம். இவர்கள் சம்மந்தி வீட்டினராய் வேறு இருக்கிறார்கள். என்ன செய்வது என்று அவருக்கே தெரியவில்லை.

பேசாமல் மகளிடமே ஆலோசனை கேட்போம் என்று நினைத்தார்.

மகன் தன்னுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தது. என்ன இருந்தாலும் ஒரே மகன். அவன் இஷ்டப்படி வாழ வைக்காவிட்டால் தான் இவ்வளவு சம்பாதித்து என்ன பயன்.

ஏற்கனவே வெளிநாட்டு

வேலையை மிகவும் ஆசைப்பட்டவனுக்கு அதை தட்டி விட்டாயிற்று. இதில் திருமணத்தையும் தட்டிப் பேசினால், அவன் வீணாக போய்விட்டால் என்ன செய்வது என்று லேசான பயம் எட்டிப் பார்த்தது.

எது எப்படியோ, ஒரு மூன்று மாதம் அவன் இஷ்டப்படி முதலில் வெளிநாடு போய் வரட்டும், பின்பு திருமணத்தை பற்றிப் பேசலாம் என்று நினைத்தவர். அதையே அவனிடம் சொன்னார்.

“முதல்ல நீ ஒரு மூணு மாசம் எங்கயோ போகணும்னியே போயிட்டு வா வந்ததுக்கு அப்புறம் பேசலாம். அதுவரைக்கும் இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம்” என்றார்.

இந்த அளவில் இறங்கி வந்தாரே என்று நினைத்தவன் “சரிங்க அப்பா” என்றான்.

இருவரும் இருவருக்கும் சாதகமான விஷயத்தையே பேசி இருந்தாலும்... இருவர் மனதிலும் சந்தோஷமில்லை.

என்ன ஏது என்று

தெரியாதிருக்கும் பட்சத்தில் இதைப் பற்றி கீர்த்தியிடம் பேசவும் மனம் விழையவில்லை.

ஆனால் இவன் ஊருக்குப் போய் வருவதற்குள் அவள் வாழ்க்கையில் புதிதாக யாராவது வந்து விட்டால் என்ன செய்வது என்று பயமாகவும் இருந்தது. இதுவரை அவள் வாழ்வில் யாரும் இல்லை என்பது அவனுக்கு நிச்சயமே. இனிமேல் யாராவது வந்து விட்டால்... கீர்த்தியா... அவன் நீண்ட நாள் கனவான வெளிநாட்டு பயணமா.

இரண்டும் நடக்க வேண்டும் என்றால் அவன் கீர்த்தியிடம் இந்த விஷயத்தைப் பற்றி பேச வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

கீர்த்தி தந்தைக்கும் மகனுக்கும் ஏதோ வாக்குவாதம் என்ற அளவிற்குப் புரிந்தது. இருவர் முகங்களும் ஏதோ யோசனையில் இருப்பது தெரிந்தது. ஆனால் அந்த பிரச்சனைக்கு மூலக்காரணம் அவள் என்று கீர்த்தி சிறிதளவும் நினைக்கவில்லை.

மதியமாக அவன் தந்தை சென்ற

பிறகும் எங்கும் வெளியில் செல்லாமல் ஷோரூமிலேயே இருந்தான் அரவிந்த். கஸ்டமர்களை கவனித்துக் கொண்டே அவனையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள் கீர்த்தி.

சிறிது நேரத்திலேயே அவளை தன் கேபினுக்கு அழைத்தான் அரவிந்த்.

வந்தவளிடம், "உட்காரு கீர்த்தி" என்றான்.

கீர்த்தி உட்கார்ந்திருந்தாள், "சாப்டிட்டியா கீர்த்தி."

"இல்லை சார், இனிமே தான் சாப்பிடணும்" என்றாள் யோசனையாக, இவன் இப்படியெல்லாம் என்றுமே தன்னிடம் கேட்டதில்லையே என்பதை மனதில் வைத்து,

"நம்ம லஞ்சுக்குப் போலாமா."

"என்ன" என்று கேட்டு விழித்தாள் கீர்த்தி.

"நம்ம லஞ்சுக்கு போலாமான்னு கேட்டேன்."

"இல்லை, அது... நான்

யாரோடயும் அப்படியெல்லாம் போனதில்லை.”

“யாரோடையும் போனதில்லைன்னா பரவாயில்லை. என்னோட வா.”

“ஏன் நீ மட்டும் என்ன ஸ்பெஷல்” என்று கேள்வி கேட்க வாய் வரை வந்தது. இருந்தாலும் கேட்கவில்லை...

“ஏன் சார் திடீர்னு லஞ்செல்லாம் கூப்பிடுறீங்க. என்ன ஸ்பெஷல்” என்றாள் இலகுவாகவே...

“எனக்கு உன்னோட கொஞ்சம் பேசணும்.”

“பேசணும்னா இங்கயே பேசுங்களேன். அதுக்கு எதுக்கு லஞ்ச் போகணும்.”

“கொஞ்சம் பர்சனலா பேசணும்.”

“பேசுங்களேன்” என்றாள் என்ன வரப் போகிறதோ என்று பயந்தவாறே.

அவள் பயந்தது போலவே அரவிந்த்... “எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு கீர்த்தி... நான் உன்னை

கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன்” என்றான்.

எதையும் மறைத்தோ, சுற்றி வளைத்தோ பேசத் தெரியாத அரவிந்த்...

சற்று அதிர்ந்தாள் கீர்த்தி... இந்த மாதிரி சொல்வான் என்று சிறிதளவு கூட என்றுமே நினைத்ததில்லை கீர்த்தி.

அப்படியே அமர்ந்து விட்டாள்...

“கீர்த்தி... நீ என்ன சொல்றியோ, நான் அதை வச்சுதான் தண்டபாணிகிட்ட பேசணும்.”

“இல்லை, எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. நான் அந்த மாதிரி உங்களை நினைச்சதேயில்லை.”

“ஏன், வேற யாரையாவது நினைச்சிருக்கியா...”

“இல்லல்ல” என்றாள் அவசரமாக... “நான் யாரையும் அப்படி நினைச்சதேயில்லை. என் அப்பா அம்மா எப்படி சொல்றாங்களோ அப்படித்தான்.”

“இனிமே நினைச்சுப் பாரேன் கீர்த்தி... இதுவரைக்கும்

நினைக்கலைன்னா பரவாயில்லை.”

அவனை பயத்தோடு பார்த்தாள் கீர்த்தி. என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

அவளின் பயந்த பார்வையைப் பார்த்தான் அரவிந்த்.

தைரியமான கீர்த்தியிடம் அவன் அந்தப் பார்வையை எதிர்பார்க்கவில்லை.

காதல் என்ற வார்த்தையே கீர்த்திக்கு இனம் புரியாத பயத்தைக் கொடுத்தது.

என்னதான் மனிதர்கள் தைரியசாலிகளாய் இருந்தாலும், சில விஷயங்களில் அவர்களை அறியாமல் பயம் தோன்றும்.

அப்படிதான் கீர்த்திக்கு காதல் என்ற வார்த்தையை கேட்டதுமே தோன்றிற்று.

தன் வாழ்க்கையில் கீர்த்தி காதல் என்ற ஒன்றை விளையாட்டு போல கூட நினைத்துப் பார்த்ததில்லை. அது எப்படி வரும். தானாய் வருமா? நமக்கு மட்டும் பார்க்கும் ஆட்களிடம் எல்லாம்

அவர்களின் குறைதான் தெரிகிறதே! வேறு தெரிவதில்லையே! அப்புறம் எப்படி காதல் வரும் என்று சிலமுறை சிந்தித்துகூட பார்த்திருக்கிறாள்.

எல்லாமாக சேர்ந்து கொள்ள... “எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை. நான் உங்களை அந்த மாதிரி நினைச்சுப் பார்த்ததில்லை. உங்களை மட்டுமில்லை வேற யாரையும் நினைச்சுப் பார்த்ததில்லை. அதனால எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை” என்று பரிதாபமாகப் பார்த்தாள்.

“நான் உங்க அண்ணன்கிட்ட பேசறதுக்கு முன்னாடி உன்கிட்ட இதைப்பத்தி பேசிடணும்னு நினைச்சுதான் பேசினேன். உங்க அண்ணன் கிட்ட பேசவா.”

“அண்ணா என்னை தப்பா நினைச்சுட்டான்னா.”

“இதுல உன்னைத் தப்பா நினைக்க என்ன இருக்கு... நான் தானே உன்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லப் போறேன்.”

அவள் முகம்

தெளிவாகவேயில்லை. “இதுல பயப்பட ஒண்ணுமில்லை கீர்த்தி. நான் பேசறேன். உங்க அண்ணாவோட. உங்க அப்பா அம்மாவோட எங்க அப்பா அம்மாவைப் பேச வைக்கறேன். நீ டென்ஷன் இல்லாமல் இரு” என்று அவளுக்கு நிறைய டென்ஷன் ஏற்படுத்திக் கொடுத்தான்.

“நீ போய் சாப்பிடு. உனக்குத் தெரியாம உன்னைப் பத்தி எதுவும் நடக்க வேண்டாம்னு தான் முதல்ல உன்கிட்ட சொன்னேன்” என்று அவளிடம் சொல்லி அனுப்பினான்.

அவளுக்கு நிறைய டென்ஷன் ஆகிவிட்டது. சாப்பாடு இறங்கவேயில்லை. சாப்பாட்டை அளந்து கொண்டே இருந்தவள் பின்பு அதனை மூடியே வைத்து விட்டாள்.

அவளுக்கு எப்போது தண்டபாணி அழைப்பான் இதைப் பற்றி சொல்வோம் என்று இருந்தது.

நேரம் ஆக ஆக ஏதோ தவறு செய்து விட்ட மாதிரியே கீர்த்திக்குத் தோன்ற... அவளே தண்டபாணிக்கு

அழைத்தாள்.

7

அவளே தண்டபாணிக்கு அழைத்தாள். இந்த நேரத்தில் அழைக்க மாட்டாளே என்று பதறிய தண்டபாணி அவனே அழைத்தான்.

“என்ன கீர்த்தி” என்று பதட்டத்தோடு கேட்க...

“ஒண்ணுமில்லை அண்ணா” என்றாள் அவசரமாக... “உன்கிட்ட பேசணும் போல தோணிச்சு அண்ணா.”

“என்ன விஷயம் சொல்லுடா” என்றான் வாஞ்சையாக...

அழைத்ததென்னவோ அரவிந்த் ப்ரபோஸ் செய்ததைப் பற்றிக் கூறத்தான்... ஆனால் மனம் அதைச் சொல்ல கூச்சமாக உணர்ந்தது.

“ஒண்ணுமில்லை அண்ணா... உன் கூடப் பேசணும்னு தோணிச்சு. அதான்” என்றாள் மறுபடியும்.

“சரி பேசு! என்ன பேசணும்?”

“நீ பேசு நான் கேட்கறேன்” என்றாள்.

இந்த அரவிந்த் டூரிஸ்ட் விசால லண்டன் வர்றேன்னு சொன்னான். உனக்கு ஏதாவது தெரியுமா.”

இது அவளுக்குப் புதிய செய்தியே...

“எனக்குத் தெரியாதே தண்டு” என்றாள். இப்போது தானே நம்மிடம் உருகி உருகிப் பேசினான். ஒன்றும் சொல்லவில்லையே என்று தோன்றிற்று கீர்த்திக்கு.

“இப்போதான் கீர்த்தி கூப்பிட்டான். ஜஸ்ட் ஒரு பத்து நிமிஷம் இருக்கும்.”

அப்போ தன்னிடம் பேசிய பிறகுதான் பேசியிருக்கிறான் என்று உணர்ந்த கீர்த்தி... “வேற என்ன பேசினான்” என்றாள்.

“வேற ஒண்ணும் பேசலை... விசாக்கு அப்ளை பண்ணப் போறேன்... கிடைச்சா உடனே கிளம்பிடுவேன்னு சொல்லி, நான் இருக்கிற இடம்... மத்த

விஷயங்கள் எல்லாம் கேட்டான். இங்க வர்றதுல சீரியஸா இருப்பான் போல இருக்கு.”

தன்னிடம் இதைப்பற்றி அவன் ஒன்றும் சொல்லவில்லையே என்று இருந்தது கீர்த்திக்கு.

பிறகு அதை விடுத்து வேறு ஏதேதோ பேசினான் தண்டபாணி. ஆனால் எதுவும் கீர்த்திக்கு மூளையில் ஏறவில்லை... அரவிந்த் லண்டன் போவதைப் பற்றியே சிந்தித்தது. அதே சமயம் அரவிந்த் தன்னை திருமணம் செய்யக் கேட்டதையும் அண்ணனிடம் சொல்லவில்லை என்று உணர்ந்தாள்.

“சரி, அண்ணா வச்சிடறேன்” என்று தண்டபாணி பேசிக் கொண்டிருக்கும்போதே போனை வைத்துவிட்டாள்.

மாலை வேளைகயில ஷோ-ரூம் வராத அரவிந்த், அன்று மாலையும் வந்தான்... கீர்த்தியை பார்ப்பதற்காகவே.

கீர்த்தியை அவன் பார்வை தழுவ... கீர்த்தியும் அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் ஏதோ குற்றச் சாட்டு

இருப்பது போலத் தோன்ற... அவளிடம் தனிமையில் பேச சந்தர்ப்பம் எதிர்பார்த்து காத்து இருந்தான்.

சந்தர்ப்பம் கிடைக்கவும்... "என்ன கீர்த்தி" என்றான்.

பதில் பேசா ஒரு மௌனமான பார்வையே பார்த்தாள்.

"என்ன கீர்த்தி, என்ன விஷயம்" என்றான்.

எந்த உரிமையில் அவள் கேள்வி கேட்பாள். கேள்வி கேட்டு அதை அரவிந்த் தன் மீது அவள் எடுக்கும் உரிமையாக நினைத்து விட்டால் அது இன்னும் பிரச்சனையாக அவள் நினைத்தாள்.

ஆனால் அவன் கேள்வி கேட்கிறானே... "ஒண்ணுமில்லை, என்ன விஷயம் எதைப் பற்றி கேட்கறீங்க?" என்று பதில் கேள்வி கேட்க...

"இல்லை நீ ஏதோ என்னைக் கேட்க பிரியப்படற மாதிரி தோணிச்சு அதான்."

எப்படி தன் பார்வையை வைத்தே தன்னைக் கண்டு கொள்கிறான் என்று

நினைத்தவள்... "ஒண்ணும் கேட்கலையே" என்றாள்.

என்னவாக இருக்கும் என்று அவனே யோசித்தவன்... "தண்டபாணியோட பேசினியா" என்றான்.

"ஆமாம்" என்பது போல் கீர்த்தி தலையசைக்க...

"ஓ! நான் லண்டன் போறதைப் பத்திச் சொல்லலைன்னு கோபமா."

"கோபமா எனக்கு எதுக்கு உங்க மேல கோபம்" என்றாள் தருவித்த அலட்சியத்தோடு.

"சரி கோபமில்லை, ஆனால் சொல்லலைன்னு நினைச்சியா இல்லையா."

"இல்லையே."

"சரி நம்பிட்டேன்!" என்றான் புன்னகையுடன்.

"பெரிய புன்னகை மன்னன்... சிரிக்கிறான்..." என்று அதற்கும் கீர்த்தி மனதிற்குள் வசைபாட...

அரவிந்த் அவளையே பார்த்திருந்தான்.

இந்தப் பார்வை தனக்கு சரிப்படாது என்று நினைத்த கீர்த்தி...

“நான் கிளம்பறேன்... நீங்க பார்த்துக்கங்க” என்று சட்டென்று சொல்லி கிளம்பி விட்டாள்...

அவளுக்கு நிறைய யோசிக்க வேண்டி இருந்தது.

நிறைய யோசிக்க வேண்டும் என்று நினைத்தாள் தான் ஆனால் என்ன யோசிப்பது என்று தெரியவில்லை.

அரவிந்த் பேசியதை நினைத்து அதற்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்தால், அவளுக்கு பதில் ஒன்றும் தெரியவில்லை.

அரவிந்தை தனக்குப் பிடிக்கிறதா என்று தெரியவில்லை, ஆனால் பிடிக்காமல் இருப்பது போல் இல்லை. இந்த வார்த்தைகளின் குழப்பம் தான் அவள் மனதிலும்.

பிறகு அவளாகவே ஒரு முடிவுக்கு வந்தாள், நமக்கென்ன அவன் தான்

நடத்திக் கொள்கிறேன் என்கிறானே, வேண்டுமென்றால் நடத்திக் கொள்ளட்டும் என்று. அதற்கு பிறகு தான், அவளால் நிம்மதியாக உறங்கவே முடிந்தது.

அரவிந்தும் தன் மனதை உரைத்திருந்ததினால், அவனும் நிம்மதியாகவே உறங்கினான். அவன் நேற்று வரை கூட கீர்த்தியை அப்படி நினைத்ததில்லை. இது திடீரென்று தோன்றிய உணர்வு தான். திருமணம் என்றவுடன் அவள் நினைவிற்கு வந்தாள்.

வந்த பிறகு அவளை இன்னும் மிகவும் பிடித்து விட்டது.

ஆனால் பிடித்திருக்கிறது என்று கூறியவுடனே கீர்த்தியின் கண்களில் தோன்றிய பயம் அது, பிடிக்கவில்லை தான். இருந்தாலும் சற்று விட்டுதான் பிடிக்க வேண்டும் என்று தோன்றியதால் அமைதியாக இருந்து விட்டான்.

இப்படியாக கீர்த்தியும், அரவிந்தும் நிம்மதியாக உறங்க, நிம்மதியில்லாமல் உறங்காமல் இருந்த ஜீவன் அரவிந்தின் அப்பா சிதம்பரம்.

அவருக்கு விஷயம்

தெரிவிக்கப்பட்டதில் இருந்து அவரின் நிம்மதி தான் குலைந்தது.

அரவிந்த் தன் மனதைத் தெளிவாக உரைத்துவிட்டான். கீர்த்தியோடு நடக்கிறதோ இல்லையோ அது பிறகு ஆனால் வனஜாவுடன் நடக்காது என்று தெளிவாகச் சொல்லி விட்டான்.

அவன் அவ்வளவு தெளிவாகச் சொல்லிய பிறகு சம்மந்தி வீட்டில் சொல்லாமல் இருப்பது நல்லதல்ல. அவர்கள் வேறு இடம் பார்ப்பார்கள்.

அரவிந்தைப் பற்றி நன்கு தெரிந்தவர் அவன் தந்தை. அவனிடம் கட்டாயப்படுத்தி எந்த ஒரு செயலையும் செய்ய வைக்க முடியாது.

அவரின் தற்போதைய ஒரே நிம்மதி கீர்த்திதான். அவளை கைகாட்டியதால் தான் சற்று நிம்மதியாக உள்ளார். அவளை கடந்த வருடமாக பார்த்துக் கொண்டிருக்கிறார். தப்பு சொல்ல முடியாத நல்ல பெண். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கிறாள்.

எத்தனை பேரிடம் பழகினாலும் அனைவரையும் ஒரு எல்லைக்குள்ளே

தான் வைத்திருக்கிறாள். அதையும் மீறி நெருங்க விடுவதில்லை.

அவள் குடும்பம் அதைப் பற்றி எல்லாம் அறிந்தவரல்ல. அவள் நல்ல பெண். அரவிந்த் யாரையாவது இழுத்து வந்து இவளைத் தான் திருமணம் செய்வேன் என்று சொல்லியிருந்தாலும் தான் ஒன்றும் செய்திருக்க முடியாது என்று தெரியும். அது வரையில் ஒரு நல்ல பெண்ணை காட்டியிருக்கிறானே என்று சமாதானப்பட்டுக் கொள்ள வேண்டியது தான் என்பதே அவர் எண்ணமாக இருந்தது.

காலையில் எழுந்தவுடன், இதைப்பற்றி தன் மனைவியிடம் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டே படுத்தார்.

காலையில் அரவிந்த் கிளம்பும் வரை பொறுமையாக இருந்தவர்... அவன் கிளம்பியவுடனே தன் மனைவியிடம் பேச விழைந்தார்.

ராணி, "அரவிந்த் ஒரு பொண்ணை விரும்பறேன்னு சொல்றான்" என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தார்

சிதம்பரம்.

பதறிவிட்டார் ராணி, “ஐய்யய்யோ என்ன சொல்றீங்க” என்று அவர் பதறிய பதறலில் சிதம்பரத்திற்கே டென்ஷன் ஏறிவிட்டது.

“என்னடி இவ்வளவு பதட்டப்படற, உடம்புக்கு ஏதாவது வந்து தொலையப்போகுது.”

“வந்தா வரட்டுமே இப்படி ஒரு புள்ளைய பெத்து வச்சதுக்கு வராம என்ன செய்யும். நான் நளினி வீட்ல என்ன சொல்லுவேன். அந்த பொண்ணு வனஜா வேற கண் முன்னாடி நிக்கறாளே” என்று அழவே ஆரம்பித்து விட்டார்.

“ராணி நீயே இப்படிச் சொன்னா, சம்மந்தி வீட்ல நாம என்ன சொல்லி சமாதானப்படுத்தறது” என்றான்.

“அப்ப முடிவே பண்ணிட்டீங்களா அந்தப் பொண்ணையே அரவிந்துக்கு கல்யாணம் பண்றதுன்னு.”

“முடிவெல்லாம் பண்ணலை, உன்னைக் கேட்காம நான் எந்த முடிவு எடுத்திருக்கேன், ஆனா யோசிச்சேன்,

இல்லைன்னு சொல்லலை.”

“யாரோ, என்னவோ? யோசிச்சேன்னு அசால்டா சொல்றீங்க.”

“உனக்குத் தெரியாதுடி பொண்ணை, எனக்குத் தெரியும். நம்ம ஷோரூம்ல தான் ஒரு வருஷமா வேலை பார்க்குது.”

“உங்களை யாரு பொண்ணுங்களையெல்லாம் வேலைக்கு வெக்கச் சொன்னா” என்று அவர் மேல் பாய்ந்தார் ராணி.

“நாயென்ன இப்படி ஆகும்னு கண்டனா, பொண்ணு படிச்சிருந்தா, திறமைசாலியா இருந்தா அதான் செலக்ட் பண்ணினேன்.”

“நல்ல திறமைசாலிதான் நம்ம பையனையே மயக்கிட்டாளே.”

“தப்பா பேசாத ராணி, நல்ல பொண்ணு. உன் பையன் பண்ற கூத்து, இன்னும் அந்த பொண்ணுக்குத் தெரியுமோ என்னவோ.”

“அது எப்படி தெரியாம இருக்கும். அவ்வளவு பெரிய கைகாரியா அவ.”

“இப்போ தானே சொன்னேன் தப்பா பேசாதன்னு, உனக்கு பேசணுமா உன் பையன பேசு. அவன என்னவோ பெரிய உத்தமன் மாதிரி பேசற. எனக்குப் புரிஞ்சவரைக்கம் இது உன் பையனோட வேலைதான்.”

“நீங்களே நம்ம பையனை பத்தி இப்படிப் பேசுனா எப்படி.”

“உண்மையை கண்டு ஓடக்கூடாது ராணி, ஒத்துக்கணும்.”

“ஒத்துக்கிட்டு என்ன பண்ணச் சொல்றீங்க. அந்த பொண்ணைக் கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்றீங்களா.”

“ஏன பண்ணினா என்ன தப்பு, பொண்ணை பொறுத்த வரைக்கும் ஒரு பிரச்சனையுமில்லை, நல்ல பொண்ணு. என்ன குடும்பத்தைப் பத்திக் கொஞ்சம் விசாரிக்கணும். நம்ம அளவு வசதியில்லைன்னாலும் பரவாயில்லை. என் கவலையெல்லாம் பொண்ணு வீட்ல ஒத்துக்கணும், பொண்ணு ஒத்துக்கணும். ஏன்னா உன் பையன் எவ்வளவு தெண்டமா சுத்திட்டு இருக்கான்னு

பொண்ணுக்கு நல்லா தெரியும்.”

“நீங்களே நம்ம பையன கீழ இறக்கி பேசறீங்களே.”

“உண்மையத்தானே சொல்றேன். அவன் எந்த நேரம் என்ன பேசுவான் என்ன செய்வான்னு யாருக்குத் தெரியுது.”

“அவன் இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணறானோ இல்லையோ, வனஜாவை பண்ண முடியாதுன்னு சொல்லிட்டான். முதல்ல நளினிகிட்ட சொல்லிட்டு, முடிஞ்சா நம்மளே நேர்ல ஒரு வார்த்தை போய் சொல்லிட்டு வந்துடலாம். அவங்க அந்தப் பொண்ணுக்கு வேற மாப்பிள்ளையாவது பார்ப்பாங்க.”

இவர்கள்
பேசிக்கொண்டிருக்கும்போதே நளினி தன் கணவன் மாதவனுடன் வீட்டிற்கு வந்தாள்.

அவளைப் பார்த்து முகம் மலர்ந்த அவளின் பெற்றோர், “என்ன நளினி உள்ளூர்ல இருக்கன்னு பேர்தான். ஆடிக்கு ஒரு தரம் அமாவாசைக்கு ஒரு தரம் தான் வீட்டுப் பக்கம் எட்டிப் பாக்குற... ஒரு வாரம் வந்து இருந்துட்டுப் போயேன்”

என்றார் ராணி.

“அதுதான் வந்துட்டேன் இல்லைம்மா. அப்பறம் என்ன. வீட்ல வேலை சரியா இருக்கு.”

“வந்தது தான் வந்த... குழந்தைங்களை கூட்டிட்டு வரக்கூடாது.”

“இதுக்காக ஸ்கூல் லீவ் போடச் சொல்றீயா. நீ வா எங்க வீட்டுக்கு வந்து குழந்தைங்களை பார்த்துட்டுப் போ.”

“என்ன பேசினாலும் ஒரு பதில் வச்சிரு.”

“என்ன பதில் வச்சிரு... வீட்டுக்குள்ளயே ஏன் அம்மா அடைஞ்சி கிடக்கற.”

“எனக்கு இது தாண்டி பிடிச்சிருக்கு.”

“என்னவோ போ... நீயும் எல்லாத்துக்கும் பதில் வச்சிரு” என்று ராணியைப் போலவே கூறி சிரித்தாள்.

“நான் பாரு பேசிட்டே இருக்கேன். முதல்ல மாப்பிள்ளைக்கு காபி போட்டுட்டு வரேன்” என்று உள்ளே போகப் போக...

“இருக்கட்டும் அத்தை... இப்போதான் சாப்பிட்டு வந்தோம், கொஞ்சம் நேரம் போகட்டும் நீங்க உட்காருங்க” என்றான் மாதவன்.

“நாங்களே உங்களை வந்து பார்க்கணும்னு இருந்தோம். மாப்பிள்ளை அரவிந்த் கல்யாண விஷயமா” என்று சிதம்பரம் ஆரம்பிக்க...

“நாங்களும் அது விஷயமா தான் வந்தோம் மாமா” என்றான் மாதவன்.

“என்னங்க மாப்பிள்ளை.”

“எங்க அப்பா சொந்தத்துல இருந்து ஒரு நல்ல வரன் வந்திருக்கு... வீட்ல எல்லோருக்கும் திருப்தி. வனஜாக்கும் பிடிச்சிருக்கு. சின்ன வயசுல இருந்தே அரவிந்த பார்த்துப் பழகினதால கல்யாணம் பண்ற எண்ணம் எனக்கு இல்லைங்கறா. இந்த மாப்பிள்ளைய தான் பிடிச்சிருக்குன்றா. அதான் உங்ககிட்ட ஒரு வார்த்தை கேட்டு என்ன செய்யலாம்னு முடிவு பண்ணலாம்னு அப்பா சொன்னாரு. அதான் கேட்டுட்டுப் போகலாம்னு வந்தோம்.”

“அதுக்கென்ன மாப்பிள்ளை, நல்ல

வரன், நம்ம பொண்ணுக்கும் பிடிச்சிருக்குன்னா தாராளமா பாருங்க.” என்றார் கவலையகன்றவராக சிதம்பரம்.

“நீ என்ன அம்மா சொல்ற” என்ற நளினி தன் அன்னையைப் பார்த்துக் கேட்க...

“நான் சொல்லி என்ன நளினி ஆகப்போகுது... பொண்ணுக்குப் பிடிச்சா முடிச்சிடுங்க” என்றார் அவரும் மகனை மனதில் வைத்து...

இவ்வளவு சீக்கிரம் தன் பெற்றோர் தங்கள் சம்மதத்தை தெரிவிப்பார்கள் என்று நளினியே எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் நீண்ட நாட்களாக இந்த திருமணப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது.

“என்ன அம்மா, என்ன விஷயம் இவ்வளவு சீக்கிரம் சம்மதிச்சிட்டீங்க...”

சிதம்பரமும், ராணியும் அமைதியாகவே இருந்தனர். “என்ன அப்பா பேசாம இருக்கீங்க என்ன விஷயம்” என்று மறுபடியும் கேட்டாள் நளினி.

நிமிஷத்தில் ஏதோ விஷயமிருக்கிறது என்று யூகித்த தங்களின் மகளின் புத்திசாலித்தனத்தை அவளின் பெற்றோர் மனதிற்குள்ளேயே மெச்சிக் கொண்டனர்.

“அவன் ஒரு பொண்ணை விரும்பறேன். அவளைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொல்றான் நளினி” என்றார் ராணி.

“என்ன அம்மா சொல்றீங்க” என்றாள் ஆச்சரியமாக நளினி. அவள் அண்ணன் ஒரு பெண்ணை விரும்புகிறானா. இது மிகவும் ஆச்சரியமான விஷயம் தான் நளினிக்கு ஏனென்றால் அவள் அண்ணன் பெண்களின் புறம் திரும்பக்கூட மாட்டான். அவன் ஒரு பெண்ணை விரும்புகிறானா.

“அவன் பொண்ணுங்க பக்கம் திரும்பக்கூட மாட்டானே அப்பா, அவன் அப்ப ஒரு பொண்ணை விரும்பறது பெரிய விஷயம்தான். யார் அம்மா அது?”

“எனக்கெதுவும் தெரியாது. எல்லாம் உங்க அப்பாவைக் கேளு

அவர்கிட்ட தான் சொல்லியிருக்கான்” தன்னிடம் மகன் எதுவும் சொல்லாத ஆதங்கம் அவர் பேச்சில் நன்றாகத் தெரிந்தது.

“யார்ப்பா அது.”

“அது நம்ம ஷோரூம்ல வேலை பார்க்கற பொண்ணு தான்மா பேரு கீர்த்தி, குடும்ப விவரம் சொல்லியிருக்கு. ஆனா எனக்கு சரியா ஞாபகம் இல்லை. எம்.பி.ஏ. படிச்சிருக்கு. நம்ம ஷோரூம்ல மேனேஜரா இருக்கு. எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் நல்ல பொண்ணு. இந்த விஷயமே அந்த பொண்ணு சைட்ல இருந்து வந்து இருக்காதுன்றது என் அபிப்ராயம் அனேகமா உன் அண்ணன் தான் ஆரம்பிச்சிருப்பான்” என்றார் சிதம்பரம்.

8

தன்னுடைய தந்தையே இவ்வளவு சப்போர்ட் செய்கிறார் என்றால் நிச்சயம் நல்ல பொண்ணாகத்தான் இருப்பாள் என்று நளினிக்குத் தோன்றியது. அதனால் அவளை பார்க்கும் ஆர்வமும் பெருகியது.

“உங்களுக்கு ஓ.கே. வாப்பா”

என்றாள் நளினி.

"பெரிசா ஒண்ணும் அப்ஜக்ஷன் இல்லைம்மா. நம்ம ஆளுங்க தான்னு எனக்கு நிச்சயம் தெரியும். வேலைக்கு எடுக்கும்போதே அதைப் பார்த்துதான் எடுத்தேன். ஹே... குடும்பம், அவங்களுக்கு எல்லாம் சரி வந்தா முடிச்சிடலாம்னு பார்க்கறேன். நீ என்னம்மா சொல்ற."

"நான் என்ன அப்பா சொல்றதுக்கு இருக்கு. உங்களுக்குத் தெரியாததா... அம்மாவும் நீங்களுமே முடிவு பண்ணுங்கப்பா... நீங்க என்ன சொல்றீங்க" என்று கணவனையும் துணைக்கு அழைத்தாள்.

"அப்படியே செய்யலாம்" என்று மாதவனும் ஆமோதிக்க...

பிறகு பெண்ணிடம் பேசி, பெண் வீட்டிலும் பேசுவது என்பது முடிவானது.

"இதைச் சொல்ல மறந்துட்டேனேம்மா... அவன் வெளிநாடு போறதுக்கும் சரின்னு சொல்லியிருக்கேன்மா ஒரு மூணு மாசம் இல்லை ஆறு மாசம் டூரிஸ்ட் விசால

போயிட்டு வர்றேன்னு சொல்லியிருக்கான்மா.”

“அப்பா! நீங்க வெளிநாடு போக சம்மதம் சொல்லிட்டீங்களா, என்னப்பா அதிர்ச்சி மேல அதிர்ச்சியா குடுக்கறீங்க.”

“வேற என்னம்மா பண்றது, ரொம்ப பிடிவாதமா இருக்கான்... வேற எந்த வேலையும் உருப்படியா செய்ய மாட்டேங்கறான். அதான் இந்த முடிவு” என்றார் பெருமூச்சை வெளியேற்றி...

“விடுங்கப்பா எல்லாம் நல்லாவே நடக்கும்” என்று அவருக்கு சமாதானம் சொன்னாள் அவரின் மகள்.

பிறகு, “ஆனா அப்பா கல்யாணம்” என்றாள் நளினி.

“அனேகமா போயிட்டு வந்து தான்மா பண்ணிக்குவான்னு நினைக்கிறேன்.”

“நான் போகும்போது சும்மா அப்படியே ஷோரூம் போற மாதிரி போயிட்டு போறேன்பா... எனக்கு அந்தப் பொண்ணைப் பார்க்கணும் போல இருக்கு.”

“சும்மா மட்டும் பாரும்மா... இதைப்பத்தி எல்லாம் பேசாத இன்னும் எதுவும் சரியா முடிவாகலை.”

“சரிப்பா” என்றாள்.

“நானும் போகட்டாங்க” என்றார் ராணி.

“நீயுமா சரி போ” என்றார் சிதம்பரம்.

மூவரும்... ராணி, நளினி, மாதவன் கிளம்பினர் ஷோரூம்க்கு பெண்ணைப் பார்க்க...

இவர்கள் போன நேரம் ஷோரூமில் அரவிந்த் இல்லை. அவன் விசா அப்ளை செய்வதற்காக எம்பஸிக்குச் சென்றிருந்தான்.

இவர்களை யார் என்று தெரியாததால் மற்ற ஸ்டாப்கள் கஸ்டமர்களை கவனிப்பது போல இவர்களையும் கவனிப்பார்கள் என்று ஒரு பார்வை பார்த்து கீர்த்தி வேறு வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அங்கே நீண்ட நாட்களாக வேலை பார்க்கும் ஒருவன் அவளிடம் வந்து

சொன்னான்... “இது தாங்க நம்ம ஐயாவோட அம்மா, அவங்க பொண்ணு, மாப்பிள்ளை” என்று.

பிறகே அவர்களை எழுந்து வந்து மரியாதை நிமித்தம் வரவேற்றாள்.

“வாங்க மேடம், வாங்க சார்” என்று.

“என்ன விஷயமா வந்திருக்கீங்க” என்று கேட்க முடியாததால் அமைதியாகவே அவர்களின் அருகில் நின்றாள் கீர்த்தி...

“தெரிஞ்சவங்க சோபா வேணும்னு கேட்டாங்க. அதான் என்ன மாடல் இருக்குன்னு பார்க்க வந்தோம்” என்றார்கள்.

அவர்களைப் பார்த்தால், சோபா பார்க்க வந்தது போல தோன்றவில்லை கீர்த்திக்கு. இவ்வளவு நாள் வராதவர்கள் இப்போது திடீரென்று குடும்பத்தோடு வந்து நின்றார்கள் என்றால் நேற்று அரவிந்த் பேசியதற்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ தோன்றியது.

அவள் நினைத்தது போல

அவர்கள் சோபாவைப் பார்க்காமல் அவளையே அளவிடும் பார்வையில் பார்த்தனர்.

கீர்த்திக்கு ஏனோ எரிச்சலாக வந்தது. தன் அனுமதியில்லாமல் இந்த மாதிரி எல்லாம் அவர்கள் நடந்து கொள்வது, ஒரு வகையான அத்து மீறல் போலத் தோன்றியது கீர்த்திக்கு.

ஆனால் அதை அவர்கள் முன் காட்ட முடியாமல், சிரித்த முகமாகவே நின்றிருந்தாள்.

கீர்த்தியை இன்னும் அதிகம் சோதிக்க வைக்காமல், அரவிந்த் அங்கே வர, "சார் வந்துட்டாங்க மேம்" என்று சொல்லி அவர்களை அவனிடத்தில் ஒப்படைத்து வேறு ஒரு கஸ்டமரைப் பார்ப்பது போல நகர்ந்து கொண்டாள்.

"பரவாயில்லை அவங்க ஏதாவது கேட்கறதுக்கு முன்னாடி இவன் வந்து நின்னுட்டான்" என்று தன்னையே ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

இவர்கள் மூவரையும் ஷோரூமில் பார்த்த அரவிந்த் ஆச்சரியப்பட்டான். "என்ன மாமா திடீர்னு கடை வரைக்கும்

வந்திருக்கீங்க” என்று ஆச்சரியம் மறையாமல் கேட்க...

“ம்! நீங்க என்ன பண்ணிட்டு இருக்கேன்னு பார்த்துட்டுப் போக வந்தோம்” என்று கண்களால் கீர்த்தியைப் பார்த்துக் கொண்டே அவனிடம் நொடித்தார் ராணி.

அப்பா எல்லோரிடமும் விஷயத்தைப் பரப்பி விட்டார் என்று உணர்ந்தான் அரவிந்த்.

“ஸாரி அம்மா, உங்ககிட்ட தான் முதல்ல சொல்லணும்னு நினைச்சேன், ஆனா அப்பாவே கண்டு பிடிச்சிட்டார்” என்றான்.

“சும்மா கதை விடாத, இதை சொல்றதுக்குக் கூட நீ என்னை மதிக்கலை” என்று கோபப்பட...

“அப்படியில்லைம்மா, நேத்து காலையில தான் நானே முடிவு பண்ணினேன். நான் முடிவு பண்ணி இங்க வந்தவுடனே நான் சொல்லாமலே அப்பா கண்டு பிடிச்சிட்டார். நான் என்ன பண்றது அப்பா இவ்வளவு ஷார்ப்பா இருந்தா” என்று குறைபட...

“என்ன நேத்து காலையில தான் முடிவு பண்ணியா” என்று ஒருங்கே ராணியும், நளினியும் கேட்டனர்.

“ஆமாம் அம்மா, நேத்து அப்பா கல்யாண விஷயமா பேசுனப்போ தான இவளைக் கல்யாணம் பண்ணிட்டா நல்லா இருக்கும்னு தோணிச்சு. அதை அப்பாவும் கண்டு பிடிச்சிட்டார். இன்னும் அவளுக்கு கூடத் தெரியாதும்மா” என்றான் வேண்டுமென்றே...

“என்ன அவளுக்குத் தெரியாதா” என்றாள் நளினி ஆச்சரியமாக...

“இல்லை... அம்மாகிட்டயே நான் சொல்லலையா... அதனால இன்னும் சொல்லலை” என்று ஒரு பிட்டைப் போட்டான்.

நளினி நம்பாமல் பார்க்க... “நம்பு நளினி நம்பு” என்றான்...

இவ்வளவு இலகுவாக தன் மகன் பேசியே நெடுநாட்களாயிற்று என்று ராணி உணர்ந்தார். அதனால்தான் சிதம்பரமும் சம்மதித்து இருப்பார் என்று தோன்றியது.

தன் மகனை கூட்டுக்குள் இருந்து வெளிக்கொண்டு வந்த கீர்த்தியை பார்வையால் அளவெடுத்தார்.

நல்ல திருத்தமான முகம்... பேசும் கண்கள்... அளவான உடம்பு... மொத்தத்தில் அழகாக இருந்தாள். தம் மகனுக்கு நல்ல பொருத்தமாக இருப்பாள் என்று தோன்றியது. ஆனால் குணம் எப்படி தெரியவில்லையே என்று சற்று பயமாக இருந்தது.

இறைவனின் மேல் பாரத்தைப் போட்டார். வசதி வாய்ப்பு வேறு எப்படி என்று தெரியவில்லையே என்று அது வேறு கவலையாக இருந்தது.

கீர்த்தியைப் பார்த்தான் அரவிந்த். இப்படி திடீரென்று எல்லோரும் வந்து நிற்கிறார்களே எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்று. அவள் முகத்தைப் பார்க்க... அவள் முகம் இறுகியிருந்தது. தான் சொல்லித்தான் இவர்கள் வந்திருப்பார்கள் என்று தப்பாக நினைத்துக் கொண்டாள் போல என்று எண்ணினான்.

மூவரும் விடைபெற்று கிளம்பப்

போக... “அம்மா ப்ரொசீட் பண்ணட்டா” என்றான்.

அவன் கீர்த்தியை தான் கேட்கிறான் என்று புரிந்த ராணி... “முதல்ல பொண்ணு ப்ரொசீட் பண்ணனும்டா” என்று கிண்டலடிக்க...

“போம்மா நீ வேற எனக்கே அந்த பயம் தான்” என்று பதிலுக்கு நக்கலடித்தான் அரவிந்த்.

அவர்கள் எல்லோரும் ஒரு நிறைவை உணர, கீர்த்தி கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தாள்.

“என்ன நினைச்சிட்டு இருக்கான். இவன் சொன்னா நான் ஒத்துக்கணுமா. வீட்ல இருந்து வேற எல்லோரையும் கூட்டிட்டு வந்து என்னை காட்டிட்டு இருக்கான்” என்று மனசுக்குள் பொருமினாள்.

நேற்று அவள் எடுத்த முடிவான அவனே பண்றதுன்னா பண்ணிக்கட்டும் எல்லாம் ஞாபகத்திற்கு வரவில்லை. “அவன் இஷ்டம்தானா எல்லாம். என் இஷ்டம் எதுவுமில்லையா. என்ன தைரியம் அவனுக்கு” என்று மனதிற்குள்

காய்ச்சி எடுத்தாள்.

அவர்கள் மூவரும் வந்து கீர்த்தியிடம் விடைபெற்றுக் கிளம்பினர். முகம் மாறாமல் காக்க மிகவும் சிரமப்பட்டாள் கீர்த்தி.

இதை எதுவும் உணராத அவர்கள்... சந்தோஷமாகவே கீர்த்தியிடம் விடைபெற்றுக் கிளம்பினர்.

அவர்கள் போனவுடனே கீர்த்தி அரவிந்தை பார்த்த பார்வையே அனல் கக்கியது. ஆனால் எதுவும் கேட்கவுமில்லை, பேசவுமில்லை முறைத்துப் பார்த்து நின்றிருந்தாள்.

அவளைக் கவனிக்காதவன் போல் உள்ளே சென்று அவளை உள்ளே அழைத்தான் அரவிந்த். மற்ற வேலை பார்ப்பவர்கள் முன் எதுவும் ரசாபாசமாகி விடக்கூடாதே என்று.

உள்ளே வந்தவள் கோபமாக "என்ன நடக்குது" என்றாள்.

"எனக்குத் தெரியாது கீர்த்தி இவங்க இங்கே வர்றது" என்றான்.

"அவங்க எதுக்கு வந்தாங்க.

என்னைப் பார்க்கவா வந்தாங்க” என்றாள் கலவரமாக... அவளுக்குத் தெரிந்த விஷயம்தான் இருந்தாலும் உறுதிபடுத்திக் கொள்ள விரும்பினாள்.

“எனக்கு அவங்க வர்றது தெரியாது கீர்த்தி” என்றான் மறுபடியும் அரவிந்த்.

“அப்போ என்னைப் பார்க்கத்தான் வந்திருக்காங்க. எப்படி என் சம்மதமில்லாம இதெல்லாம் பண்றீங்க எனக்கு பிடிக்கலை” என்றாள் கோபமாக.

“இது எதிர்பாராம நடந்ததுதான். எனக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தா தவிர்த்திருப்பேன்.”

“எல்லாரும் என்னை பத்தி என்ன நினைச்சிருப்பாங்க... நான் உங்களைப் பிடிக்கும்னு எப்போ சொன்னேன்.”

“ஒண்ணும் நினைச்சிருக்க மாட்டாங்க கீர்த்தி... உனக்கு எதுவும் தெரியாதுன்னுதான் சொல்லியிருக்கேன்.”

அவனை நம்பாத பார்வை பார்த்தாள்... “நம்பு கீர்த்தி நம்பு” என்றான் அவளையும் பார்த்து... இந்த டைலாக்கை

நான் இன்னும் எத்தனை பேர்கிட்ட சொல்லணுமோ என்று எண்ணிக் கொண்டே,

“நான் தான் சொன்னேன் இல்லை. நான் பார்த்துக்கறேன்னு.”

“என்னை நான் பார்த்துக்கறேன். இது என் விஷயம். அப்படி அடுத்தவங்க எல்லாம் பார்க்க முடியாது.”

“சரி அப்போ நீ பார்க்கறியா... நான் உங்களைப் பிடிச்சிருக்குன்னு இன்னும் சொல்லவேயில்லை. அதுக்குள்ள நீங்க என்ன இப்படி பண்றீங்க.”

“சரி இப்போ சொல்லு என்னை பிடிச்சிருக்குன்னு” என்று மறுபடியும் கூலாகச் சொல்ல... எரிச்சலானாள் கீர்த்தி.

“எனக்குப் பிடிச்சிருந்தா தானே பிடிச்சிருக்குன்னு சொல்ல முடியும்.”

“அப்போ பிடிக்கலையா” என்றான் கண்களில் எதிர்பார்ப்போடு.

“எனக்குத் தெரியலை... உங்களைப் பிடிச்சிருக்கா, இல்லையான்னு தெரியலை. அது தெரியறதுக்கு முன்னாடியே நீங்க இப்படி

பண்றது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கலை. இப்படி உரிமை எடுத்து எல்லோரும் வந்து பார்க்கறது பிடிக்கலை. எங்க அப்பா அம்மாக்குத் தெரிஞ்சா என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க... அவங்களுக்குத் தெரியாம என் வாழ்க்கையில எதுவும் நடக்கறதை நான் விரும்பலை" என்றாள் கோபமாக.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று அரவிந்திற்கே தெரியவில்லை. அவளையே நேர் பார்வை பார்த்தபடி நின்றான்.

அவளும் திருப்பி பதில் பார்வை பார்த்தாள். அவனை குற்றம் சாட்டும் பார்வை, தைரியமான பார்வை, கோபமான பார்வை. நேற்று போல் பயந்த பார்வை இல்லை.

"கீர்த்தி" என்று அரவிந்த் ஆரம்பிக்கும்போதே...

"நான் போய் வேலையைப் பார்க்கிறேன்" என்று கோபமாகச் சொல்லிச் சென்று விட்டாள்.

அவள் செல்லுமிடமெல்லாம் அரவிந்தின் பார்வை தொடர்ந்தது. அதை

கீர்த்தியும் உணர்ந்துதான் இருந்தாள். சிறிதும் கண்டு கொள்ளவில்லை.

“என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்னை. கீர்த்தி என்றால் அவ்வளவு ஈஸியா! இடியட். நேற்று இவனை வாங்கு வாங்கியிருந்தாள் இவனுக்கு இவ்வளவு தைரியம் வந்திருக்காது. விட்டுவிட்டேன். ஏன் விட்டேன்?” என்று அவளை அவளே இஷ்டத்திற்கு திட்டிக் கொண்டாள்.

அவள் மனதில் என்ன போராட்டம் நடக்கிறது என்று அரவிந்திற்குத் தெரியா விட்டாலும், அவள் முகத்தை வைத்Nது ஏதோ போராடிக் கொண்டிருக்கிறாள் என்று நன்கு புரிந்தது. அவள் முகம் அவ்வளவு கோபத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

இவளிடம் சம்மதம் வாங்குவது பெரும் பாடாக இருக்கும் போல இருக்கிறதே என்று அரவிந்திற்குத் தோன்றியது...

ஆயாசமாக இருந்தது. அவன் பார்வை மட்டுமே அவளை தொடர்ந்தபடி இருந்தது. மீண்டும் பேச

முயற்சிக்கவில்லை. தண்டபாணியிடம் பேசிய பிறகு எதுவாக இருந்தாலும் முடிவு செய்து கொள்ளலாம் என்று விட்டுவிட்டான்.

நேரில் பேசினால் தானா. அவன் பார்வையே கீர்த்திக்கு பல செய்திகளைச் சொன்னதே.

வீட்டிலும் அவன் தந்தையிடம் சொல்லி விட்டான், "அவசரப்படாதீங்க அப்பா... நான் வெளிநாடு போறது என்ன ஏதுன்னு பார்த்துட்டு அப்புறமா அவகிட்டயும், அவங்க வீட்லயும் பேசலாம்பா. முதல்ல அவ அண்ணன் கிட்ட பேசணும். அவன் என் க்ளோஸ் ப்ரெண்;;ட்பா. அவன் கிட்ட பேசாம வேற யார் கிட்ட பேசினாலும் அது சரியில்லை."

அவளின் அண்ணன் இவனுக்கு ப்ரெண்ட் என்பது அவன் தந்தைக்கு புதிய செய்தி "என்ன ப்ரெண்டா" என்றார்.

"ஆமாம் அப்பா... அவ இங்க வந்து ஜாயின் பண்ணறதுக்கு முன்னாடியே அவளை எனக்குத் தெரியும்...

இது என்னோட கம்பெனின்னு

தெரியாம தான் அவ இங்க வந்து ஜாயின் பண்ணினா. அதுக்கப்புறம் தான் எனக்கும் தெரியும்... அவளுக்கும் தெரியும்...”

“அதனால அப்பா முதல்ல நான் அவ அண்ணன் கிட்ட பேசறேன். அப்புறமா என்ன பண்றதுன்னு முடிவு பண்ணலாம்” என்று விட்டான்.

“சரி எப்போடா அவ அண்ணன்கிட்ட பேசப்போற... அதுக்கு ஏன் நாள் கடத்தற.”

“அவன் இங்க இல்லைப்பா லண்டன்ல இருக்கான்... அவன இருக்கிற இடத்துக்கு தான் விசா அப்ளை பண்ணியிருக்கேன். இன்னும் ஒரு வாரத்துல தெரிஞ்சுடும். அப்படி விசா கிடைச்சதுன்னா நேர்ல போகும் போது பேசிக்கறேன் அப்பா.”

அவன் தந்தை அவனை யோசனையாகப் பார்க்க... “உங்களுக்குத் தெரியாம எதுவும் பண்ண மாட்டேன். என்னை நம்புங்க அப்பா” என்றான் இவரிடமும் அந்த நம்புங்க என்ற வார்த்தையை உபயோகிக்க வேண்டி வந்துவிட்டதே என்று நினைத்துக்

கொண்டே...

மனதிற்கு சிறிது கஷ்டமாக இருந்தது. நம்புங்க என்ற வார்த்தையை தன் தங்கையை நோக்கிச் சொன்னான், தன் தந்தையை நோக்கியும் சொல்லிவிட்டான். இனி யாரை நோக்கி இதை சொல்ல வேண்டி வருமோ என்ற யோசனை அவனையறியாமல் ஓடியது.

இப்படியே வாரம் ஓடியது. அதன் பிறகு அவன் கீர்த்தியிடம் அதைப் பற்றி நேரடியாக எதுவும் பேசவில்லை... ஆனால் ஒரு சொந்தமான, உரிமையான, பார்வையைப் பார்த்து வைத்தான்.

ஆபீஸ் விஷயமாகப் பேசும்போது அதில் ஒரு உரிமை தொனிக்கும். அவன் அந்த விஷயத்தை விட்டுவிடவில்லை என்று கீர்த்திக்கு ஏதோ ஒரு செய்கை மூலம் புரிய வைத்துக் கொண்டே இருந்தான்.

தண்டபாணியிடம் தொலைபேசியில் உரையாடும் போதும் வேறு பல விஷயங்களை பேசினானே தவிர இதைப்பற்றி எதுவும் பேசவில்லை.

கீர்த்தியும் அவன் அண்ணன்

தொலைபேசியில் உரையாடும்போது எல்லாம் இது பற்றி ஏதாவது பேசுவானா என்று எதிர்பார்த்துக் காத்திருக்க, அரவிந்த் பேசியிருந்தால் தானே தண்டபாணி அதைப் பற்றி பேசுவான், அரவிந்த் எதுவும் பேசவேயில்லையே.

"என்ன அண்ணா, உன் பிரெண்ட் உன்கிட்ட வர்றான் போல, இங்க ஷோரூம்ல ஒரே பேச்சா இருக்கு" என்றாள் கீர்த்தி வேண்டுமென்றே தண்டபாணியிடம் தொலைபேசியில்.

"விசா ப்ராஸஸ் ஆகிடிச்சுன்னு நினைக்கிறேன் கீர்த்தி... கைல கிடைச்சவுடனே கிளம்பிடுவேன்னு சொல்லியிருக்கான்" என்றான் சீரியஸாக தண்டபாணி.

"ஓ! உன்னைப் பார்க்க அவ்வளவு ஆர்வமாக இருக்கிறானா" என்றாள் நக்கலாக கீர்த்தி.

"ஏன் கீர்த்தி கிண்டல் பண்ற, அவனோட ரொம்ப நாளைய ஆசை பாரின் போகணும்றது. அது நிறைவேறப் போகுது இல்லையா அந்த சந்தோஷம் தான் அவனுக்கு."

“வேற எதுவும் உன்கிட்ட பேசலையாண்ணா.”

“எதைப் பத்தி கீர்த்தி.”

“என்னைப் பத்தி, ஐ மீன், என் வேலையைப் பத்தியெல்லாம் ஏதாவது பேசுவானா.”

“சே! சே! நானா கேட்டாதான் கீர்த்தி உன்னைப் பத்தி பேசுவான். இல்லைன்னால்லாம் அவன் பேச மாட்டான். அவன் பொண்ணுங்களைப் பத்தியெல்லாம் பேசவே மாட்டான் கீர்த்தி... ரொம்ப நல்லவன்.”

“பொண்ணுங்களைப் பத்தி பேசலைன்னா நல்லவனா” என்று கீர்த்தி எரிச்சல் பட...

“உனக்கு ஏன் கீர்த்தி இவ்வளவு கோபம்” என்று சமாதானத்திற்கு இறங்கி வந்தான் தண்டபாணி.

9

“என்னவோ கோபம் போ... அதெல்லாம் சொல்ல முடியாது” என்றாள் குழந்தைதனமாக...

வேலையில் ஏதாவது பிரச்சனையாக இருக்கும்... நிறைய வேலை வாங்குகிறார்களோ என்னவோ... அதனால் கோபமாகப் பேசுகிறாள் போல என்று தான் தண்டபாணிக்குத் தோன்றியது.

விருப்பம், திருமணம் என்றெல்லாம் அவன் சிறிதளவு கூட யோசிக்கவில்லை. என்னை நம்புங்க என்று அரவிந்த் எல்லோரிடமும் சொல்லும் நம்பிக்கையை நிறைய அரவிந்த் மேல் தண்டபாணி வைத்திருந்தான்.

அதனால் தன் தங்கையை அரவிந்த் விரும்பக்கூடும் என்று சிறிதளவும் யோசிக்கவில்லை.

“என்ன கீர்த்தி, நிறைய வேலை வாங்கறானா... அவன் இங்க வரும்போது செமத்தியா கவனிச்சு அனுப்பறேன்” என்றான் மறுபடியும் அவளை சமாதானப்படுத்தும் விதமாக...

“போடா தண்டம்” என்று அவனைத் திட்ட...

“என்னையேண்டி திட்டுற...”

“சும்மாதான், கடுப்படிக்காத, போனை வை” என்று வைத்தாள் கீர்த்தி.

ஏனோ எல்லோர் மீதும் எரிச்சலாக வந்தது... காரணம் அரவிந்தின் நடவடிக்கை. கீர்த்திக்கு அவளது நடவடிக்கை அவளுக்கே புரியவில்லை. அரவிந்த் விருப்பத்தை சொன்னான் என்று கோபமா... இல்லை அதன் பிறகு அதைப் பற்றி எதுவும் பேசாமல் இருக்கிறானே என்று கோபமா... அவளுக்கே தெரியவில்லை.

அவ்வளவு தூரத்தில் இருந்து பேசும் தண்டபாணியிடம் எரிந்து விழுகிறோமே என்று அவள் மீதே அவளுக்கு கோபமாக வர... அவனை மறுபடியும் தொலைபேசியில் அழைத்தாள்.

“ஸாரி அண்ணா” என்றாள்.

“ஹேய் எதுக்கு ஸாரி, விடு கீர்த்தி. என்ன, என் குட்டி தங்கச்சி அவ இயல்புக்கு மாறா ஸாரி எல்லாம் கேட்கறா அதுவும் என்கிட்ட. ஏதாவது பிரச்சனையா கீர்த்தி... அண்ணாகிட்ட சொல்லுடா” என்றான் வாஞ்சையாக.

“அதெல்லாம் ஒண்ணுமில்லை அண்ணா” என்றாள் அவசரமாக கீர்த்தி.

“அப்புறம் என்னடா கோபம்” என்று கனிவாகக் கேட்க...

கீர்த்திக்கு அழுகை வரும்போல இருந்தது எதற்கென்று தெரியாமலேயே “ப்ச்! ஒண்ணுமில்லை அண்ணா. நான் நல்லா தான் இருக்கேன்” என்றாள். குரலில் அவளையும் மீறி அழுகை எட்டிப் பார்த்தது.

பதறினான். “என்ன கீர்த்தி? என்னம்மா?” என்றான் பதட்டமாக.

“உன்னைப் பார்க்கணும் போல இருக்கு அண்ணா” என்று சமாளித்தாள்.

“இன்னும் ஒரு வருஷம் தான்... அடுத்த வருஷம் லீவ் எடுத்துட்டு வருவேன்டா அதுவரைக்கும் இப்படியெல்லாம் ஃபீல் பண்ணக்கூடாது என்ன? அதுக்கு முன்னாடியே என் குட்டி தங்கச்சிக்குக் கல்யாணம் வந்தா எப்படியாவது வந்துடுவேன்” என்று சூழலை இலகுவாக்க முயன்றான்.

அதற்குள் சற்று தேறிக் கொண்ட

கீர்த்தி மறுபடியும் “சாரி அண்ணா... உன்னைத் தொந்தரவு பண்றேன்... இல்லை” என்றாள்.

“இல்லை, நீ என்னைத் தொந்தரவு பண்ணலை” என்றான் தண்டபாணி.

“ஒண்ணும் பிரச்சனையில்லையே கீர்த்தி” என்று ஏழு தடைவ கேட்ட பிறகே தொலைபேசியை வைத்தான்.

அவன் வைத்த பிறகும் அழுகையாக வந்தது. அவள் போனை வைத்தவுடனே தண்டபாணி அரவிந்திற்கு போனை அடித்தான்.

“என்னடா” என்று அரவிந்த் கேட்டவுடனே... “நான் உன்னைக் கேட்கணும் என்னடான்னு... என்னடா நடக்குது... கீர்த்திக்கு நிறைய வேலை குடுக்கறீங்களா இல்லை ஏதாவது திட்டுனீங்களா... இவ்வளவு அப்செட்டா இருக்கா... அழறாடா... நான் உன்னை அவளை பார்த்துக்க சொன்னேனே... அவளை கவனிக்கறதே இல்லையா” என்று பொரிய...

“அவளை மட்டும்தானேடா நினைச்சுட்டு இருக்கேன் இப்போல்லாம்”

என்று மனதிற்குள் நினைத்தவன் வெளியே அதை சொல்லாமல்... “ஏன்டா என்ன ஆச்சு இப்படிக் கத்தற... அழறாளா” என்றான் அதிர்ச்சியாக...

“ஆமாம் எனக்குக் குரல்லயே நல்லா தெரியுது... என்னன்னு பாருடா... அப்பா அம்மா கிட்ட சொன்னனா இன்னும் அப்சட் ஆவாங்க...”

“ஒண்ணும் பிரச்சனையில்லை நான் பார்;க்கறேன் என்னன்னு நீ கவலைப்படாத” என்று அவனிடம் சமாதானம் அரவிந்த் சொன்னாலும் அழுகிறாளா என்று மனம் பதைத்தது.

“நான் பார்த்துட்டுக் கூப்பிடறேன்” என்று போனை வைத்தான்.

அடுத்த நாள் காலை எப்போது வரும் என்று இருந்தது அரவிந்திற்கு கீர்த்தியைப் பார்க்க...

காலையில் அவள் வரும் முன்னே இவன் ஷோ-ரூம் சென்று விட்டான்... அவள் வந்ததுமே அவன் பார்வை அவளைத் தழுவியது... லெமன் யெல்லோ சுடிதாரில் அழகுப் பதுமையாக இருந்தாள். கண்களில் எப்போதும் காணப்படும்

உற்சாகம் இல்லை. கண்கள் சோர்வாக இருந்தது.

அவளுக்கு முன்னேயே அரவிந்த் அங்கே அமர்ந்திருந்ததைப் பார்த்தாள். அந்த ஒரு பார்வை அரவிந்தைப் பார்த்ததுடன் சரி... பின்பு அவன் இருந்த புறம்கூட அவள் கண்கள் திரும்பவில்லை.

அரவிந்தும் ஒரு பதினைந்து நிமிடம் தன்னை திரும்பி பார்ப்பாளா... பார்ப்பாளா என்று பார்க்க... திரும்பவேயில்லை.

அவனே அவளை கேபினுக்குள் அழைத்தான். வந்தாள்... கூப்பிட்டு விட்டு வந்தவளிடம் எதுவும் பேசாமல் அவளையே பார்வையால் அளக்க... கீர்த்திக்கு காலையிலேயே எரிச்சல் மண்ட ஆரம்பித்தது. அவனை பதிலுக்கு முறைத்துப் பார்த்தாள்.

இவன் பார்வையால் அளந்து கொண்டிருக்க... அவள் பார்வையால் முறைத்துக் கொண்டிருக்க. இப்படியே நிமிடம் கரைந்தது.

அவன் பேச்சை ஆரம்பிக்கவில்லை என்றவுடனே... அப்படியே திரும்பிப்

போக கீர்த்தி எத்தனிக்க...

“நில்லு கீர்த்தி” என்று அருகில் வந்தான்.

அவன் அருகில் வரவும் கீர்த்தி பின் போக எத்தனிக்க...

“என்ன பண்ணுவன்னு இப்படி பயந்து பின்னாடி போற” என்று கேட்டான்.

மௌனமாகவே நின்றாள் கீர்த்தி, பதில் எதுவும் பேச முயற்சிக்கவில்லை.

“எதுக்கு தண்டபாணி கிட்ட அழுத” என்றான்.

இவனுக்கு எப்படித் தெரியும் என்பது போல கீர்த்தி பார்க்க...

“உங்கண்ணன் போன் பண்ணினான்” என்றான் அரவிந்த்.

“எதுக்கு கீர்த்தி அழுத? என்ன பிரச்சனை... உங்க அண்ணா வேலைலதான் ஏதோ பிரச்சனைன்னு பயப்படறான்.”

இதற்கும் பதில் பேசாமல்தான நின்றாள் கீர்த்தி.

அவள் கண்களில் தெரிந்த சோர்வு, அரவிந்தை அசைத்தது.

இன்னும் அவள் அருகில் வந்தவன், "சொல்லு கீர்த்தி" என்றான் அவளை மிகவும் நெருங்கி...

அவன் நெருங்கி வர வர... அவளையறியாமல் கீர்த்தி பின் போய் சுவரோடு தட்டி நின்றாள்.

"இன்னும் பின்னாடி போக முடியாது சொல்லு" என்று அவள் நேர் எதிர் மிக அருகில் வந்து நின்று கேட்க...

"எனக்கு ஒரு பிரச்சனையுமில்லை. தள்ளி நில்லுங்க. யாராவது வந்துடப் போறாங்க."

"யாரும் வரமாட்டாங்க... நீ ஏன் அழுத மொதல்ல அதுக்கு பதில சொல்லு."

"இதென்ன கேள்வி... அழுகை வந்துச்சு அழுதேன்."

"அதான் ஏன் அழுகை வந்துச்சு."

"தெரியலை."

"நான் உன்னை கஷ்டப்படுத்தறேனா."

“தெரியலை” என்றால் அதற்கும்,

“நான் சொன்ன விஷயம் யோசிச்சியா... பதில் என்ன?”

அதற்கும் “தெரியலை” என்றாள் அவள்.

“இப்படி எல்லாத்துக்கும் தெரியலைன்னா என்ன சொல்ல” என்று சொல்லியபடி இன்னும் நெருங்கி வந்தான். இன்னும் ஒரு அடி முன் வைத்தால் கூட அவளோடு மோதி தான் நிற்க வேண்டும் என்ற அளவில் நெருங்கி வந்தான்.

அவள் இப்போது கண்களில் மிரட்சியோடு பார்க்க... “எதுக்கு இப்படி பயத்தோட என்னைப் பார்க்கற... அன்னைக்கும் இப்படித் தான் என்னைப் பார்த்த... என்னைப் பார்த்தா பயமாவா இருக்கு” என்று கேட்டான்.

மந்திரத்திற்கு கட்டுண்டவள் போல, “இல்லை” என்று தலையசைத்தாள்.

அவள் கைகளைப் பற்றி தன் கைகளுக்குள் ஏந்தியது போல வைத்தான்.

அவள் உருவ முற்பட... “ப்ளீஸ், கீர்த்தி நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு” என்க...

அவள் அமைதியாகவே நின்றாள். அதையே சம்மதமாக எடுத்தவன்... “எனக்கு இதுதான் லவ்வா தெரியலை... உன் ஞாபகம் தான் எனக்கு இப்போல்லாம் அதிகமா இருக்கு. அப்பா கல்யாணத்தை பத்தி பேசினப்போ உன் முகம் மட்டும் தான் எனக்கு ஞாபகம் வந்தது. உன்னோட தான் என் வாழ்க்கை நல்லா இருக்கும்னு தோணுது... ரொம்ப நாள் எல்லாம் நான் உன்னை நினைச்சிட்டு இருக்கலை... அப்பா கல்யாணத்தப் பத்தி பேசினப்போ தோணினது தான். அதுக்கு அப்புறம் வேற எதையுமே நினைக்க முடியலை.”

“வேற யாராவதா நீ இருந்தா... இன்னும் சட்டுன்னு உங்க வீட்ல பேசியிருப்பேன். ஆனா நீ தண்டபாணியோட தங்கச்சி... அவன்கிட்ட சொல்லாம உன்கிட்ட சொன்னதே தப்பு மாதிரி தான் ஃபீல் பண்றேன். ஐ திங்க் ஐ அம் இன் லவ் வித் யூ டெஸ்பரெட்லி” என்றான் கண்களில்

காதலைத் தேக்கியபடி.

“அதுதான் ரொம்ப வேகமா உன்கிட்ட எனக்குக் காதல்னு தோணின உடனே பேச வைச்சிடுச்சுன்னு நினைக்கிறேன்.”

“நான் ஊருக்குப் போறேன். நான் வர்ற வரைக்கும் ப்ளீஸ் எனக்காக வெயிட் பண்ணு. நான் அங்கே அவன் கிட்ட பேசி நான் வந்தவுடனே நம்ம கல்யாணம் நடக்கற மாதிரி பார்த்துக்கலாம். என்ன சொல்ற?”

“எனக்குத் தெரியலை... அது அம்மாகிட்ட, அப்பா கிட்ட, தண்டுகிட்ட எல்லார்கிட்டயும் கேட்கணும்” என்றாள் குரலில் கலக்கத்தோடு.

அவள் கலக்கத்தை உணர்ந்தான் தான், ஆனால் அதை வெளிக்காட்டாமல்... “நம்ம கல்யாணத்துக்கு அவங்க எல்லார்கிட்டயும் கேட்கலாம்... ஆனால் என் காதலுக்கு நீதான் பதில் சொல்லணும்” என்றான் அவள் கைகளைப் பிடித்தது பிடித்தபடி விடாமல்.

“எனக்குத் தெரியலை” என்றாள்

கைகளை உருவ முயன்றபடி... அவன் கண்களைப் பார்க்காமல்...

“என்னைப் பார்த்து பதில் சொல்லு” என்று மெதுவாக அதட்டினான்.

“அப்புறம் சொல்லவா” என்றாள் மறுபடியும் கலக்கத்தோடு...

“எப்புறம்” என்றான்.

“நீங்க தண்டுகிட்ட, அப்பா, அம்மாகிட்ட பேசினதுக்கு அப்புறம்” என்றாள் தயக்கத்தோடு.

“அது கல்யாணத்துக்கு அப்போ சரின்னு சொல்லு, இப்போ என் காதலுக்கு சொல்லு” என்றான் குறும்போடு...

“அதெல்லாம் சொல்ல முடியாது” என்றாள் பதிலுக்கு இப்போது சற்று தைரியமாக கீர்த்தி...

அவள் குரலில் எட்டிப் பார்த்த தைரியம் அரவிந்திற்கு சற்று உற்சாகத்தைக் கொடுக்க... அவள் கைகளை விட்டு அவள் இருபுறமும் கைகளை ஊன்றி நின்றான்.

“நீ சொல்லற வரைக்கும் நான் கை

எடுக்க மாட்டேன்”

“நான் கத்துவேன்.”

“கத்து.”

“பச், கையை எடுங்க ப்ளீஸ்” என்று கெஞ்சலில் இறங்கினாள்.

“ஒரே ஒரு ஐ லவ் யூ சொல்லு விட்டுடறேன்.”

“முடியாது” என்றாள் தீர்மானமாக...

“முடியாது” என்றவன் அவள் எதிர்பார்க்காதபோது அவள் நெற்றியில் இதழ் பதித்து விலகினான்.

“சொல்லலைன்னா இப்படிதான் செய்வேன்.” டென்ஷனாகி விட்டாள் கீர்த்தி. அவனைப் பிடித்து ஒரு தள்ளு தள்ளியவள் ஒழுங்கா இருந்துக்கோ” என்றாள் மிரட்டலாக...

ஆனால் அது சிறிதும் அரவிந்தை அசைக்கவில்லை... “உன்கிட்ட இப்படித்தான் இருப்பேன்” என்றான் தைரியமாக.

அவள் நெற்றியை தேய்த்தாள்.

ஏதோ அப்பிவிட்டது போல... “பார்த்து தோல் கையோட பிச்சிட்டு வந்துடப் போகுது” என்றான் நக்கலாக...

“உன்கிட்ட எல்லாம் பேசறேன் பாரு” என்று அடிக்குரலில் சீறினாள் கீர்த்தி.

“எல்லாம் பேசாத கீர்த்தி, ஒரே ஒரு ஐ லவ் யூ மட்டும் பேசேன்” என்றான்.

“சே! சே! உன்னையெல்லாம் திருத்தவே முடியாது” என்று சொல்லி வேகமாக வெளியேறினாள் கீர்த்தி...

அவள் வெளியேறியதை ஒரு புன்னகையோடு பார்த்திருந்தான். மனதிற்குள் அவனுக்கு அவனே “டேய் மகனே, தூள் கிளப்புறடா, முத்தமெல்லாம் குடுத்துட்ட” என்று அவனுக்கு அவனே பாராட்டிக் கொண்டான்.

கீர்த்திக்கு அவனுக்கு நேர்மாறாக கொதித்துக் கொண்டிருந்தாள். “என்ன தைரியம் அவனுக்கு பேசிக் கொண்டு இருக்கும்போதே முத்தம் கொடுத்து விட்டான். என்ன திமிர். எப்படி என்னிடம் இருந்து ஐ லவ் யூ என்ற வார்த்தையை வாங்குகிறான் என்று பார்த்துக்

கொள்கிறேன்” என்று மனதிற்குள்ளேயே கறுவிக் கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து அவள் இருக்கும் இடத்திற்கே வந்தவன், “நான் கேட்டதை நீங்க இன்னும் சொல்லவே இல்லை” என்று வேண்டுமென்றே சீண்டினான்.

அவளும், “எனக்குத் தெரியாததை எப்படிச் சொல்ல முடியும்” என்றாள் எல்லோரும் கவனிப்பார்கள் என்பதை மனதில் கொண்டு...

அவள் அருகில் வந்தவன் அவளுக்கு மட்டும் கேட்கும் விதமாக, “பார்ப்போம் நீ எப்படிச் சொல்லாம போறேன்னு.”

“பார்ப்போம் நீங்க எப்படிச் சொல்ல வைக்கறீங்கன்னு” என்று பதிலுக்கு பதில் பேசினாள்.

அவள் சண்டைக் கோழியாக முறுக்கிக் கொண்டதில் அரவிந்திற்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போல இருந்தது.

“அப்போ நமக்குக்

கல்யாணமானாகூட ஐ லவ் யூ சொல்ல மாட்ட நீ...”

“ம்கூம் மாட்டேன்” என்றாள் வீம்பாக...

“அப்போ நம்ம கல்யாணம் கன்பார்மா நடக்கும் அப்படித்தானே” என்றான் சிரிப்போடு.

“ம்கூம் நான் அப்படிச் சொல்லலை” என்றாள் பாவமாக...

அவன் சிரிக்கத் துவங்க... ஏதோ வேலையிருப்பது போல நகர்ந்தாள், “இடியட்” என்று அவனை மனதில் திட்டிக் கொண்டே...

அதன் பிறகு இருவருக்கும் தனிமை நேரவில்லை... வேலை இருந்தது. அரவிந்திற்கு விசாவும் கன்பர்ம் ஆனது.

அன்று அவள் வீட்டிற்குக் கிளம்பும் முன் மறுபடியும் அவள் முன் வந்து நின்றவன்... “விசா கன்பர்ம் ஆகிடுச்சு கீர்த்தி... இன்னும் நாலஞ்சு நாள்ள கிளம்பிடுவேன் டிக்கெட் கிடைச்சா... உன் அண்ணன்கிட்ட... அவனைப் பார்க்கப் போறேன்” என்றான்.

அவன் முகத்தில் வெளிநாடு போகும் சந்தோஷத்தை விட தண்டபாணியைப் பார்க்கப்போகும் சந்தோஷம் இருந்தது... மிக நெருங்கிய நண்பர்கள் அல்லவா...

தன் அண்ணனை அவன் பார்க்கப் போகிறான் என்ற சந்தோஷம் கீர்த்தியையும் தொற்ற, மனதை மறையாமல், "வாழ்த்துக்கள்" என்றாள்.

"சொல்லு உங்க அண்ணன்கிட்ட என்ன சொல்லணும்" என்றான்.

"எனக்கு ஒண்ணும் சொல்ல வேணாம் நான் தினமும் வேணுன்னா கூட அவனோட பேசிடுவேன்."

"ஆனா எனக்கு சொல்ல நிறைய நிறைய இருக்கே" என்று அவளைப் பார்த்து கண்ணடித்தவன், "புதுசா என் மச்சான் வேற ஆகப் போறான் இல்லையா... அதைப் பத்தி நிறைய பேசணும்."

"என்ன புதுசா மச்சான்" என்று அவளுக்குத் தெரியாமல் கேட்டவள், பின்பு தான் தன்னோடான திருமணத்தை பேசுகிறான் என்று தெரிந்தவள்... என்ன

பேசுவது என்று தெரியாமல் மௌனியாகி விட்டாள்.

“நிஜம் கீர்த்தி. நான் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் நிஜம் ஐ அம் இன் லவ் வித் யூ. எனக்காக கட்டாயம் வெயிட் பண்ணு கீர்த்தி... உங்கண்ணன் சம்மதத்தோட வந்து உங்க வீட்ல பேசறேன். அதுக்கப்புறம் உன்கிட்ட கட்டாயம் ஐ லவ் யூ வாங்காம விடமாட்டேன்” என்றான் கர்வத்தோடு.

“நான் நாளைல இருந்து ஷோரூம் வருவனா தெரியாது... ஊருக்குப் போறதுக்கு அரேஞ்ச் பண்ணனும், டிக்கெட்ஸ் பார்க்கணும் நிறைய வேலை இருக்கு. அதான் அப்புறமா உன் கூடப் பேச முடியுமோ, முடியாதோ, இப்போவே பேசிடறேன். நான் ஞாபகத்துல இருப்பேன் இல்லயா?” என்று கண்களில் எதிர்பார்ப்பபோடு பேச...

தானாக தலை ஆடியது கீர்த்திக்கு... அதைப் பார்த்ததும் தான் அவன் கண்களில் அலைபுறுதல் நின்றது.

மீண்டும் அவளைச் சீண்டாமல் விடைபெற்றான்... எதுவோ குறைவது

மாதிரி இருந்தது கீர்த்திக்கு... என்னவென்று அவளுக்கே சொல்லத் தெரியவில்லை...

வீடு வந்ததும்... அம்மாவிடம் தலைவலி என்று சொல்லி, உணவு உண்ணாமல் கூட படுத்து விட்டாள்.

அவன் முத்தமிட்ட நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்... அவள் கண்களில் ஒரு ரகசியப் புன்னகை தோன்றியது... அது அவள் எதிர்பாராமல் நடந்ததுதான்... நெற்றிக்கு பதிலாக இதழ்களில் முத்தமிட்டு இருந்தாலும் அவளால் ஒன்றும் செய்திருக்க முடியாதுதான்.

அவன் செய்தது தப்பென்றாலும்... அவன் தேர்ந்தெடுத்த இடம் பிடித்தது. வேறு எதுவும் செய்யாமல் விட்டானே என்று சற்று நிம்மதியாக இருந்தது. அந்த நினைவுகளோடே தூங்கிப் போனாள்...

தூக்கத்திலும் அரவிந்த் வந்து, "நீ என்னை பார்த்து ஐ லவ்யூ சொல்வியா மாட்டியா" என்று மிரட்டிக் கொண்டிருந்தான். தூக்கத்திலேயே அவள் முகத்தில் சிரிப்பு வர... அவள் உதடுகள் சத்தமாகவே உச்சரித்தது, "மாட்டேன்

போ” என்று...

வீட்டில் அரவிந்த் விசா வந்ததைச் சொல்லி, இன்னும் நான்கைந்து நாட்களில் கிளம்பப் போகிறேன் என்று சொல்ல... “இவ்வளவு சீக்கிரமாகவா” என்றனர்... சிதம்பரமும் ராணியும்.

“ஆமாம் அப்பா” என்றான்.

“எங்கடா போவ, எங்க தங்குவ, என்ன பண்ணுவ” என்று சிதம்பரம் அடுக்கடுக்காக கேள்விகளை கேட்க...

“தண்டபாணி இருக்கான்பா, எல்லாம் பார்த்துப்பான்” என்றான் அரவிந்த்.

“டேய் புது இடம், புது ஊரு நமக்குத் தெரிஞ்சவங்க வேற யாராவதும் இருக்காங்களா பார்ப்போம்டா...”

“தேவையேயில்லைப்பா, அவனை நம்பாம வேற யாரை நான் நம்பப் போறேன். எல்லாம் அவன் பார்த்துக்குவான் அப்பா” என்றான் மறுபடியும்.

“உன் கல்யாணப் பேச்சு...” என்று சிதம்பரம் இழுக்க...

“அவன்கிட்ட பேசி சம்மதம் வாங்குனதுக்கு அப்புறம் சொல்றேன்... இங்க பேசுங்கப்பா” என்றான் அரவிந்த்.

10

லண்டன் போவதற்கு நிறைய விஷயங்கள் அரேஞ்ச் செய்ய வேண்டி இருந்ததால்... ஷோரூம் பக்கம் எட்டிப் பார்க்கக் கூட நேரமில்லை அரவிந்திற்கு... அவன் கிளம்புவதற்கு முன் தினம் தான் அங்கே அவனால் வர முடிந்தது.

கீர்த்தியை கண்களில் நிரப்ப ஆரம்பித்தான். “நாளைக்குக் கிளம்பறேன் கீர்த்தி” என்றான் விடாமல் அவளையே பார்த்தவாறு.

“சரி” என்பது போலத் தலையசைத்தாள்.

வேறு என்ன பேசுவது என்று இருவருக்கும் தெரியவில்லை... கிளம்பும்போது “ஐ வில் மிஸ் யூ கீர்த்தி” என்று சொல்லிச் செல்ல... “மீ டூ” என்று கீர்த்தியின் உதடுகள் அவன் காதில் விழாதவாறு முணுமுணுத்தது.

அடுத்த நாள் அவனை வழியனுப்ப நாமும் போவோமா என்று எழுந்த உணர்வை அடக்க மிகவும் சிரமப்பட்டாள் கீர்த்தி. அவன் சென்ற பிறகு நாம ஒரு தரம் அவனிடம் சிரித்துப் பேசியிருக்கலாமோ என்று தோன்றியது. அவனை இன்னும் ஒரு தரம் நன்றாகப் பார்த்திருக்கலாமோ என்று தோன்றியது. ஏதேதோ எண்ணங்கள் அவளைச் சூழ்ந்தன.

இதற்கு பெயர்தான் காதலா என்று ஆராய ஆரம்பித்தாள். எப்போது இருந்து எனக்கு அவனைப் பிடிக்க ஆரம்பித்தது. அவனைப் பார்த்த போதேவா... இங்கு வந்த பிறகா... அவன் காதல் சொன்ன பிறகா... ஏதோ ஒன்று தெரியவில்லை.

ஆனால் உடனே அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை கனன்றது. வீட்டிற்கு வந்து உணவு உண்டு உறங்கும் வரை அந்த எண்ணம் வலுப்பெற... அவன் போகும் முன் அவனைக் கட்டாயம் பார்க்க வேண்டும் போலத் தோன்ற ஆரம்பித்தது.

ஃப்ளைட் நாளைக் காலை எட்டு மணிக்கு. போய் அவன் அறியாமல் ஒரு முறை பார்த்து வருவோமா என்று

தோன்றியது.

நேற்று தான் அவள் அன்னையிடம் சொன்னாள்... அரவிந்த் தண்டபாணி இருக்கும் இடத்திற்குப் போகிறான் என்று... அப்போதுதான் அவளுக்குத் தோன்றியது... அம்மா அவனுக்கு கொடுத்து அனுப்ப எதுவும் செய்ய வில்லையா என்று தோன்ற... அப்போதே போய் அம்மாவை எழுப்பினாள்... "அம்மா நீ ஒண்ணும் கொடுத்து அனுப்பலயா" என்று கேட்டாள்.

"இல்லை கீர்த்தி ஒண்ணும் வேணாம்னு, தண்டபாணி சொன்னான். அதனால ஒண்ணும் செய்யலையேம்மா" என்றார் அவளின் அம்மா.

"இங்கே ஒரு பெரிய கடைல எல்லாம் விக்குது அம்மா... இன்னும் கடை மூடியிருக்க மாட்டாங்க அம்மா... அப்பாவோட நான் போய் வாங்கிட்டு வந்துடறேன் அம்மா... என்ன என்னன்னு மட்டும் நீங்க சொல்லுங்க அம்மா... இங்க இருந்து போறாங்க அதுவும் அவன் இடத்துக்கே போறாங்க, குடுத்து அனுப்பலன்னா நல்லா இருக்காது

அம்மா” என்று அவள் அம்மாவை உசுப்பேற்றி... அந்த நேரத்தில் தந்தையை அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்றாள்.

கடை மூடும் நேரம்... அவசரமாக உள்ளே சென்று பொருட்களை வாங்கினர். அண்ணனுக்குக் கொடுத்தனுப்பிய மாதிரியும் ஆயிற்று... அரவிந்தை சென்ட் ஆஃப் செய்த மாதிரியும் ஆயிற்று. அதன் பிறகு தான் அவள் மனம் உற்சாகம் அடைந்தது.

காலையில் ஆறு மணிக்கு சரியாக ஏர்போர்ட்டில் இருந்தாள். விடியற்காலை நேரம் என்பதால் அம்மாவையும் அப்பாவையும் வேண்டாம் என்று சொல்லி அரவிந்த் மட்டுமே வந்திருந்தான்.

அவன் சத்தியமாக கீர்த்தியை எதிர்பார்க்கவில்லை... கண்களை தேய்த்துவிட்டு பார்க்க... “ஓவரா சீன் போட வேண்டாம் நான் தான்” என்று அருகில் வந்தாள் கீர்த்தி.

“நான் உன்னை எதிர்பார்க்கவேயில்லை கீர்த்தி, தேங்க்ஸ் ஃபார் கம்மிங்” என்றான் சந்தோஷமாக.

“நான் ஒண்ணும் உங்களுக்காக வரலை... அண்ணாவுக்கு திங்க்ஸ் கொஞ்சம் கொடுத்தனுப்பணும் வந்தேன்” என்றாள் வீம்பாக...

“யாருக்காக இருந்தா என்ன... வந்தியே எனக்கு அதுவே ரொம்ப ரொம்ப சந்தோஷம்” என்றான் மலர்ந்த முகத்தோடு.

“என்ன நான் கேட்டதைத் தான் நீ சொல்லலை... டைம் இருந்தா இப்பவே சொல்ல வச்சிருப்பேன். இப்ப இல்லை... அதனால நான் வந்தவுடனே முதல் வேலை அதுதான்.”

“நீங்க முதல்ல பத்திரமா போயிட்டு வாங்க... எல்லாம் அப்புறம் பார்க்கலாம்” என்றாள் கீர்த்தி... மலரத்துடிக்கும் அவள் முகத்தை வெகு பிரயத்தனப்பட்டு மறைத்து.

“நீ வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷம் கீர்த்தி” என்று மறுபடியும் சொல்லி, அவளை அணைத்து விடைபெற துடித்த மனதை வெகுவாக கட்டுப்படுத்தி செக்கின் செய்ய சென்றான்.

கீர்த்தி அவன் உள்ளே சென்று

கண்களில் இருந்து மறையும் வரை அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். எப்படி ஒரே நாளில் நான் இவ்வளவு மாறிப் போனேன். மனம் இவனை இவ்வளவு தேடுகிறது என்று எண்ணிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தாள்.

பல மணி நேர பயணத்திற்குப் பிறகு லண்டன் வந்து இறங்க, அவனை அழைத்துப் போக விமான நிலையம் வந்திருந்தான் தண்டபாணி.

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்ததில் மிகுந்த சந்தோஷம். அதுவாய் வார்த்தையாக வராமல் ஒரு இறுக்கமான அணைப்பின் மூலமாக வெளிப்பட்டது.

“வெல்கம் லண்டன்” என்றான் தண்டபாணி.

“ஆளே மாறிட்டடா” என்றான் அரவிந்த். ஏற்கனவே ஹேன்சம்-மாக இருக்கும் தண்டபாணியை இன்னும் ஹேன்சம்-மாக மாற்றியிருந்தது லண்டன். இன்னும் பொலிவோடு இருந்தான்.

“ப்ச்! நீ வேற ஏண்டா கலாய்க்கற”

என்றான் தண்டபாணி.

“சொல்லவே இல்லடா நான் கலாய்க்கல உண்மையை தான் சொல்றேன் பாணி. நீ ஏற்கனவே அழகுதான்டா, இப்போ இன்னும் அழகா தெரியறடா” என்றான் உண்மையாக...

“வா! உன்னோட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.”

“என்னடா” என்றான் ஆர்வமாக...

“அது நம்ம இருக்கப்போற வீட்ல, நம்ம மட்டும் இல்லை, இன்னொருத்தரும் இருக்கிறாங்க... அதான்” என்றான்.

“யாருடா அது உன் கூட அபார்ட்மெண்ட்ல ஷேர் பண்றது.”

“நீ இதை சரியா எடுத்துக்கணும் அர்வி...” என்றான் யோசனையாக...

“என்ன சொல்லுடா, என்கிட்ட உனக்கு என்ன சொல்லு...”

“அது ஒரு பொண்ணு பேரு லிசா” என்றான்.

“என்ன பொண்ணா” என்றான் அதிர்ச்சியாக...

“ஆமா பொண்ணு தான்.”

“ஆனா ஏன்.”

“ஏன்னா... ரெண்டு பேருக்கும் பிடிச்சிருந்தது... சேர்ந்து இருக்கோம்.”

அரவிந்த் அவனை ஆராய்ச்சிப் பார்வை பார்க்க...

“யெஸ் யூ ஆர் ரைட், நாங்க சேர்ந்து வாழறோம்...” என்றான்.

இதை நிச்சயமாக அரவிந்த் எதிர்பார்க்கவில்லை.

“ஏன் இப்படி” என்றான் அதிர்ச்சியாக...

“அவ ஒரு ஆங்கிலோ இண்டியன்... அப்பா இண்டியன். அம்மா இங்லண்ட்... அவளுக்கு கல்யாணத்துல நம்பிக்கையில்லை... ஆனா என்னைப் பிடிச்சிருக்குன்னா... எனக்கும் அவளை ரொம்பப் பிடிச்சிருந்தது. ஒரு கட்டத்துல பிரிஞ்சியிருக்க முடியாதுன்னு தோணிச்சு... நாங்க ரெண்டு பேருமே முடிவு பண்ணி சேர்ந்து வாழ ஆரம்பிச்சிட்டோம்” என்றான் தண்டபாணி.

இந்த மாதிரி ஒரு விஷயத்தை தண்டபாணியிடம் இருந்து அரவிந்த் எதிர்பார்க்கவில்லை.

இது ஒரு வகையான ஷாக் அவனிற்கு. அதிலிருந்து அவனால் வெளியே வர முடியவில்லை.

“டேய், என்னடா இது. நமக்கு இதெல்லாம் எப்படிடா சரி வரும்.”

“சரியா வரும்ன்னு தான் என் உள் மனசு சொல்லிச்சு.”

“ஊர்ல அப்பா அம்மாக்குத் தெரிஞ்சா என்ன சொல்வாங்க.”

“இப்பத்திக்கு கீர்த்தி கல்யாணம் முடியற வரைக்கும் அப்பா அம்மா கிட்ட சொல்லப் போறதில்ல.”

“அதுக்கப்புறம் சொல்லணும், சொல்லும்போது கல்யாணம் ஆகிடிச்சின்னு தான் சொல்வேன்.”

“பொய் சொல்லப் போறியா.”

“வேற வழி.”

“நான் சொல்லிடன்னா.”

“நீ சொல்ல மாட்ட எனக்குத் தெரியும். அதே மாதிரி உன்கிட்ட பொய் சொல்லவும் எனக்கு மனசு வரலை. அதான் சொல்லிட்டேன்.”

“நீ என் கிட்ட உண்மையைச் சொன்னது எனக்கு சந்தோஷமா இருந்தாலும்... சொன்ன விஷயம் சந்தோஷம் இல்லைடா.”

“லிசாவைப் பார்க்கிற வரை தான் இப்படிப் பேசுவ... பார்த்த பிறகு இப்படி பேச மாட்ட... எதுக்காகவும் அவளை என்னால மிஸ் பண்ண முடியாதுடா. தமிழ்ல சொல்லணும்னா நான் அவ மேல பைத்தியமாயிருக்கேன்னு சொல்லலாம்.”

இந்த விஷயம் தந்த அதிர்ச்சியில் இருந்து அரவிந்தால் வெளியே வர முடியவில்லை. அமைதியாக இருந்தான்.

“வா லிசாவைப் பார்த்தா இப்படி பேசமாட்டேன்” என்று அவன் லக்கேஜை எடுத்துக் கொண்டு அவனையும் அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

அமைதியாகவே காரில் பயணித்தனர். தண்டபாணியும் அவனை அதிகம் தொந்தரவு பண்ணவில்லை. இந்த

விஷயத்தை கிரகித்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டான்.

லண்டனின் செழுமை அரவிந்தை ஈர்த்தாலும்... அவன் கவனத்தில் பதிய மறுத்தது. தன் நண்பனிடம் இருந்து இப்படி ஒரு செய்கையை அவன் எதிர்பார்க்க வில்லை. இத்தனை நாட்கள் எதிர்பார்த் வெளிநாட்டு பயணம் கூட அத்தனை மகிழ்ச்சியைக் கொடுக்க வில்லை.

தன் நண்பனுக்கு இப்படி ஒரு வாழ்க்கை முறையா. தான் வேறு எப்படி எங்கே போய் தங்குவது. தன்னால் அங்கே போய் இருக்க முடியுமா. மனைவி என்ற ஒருத்தியோடு தன் நண்பன் இருக்கும்போது அவன் வீட்டில் இருப்பது வேறு... இப்படி சேர்ந்து வாழும் சூழலில் இருப்பது வேறு... எப்படி தன்னால் இருக்க முடியும்.

“இப்படியே திரும்பி ஊருக்குப் போய் விடலாமா” என்று இருந்தது அரவிந்திற்கு.

தன் நண்பனின் மனதைப் படித்தவன் போல தண்டபாணி, “லிசா

ரொம்ப நல்லவடா. உனக்கு எந்தப் பிரச்சனையும் வராது. அவளைப் பார்த்தா உனக்கே தெரியும்” என்றான் சமாதானமாக...

அவர்கள் அபார்ட்மெண்ட் சென்றபோது அது பூட்டியிருந்தது. தன்னிடம் உள்ள சாவியால் திறந்தான் தண்டபாணி.

“வெளில எங்கயாவது போயிருப்பா வந்துடுவா” என்றான் தண்டபாணி.

“என்னடா சாப்பிடற” என்று கேட்டவனிடம் “ஒண்ணும் வேண்டாம்டா, ஃப்ளைட்ல சாப்பிட்தெல்லாமே ஒரு மாதிரியா இருக்கு...”

“சரி கொஞ்சமா ஜூஸ் எடுத்துக்கோ” என்று எதையோ கலந்து கொடுத்தான்.

அவர்கள் பேசிக் குடித்துக் கொண்டிருக்கும்போதே... காலிங் பெல் சத்தம் கேட்டது.

லிசா வந்துட்டா என்று தண்டபாணி சென்று கதவை “ஹாய்

ஹனி, உன் ப்ரெண்ட் வந்தாச்சா” என்று கேட்டபடியே உள்ளே வந்தவளைப் பார்த்தான் அரவிந்த்... பார்த்தான் அரவிந்த்... பார்த்துக்கொண்டே இருந்தான் அரவிந்த்.

மெழுகு சிலை... அழகி... இரண்டு வார்த்தை மட்டுமே அவன் ஞாபகத்தில் அப்பொழுது வந்தது... அவ்வளவு அழகு... இவ்வளவு அழகாக ஒரு பெண்ணை அவன் நேரில் இதுவரை பார்த்ததில்லை.

தண்டபாணிக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா என்றிருந்தது. ஒரு நிமிடம் சுற்றுப்புறம் எல்லாவற்றையும் மறந்து அவளைப் பார்த்தான்.

அவள் இவனைப் பார்த்து, “ஹாய்” என்றதும் தான் நடப்புக்குத் திரும்பினான்.

பதிலுக்கு இவன், “ஹாய்” என்க...

“டிராவல் எல்லாம் கம்ஃபர்டபுளா இருந்ததா” என்று அந்த மெழுகு சிலை பேசியது.

“இருந்தது” என்றவன்... “இவங்களுக்கு தமிழ் தெரியுமா” என்று தண்டபாணியை பார்த்துக் கேட்க...

“தெரியும், அவங்கப்பா தமிழர்” என்றான் தண்டபாணி.

லிசா இவனைப் பார்த்து ஸ்நேகமாய் புன்னகைக்க... பதிலுக்கு இவனும் புன்னகைத்தான்.

“ஏதாவது சாப்பிட பண்ணுனுனியா தண்டு” என்றாள்.

“இல்லை லிசா இப்போதான் வந்தோம்” என்றவன்... “ஒரு நிமிஷம் அரவிந்த்” என்று சொல்லி கிட்சனை நோக்கிப் போக... லிசாவும் பின்னே போனாள்.

இவ்வளவு அழகான பெண் மீது தண்டபாணி பைத்தியமானதில் தப்பே இல்லை என்றுதான் இப்போது அரவிந்திற்குத் தோன்றியது.

அரவிந்த் வருகிறான் என்று இரண்டு நாள் விடுப்பெடுத்திருந்தான் தண்டபாணி. லிசாவும் அவனோடு சகஜமாக பேசினாள். பதிலுக்கு அரவிந்திற்கு தான் திக்கியது.

அரவிந்த் பார்த்தது இருவருக்குள்ளும் இருந்த

அன்னியோன்யம் தான். லிசாவும், தண்டபாணியும் அவ்வளவு அன்னியோன்யமாக இருந்தார்கள். தண்டபாணிக்கு வேண்டியவன் என்பதால் லிசாவும் அவனோடு நன்றாகப் பழகினாள்.

காலையிலிருந்து மாலை வரை தண்டபாணியும் லிசாவும் அலுவலகம் சென்றுவிட அரவிந்த் தனியாக வீட்டில் இருந்தான்.

மாலை வந்ததும் இரவு வரை அவனை எங்கேயாவது அழைத்துச் செல்வார்கள். சனி, ஞாயிறு பக்கத்தில் இருக்கும் இடங்களுக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்து அவ்வளவு பொறாமையாகக் கூட இருந்தது அரவிந்திற்கு. இதில் கீர்த்தி விஷயத்தை எப்படி தண்டபாணியிடம் ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டே இருந்தான் அரவிந்த்.

நடுவில் ஒரே ஒருமுறை இவனாக கீர்த்திக்கு அழைத்துப் பேசினான். அவன் பேசியது அவளுக்கு சந்தோஷம் தான்

என்று குரலிலேயே தெரிந்தது. ஆனால் ஏனோ தண்டபாணி விஷயத்தைச் சொல்ல மனம் வரவில்லை.

அவன் விஷயத்தை அவன் தான் சொல்ல வேண்டும் என்று அரவிந்த் அமைதியாகி விட்டான். அந்த குற்றவுணர்ச்சியில் கீர்த்தியிடம் இவன் சரியாகக் கூட பேசவில்லை. சீக்கிரம் போனை வைத்து விட்டான்.

அவன் லண்டன் வந்த பத்து நாட்களுக்கு மேல் ஆகி... விட்டது. இருவரின் காதலையும் பார்த்த அரவிந்த்... தண்டபாணியிடம், "நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது" என்றான்.

"எவ்வளவோ தடைவ கேட்டுப் பார்த்துட்டேன் அர்வி... அவ ஒத்துக் கொள்ளவே மாட்டேங்கறா."

"எத்தனை நாள் இப்படியே இருக்க முடியும் பாணி."

"தெரியலை... நாங்க சேர்ந்து வாழ அவ போட்ட ரெண்டு கண்டிஷன், ஒண்ணு கல்யாணத்துக்கு வற்புறுத்தக் கூடாது. இரண்டாவது இண்டியா வந்து

இருக்க மாட்டேன்.”

“என்ன இந்தியாவும் வரமாட்டாளாமா.”

“ம்கூம்” என்று மண்டையை அப்படியும் இப்படியும் ஆட்டினான்.

“காதல், இப்படி கண்டிஷன் எல்லாம் போட்டா அது எப்படி உண்மையான காதல் ஆகும்.”

“நான் யோசிக்காம இருப்பேன்னு நினைக்கறியா... ஆனா இதையெல்லாம் விட அவளை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. எனக்காக அவளும் நிறைய மாறிட்டா... தழையத் தழைய புடவை கட்டுறான்னு சொல்ல முடியாது... ஆனா ஷார்ட் ட்ரெஸஸ் போடறது இல்லை... லாங் ஸ்கர்ட், பேண்ட்ஸ் இந்த மாதிரி தான் போடறா... எனக்காக அவ உடையில் நிறைய சேஞ்சஸ் கொண்டு வந்து இருக்கா... இங்க இருக்கிற கல்சர் ஃபாலோ பண்றது இல்லை. நிறைய நிறைய மாறியிருக்கா. ஆனா கல்யாணத்துக்கு மட்டும் ஏனோ ஓ.கே. சொல்ல மாட்டேங்கறா. அதுதான் அவ போட்ட கண்டிஷன்றதால நானும் அதிகம்

வற்புறுத்துவது இல்லை. அடிக்கடி சொல்ல மட்டும் செய்வேன். பார்ப்போம். ப்யூச்சர்ல ஏதாவது மாற்றம் வருதான்னு" என்று தன் மனதில் இருந்ததை எல்லாம் நீளமாக பேசி முடித்தான்.

அரவிந்திற்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே லிசா வர அவளும் பேச்சில் இணைந்து கொண்டாள்.

"எப்படி இருக்கு அர்வி, எங்க லண்டன்."

"ரொம்ப நல்லாயிருக்கு லிசா."

"தட்ஸ் ஃபைன்... என்ன பேசிட்டு இருந்தாங்க தண்டு, ரொம்ப பேசுவாங்களே" என்றாள்.

"இதென்ன பேச்சில் மரியாதை எல்லாம் தூள் பறக்குது" என்றான் தண்டபாணி.

"நீதானே எனக்கு இப்படிப் பேசணும், அப்படிப் பேசணும், க்ளாஸ் எடுத்த... இப்போ கிண்டல் பண்றயா."

"ஹேய் லிசா... உன் தமிழ் ரொம்ப நல்லாயிருக்கு... இவன் பேச்சைக் கேட்டு

நீ எதுவும் கத்துக்காதே... சின்ன வயசுல இருந்தே தமிழ் பேசுவியா.”

“எஸ், அப்பா என்னோட தமிழ்லதான் பேசுவார்... எழுதப் படிக்கத் தெரியாது... ஆனா நல்லா பேசுவேன்.”

“இப்போ என்ன பண்றார் உங்கப்பா...”

“இப்போ இல்லை... எனக்கு ஒரு பதினேழு வயசாகும் போது இறந்துட்டார். ஹார்ட் அட்டாக்...”

“அப்பா போனவுடனே... அம்மா ரொம்ப அப்செட்... அதை மறக்க இன்னொரு கல்யாணம் பண்ணிட்டாங்க” என்றாள்.

“என்ன மறக்க முடியாம இன்னொரு கல்யாணமா” என்றான் வியப்பாக அரவிந்த்.

“யெஸ், அப்படிதான் அம்மா என்கிட்ட சொன்னாங்க, பட் என்னால அதை ஒத்துக்க முடியலை. மை ஃபாதர் வாஸ் சச் எ லவபிள் கை. அவரை என்னால மறக்க முடியலை... அம்மாவோட செய்கையை மன்னிக்கவும்

முடியலை... அதனால அம்மாவும் நானும் பிரிஞ்சிட்டோம்."

"நீங்க கூட நினைக்கலாம்... நானும் தண்டுவும் மேக் எ குட பேர்... நாங்க ஒருத்தரை ஒருத்தர் ரொம்ப விரும்பறோம்... ஆனா எனக்கு ஏனோ கல்யாணத்துல நம்பிக்கை இல்லை."

"மே பி... எங்க அம்மானால கூட இருக்கலாம்... எங்க அப்பாவை அவ்வளவு லவ் பண்ணிட்டு எப்படி மாறினாங்க தெரியலை... அப்போ அந்தக் கல்யாணத்துக்கு அர்த்தமே இல்லை தானே."

"அப்படிச் சொல்ல முடியாது லிசா" என்றான் தண்டபாணி... "இறந்தவங்களையே நினைச்சு காலத்தை ஓட்ட முடியாது... அப்புறம் வாழற வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்கும்."

"உங்கப்பா இறந்ததையே நினைச்சு உங்கம்மா காலத்தை ஓட்டணும்னு நினைக்கறது தவறு... நாளைக்கு நானே இறந்துட்டா கூட நீ ஒரு வாழ்க்கையை மறுபடியும் அமைச்சுக்க தான நான் விரும்புவேன்" என்று அவன்

சொல்லிக்கூட முடிக்கவில்லை...

லிசா அவன் கன்னத்தில் விட்டாள் ஒரு அறை... "என்ன தைரியம் உனக்கு இப்படி பேச" என்று...

பொறி கலங்கியது தண்டபாணிக்கு... அரவிந்த் அதிர்ச்சியோடு பார்த்தான்.

"ஹேய் ஹனி இட் வாஸ் ஜஸ்ட் எ சேயிங்" என்றான் தண்டபாணி அவளைச் சமாதானப்படுத்தும் விதமாக...

"என்ன வார்த்தை அது உன் இஷ்டத்துக்கு சொல்லுவியா" என்றாள் கோபமாக...

அவளின் வார்த்தைகளே அவள் மிகவும் அப்செட் என்பது தண்டபாணிக்கும் அரவிந்திற்கும் காட்டிக் கொடுக்க...

அவளின் வார்த்தைகளைக் கொண்டே அவளை மடக்கினான்.

தண்டபாணி... "அப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ" என்றான். அரவிந்த் சொன்னதில் இருந்து அவனுக்கும் கல்யாணம் செய்துகொள்ள

வேண்டும் என்ற எண்ணமே வலுப்பெற்றது. அதனால் சமயம் கிடைத்தவுடனே அதை சொல்லிக் காட்டினான்.

“நீ இப்படி ப்ளாக்மெயில் பண்ணினா நம்ம பிரிய வேண்டி வரும் தண்டு...”

“பரவாயில்லை, எப்போ நீ என்னை விட்டு போவியோன்னு பயந்துட்டே இருக்கிறதுக்கு இப்போவே பிரிஞ்சிடலாம்.”

“நீ என்ன சொல்ற, நான் உன்னை விட்டு போவேன்னு சொல்றியா” என்றாள் ஆவேசமாக.

“போக மாட்டேன்னா ஏன் கல்யாணத்தை வேண்டாம்னு சொல்ற...” என்றான் தண்டபாணியும் பதிலுக்கு ஆவேசமாக.

இருவரும் அரவிந்த் இருப்பதையே கண்டு கொள்ளவில்லை. அரவிந்த் தான் அவர்கள் இருவரும் மிகவும் பெர்சனலாகப் பேசுகிறார்கள் என்றுணர்ந்து அந்த இடத்தை விட்டு அகன்றான். பேசி ஒரு முடிவுக்கு வரட்டும் என்று நினைத்தான்.

மேலும் மேலும் வழக்காடிக் கொண்டார்கள் லிசாவும், தண்டபாணியும்... வார்த்தைகள் தடித்தன.

11

காச் மூச் என்று சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. எதையும் சட்டை செய்யாமல் படியில் அமர்ந்து கொண்டான் அரவிந்த். ஆயாசமாக இருந்தது. தண்டபாணி தன்னுடைய வாழ்க்கையை சிக்கலாக்கிக் கொண்டது போலத் தோன்றியது. இந்த விஷயமெல்லாம் தனக்குத் தெரிந்தும் கீர்த்தியிடம் மறைப்பது... அது மிகவும் குற்றவுணர்ச்சியைக் கொடுத்தது.

சிறிது நேரம் கழித்து இவன் அருகில் வந்தமர்ந்தான் தண்டபாணி. அரவிந்த் என்ன என்பது போலத் திரும்பிப் பார்க்க... "கல்யாணத்தைப் பத்தி யோசிக்கிறேன்னு சொல்லியிருக்காடா" என்றான்.

அரவிந்த் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

"வாழ்க்கையை நிறைய

சிக்கலாக்கிக்காத, அவளை ஸ்மூத்தாவே சம்மதிக்க வை, சண்டை போடாதே" என்றான்.

"சரி" என்பது போல தலையாட்டினான்.

அவர்களின் சண்டையால் வீடு நிசப்தமாக இருந்தது.

லிசா மிகவம் சோர்வாகத் தெரிந்தாள்.

"ஆர் யூ ஆல்ரைட்" என்று அரவிந்த் கூட கேட்கச் செய்தான்.

"யெஸ். ஐ அம் ஓகே" என்றாள் லிசா.

அன்று காலையில் எழும்போதே வீடு ஏனோ இன்னும் அமைதியாக இருப்பதாகப் பட்டது அரவிந்திற்கு. ரூமை விட்டு வந்து பார்த்தாள்... ஹாலில் சோபாவில் லிசா உறங்குவது தெரிந்தது.

இவள் வெளியில் ஏன் படுத்துக் கொண்டிருக்கிறாள்... இன்னும் இவர்களுக்குள் எல்லாம் சரியாகவில்லையா என்று இருந்தது. அங்கேயே அமர்வதா, திரும்ப உள்ளே

போவதா என்று அறியாத அரவிந்த், கிச்சன் உள் நுழைந்து மூவருக்கும் காபி போட ஆரம்பித்தான்.

அவன் காபி போட்டு வரவும், தண்டபாணி எழுந்து வரவும் சரியாக இருந்தது. அவனிடம் அவனுக்கும் லிசாவிற்கும் கொடுத்துவிட்டு இவன் காபியை எடுத்துக் கொண்டு பால்கனிக்கு நகர்ந்தான்.

தண்டபாணி லிசாவை எழுப்பினான். "இட்ஸ் டைம் ஹனி, வேலைக்கு நேரமாச்சு" என்று அவளை எழுப்பினான்.

"நான் இன்னைக்குப் போகலை" என்றபடியே எழுந்தாள்.

"ஏன், என்னாச்சு" என்றான்.

"உனக்கும் இன்னைக்கு லீவ் போட முடியுமா" என்றாள் லிசா.

"ஏன், என்னாச்சு" என்றான் மறுபடியும் தண்டபாணி.

"நான் இன்னைக்கு ஹாஸ்பிடல் போகணும், தனியா போக கஷ்டமா இருக்கு... நீ கூட இருந்தா

பரவாயில்லை.”

“ஏன் உடம்பு சரியில்லையா” என்றுதான் பதட்டமாக... அமைதியாகவே அமர்ந்திருந்தாள் லிசா...

எழுந்து அவளருகில் அமர்ந்தவன், அவள் தோளைச் சுற்றி கைகளைப் போட்டு, அவளை அணைவாகப் பிடித்தபடி...

“என்ன ஹனி, என்னாச்சு, சொன்னாதானேடா தெரியும்” என்றான் கனிவாக...

அவனுள் புதைந்து கொண்டாள்... இருவரும் ஒருவர் அருகாமையை மற்றொருவர் விரும்பியபடி அணைப்பில் கட்டுண்டு அப்படியே அமர்ந்திருந்தனர்.

உள்ளே வர வந்த அரவிந்த் கூட அவர்களின் நிலைமையைப் பார்த்து அப்படியே திரும்பி பால்கனிக்கே போய் விட்டான்.

வெகுநேரம் லிசாவும், தண்டபாணியும் அப்படியே அமர்ந்திருக்க பின், “தண்டு எனக்கு பயமாயிருக்கு” என்றாள் லிசா.

“எதுக்கு” என்றான்.

“நீ என்னை விடமாட்டியே” என்றாள் லிசா.

“அதுக்கு தான் ஹனி கல்யாணம் பண்ணிக்கோ சொல்றேன். நானே நினைச்சா கூட அப்புறம் உன்னை விட முடியாது.”

“அது நான் யோசிக்கிறேன்” என்றவள்... “தண்டு நான்... நான்...” என்று தடுமாறினாள்.

“என்னம்மா, என்ன பண்ணுது, ஹாஸ்பிடல் வேற போகணுங்கற” என்றான் வாஞ்சையாக.

அவன் அணைத்த நிலையிலேயே முகம் தூக்கி... அவன் முகம் பார்த்தவள், “நான் ப்ரெக்னன்ட்டா இருக்கறனோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு” என்றாள் லிசா.

“என்ன” என்றான் ஆனந்த அதிர்ச்சியாக தண்டபாணி.

“இதையேன் இவ்வளவு மெதுவா சொல்ற.” அணைப்பை இறுக்கினான் தண்டபாணி.

“தெரியலை, என்னவோ பயமாயிருக்கு” என்றாள் லிசா...

“இதுல பயப்பட ஒண்ணுமேயில்லை ஹனி... ஆனா நாம சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கறது நல்லது.”

எதுவும் பேசாமல் மறுபடியும் அவனுள்ளே புதைந்து கொண்டாள் லிசா.

தண்டபாணி மிகுந்த உற்சாகத்தில் இருந்தான். ஆனால் அதே சமயம் திருமணம் செய்யாமல் தன் தாய், தந்தையை, தங்கையைப் பார்க்க முடியர்து என்று நினைத்தான். லிசாவையும் விட முடியாது. எப்படியாவது அவளை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்துவிட வேண்டும் என்ற நினைப்பு மிகவும் உறுதி பெற்றது.

சிறிது நேரம் கழித்து லிசா எழுந்து போக... அரவிந்திடம் வந்தவன் எதுவும் பேசாமல் அவனை அணைத்து தன் சந்தோஷத்தை வெளிப்படுத்த...

“என்னடா... கல்யாணத்துக்கு ஓகே சொல்லிட்டாளா லிசா” என... “இல்லை” என்று மறுத்துத்

தலையசைத்தவன்,

“இது வேற கண்டுபிடி” என்றான்.

“டேய் கொஞ்ச நாளாவே எனக்கு மூளை சரியா வேலை செய்யறது இல்லை. நீயே சொல்லுடா” என்றான் பரிதாபமாக...

“நான் அப்பாவாகப் போறேன்டா, இன்னும் கன்பர்ம் ஆகலை... இனிமே தான் பண்ணனும்” என்றான்.

“என்ன” என்றாள் அதிர்ச்சியாக... அரவிந்த்.

திருமணமாகாமல் குழந்தை... அவனால் செய்தியை ஜீரணிக்கவே முடியவில்லை.

அவன் மனதை அறிந்தவனாக தண்டபாணி, “சீக்கிரம் கல்யாணத்துக்கு சம்மதிச்சிடுவா, கவலைப்படாதே” என்றான்.

இருவரும் செக்கப்பிற்கு ஹாஸ்பிடல் கிளம்ப... தான் மட்டும் தனியாக உட்கார்ந்து என்ன செய்வோம் என்று தெரியாதவனாக அரவிந்தும் அவர்களுடன் கிளம்பினான். நேரப்

போகும் நிகழ்வுகளை அப்போது அவர்கள் மூவருக்குமே தெரியவில்லை.

ஹாஸ்பிடலில் டாக்டரை பார்க்க லிசாவும், தண்டபாணியும் காத்திருக்க... பக்கத்தில் அரவிந்தும் அமர்ந்திருந்த போதுதான் அந்த பயங்கரம் நிகழ்ந்தது.

யாரோ ஒருவன் துப்பாக்கியை எடுத்து கண்மண் தெரியாமல் எதிர்பட்டவர்களை எல்லாம் சுட்டான். சுட்டு விட்டு ஓட... காவலாளிகள் அவனை மடக்கிப் பிடித்தனர்.

அந்த இடமே மரண ஓலங்களில் அதிர்ந்தது. அப்படி ஓலமிட்டதில் தண்டபாணியும், லிசாவும் அடங்குவர். சட்டென்று அரவிந்த் குனிந்திருந்ததால், அவனுக்கு ஒன்றும் ஆகவில்லை.

அரக்கப் பரக்க எழுந்து பார்த்தால், லிசாவின் தோலில் காயம் இருந்தது. தண்டபாணியைப் பார்த்தால், அவன் நெஞ்சில் சரியாக இதயப் பகுதியில் குண்டு பாய்ந்திருந்தது. பேச்சு மூச்சுயில்லை... இறந்திருந்தான்... ஆம்... ஷண நேரத்தில் தண்டபாணி இறந்திருந்தான்.

அடி வயிற்றில் இருந்து அரவிந்த் கத்தினான். “டேய் தண்டபாணி எழுந்திருடா” என்று. அதற்குள் தண்டபாணியைப் பார்த்த லிசா மயங்கிச் சரிய ஆரம்பித்திருந்தாள்.

அவசரமாக அரவிந்த் அவளைப் பிடிக்கப் பிடிக்க, அவன் மேலேயே சரிந்தாள்.

அதற்குள் ஆட்கள் அவசர சிகிச்சைக்காக குழும, லிசாவை அவர்கள் வசம் ஒப்படைத்தவன்... மறுபடியும் தண்டபாணியை உலுக்க... அவன் தான் இற்நதிருந்தானே.

ஆண்மகன் என்பதையும் மீறி அரவிந்த் தண்டபாணியை அணைத்துக் கொண்டு கதற ஆரம்பித்தான்.

நான்கைந்து பேருக்கு குண்டடி பட்டிருந்தாலும், அந்த இடத்திலேயே இறந்தது தண்டபாணி ஒருவனே...

அரவிந்திற்கு ஒன்றுமே புரியவில்லை. அவனை பிடித்துக் கொண்டு கதறிக் கொண்டிருந்தவனிடம் இருந்து யாரோ தண்டபாணியை பிரித்து பல்ஸ் செக் செய்தனர்.

“ஹி இஸ் டெட்” என்றனர். அவனை அப்படியே அங்கேயே விட்டு லிசாவின் நிலைமையைப் பார்க்க ஓடினான்.

யாரைக் கேட்பது, எங்கே தேடுவது என்று தெரியவில்லை. ஒரே கூச்சலாக இருந்தது. பின்பு கேட்டு இருக்குமிடம் போக... அங்கே ஐ.சி.யூவில் இருந்தாள். வெளியே வந்த டாக்டரிடம் விவரம் கேட்க... அவர் குண்டு தோலை உரசிக் கொண்டுதான் சென்றிருக்கிறது.

“வேறு தோளில் பிரச்சனையில்லை. வெறும் காயம்தான். மயக்கமாக இருக்கிறாள்” என்றார்.

“டாக்டர், ஷி இஸ் பிரெக்னன்ட்” என்றார்.

அவர் உடனே ட்ரீட்மெண்ட் மருந்துகளை மாற்ற உள்ளே ஓடினார்.

மறுபடியும் அவன் தண்டபாணியிடம் வந்தபோது, அவனை தூக்கி ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து இருந்தனர். இங்கே அரவிந்த் வந்த பிறகு தண்டபாணி தன் அலுவலக நண்பர்கள் சிலரை அறிமுகப்படுத்தியிருந்தான்

தண்டபாணி.

தண்டபாணியின் செல் எடுத்து அவர்களை அழைத்தான். அதே மாதிரி லிசாவுடைய தாயார் நம்பரை தேடி அவரையும் அழைத்தான்.

துக்கப்பட்டு உட்காரவும் நேரமில்லை... அடுத்து என்ன செய்வது என்று யோசிக்க வேண்டி இருந்தது. துப்பாக்கி சூடு நடத்தியவன் அங்கே இருந்த மனநிலை சரியில்லாத ஒருவன். அவனை கைது செய்திருந்தனர்.

ஆனால் பிரயோஜனம்... போன உயர் திரும்ப வருமா... இனி தண்டபாணி இந்த உலகில் இல்லை. எல்லாவற்றையும் விட அவர்களே வீட்டிற்கு எப்படி தகவல் சொல்வது என்பது பெரிய விஷயமாக இருந்தது.

தன் தந்தையை அழைத்து விஷயத்தைச் சொல்லி அவர்கள் வீட்டிற்கு பக்குவமாக எடுத்துச் சொல்லச் சொன்னான்.

அதற்குள் தண்டபாணியின் லண்டன் நண்பர்கள் வந்திருக்க... அவர்கள் சூழ்நிலையை கையில்

எடுத்தனர்.

லிசாவின் அம்மாவும் வந்திருந்தார். அவர் லிசாவை பார்த்துக் கொள்ள... தனித்து விடப்பட்ட அரவிந்திற்கு பயமாக இருந்தது. அவனையும் மீறி அழுகை வந்தது.

முகத்தை மூடிக் கொண்டு அப்படியே அமர்ந்து விட்டான்.

தண்டபாணியின் பாடியை வாங்குவதில் நிறைய ப்ரொசீஜர்ஸ்... அவன் உடலை இந்தியாவிற்குக் கொண்டு போவதிலும் நிறைய ப்ரொசீஜர்ஸ் இருந்தது.

கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது அரவிந்திற்கு. லிசாவிற்கு அதற்குள் நினைப்பு வந்திருந்தது. "நான் தண்டுவை பார்க்கணும்" என்று லிசா வேறு பயங்கரமாக ஆர்ப்பாட்டம் செய்ய,

டாக்டரிடம் பெர்மிஷன் வாங்கி அவளை அவன் உடல் வைத்திருக்கும் இடத்திற்கு அழைத்துப் போயினர் அரவிந்தும், லிசாவின் அம்மாவும்.

அவனைப் பார்த்து லிசா கதறிய

கதறல் பார்த்தோர் கண்களில் எல்லாம் கண்ணீர் வரவழைத்தது. தண்டபாணியின் உடலைப் பார்த்து லிசா கதறிய கதறலைப் பார்த்து அவள் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு ஏதாவது ஆகி விடுமோ என்று அரவிந்த் பயந்து போனான்.

லிசாவின் அம்மாவிடம் மெதுவாக அவள் நிலைமையை எடுத்துச் சொல்ல, அவர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி. தன் மகள் ஒரு இந்திய வாலிபனோடு சேர்ந்து வாழ்கிறாள் என்று அவள் அன்னைக்குத் தெரியும்தான். ஆனால் மணம் புரியாமலேயே குழந்தை வரை எல்லாம் போவர் என்று எதிர்பார்க்கவில்லை.

என்ன இனி செய்வது. தன் பெண்ணின் வாழ்க்கை என்னவாகும் என்று அவரிலும் பதட்டம் ஏறிக் கொண்டது.

தண்டபாணியின் உடலை மற்ற நண்பர்கள் பார்த்துக் கொள்ள... அரவிந்த் லிசாவின் உடல் நிலையைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் காட்டினான். அவளுள் வளர்வது தண்டபாணியின் வாரிசு அல்லவா. இப்போது அவன்

உடலை பார்ப்பதைவிட லிசாவின் உள் வளரும் அவன் உயிரை பார்ப்பது முக்கியம் என்று தோன்றியது.

லிசாவின் அம்மாவும், அரவிந்தும் டாக்டரிடம் பேச... அவர், "அவளுள் வளரும் குழந்தைக்கு முழுதாக மூன்று மாதம் முடிந்துவிட்டது" என்றார்கள்.

"அந்த பையனே இறந்து விட்டான். இனி அவன் குழந்தையை வைத்து என்ன செய்வது, அதை அழித்து விடலாமா" என்று லிசாவின் அம்மா டாக்டரிடம் கேட்க...

அரவிந்திற்கு உயிர் வரை கொதித்தது. அவன் நண்பன் இறந்து இரண்டு மணி நேரமே ஆகியிருந்த நிலையில்... அதற்குள் அவன் குழந்தை அழிவதைப் பற்றி பேசுவதா... ஆத்திரமாக வந்தது.

ஆனால் டாக்டர் வேறு சொன்னார். மூன்று மாதம் முடிந்து விட்டது. அவள் கர்ப்பப்பை வேறு வீக்காக இருக்கிறது. அழிப்பது என்பது சாத்தியமல்ல என்று விட்டார்.

இப்போதுதான் அரவிந்திற்கு மூச்சு

வந்தது.

அப்போது பார்த்து கீர்த்தி போனில் அழைத்தாள்... எடுப்பதா வேண்டாமா என்று இருந்தது அரவிந்திற்கு... மிகுந்த யோசனைக்கிடையில் எடுத்தான்... எடுத்தவுடனேயே

“என்னங்க சொல்றாங்க... சும்மா பொய் சொன்னேன், விளையாடினேன்னு சொல்லிடுங்களேன். ப்ளீஸ் பொய் தானே சொன்னீங்க” என்றாள் அழுகுரலில் கீர்த்தி...

அவள் குரலைக் கேட்டதும் இன்னும் துக்கம் நெஞ்சை பந்தாக அடைத்தது. என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. “நம்மளை விட்டுட்டு அவன் போய்ட்டான் கீர்த்தி” என்றான் தழுதழுத்த குரலில்.

“இல்லை, நீங்க பொய் சொல்றீங்க, நான் நம்ப மாட்டேன்” என்று ஒரு சத்தம் மட்டும் கேட்டது. அனேகமாக போனை தூக்கி எறிந்திருப்பாள் என்று தோன்றியது.

அரவிந்த் கண்களில் கண்ணீர்

வழிந்தது. லண்டன் தமிழ் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்... தண்டபாணியின் உடலை இந்தியாவிற்கு அனுப்பும் பொறுப்பை ஏற்றனர்.

அரவிந்திற்கு என்ன செய்வது புரியவில்லை... தண்டபாணியின் உடலோடு இந்தியாவிற்கு போவதா... அப்படிப் போய் விட்டால் லிசா குழந்தையை என்ன செய்கிறாள் என்று தெரியாமல் போய்விடுமே... என்ன செய்வது என்று குழப்பமாக இருந்தது.

லிசாவிற்கு கையில் கட்டுப் போட்டு... அவளை அன்று மாலையே டிஸ்சார்ஜ் செய்து விட்டனர். அழுது அழுது பார்க்கவே பரிதாபமாக இருந்தாள்.

"நான் இன்னைக்கு அவனை ஹாஸ்பிடல் கூட்டிட்டு வரலைன்னா அவன் உயிரோட இருந்திருப்பான்" என்று வேறு கதறிக் கொண்டிருந்தாள்.

தண்டபாணியின் உடலை எல்லா ப்ரொஸீஜரும் முடித்து எடுத்துப் போக இரண்டு நாள் ஆகும் போல இருந்தது.

அங்கேயே ஹாஸ்பிடலிலேயே அவன் உடல் வைத்திருந்த இடத்திற்கு

வெளியேயே அரவிந்தும், லிசாவும் அமர்ந்திருந்தனர். லிசாவை, வீட்டிற்குப் போகச் சொல்லியும் அவள் கேட்கவில்லை. அவள் மறுத்து விட்டாள்.

அரவிந்திற்கும், அவள் அன்னைக்கும், லிசாவை கவனிப்பதே வேலையாக இருந்தது. சாப்பிட மறுத்தாள். சாப்பிட மறுத்தால் மறுபடியும் அட்மிட் செய்து ட்ரிப்ஸ் போட்டுவிடுவார்கள் என்று சொன்ன பிறகே சற்று உண்டாள்.

அங்கேயே உறங்கியும் உறங்காமலும் லிசாவும், அரவிந்தும் வெளியே அமர்ந்திருந்தனர். அவளின் அம்மா அப்போதுதான் சற்று வீடு வரை போய் வருகிறேன் என்று சென்றிருந்தார்.

இரவு நிசப்தமாக இருந்தது. காரிடரில் அரவிந்தும், லிசாவும் மட்டும் அமர்ந்திருந்தனர்.

“லிசா” என்றழைத்தான். அந்த இரவின் நிசப்தத்தைக் கிழித்து... “என்ன” என்பது போல் அவள் மெதுவாக திரும்பிப் பார்க்க...

“இது சமயமல்ல தான் இதைப்

பற்றி பேசுவதற்கு, ஆனா பேசியே ஆக வேண்டிய சூழ்நிலையில் இருக்கேன். இந்தக் குழந்தையைப் பற்றி என்ன நீ முடிவு பண்ணியிருக்க...”

அவனையே பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். பதில் எதுவும் பேசவில்லை. “உன்னால் இதை பெத்து வளர்க்க முடியும்னு தோணிச்சுன்னா, வெல் அண்ட் குட், அதை விட இதை என்கிட்ட குடுத்துட்டீன்னா இன்னும் நல்லது.”

“உங்கம்மா இதை அழிக்கணும்னு சொல்றாங்க. நாளைக்கே வேற யாராவது ஸ்பெஷலிஸ்ட் பார்த்து அதை செஞ்சிட்டா” என்றான்.

மிகவும் சென்சிடிவான கேள்வி இது. ஆனா லிசாவிற்கு கோபமோ ஆத்திரமோ வந்த மாதிரி தெரியவில்லை. வெறித்துப் பார்த்தாள்.

மெலிதாக அவள் தோளைப் பற்றி உலுக்கினான்... “பதில் சொல்லு லிசா...”

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வடிய ஆரம்பித்தது. மெதுவாக வாய் திறந்து, “நான் தப்பு பண்ணிட்டேன்.

நான் தண்டுவைக் கல்யாணம் பண்ணியிருக்கணும். இப்போ இந்த குழந்தைக்கு லீகலா அப்பான்னு யாரும் கிடையாது" என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

"நான் இப்படி ஆகும்னெல்லாம் யோசிக்கவேயில்லை. நான் தண்டபாணியைப் பரிய வேண்டி வரும்னு யோசிக்கவேயில்லை. எங்களுக்குக் கல்யாணம் நடந்தாலும் நடக்கா விட்டாலும் தண்டபாணியும் நானும் பிரிய மாட்டோம்னு தான் நினைச்சேன். இப்படி ஆகும்னு யோசிக்கவேயில்லை" என்று முகத்தை மூடிக் கொண்டு கதறினாள்.

அவளை தேற்றும் வகை தெரியாது அமர்ந்திருந்தான். அவனே தேற்றப்பட வேண்டிய நிலையில்தான் இருந்தான். இதில் அரவிந்த், அவன் எப்படி லிசாவைத் தேற்றுவான்.

அவள் அழுது ஓயட்டும் என்று விட்டுவிட்டான். லிசாவும் வெகு நேரம் அழுது கொண்டிருந்தாள். அதற்குள் அவள் அம்மா வந்துவிட்டார்கள்.

லிசாவிடம் பேசுவதை விட அவள்

அம்மாவிடம் பேசினால் என்ன என்று அரவிந்திற்கு தோன்ற... “நீங்க லிசா வயத்துல் வளர்ற பேபியை பத்தி கவலைப்பட வேண்டாம்... நீங்க அது பொறந்ததும் என்கிட்ட குடுத்துடுங்க... நான் குழந்தையை இந்தியாக்கு எடுத்துட்டுப் போறேன். என் குழந்தையாவே வளர்ப்பேன். என்ன சொல்றீங்க” என்றான்.

“நீ நிஜமா தான் சொல்றியா” என்றார் லிசாவின் அம்மா.

“நான் ஹன்ட்ரட் பெர்சன்ட் உண்மையைச் சொல்றேன். என் நண்பனோட வாரிசு அது. அதை என்கிட்ட கொடுத்துடுங்க, அதை அழிக்கிறேன்னு... லிசாவோட உயிருக்கு ரிஸ்க் எடுக்க வேண்டாம். என்ன சொல்றீங்க” என்றான் மறுபடியும்.

“இப்போவே எல்லாத்தையும் முடிவு பண்ண வேண்டாம். கொஞ்சம் டைம் கொடு” என்றார் லிசாவின் அம்மா.

“கொஞ்சம் டைம்ல, நீங்க குழந்தையை ஏதாவது பண்ணிட்டீங்கன்னா” என்றான்

சந்தேகத்தோடு...

“ஐ லவ் லிசா வெரி மச், அவ உடம்புக்கு ரிஸ்க் இருக்கிற எந்த வேலையும் நான் செய்ய மாட்டேன். அவளுக்கு இப்போ தான் ட்வென்டி டூ இயர்ஸ். இன்னும் அவ வாழவேண்டியது எவ்வளவோ இருக்கு. நான் அவளை விடமாட்டேன். டோன்ட் ஒர்ரி, இந்தக் குழந்தையை உங்ககிட்ட குடுக்க அவளைச் சம்மதிக்க வைக்கிறேன்.”

“ஐ நோ இண்டியன்ஸ் குழந்தையை நல்லா வளர்ப்பீங்க... அதனால நாங்க குழந்தையைப் பத்தி கவலைப்படத் தேவையில்லைன்னு தெரியும். நான் கண்ணால பார்த்திருக்கேன். லிசாவோட அப்பா அவளை எப்படி வளர்த்தாருன்னு முடிஞ்சதைப் பத்தி இனி பேசி ப்ரயோஜனமில்லை” என்றார் நல்ல தமிழில்.

அந்த நேரத்திலும் அரவிந்திற்குத் தோன்றியது இந்தப் பெண்மணி எப்படி இவ்வளவு நல்ல தமிழ் பேசுகிறார் என்று...

எல்லோரும் அவரவர்

யோசனையில் அப்படியே அமர்ந்திருந்தனர்.

12

தண்டபாணியின் உடலோடு சென்னை செல்வதா இல்லையா என்று அரவிந்திற்கு பெருங்குழப்பமாக இருந்தது. இங்கே லிசாவின் அம்மா, குழந்தையை எதுவும் செய்யமாட்டோம் என்று சொன்னாலும் நம்ப மனம் மறுத்தது. அதனால் உடலை மட்டும் அனுப்பிவிட்டு தன் விசா காலாவதி ஆகும் வரை அங்கேயே இருக்கலாமா என்று யோசித்துக் கொண்டு இருந்தான்.

தங்குவது பிரச்சனையில்லை, தண்டபாணியின் வீடு இருக்கிறது. இன்னும் ஆறு மாதத்திற்கு அங்கே அவன் தங்கிக்கொள்ளலாம் என்ற ஒப்பந்தமும் இருக்கிறது. அதனால் தங்குவது பெரிய பிரச்சனையாகாது என்ற பட்சத்தில் அவன் அங்கேயே இருப்பது என்று முடிவு செய்தான்.

தண்டபாணியின் வாரிசை எப்படியாவது தக்க வைத்துக் கொள்ள

வேண்டும் என்ற வெறியே அவனுள் உருவாகிக் கொண்டிருந்தது. அவர்களுள் இருந்த நட்பின் காலம் கொஞ்சம் என்றாலும் ஆழம் அதிகம். எப்படியாவது அவன் குழந்தையைக் காப்பாற்றி விட வேண்டும் என்ற எண்ணமே மிகுந்திருந்தது.

லிசாவை அவளின் அன்னை அதன் பிறகு தனியாக விடவில்லை. அவளோட இருந்தார். ஒரு வழியாக இரண்டு நாள் போராட்டங்களுக்குப் பிறகு தண்டபாணியின் உடலை இந்தியாவிற்கு அனுப்பினர். எவனோ ஒரு பைத்தியக்காரன் செய்த வேலை அநியாயமாக ஒரு உயிரை பலி வாங்கிவிட்டது.

“யார் மீது கோபப்படுவது... கடவுளைத் தவிர” என்றே அரவிந்திற்குத் தோன்றியது. பரவாயில்லை தன் குழந்தை ஒன்று இந்த உலகத்திற்கு வரப் போகிறது என்ற செய்தியோடயாவது அவன் உயிர் பிரிந்ததே என்றிருந்தது. மிகவும் சோர்வாக உணர்ந்தான். தனிமை அவனைத் தாக்கியது. ஒரு புறம் மனது ஊருக்கு செல் என்று கூறியது. இன்னொரு புறம் மனது

நீ சென்றவுடன் குழந்தைக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்று தோன்றியது. குழப்பமாக இருந்தது.

இந்தியாவில் இரண்டு நாட்களாக மகனின் உடலை எதிர்பார்த்துக் காத்திருக்க... நான்காவது நாள் அதிகாலையில் தான் உடல் வந்து சேர்ந்தது. அரவிந்த் தன் தந்தையிடம் சொல்லியிருந்தான் அவர்களுக்கு என்ன தேவையோ கூட இருந்து செய்யுமாறு.

அவ்வளவு பெரிய மகனைத் தூக்கிக் கொடுப்பது என்றால் சாதாரணமா என்ன? மிகவும் மனதொடிந்து இருந்தனர். தண்டபாணியின் பெற்றோரும் அவன் தங்கையும்,

அரவிந்தின் தந்தை முன் நிற்க... தண்டபாணியி;ன உறவினர்களே எல்லா காரியங்களையும் செய்தனர். ஒரே நாளில் மிகுந்த மூப்பாகிப் போனார் தண்டபாணியின் தந்தை ராஜேந்திரன்.

“எனக்கு அவன் கொள்ளி வைப்பது போய் நான் அவனுக்கு கொள்ளி வைப்பதா” என்று கதறினார். யாராலும் அவரைத் தேற்ற முடியவில்லை.

கீர்த்திதான் ஓரளவு சமாளித்து அன்னையையும் தந்தையையும் தேற்றிக் கொண்டிருந்தாள்.

மனதின் ஓரம் கீர்த்திக்கு சிறு கேள்வி எழுந்தது. எப்படி அரவிந்த் லண்டனிலேயே இருந்து கொண்டான். ஏன் அண்ணனின் உடலுடன் வரவில்லை. அவ்வளவுதானா அவன் நட்பு. நட்பை விட வெளிநாட்டு மோகம் அவனைப் பிடித்தாட்டுகிறதோ என்றிருந்தது.

“இறந்து போய்ட்டதா ஏன்பா நினைக்கறீங்க... அண்ணா ஊருலயே இருக்கறதா நினைச்சிக்கோங்கப்பா” என்று கீர்த்தி தன் பெற்றோர்களிடத்தில் சமாதானமாகக் கூறி... தனக்கும் சேர்த்துக் கூறிக் கொண்டாள். அரவிந்த் வராதது இன்னும் அவளுக்கு வருத்தமாக இருந்தது.

அவன் வராத வருத்தம் சிறிது சிறிதாகக் கோபமாக உருமாற ஆரம்பித்தது. ஆனால் அதை யார் மேலும் காட்ட முடியாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

அரவிந்திற்கு லிசாவைப் பற்றி கீர்த்தியின் வீட்டில் சொல்வதா

வேண்டாமா என்று குழப்பமாக இருந்தது. அவனுடைய வெளித் தோற்றம், மிகவும் நல்ல பையன். திடீரென்று அதை உடைத்து, தண்டபாணி ஒரு பெண்ணோடு தாலி கட்டாமல் குடும்பம் நடத்தினான் என்று சொன்னால் நம்புவார்களா.

அவன் உயிரோடு இருந்து சொன்னாலே நம்புவது கடினம். அவன் இறந்த பிறகு சொன்னால் நம்புவார்களா என்று இருந்தது. தண்டபாணியின் தந்தை...

நம்புவதும் நம்பாததும் இரண்டாம் பட்சம், அதை வெளியில் சொன்னால், தண்டபாணியின் குழந்தை தந்தையில்லாத குழந்தையாக வளர நேரிடும். எப்படியும் அவருக்குத் தெரிந்தால் அவருடைய குடும்பத்துக்குத் தெரியும். எப்படியும் தன்னுடைய குழந்தையாக தான் அதை வளர்த்தாலும்... ஒரு சமயம் இல்லை ஒரு சமயம் சொல்லிக் காட்டுவர். அது குழந்தையின் மனதில் தேவையில்லாத நினைவுகளைக் கொண்டு வரும்.

பிறப்பதற்கு முன்பிருந்தே இது

என் குழந்தை தான். என் குழந்தையாக தான் உலகில் இது ஜனிக்க வேண்டும். யாருக்கும் அது தண்டபாணியின் குழந்தை என்று தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்ற ஆரம்பித்தது.

குழந்தை ஒன்றே முழு மூச்சாக இருந்தது. தன்னுடைய தாய் தந்தை என்ன நினைப்பர், கீர்த்தி என்ன நினைப்பாள்... தனக்கு அவள் மனைவியாக வேண்டும். லிசா இதற்கு ஒத்துக் கொள்வாளா, எதுவும் ஞாபகத்திற்கு வரவில்லை. அவன் ஞாபகத்தில் இருந்ததெல்லாம் குழந்தை நல்லபடியாக பிறக்க வேண்டும். தன் குழந்தையாக வளர வேண்டும்.

அவன் காதல் அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. கீர்த்தியின் ஞாபகம் இருந்தாலும் எப்படியாவது அவளைச் சமாளித்துதான் ஆக வேண்டும் என்று நினைத்தானே தவிர அவளிடமும் அது தண்டபாணியின் குழந்தை என்று சொல்ல வேண்டும் என்று நினைக்கவில்லை.

லிசாவின் அம்மா அவளைத் தன்னோடு வந்து விடும் படி அழைக்க...

“நோ மம், அரவிந்த் எங்களை நம்பி லண்டன் வந்திருக்கான், அவனை அனுப்பிட்டுதான் நான் எதுவும் யோசிக்க முடியும்... திடீர்னு அம்போன்னு அவனை விட முடியாது” என்று ஒருமையிலேயே பேசினாள். தண்டபாணியின் நண்பன் என்ற உரிமை கொடுத்த தைரியம் அது.

அவள் மிகவும் மனநலம் குன்றி இருந்ததால் அவள் அன்னையும் அவள் போக்கிலேயே விட்டார்.

தண்டபாணி இறந்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது. சமையலே தெரியாத அரவிந்திற்கு சமையல் பொறுப்பு வந்தது. லிசா எதுவும் சமைப்பதும் இல்லை. சாப்பிடுவதும் இல்லை.

அரவிந்த் தான் இண்டர்நெட்டைப் பார்த்துப் பார்த்து ஏதோ ஒன்று சமைத்து அவளைச் சாப்பிட வற்புறுத்துவான். அவளை வற்புறுத்தி கடிந்து சாப்பிட வைப்பான்.

அவள் அம்மா இரண்டு நாளைக்கொருதரம் வந்து பார்த்து செல்வார். பத்து நாட்களுக்கு மேல்

இப்படியே கழிந்தது. வீட்டிலேயே அடைந்து கிடக்க விரும்பாமல் மீண்டும் வேலைக்குப் போகலாம் என்று இருக்கிறேன் என்று அரவிந்திடம் லிசா கூறினாள்.

“ரொம்ப நாள் ஆகிடிச்சு அர்வி, ஐ திங்க் ஐ நீட் டு கோ ஃபார் த ஜாப்” என்றாள் லிசா அரவிந்தை பார்த்து, தண்டபாணியைப் போல் அர்வி என்றே அழைத்தாள்.

“எப்போ இருந்து” என்றான் அரவிந்த்.

“மே பி ஃப்ரம் டுமாரோ” என்றாள்.

அவள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாள், தண்டபாணியின் ஞாபகங்கள் அவளை அலைகழிக்கும் என்று உணர்ந்த அரவிந்திற்கும் அவள் முடிவு சரி என்றே பட்டது.

அடுத்த நாள் லிசா வேலைக்குக் கிளம்ப... என்ன செய்வது என்று அறியாத அரவிந்தும், “நான் உன்னை விட வரட்டா” என்றான்.

“நீ எப்படி திரும்ப வருவ...”

“நான் வந்துடுவேன் எனக்கு வழி தெரியும்.”

இருவரும் கிளம்பினர். அவள் வேலை செய்வது, தமிழர் ஒருவர் நடத்தும் பெரிய டிபார்ட்மெண்டல் ஸ்டோரில். நான்கு மாடிகளைக் கொண்ட பெரிய ஸ்டோர். அதில் லிசா ஒரு இன்சார்ஜ் ஆக பணிபுரிந்தாள். அதன் ஓனர் லிசாவின் தந்தையின் நண்பர். லிசாவின் தந்தையின் உதவியால் இங்கிலாந்து வந்து செட்டில் ஆனார்.

அதனால் லிசாவின் மீது மிகுந்த பிரியம் வைத்திருப்பவர். அவள் எத்தனை நாட்கள் வேலைக்குப் போகாமல் இருந்தாலும் அவளுடைய சம்பளம் வந்துவிடும். அவளுக்கே அங்கே நிறைய சிறப்பு சலுகைகள் இருந்தன. இருந்தாலும் லிசா எதையும் அதிகம் உபயோகப்படுத்த மாட்டாள். மிகவும் கரெக்டாக இருப்பாள் அவள் வேலையில். அதைப் பார்த்தே அவளுக்கு நிறைய சிறப்பு சலுகைகள் கொடுத்திருந்தார் அந்த ஸ்டோரின் ஓனரான ராஜன்.

லிசாவைப் பார்த்ததும், “என்ன

லிசா அதுக்குள்ள வந்துட்ட, ரெஸ்ட் எடுத்துட்டு உடம்பு சரியானதும் வாம்மா."

"ஐ அம் ஓகே அங்கிள். ஐ கேன் வாக்."

"சரி உன் இஷ்டம்."

"அங்கிள் இது தண்டுவோட ப்ரண்ட் அர்வி, உங்க கிட்ட சொல்லியிருக்கேன் இல்லை."

"தெரியும்மா" என்றார். தண்டபாணியின் உடலைப் பார்க்க போன போது பார்த்திருந்தார்.

"இன்னும் விசா முடியலை அங்கிள். இன்னும் பைவ் மந்த்ஸ் இருக்கு. அதுவரைக்கும் என் வீட்லதான் கெஸ்ட்டா இருக்காங்க."

"ஓ, அப்படியாம்மா" என்றார்.

"ஓகே அர்வி, உனக்கு வழி தெரியுமில்ல, நீ போ."

"நான் அங்க போயி என்ன பண்ணப் போறேன். உங்களுக்கு இங்கே ஏதாவது ஹெல்ப் பண்ண முடியும்னா பண்ணவா சார்" என்றான்.

“இங்கே வேலைக்கு கம்மியில்லை அரவிந்த். ஆனா நீங்க இங்க என்ன வேலை பண்ண முடியும்.”

“எதுவேணா செய்வேன் சார். எங்களுக்கு ஊர்ல அங்க பர்னிச்சர் ஷோரூம் தான். ஸோ அது ரிலேட்டடா ஏதாவது வேலை இருந்தா குடுங்க.”

சற்று யோசித்தவர், லிசாவின் முகத்தைப் பார்க்க, நம்பி கொடுக்கலாம் என்றே அது இருக்க... “சரி, நான் வேலை கொடுக்கச் சொல்றேன்” என்று அந்த ஃபர்னிச்சர் இருந்த செக்ஷனுக்கு அவனை அழைத்துச் சென்று... சிறிது நாட்களுக்கு மட்டும் இருப்பான் என்று சொல்லி வேலை கொடுத்தார்.

பிறகு நாட்கள் வேகமாக ஓடின... காலையில் இருவரும் சேர்ந்தே வேலைக்கு வந்தனர். மாலையில் இருவரும் சேர்ந்தே வீடு திரும்பினர்.

லிசா தண்டபாணியின் குழந்தையை சுமப்பதினால், அரவிந்த் அவளை நன்றாகப் பார்த்துக் கொண்டான். இந்தப் பெண்ணை ஏன் இவன் இந்தத் தாங்கு தாங்குகிறான் என்று

மற்றவர்கள் பார்த்துப் பொறாமைப்படும் அளவிற்கு அவளைத் தாங்கினான்.

மாதங்கள் உருண்டோடின... இன்னும் ஒரு மாதமே இருந்தது அரவிந்த் இந்தியா திரும்புவதற்கு. எப்படி குழந்தையை கையகப்படுத்துவது. ஒருவேளை லிசாவே, நானே வளர்க்கிறேன் என்று சொல்வாளா, அப்படிச் சொன்னால் விட்டு தானே ஆக வேண்டும்... அவள் தானே அன்னை... அவளே வளர்க்கட்டும் என்று விட்டுவிட்டு இந்தியா திரும்பிவிடவா என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதுதான் ஒரு நாள் ஹரிஷ் வந்தான்.

ஹரிஸ், அந்த டிபார்ட்மெண்டல் ஸ்டோரின் உரிமையாளர் ராஜனின் மகன். அரவிந்த் வந்த இந்த நான்கு மாதங்களில் ஒரு நாள் கூட அவனை ஸ்டோரில் பார்த்ததில்லை.

வந்தவன் நேரே வந்தது லிசாவிடம்தான்.

“ஹாய் பேபி இது என்ன கோலம்” என்றான்.

லிசா எதுவும் பேசாமல் அவள்

வேலையைச் செய்து கொண்டிருந்தாள்.

“நீயே ஒரு பேபி, உனக்கொரு பேபியா.”

அவன்புறம் திரும்பக்கூட இல்லை லிசா...

“அப்படி என்ன பேபி என்கிட்ட இல்லாதது அவன் கிட்ட இருக்குன்னு போன... இப்ப பாரு அவன் இந்த உலகத்தை விட்டே போயிட்டான்.”

இவ்வளவு நேரமாக அவன் புறம் திரும்பிக்கூட பார்க்காமல் இருந்த லிசா, இப்போது அவன் புறம் திரும்பி முறைத்தாள்.

“போய்டு ஹரிஷ். நீ தண்டுவ பத்தி ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது போய்டு” என்றாள் கோபமாக...

“அப்படிதான் பேசுவேன். நீ ஏன் என்னை வேண்டாம்னு சொல்லிட்டு அவன் பின்னாடி போன. அவன் இறந்ததுக்கு அப்புறமும் அவன் குழந்தையை சுமந்துட்டு இருக்க... அப்படி அவன் என்ன ஸ்பெஷல்.”

லிசா பதில் பேசாமல், அரவிந்த்

இருந்த இடத்திற்கு வந்து... “நாம போகலாம் அர்வி. இன்னைக்கு நாம வேலை பார்த்தது போதும் வா. சொல்லிட்டுக் கிளம்பு” என்றாள்.

அதற்குள் அந்த இடத்திற்கும் வந்திருந்தான் ஹரிஷ். “இது யாரு புதுசா. நீ அந்த தண்டபாணியை விட்டு யார் பக்கமும் திரும்ப மாட்டியே இவன் யாரு” என்றான் அரவிந்தையே பார்த்தபடி.

அவர்கள் பேசிக் கொள்வது தமிழில் என்பதால் அருகில் இருந்தவர்களுக்குப் புரியவில்லை.

பதில் சொல்லும்வரை விட மாட்டான் என்றுணர்ந்த லிசா, “அரவிந்த் இது ஹரிஷ், ராஜன் சாரோட பையன்.”

“ஹரிஸ் இது அரவிந்த், தண்டபாணியோட ப்ரெண்ட். இப்போ என்னோட கெஸ்ட்” என்றான்.

“ஓ தண்டபாணியோட ப்ரெண்டா, ஹலோ அரவிந்த் நான் லிசாவோட முன்னால் ப்ரெண்ட்” என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான் ஹரிஷ்.

அரவிந்த் பதிலுக்கு பேசும் முன்பே,

“நீ வா அரவிந்த்” என்று லிசா அவனைக் கையைப் பிடித்து இழுத்துப் போனாள். சிறிது தூரம் வந்ததும் தான் அவன் கையை விட்டவள், “குடிகாரப் பையன், விட்டா பேசிட்டே போவான்” என்றாள்.

“உங்களோட முன்னாள் ப்ரெண்டா அவன்.”

“இப்போ கூட அவன் என் ப்ரெண்ட் தான். சின்ன வயசுல இருந்தே நானும் அவனும் ப்ரெண்ட்ஸ். தண்டு என் வாழ்க்கைல வந்ததுக்குப் பிறகு தான் நாங்க பிரிஞ்சுட்டோம்.”

“ஐ வாஸ் மேட்லி இன் லவ் வித் தண்டு. அது இவனுக்குப் பிடிக்கலை. அதனால என்னை தண்டுவை விட்டுடச் சொல்லி ரொம்ப ஃபோர்ஸ் பண்ணினான். நான் போடான்னு அவனை விட்டுட்டேன். அப்போ இருந்து என்னைப் பார்க்கும்போது எல்லாம் சண்டை போடுவான். அது குடிச்சிருந்தா இன்னும் அதிகமா பேசுவான். நான் முடிஞ்சவரை அவனைத் தவிர்த்திடுவேன். இப்போ ஹையர் ஸ்டடீஸ்க்காக நெதர்லாண்ட் போயிருந்தான். நேத்துதான் வந்தான்.

அங்கிள் சொன்னார்” என்றாள்.

“தண்டபாணியை கூட யாருக்காவது பிடிக்காமப் போகுமா என்ன? இவனுக்கு மட்டும் ஏன் பிடிக்கலை” என்று அரவிந்த் கேட்க...

“ஏன்னா, அவனுக்கு என்னை ரொம்பப் பிடிக்கும்” என்றாள் லிசா... அரவிந்திற்குப் புரிந்தது.

இவ்வளவு அழகான லிசாவை, ஒருவேளை சின்ன வயதில் இருந்து ஹரிஷ் விரும்பியிருந்தால், திடீரென்று ஒருவனுக்கு தூக்கிக் கொடுக்க முடிந்திருக்காது என்று அரவிந்திற்கு புரிந்தது. ஹரிஷின் நிலை ஓரளவு அரவிந்திற்கு நன்கு புரிந்தது. ஏன் இவர்கள் இருவரும் புது வாழ்வு தொடங்கக் கூடாது என்று அரவிந்திற்கு தோன்றியது. குழந்தையைத் தனக்குக் கொடுத்துவிட்டால், அப்புறம் லிசாவின் வாழ்க்கையில் தடை என்ன இருக்கிறது என்றே அரவிந்திற்குப் பட்டது.

இதைப் பற்றி லிசாவிற்கு தெரியாமல் ஹரிஷிடம் பேச வேண்டும் என்று அரவிந்த் நினைத்துக் கொண்டான்.

என்ன இருந்தாலும் இங்கிலாந்து பெண் என்பதால் லிசாவை மனம் நம்ப மறுத்தது. கீர்த்தியின் ஞாபகம் அடிக்கடி வந்தாலும் அவளை அழைத்துப் பேசத் தோன்றவில்லை. குழந்தையை கையகப்படுத்தும் வரை வேறு எந்த நினைவும் மனதில் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

அங்கே இந்தியாவில் கீர்த்தியின் நிலையோ சொல்லவே வேண்டாம், தண்டபாணி இறந்தது ஒரு புறம், தன் தாய் தந்தையையும் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஒருபுறம், அரவிந்தின் மேல் உதித்த காதல் ஒருபுறம்.

என்ன வேலை இருந்தாலும் ஒரு ஆறுதல் வார்த்தை கூட சொல்ல முடியாமல் போனதா என்று அரவிந்தை நினைத்து கீர்த்திக்கு வேதனையாக இருந்தது. அரவிந்த் லண்டன் போவதற்கு முன் அவளிடம் நடந்து கொண்ட நினைவுகள் சொல்லொணாத் துயரத்தைக் கொடுத்தது. பலமுறை, தாமாக அவனை அழைத்துப் பேசுவோமா என்று நினைத்தாள். ஆனால் இப்படிப்பட்ட சூழலில் கூட தன்னை அழைத்து ஆறுதல்

வார்த்தைகள் சொல்லாதவனிடத்தில் தான் பேசுவதா என்று விட்டு விட்டான்.

அதுவும் அவர்களிடத்திலேயே வேலை செய்வதால் அவன் ஞாபகங்கள் அதிகம். தண்டபாணி இறந்த சமயத்தில், அரவிந்தின் தந்தை நிறைய உதவிகள் செய்தார். அவர்கள் உறவினர்கள் எடுத்துக்கட்டி செய்தாலும், அரவிந்தின் தந்தையும் யோசியாமல் எல்லா செலவையும் செய்தார்.

யார் இதற்கெல்லாம் செலவு செய்கிறார்கள் என்று யோசிக்க முடியாத சூழலில் கீர்த்தியின் பெற்றோரும், கீர்த்தியும் இருந்தனர். அவர்தான் எல்லா செலவுகளையும் செய்தார்.

பின்னர் கொஞ்சம் தெளிந்த பிறகு அதனை உணர்ந்து கீர்த்தி அவருக்கு பணம் திரும்ப கொடுக்க முற்பட வாங்க மறுத்தார்.

கீர்த்தியின் தந்தையே நேரே வந்து, “இந்தச் செலவு என் பையனுக்கு நான் செய்ததாதான் சார் இருக்கணும்.” என்று சொல்லிய பிறகே வாங்கிக் கொண்டார் சிதம்பரம்.

கீர்த்தியை அரவிந்த் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொன்ன பிறகு, கீர்த்தி மேல் சிதம்பரத்திற்கு ஒரு தனி பாசமே ஏற்பட்டிருந்தது.

லண்டனில் அரவிந்த், அடுத்த நாள் ஹரிஷிடம் தானாகவே போய் பேச்சுக் கொடுத்தான். ஹரிஷ் முதலில் அவனிடம் பேச ஆர்வம் காட்டவில்லை. ஆனால் லிசாவை பற்றிய பல தகவல்கள் அவன் பேச்சில் அடங்கியிருந்ததால் அவனும் பதிலுக்குப் பேச்சு கொடுத்தான்.

“லிசாவும் நீங்களும் ரொம்ப ப்ரெண்ட்ஸாமே ஹரிஷ் லிசா சொன்னா.”

“அவ என்னைப் பத்திகூடப் பேசறாளா.”

“பேசறாளாவா, நேத்து இங்க உங்களை இங்கே பார்த்த பிறகே உங்களைப் பத்தி தான் நிறைய பேசினா.”

“அப்படியா” என்று நம்பாமல் பார்த்தான் ஹரிஷ்.

அவனின் நம்பாத பார்வையை உணர்ந்த அரவிந்தும், “என்னை நம்பலையா நீங்க... நிஜமாதாங்க

சொல்றேன்.”

சிறிது ஸ்நேகப் பார்வை ஹரிஷிடம் இருந்து வெளிப்பட்டது.

“என்ன சொன்னா என்னைப் பத்தி.”

“இன்னும் நீங்க அவங்க நண்பன்னு சொன்னாங்க.”

“நிஜமாவா.”

“நிஜாதாங்க, நீங்க மட்டும் தண்டபாணியை திட்டுறதை விட்டுட்டு வேற பேசுங்க... அவ உங்ககிட்ட நல்லா பேசுவா, வேணா ட்ரை பண்ணிப் பாருங்க” என்றாள்.

உடனேயே லிசா இருக்கும் இடத்திற்கு சென்ற ஹரிஷ், அவளிடம் சாதாரணமாகப் பேச ஆரம்பித்தான்.

“எப்படி இருக்க லிசா, நேத்து கொஞ்சம் கண்ட்ரோல் இல்லாம உளறிட்டேன், ஹவ் ஆர் யூ.”

தண்டபாணியுடன் லிசா பழக ஆரம்பித்ததில் இருந்து, இப்படி சாதாரணமாக ஹரிஷ் லிசாவுடன்

பேசியதேயில்லை. அவனையே கண் எடுக்காமல் அதிசயமாகப் பார்த்தாள் லிசா.

ஹரிஷ{ம் அவள் பார்க்கட்டும் என்று அவளையே பார்த்தவாறு நின்றிருந்தான்.

ஹரிஷ் அவன் இயல்புக்கு மாறாக தாடி வைத்திருந்தான். சற்று இளைத்திருந்தான். எப்போதும் துறுதுறுவென்று இருக்கும் அவன் கண்கள், இப்போது அவளையே ஏக்கத்தோடு பார்த்திருந்தது.

“நான் நல்லா இருக்கேன் ஹரிஷ், நீ ஏன் டல்லா இருக்க” என்ற லிசாவின் பதில் கேள்விக்கு.

“உன்னாலதான்னு உனக்குத் தெரியாதா” என்றான் பளிச்சென்று.

“நீ இப்படி பேசறதால தான் நான் உன்னோட பேசறதே இல்லை” என்று லிசா திரும்பி போகப் போக... அவள் கையைப் பற்றி நிறுத்தியவன்...

“நில்லு லிசா இனிமே நான் இப்படிப் பேச மாட்டேன். உடனே

போகாத... உன் உடம்பு எப்படியிருக்கு... இப்போ எத்தனை மந்த், டெலிவரி எப்ப சொல்லி இருக்காங்க" என்று சகஜமாகப் பேச...

குழந்தையைப் பற்றிக் கேட்டவுடன், அவளும் நின்று நிதானமாகப் பதிலளித்தாள். "இப்போ எய்ட்த் மந்த்... நெக்ஸ்ட் மந்த் என்ட்ல ஆகும்னு எக்ஸ்பெக்ட் பண்றாங்க."

குழந்தையைப் பற்றி பேசும்போது ஓர் ஆர்வமெல்லாம், லிசாவிடம் இல்லை... மாறாக ஒரு அமைதிதான் இருந்தது.

தண்டபாணியைப் பற்றி எதுவும் ஹரிஷ் பேசாததாலேயே அவனிடம் பேச்சை வளர்த்தினாள் லிசா... "உன் படிப்பெல்லாம் முடிஞ்சுதா ஹரிஷ்."

"முடிஞ்சுது. ஆனா என்ன பிரயோஜனம் திரும்ப வந்து பார்த்தா நீ இப்படி இருக்க" என்றான் அவளின் நிலையைச் சுட்டிக்காட்டி... இந்த முறை கோபத்தை அடக்க முடியாமல், லிசா அந்த இடத்தை விட்டு வேகமாக போய்விட்டாள்.

சிறிது நேரம் கழித்து அரவிந்த் இருக்கும் இடத்திற்கு வந்தான் ஹரிஷ்... “என்ன பேசினீங்களா” என்றான் அரவிந்த் ஆர்வமாக...

“ஹேய் யூ, இந்த ங்களா எல்லா விட்டுடு, கால் மீ ஹரிஷ்.”

“ஓ.கே. என்ன ஆச்சு, மறுபடியும் ப்ரெண்ட்ஸ் ஆகிட்டீங்களா...”

“இல்லை, நான்தான் கொஞ்சம் தேவையில்லாதது எல்லாம் பேசிட்டேன், மறுபடியும் கோபிச்சிட்டுப் போயிட்டா.”

“நான் சொல்லிதானே அனுப்பினேன்.”

“எனக்கே தெரியும்தானே. இருந்தாலும் அவளைப் பார்க்கும்போது, கண்ட்ரோல் பண்ணாம பேசிடறேன்.”

“எனக்கும் அவளுக்கும் ஆறு வயசு வித்தியாசம். அவ பொறந்ததுல இருந்து எனக்கு அவளைத் தெரியும். அவளும் என்னோட ரொம்ப க்ளோஸ்தான். எல்லாம் இந்த தண்டபாணியைப் பார்க்கிற வரைக்கும் தான். எப்போ அவனைப் பார்த்தாளோ, அவன் மேல

பைத்தியமா சுத்தினா, அவனோட கல்யாணம் பண்ணிக்காமயே வாழ்ந்தா... இப்போ இந்த நிலைமையில் நிக்கறா. அவளே ஒரு பேபிதான். அவளுக்கு ஒரு பேபியா" என்றான் வருத்தத்தோடு.

"தண்டபாணி இறந்ததுனால அவ இப்படியே இருக்கணும்னு எந்த அவசியமும் இல்லையே... நீங்க நினைச்சா அவளுக்கு வாழ்க்கை குடுக்கலாமே" என்றான் அரவிந்த்.

"நான் எங்க அவளுக்கு வாழ்க்கை குடுக்கறது. அவ தான் எனக்கு வாழ்க்கை குடுக்கணும்" என்றான் உணர்ச்சி வசப்பட்டு ஹரிஷ். "ஐ லவ் ஹர் லாட்" என்றான்.

"டோன்ட் வொர்ரி ப்ரோ, எவ்ரிதிங்க் வில் பி ஃபைன்" என்றான் அரவிந்த்... அவனை தேற்றும் விதமாக...

13

தண்டபாணி இல்லாத தனிமையில் அரவிந்திற்கு ஹரிஷின் நட்பு, ஒரு சிறு மருந்தாய் அமைந்தது. ஹரிஷ{ம் நன்றாகப் பழகினான் தான். ஆனால்

அதில் நிறைய அவனுடைய பேச்சுகள் லிசாவையே குறிக்கும். இந்த அவனுடைய செயல்களே ஹரிஷ் லிசா மீது கொண்ட காதலை உணர்த்தின.

அன்றிரவே லிசாவின் அன்னையுடன் பேசினான். குழந்தையைப் பற்றி... குழந்தை பிறக்கும் முன்பே தன் விசா பீரியட் முடிந்துவிடும். அதனால் தான் இந்தியா செல்ல வேண்டி இருப்பதால், குழந்தையை தான் எப்படி எடுத்துச் செல்வது, பிறகு திரும்ப வரவேண்டுமா, வந்தாலும் இந்த நாட்டு சட்ட திட்டங்கள் குழந்தையை எடுத்துச் செல்ல அனுமதிக்குமா... அதனால் லிசாவை தான் ஏன் இந்தியா அழைத்துச் செல்லக் கூடாது... குழந்தை பிறந்ததும் தான் லிசாவை திரும்ப லண்டன் அனுப்பி விடுகிறேன் என்றான்.

ஓரிரண்டு முறை அரவிந்த் லிசாவிடம் குழந்தையை தன்னிடம் கொடுத்து விடுமாறு பேசினான் தான். ஆனால் தண்டபாணி இறந்த துக்கத்தில் இருந்ததால் லிசா அந்தப் பேச்சை அப்போது பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

இப்போது அரவிந்த் அவள் அம்மாவிடம் பேசிக் கொண்டிருப்பது தெளிவாக லிசாவிற்குக் கேட்டது. இது எப்படி சாத்தியம் என்று புரியவில்லை. தண்டபாணியின் மேல் அவ்வளவு நட்பா. என் குழந்தையை நான் ஏன் கொடுக்க வேண்டும். முதலில் நான் கொடுப்பேன் என்று எப்படி இவன் நம்புகிறான் என்று புரியவில்லை லிசாவிற்கு.

அவன் உள்ளே வந்ததுமே லிசா ஆரம்பித்தாள்... "என்ன அர்வி பண்ணிட்டு இருக்க நீ... நான் குழந்தையை வளர்த்துப்பேன். உன்கிட்ட குடுக்கமாட்டேன்."

"ஏன் குடுக்கமாட்ட... இந்த குழந்தையை, நான்... நான் நல்லா வளர்ப்பேன். அதில் உனக்கு சந்தேகமே வேண்டாம்."

"அம்மா நான் இருக்கேன் அர்வி... நான் வளர்த்துப்பேன்."

"நீ உனக்கொரு வாழ்க்கையை அமைச்சுக்கோ லிசா, அதுக்கு இந்தக் குழந்தை ஒரு தடையா இருக்க வேண்டாம்."

“இப்பத்திக்கு எனக்கு எந்த எண்ணமும் கிடையாது அர்வி, காலப் போக்குல எனக்கொரு வாழ்க்கை அமைஞ்சாலும் அமையலாம். ஆனா அதுக்குக் குழந்தை எப்படி தடையா இருக்கும்.”

“உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவனுக்கு இந்தக் குழந்தையைப் பிடிக்காமல் கூட போகலாம்.”

“நான் தண்டபாணியையே கல்யாணம் பண்ணிக்கலை இன்னும் வேற யாரை பண்ணிப்பேன். என் குழந்தையை நான் பார்த்துக்கறேன்.”

“சும்மா அதையே பேசாதே லிசா. தண்டபாணியோட அப்பா அம்மா நினைச்சுப்பாரு, தண்டபாணி இஸ் நோ மோர். அவங்களுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு வேண்டாமா... அவங்க குடும்பத்துக்கு ஒரு வாரிசு வேண்டாமா. நீ நினைச்சா ஒரு குழந்தையைப் பெத்துக்கலாம். யூ அர் யங். ஆனா அவங்க தண்டபாணியை இழந்துட்டு நிக்கறாங்க. அவங்களுக்கு இந்தக் குழந்தை அவசியம்.”

“நீ இப்போ இந்தக் குழந்தையை அவங்கிட்ட கொண்டுபோய் சேர்க்கப் போறியா.”

“உடனே கிடையாது... ஆனா காலப் போக்கில் சேர்ப்பேன். இப்போ அவங்க பையனோட குழந்தைன்னு சொன்னா... சந்தேகமாதான் பார்ப்பாங்க. ஏன்னா கண்ணால பார்த்த என்னாலயே, கல்யாணம் பண்ணாம தண்டபாணி, ஒரு பெண்ணோட குடும்பம் நடத்துவான். அவளை கர்ப்பமாக்குவான்னு ஜீரணிக்க முடியலை... இதுல அவங்க அப்பா அம்மா தன் பையனைப் பற்றி இப்படி ஒரு குற்றச்சாட்டை நம்பாம கூட போகலாம்.”

“என்னோட தண்டபாணி வாழ்ந்த வாழ்க்கை ஒரு குற்றச்சாட்டா.”

“கல்யாணம் பண்ணாம வாழற வாழ்க்கை இந்தியாவில மிகப்பெரிய குற்றம்தான். உனக்கு அது எப்படிப்பட்ட விஷயம்ன்னு தெரியலை. ஆனா இதை நான் வெளில சொன்னா, இறந்த பிறகும் தண்டபாணிக்கு ஒரு கெட்ட பேரை கொடுக்கும். இந்தக் குழந்தையை மெதுவாதான் அவன் குடும்பத்தோட

சேர்க்க முடியும்.”

“அவன் உயிரோட இருந்தா பிரச்சனையின் தீவிரமே வேற... அவன் உன்னை கல்யாணம் பண்ணிட்டுப் போய் நின்னா... எல்லாமே அடிபட்டுப் போகும். இப்போ தான் அவன் உயிரோட இல்லையே.”

“அதுவுமில்லாம இது ஒரு அப்பா பேர் தெரியாத குழந்தையா வளரக்கூடாது. என் குழந்தையா நான் இதை வளர்ப்பேன்” என்றான் குரலில் மிகவும் தீவிரத்தோடு.

பிறகு அவனே முயன்று குரலை மாற்றி... “புரிஞ்சுக்கோ லிசா இந்த குழந்தையோட உன் வாழ்க்கை முடிஞ்சிடக் கூடாது உன்னைச் சுற்றி உன்னை விரும்புறவங்க இருக்காங்க... ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக்கோ... என்னைக் கேட்டா கல்யாணம் பண்ணி வாழ்றதுதான் செக்யூர்டு ஃலைப். தண்டபாணியோட ஆத்மா கூட கட்டாயம் நீ ஒரு கல்யாணம் பண்ணி வாழ்றதைதான் விரும்பும். அவன் பேரைச் சொல்லி நீ தனியா இருந்தன்னா அவன் ஆத்மாகூட

சாந்தியடையாது.”

“இந்தியா ஒரு புனித பூமின்னு தான் சொல்வாங்க... வா இந்தியா வா, வந்து இந்த குழந்தையைப் பெத்துக் கொடுத்துட்டு வந்துடு, இல்ல இங்கேயே பெத்துட்டாளும், லீகலா இந்தக் குழந்தையை எனக்கு தத்துக் குடுத்துடு ப்ளீஸ் லிசா” என்று வாழ்க்கையில் அவன் செய்யாத விஷயமான கெஞ்சலை அவன் பேச்சில் செய்தான்.

“இது தண்டபாணியோட வாரிசு அவங்க குடும்பத்துக்கு கட்டாயம் சேரணும்” என்று மீண்டும் வலியுறுத்தினான். அவள் முகம் யோசனையில் ஆழ்ந்தது... பேசிப் பேசிப் பேசிப்... அவளை கரைக்க ஆரம்பித்தான்.

“தண்டபாணியோட அப்பா அம்மாவை நினைச்சுப் பாரு” என்று அவனின் பெற்றோர்களை முன்னிருத்தியே பேசினான்.

“அப்பா இல்லாத குழந்தையா தண்டபாணியோட குழந்தை வளர வேண்டாம்” என்று பேசிப் பேசி அவனை கரைக்கப் பார்த்தவன், பின்பு லிசாவின்

அம்மாவிடத்திலும் பேசச் சொல்ல... அவரும் பேசினார்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பது போல லிசாவின் அம்மாவும், அரவிந்தும் லிசாவிடம் மாற்றி மாற்றி குழந்தையைப் பற்றிப் பேசினர்.

“ஏற்கனவே தண்டபாணியை இழந்து நிற்கற அவங்கப்பா – அம்மாவுக்கு இந்தக் குழந்தை பெரிய ஆறுதலையும், சந்தோஷத்தையும் கொடுக்கும்” என்று மாற்றி மாற்றிப் பேசினான்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. லிசாவை ஸ்டோர் வரை கொண்டு வந்து விட்டு, கூட்டிச் செல்லும் பொறுப்பை ஹரிஷ் எடுத்துக் கொண்டான். அவனுக்கு பழக சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்ற நினைத்த அரவிந்தும், ஏதோ ஒரு காரணம் சொல்லி, அவள் போன பிறகே ஸ்டோர் போனான். அவள் கிளம்பிய பிறகே அவன் கிளம்பினான்.

ஹரிஷ{ம் ஓரளவு லிசாவுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்திருந்தான். முயன்று தண்டபாணியைப் பற்றி பேசாதிருந்ததால் லிசாவும் அவனோடு

சுமுகமாகப் பழகினாள். குழந்தை ஒன்று அவள் வயிற்றில் இல்லாதிருந்தால் எல்லாம் முன்பு போலவே தோன்றும். லிசா ஓரளவு தண்டபாணியின் இழப்பில் இருந்து வெளியே வந்திருந்தாள்.

அரவிந்த் அடுத்த வாரம் ஊருக்குப் போக வேண்டும் என்ற நிலையில் மீண்டும் லிசாவுடன் பேசினான்.

“நீ இந்தியா வர்றியா லிசா” என்று...

“இல்லை நான் வரலை.”

“அப்போ இந்த குழந்தை, நான் தண்டபாணியோட குடும்பத்தோட இதைச் சேர்க்கணும். இது அவங்க குடும்ப வாரிசு. இனி நினைச்சா கூட அவங்களுக்கு வாரிசு வராது. எங்ககிட்ட குடுத்துடுறியா.”

“நீ இந்தியா போயிட்டு டெலிவரி அப்போ வா... அப்போ பேசலாம்” என்றாள்.

அரவிந்திற்கு மலைப்பாக இருந்தது. ஒரு தடைவ அவனை லண்டன் அனுப்புவதற்குள்ளேயே அவன் தந்தை அவனை ஒரு வழி செய்து விட்டார்.

மறுபடியும் எப்படிக் கேட்பது என்று யோசனையாக இருந்தது. எதுவாகினும் செய்து தான் ஆகவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டு இந்தியா கிளம்ப ஆயத்தமானான்.

கிளம்புவதற்கு முன் ஹரிஷிடம் பேசினான். "எப்படியாவது தண்டபாணியோட குழந்தையை நான் இந்தியா கொண்டு போய் விடுவேன். அதுக்கப்புறம் லிசாவை நீங்க பார்த்துக்குவீங்களா, அந்தக் குழந்தையோட ஞாபகம் வராத அளவுக்கு."

"அவ எனக்கு அந்த வாய்ப்பை குடுப்பான்னு நீங்க நினைக்கறீங்களா..."

"உங்களுக்கே குடுக்கலன்னா வேற யாருக்குக் குடுப்பா அவ சொல்லுங்க" என்றான் பதிலுக்கு அரவிந்த்.

அரவிந்தை அணைத்து தன் நெகிழ்ச்சியை வெளிப்படுத்திய ஹரிஷ். "லெட் மீ ஹோப் தட் யுவர் வொர்ட்ஸ் கம் ட்ரூ" என்றான் உணர்ச்சி வசப்பட்டு.

லிசாவிடம் பிறகும் பலமுறை பேசி,

வாக்குறுதியைப் பெற்று, பிறகு தான் இந்தியா கிளம்பினான் அரவிந்த்...

அவன் வரும் தகவலை அவன் யாரிடமும் சொல்லவில்லை. திடீரென்று தான் தன் தாய் தந்தையர் முன் சென்று நின்றான் அரவிந்த்.

இருவருக்கும் திடீரென்று மகனைப் பார்த்ததும் ஆனந்த அதிர்ச்சி. "டேய் அரவிந்த், வரப்போறான்னு சொல்லவேயில்லை. நீயில்லாம வீடு வீடாவேயில்லைடா. இனிமே எங்கயும் போகக்கூடாது" என்றார் அவன் அன்னை. அரவிந்தின் முகம் உடனே சுருங்கி விட்டது. எப்படி மறுபடியும் லண்டன் போய் குழந்தையை எடுத்து வருவது என்று அப்படியே எடுத்து வந்தாலும் அவன் அம்மா அதை ஒத்துக் கொள்வார்களா என்ற சந்தேகம் உதிக்க...

"நீ உன் குழந்தைன்னு தானே அரவிந்த் சொல்லப் போற அப்புறம் என்ன" என்று மனசாட்சி கேள்வி கேட்க... சற்று தேறிக் கொண்டான்.

ஆனால் இந்தக் குற்றவுணர்ச்சி இருந்ததனால் சரியாக அவன்

அம்மாவுடனும் அப்பாவுடனும் பேச முடியவில்லை. சீக்கிரம் தூங்கப் போகிறேன் என்று சொல்லிச் சென்று விட்டான். மறுநாள் ஷோரூமில் கீர்த்தியைப் பார்த்தான்.

கீர்த்திக்கு இவன் வருவதே தெரியாது. திடீரென்று அவனைப் பார்த்ததுமே, ஒரு புன்னகை அவளையறியாமல் தோன்றியது. ஆனால் அந்தப் புன்னகை அரவிந்தின் முகத்தில் தோன்றவில்லை. கீர்த்தி நிறைய இளைத்திருந்தர்ள். அவள் பொலிவு அவளின் நிமிர்வு எல்லாமே இல்லாமல் தெரிந்தது அரவிந்தின் பார்வைக்கு.

தண்டபாணியின் இழப்பு அவளை நிறைய பாதித்திருப்பது புரிந்தது. அவளைப் பார்த்து புன்னகைக்க முயன்றாலும், தண்டபாணியின் இழப்பு அவளைப் பார்த்தவுடனே தாக்க, புன்னகைக்க முயன்று தோற்றான்.

தன்னைப் பார்த்து ஒரு புன்னகைக்கு கூடவா பஞ்சமாகிப் போயிற்று என்று கீர்த்தி அவளுக்குள்ளே கேட்டுக் கொண்டு, எதுவும் பேசாமல்

அவள் வேலையைப் பார்க்கச் சென்று விட்டாள்.

அப்போது தான் அவள் புன்னகைத்து தான் புன்னகைக்காததை உணர்ந்த அரவிந்த்... அவள் பின்னோடு சென்று... "எப்படி இருக்க கீர்த்தி" என்றான்.

"இருக்கோம்" என்றாள் பதிலுக்கு கீர்த்தி. அந்தக் குரலில் மிகுந்த விரக்தி தெரிந்தது.

"நீங்க அந்த ஸ்பாட்ல இருந்தீங்களா" என்றாள் திடீரென்று.

அவள் எதைக் கேட்கிறாள் என்று அரவிந்திற்கு புரிந்தது.

"அதைத் தெரிஞ்சு ஏன் கீர்த்தி கஷ்டப்படுத்திக்கப் போற."

"எனக்குத் தெரியணும்" என்றாள் குரலில் பிடிவாதத்தைத் தேக்கி...

"இருந்தேன், நானும் அங்கதான் இருந்தேன்" என்றான் கனமான குரலில்...

"என்ன ஆச்சு, ஏன் ஆச்சு."

"என்ன ஆச்சுன்னும் தெரியாது.

ஏன் ஆச்சுன்னும் தெரியாது.”

“ப்ளீஸ் சொல்லுங்க.”

“நிஜம் கீர்த்தி... என் பக்கத்துல தான் உட்கார்ந்திருந்தான். திடீர்னு அவன் சாஞ்சதுக்கு அப்புறம் தான் அவன் மேல குண்டடி பட்டதே தெரிஞ்சது. எவனோ பைத்தியக்காரன், நிறைய பேருக்கு காயம். ஆனா இறந்தது நம்ம தண்டபாணி மட்டும்தான்.”

“கடைசி நிமிஷத்துல தண்டு ஏதாவது பேசினானா.”

“இல்லை. உடனே உயிர் போயிடுச்சு. அசைவேயில்லை.”

“ஒண்ணும் பேசக்கூட இல்லையா” என்று கண்ணில் மளமளவென்று நீர் இறங்கியது கீர்த்திக்கு.

ஒன்றும் செய்ய இயலாதவனாக அவள் கண்களில் கண்ணீர் வருவதைப் பார்த்திருந்தான். கண்களை துடைக்க துடைக்க கீர்த்திக்கு கண்ணீர் பெருகியது. ஒன்றும் பேச இல்லாதவர்களாக அவரவர் வேலையைப் பார்க்கச் சென்றனர்.

சற்று நேரம் கழித்து அங்கு வந்த

கீர்த்தி, “எதுக்கு அங்கே போனீங்க, எந்த இடம் அது, ஹாஸ்பிடல்னு சொன்னாங்க. எதுக்கு ஹாஸ்பிடல் போனீங்க” என்று சரமாரியாகக் கேள்வி கேட்க...

உண்மையைச் சொல்ல முடியாமல் தவித்தான் அரவிந்த். உண்மையை எப்படிச் சொல்ல முடியும். தன் அண்ணனைப் பற்றி நம்புவாளா... குழந்தையை தன் குழந்தையாக அடையாளம் காட்டப் போகும் பட்சத்தில், உண்மையைச் சொல்வதா வேண்டாமா, என்று குழம்பினான் அரவிந்த்.

“அது தண்டபாணிக்கு உடம்பு சரியில்லை. அதனால டாக்டர்கிட்ட காட்ட ஹாஸ்பிடல் போயிருந்தோம்.”

“அவனுக்கு உடம்பு வேற சரியில்லாம இருந்ததா” என்று அதற்கும் கண்ணீர் விட்டாள் கீர்த்தி.

ஆறு மாதங்கள் ஆகிவிட்ட போதிலும் துக்கத்தில் இருந்த வெளிவர முடியாதவளாக இருந்தாள் கீர்த்தி. முயன்று கட்டுப்படுத்தி அந்த இடத்தைவிட்டு அகன்றாள் கீர்த்தி... அரவிந்தும் நில் என்றும் சொல்லவில்லை,

பேச்சையும் வளர்க்கவில்லை. அவள் அங்கே இருந்தால் மேலும் மேலும் கேள்வி கேட்பாளோ என்று அரவிந்திற்கு பயம்.

அதன் பிறகு ஒரு ஆழ்ந்த அமைதி இருவருக்குள்ளும் இருந்தது. அரவிந்தும் எந்தக் காரணத்தை வைத்தும் பேச முயலவில்லை. அவளும் பேச வரவில்லை.

இரண்டு மூன்று தினங்கள் இப்படியே கழிந்தன. அரவிந்த் ஏதாவது பேசுவான் என்று கீர்த்தி எதிர்பார்க்க... அரவிந்த் எதுவும் பேசின வழியாகக் காணோம்.

அவளே வலிய வந்து பேசினாள். "அப்பா உங்களைப் பார்க்க இங்கே வரேன்னு சொன்னாங்க கூட்டிட்டு வரட்டுமா."

"எதுக்கு?"

"அவர் மகனைப் பத்திக் கேட்கத்தான். என்ன ஆச்சு ஏதாச்சுன்னு மறுபடியும் கேட்டுட்டு வருத்தப்படுவார் அதுக்குத்தான்."

"இங்க வேணாம். நானே ஒரு நாள் வீட்டுக்கு வரேன்" என்று முடித்து, வேறு

வேலை இருப்பது போல் போய்விட்டான். அவனுக்கு கீர்த்தியிடம் என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

இப்போதைக்கு குழந்தையை லிசா அவனிடம் கொடுத்தால் அதை தன் குழந்தையாகத் தான் சொல்லப் போறான். அதை கீர்த்தி எப்படி எடுத்துக் கொள்வாளோ. தன் குழந்தையாகத் தான் சொல்லியாக வேண்டும். அப்போது தான் அவன் பெற்றோர்கள் அதை வளர்க்கவிடுவார்கள். தண்டபாணியின் குழந்தை என்று தெரிந்தால் நிச்சயம் அதை வளர்க்க விடமாட்டார்கள். அதன் பொருட்டும் யாரிடமும் உண்மையைச் சொல்ல பயமாக இருந்தது.

14

அவன் வந்து ஒரு வாரம் பொறுமையாக இருந்த அவன் தந்தை, அரவிந்திடம் அவன் திருமணப் பேச்சை ஆரம்பித்தார்.

“அரவிந்தா, அந்த தண்டபாணியோட அப்பா ரொம்ப மனசொடிஞ்சு போயிட்டார்டா. இப்போ

எங்கயும் வேலைக்குக் கூடப் போறதில்லை. வீட்டோட தான் இருக்கார் போல... ஏதோ உங்க கல்யாண விஷயம் பேசுனா, மனுஷன் கொஞ்சம் தேறுவாரோ என்னவோ... ஏற்கனவே அவங்கண்ணன் கிட்ட சொல்லி பேசறேன்னு சொன்னியேடா. ஏதாவது பேசினியா."

"இல்லைப்பா."

"ஏன்டா, நீ போய் கொஞ்ச நாள் அவனோட இருந்த தானே."

"பேச சந்தர்ப்பம் கிடைக்கலைப்பா."

"பேச சந்தர்ப்பம் கிடைக்காத அளவுக்கு நீ என்னப்பா செஞ்சிட்டு இருந்த."

அமைதியாக இருந்தான்.

"பதில் சொல்லு அரவிந்த். லண்டன் போய் இத்தனை மாசமா என்னதான்டா செஞ்ச."

"ஊர் சுத்தி பார்த்தேன்பா."

"தண்டபாணியே இறந்துட்டாள். அப்புறம் யாரோட தங்கின, எங்க எங்க

சுத்திப் பார்த்த, ஒரு போட்டோ இல்லை, ஒண்ணும் இல்லை. அங்க என்ன பண்ண. வந்ததுல இருந்து என்கிட்டயும், அம்மாகிட்டயும் சரியா பேசக்கூட இல்லை. என்னடா பண்ணி வச்ச லண்டன்ல." என்றார் அவனை சந்தேகமாக பார்த்தபடி.

"ஒண்ணும் பண்ணலைன்னு சொல்ல மாட்டேன். உங்களுக்குத் தெரியும்போது தெரியும்பா."

"என்னடா பெரிய பீடிகையெல்லாம் போடற."

"தெரியும்போது தெரியும்பா" என்று மறுபடியும் கூறி அந்த இடத்தை விட்டு அகன்றான்.

"கல்யாணம் என்னடா பண்ணலாம்னு இருக்க."

"அதுதான் முன்னாலேயே கீர்த்தியை தான் எனக்கு பிடிச்சிருக்குன்னு உங்ககிட்ட சொல்லிட்டேன். நீங்க போய் பேசுங்க. எப்ப கல்யாணம் வக்கிறதுன்னாலும் உங்க சவுகரியம். முடிஞ்சா அடுத்த மாசமே வச்சாக்கூட எனக்கு சம்மதம்தான்."

“நிஜமாதான் சொல்றியா. உன்னை நம்பி கல்யாணம் பேசலாமா.”

“பேசலாம்பா... பையனை பறி கொடுத்தவங்க, கல்யாணத்தை சிம்பிளாகவே வச்சிக்கலாம்பா. சீக்கிரமே நாள் பாருங்கப்பா” என்றான்.

அவன் அன்னை, தந்தை மகனின் உரையாடலை கேட்டு அப்படியே நின்று கொண்டிருந்தார்.

“ஆமா என்னை எதுவும் கேக்கறது இல்லையா... அப்பாவும் மகனும் நீங்களே பேசி எல்லாத்தையும் முடிவு எடுப்பீங்களா. அப்புறம் நான் எதுக்கு இந்த வீட்ல.”

“இது முதல்லயே பேசி வச்சதுதானே ராணி” என்றார் சிதம்பரம்.

“இருந்தாலும் என்கிட்ட கேக்கறது இல்லையா. அவன் என்னவோ வந்ததுல இருந்து என்கிட்ட சரியாவே பேசமாட்டேங்கறான். முதல்ல அதை என்னன்னு கேட்டு பஞ்சாயத்து பண்ணுங்க. கல்யாண வேலையெல்லாம் அப்புறம் பார்க்கலாம்.”

“அது நீயாச்சு உன் பையனாச்சு.

இதுல எல்லாம் என்னை இழுக்காதடி. உனக்கு அவனைத் திட்டணுமா திட்டு, அடிக்கணுமா அடி, என்னை இழுக்காத. இன்னும் நான் நாளை தள்ளிப் போடத் தயாராயில்லை. நாளைக்கு நல்ல நாள், இவன் ஜாதகத்தை எடுத்துக்க. நாமளே நேர்ல போய் பேசறோம். யார் மூலமாகவும் நான் குடுத்து விடலை புரிஞ்சுதா. அதுக்கு மேல பொண்ணைக் குடுக்கறதும், குடுக்காததும் அந்த ராஜேந்திரனோட பிரியம், சொல்லிட்டேன்" என்றார் கறாராக.

குழந்தையைப் பற்றித் தெரிவதற்கு முன்னமே இவ்வளவு கடினமாகப் பேசுகிறார்களே இன்னும் குழந்தையைப் பற்றித் தெரிந்தால் தன்னை வளர்க்க விடுவார்களோ என்ற ஐயம் வந்து விட்டது.

அந்தக் குழந்தையைத் தன் குழந்தையாகச் சொல்வது தான் உத்தமம் என்ற முடிவிற்கு வந்து விட்டான். இவர்களுக்கெல்லாம் தெரிந்தால் ஏதோ ஒரு சமயத்தில் அந்தக குழந்தையிடம் உண்மையை கூறிவிட்டால், அப்புறம் தான் எவ்வளவு தான் தன் குழந்தையாகப்

பார்த்துக் கொண்டாலும் ஒரு வித்தியாசம் வந்துவிடும். அதனால் எத்தனை பிரச்சனைகள் யார் மூலமாக வந்தாலும் குழந்தையை தன் குழந்தையாகவே வளர்க்க முடிவு செய்தான். லிசா அதற்கு ஒத்துக் கொள்ள வேண்டுமே என்றும் இருந்தது.

லிசாவிடமும் ஹரிஷிடமும் தொடர்பில் தான் இருந்தான். இப்பொழுதுதான் அவளுக்கு ஒன்பதாம் மாதம் ஆரம்பித்திருந்தது. அவள் உடல்நலத்தை இரண்டு நாளைக்கொரு முறை விசாரித்துக் கொண்டுதான் இருந்தான்.

மறுநாள் அரவிந்தின் தந்தை சிதம்பரம், கீர்த்தியின் தந்தை ராஜேந்திரனிடம் சம்மந்தம் பேசச் சென்றார்.

சிதம்பரமும் ராணியும் கீர்த்தியின் வீட்டிற்குப் போக... இவர்கள் எதற்கு திடீரென்று வந்திருக்கிறார்கள் என்று தெரியாமல் விழித்தார்கள், ராஜேந்திரனும், இந்துமதியும், "நாங்க எங்க பையனுக்கு உங்க பொண்ணைக் கேட்டு

வந்திருக்கோம்” என்றனர் அரவிந்தின் பெற்றோர்.

திடீரென்று அவர்கள் இப்படிக் கேட்டவுடனே என்ன சொல்வது என்று தெரியவில்லை அவர்களுக்கு.

“பையன் இறந்து ஆறேழு மாசம் தான் ஆகுது... இப்போ எப்படிக் கல்யாணம் பேசறது.”

“அதுல ஒண்ணும் தப்பில்லைங்க ஆறு மாசம் ஆகிடுச்சு இல்லை. பொண்ணுக்கும் வயசாகுது இல்லை. அதை பார்க்க வேண்டாமா.”

“ஊர்ல யாராவது ஏதாவது சொன்னா” என்றார் கீர்த்தியின் தந்தை தளர்வாக...

“ஊரு என்ன ஊரு... நம்மதாங்க ஊரு. நம்மளை மீறி யாரும் பேச மாட்டான். அப்படியே ஒண்ணு ரெண்டு பேரு பேசுனா நாம அதைக் கண்டுக்க வேண்டாம். இன்னைக்கு நாளு நல்ல நாளு, ஜாதகம் பாருங்க, பையனை உங்களுக்குத் தெரியுமான்று எனக்குத் தெரியலை, தெரியலைன்னா, அவனையும் பாருங்க... பார்த்துட்டு ஒண்ணுரண்டு

நாள்ல நல்ல பதிலா சொல்லுங்க.”

சிதம்பரத்தின் தெளிவாகப் பேசும் குணம், ராஜேந்திரனுக்குப் பிடித்துவிடச் சரியென்றார். போன மகனையே நினைத்துக் கொண்டிருந்தால் இருக்கின்ற மகளைப் பார்க்க வேண்டும் அல்லவா. தங்களின் வசதி வாய்ப்புக்கு இந்த இடம் பெரிதென்றே உணர்ந்தார். அவர்களாக வரும்போது தான் ஏன் வேண்டாமென்று சொல்ல வேண்டும் என்று நினைத்தவர், பையனைப் பற்றி விசாரித்து பிறகு சரியென்று சொல்லலாம் என்று முடிவெடுத்து, இரண்டு மூன்று நாட்களில் நல்ல பதிலாகச் சொல்லுகிறோம் என்று சொன்னார்.

கீர்த்தி வீட்டிற்கு வந்ததுமே, கீர்த்தியிடம் கேட்டார்கள். அவளுக்கு இது ஆச்சரியமே, வந்ததிலிருந்து தன்னிடம் சரியாகக் கூட பேசாதவன், தன்னை பெண் கேட்டு விட்டிருக்கிறானா என்று எண்ணியவள், நீங்க என்ன நினைக்கறீங்கப்பா” என்றாள்.

“ஏம்மா, நீ அங்க தானே வேலை செய்யற உனக்கு தெரியாதா.”

“இல்லையேப்பா, பெண் கேட்டு வர்றது எல்லாம் எனக்குத் தெரியாதுப்பா.”

“பையன் எப்படிம்மா, நீ பார்த்திருப்ப இல்ல, உனக்கு பிடிச்சிருக்கா.”

“நீங்க எப்படிச் சொல்றீங்களோ, அப்படிப்பா” என்று விட்டாள் ஒரே வார்த்;தையாக.

ஜாதகம் பார்த்தாள், ஜாதகம் பொருந்தி வந்தது. ஜோசியர் மூல நட்சத்திரத்தை அவர்கள் திருமணம் செய்து கொள்ளும் பட்சத்தில், நீங்களும் கொடுத்து விடுங்கள் என்று விட்டார்.

சிதம்பரம் உழைப்பால் முன்னேறியவர். அவர் இந்த ஜாதகங்களை நம்புவது கிடையாது. இந்த ஒரு வருடத்திற்கும் மேல் அவர் கீர்த்தியைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அவருக்கு கீர்த்தியை மிகவும் பிடித்திருந்தது. தன் மகனுக்குப் பொருத்தமாக இருப்பாள் என்றே தோன்றியது. அதனால் சரியென்று விட்டார்.

கீர்த்தியின் தந்தையும்

அரவிந்தைப் பற்றி விசாரித்த வரைக்கும் நல்ல மாதிரியாகத் தோன்ற, திருமணம் வேண்டாம் என்று சொல்ல காரணங்கள் ஏதும் இல்லாததால் அரவிந்த் - கீர்த்தி திருமணத்திற்கு சம்மதம் என்று சொல்லி விட்டார்.

இந்தப் பேச்சு வார்த்தை எல்லாம் பெற்றோர் அளவிலேயே நடந்து கொண்டிருந்தது. அரவிந்தும் கீர்த்தியிடம் திருமணத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை, கீர்த்தியும் அரவிந்திடம் என்ன என்று கேட்கவில்லை.

அரவிந்த் கீர்த்தியிடம் பேசவே தயங்கினான். குழந்தையைப் பற்றிய உண்மையைச் சொல்லவும் மனம் வரவில்லை. மறைப்பதும் தவறு போலத் தோன்றியது.

தன்னுடைய குழந்தை என்று தான் சொல்லிய பிறகு, ஒருவேளை கீர்த்தி கல்யாணத்துக்கு மறுத்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்துதான், தன் தந்தையை திருமணத்தையே பேசச் சொன்னான்.

குழப்பத்தின் உச்சியில் இருந்தான்.

தான் போகும் பாதை சரிதானா என்றும் தெரியவில்லை. தன் பிரச்சனைகளை யாரோடும் பகிரவும் முடியவில்லை. தன்னைச் சுற்றி எல்லாவற்றையும் சிக்கலாக்கிக் கொண்டான்.

இந்நிலையில் திருமணம் சந்தோஷத்தைக் கொடுப்பதற்கு பதில் ஒரு பயத்தையே கொடுத்தது.

தாம்பூலம் மாற்றி சிம்பிளாக நிச்சயம் செய்தனர். அரவிந்தும், கீர்த்தியும் அங்குதான் இருந்தாலும் பெரிதாக சந்தோஷம் இரண்டு பேரிடத்திலும் இல்லை. கடமையே என்று இருந்தனர்.

இருவரின் பெற்றவர்களும் தங்களின் மக்களின் முகத்தையே ஆராய... அவர்கள் பார்ப்பதை உணர்ந்து சிறிது சிரித்தவாறு முகத்தை முயன்று வைத்துக் கொண்டனர். அரவிந்திற்கு குழந்தை டென்ஷன் என்றால், கீர்த்தி இன்னும் தண்டபாணி இழப்பிலிருந்து முழுதாக வெளிவரவில்லை.

நளினி தான் அந்த இடத்தை சற்று கலகலப்பாக்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய பெண் அகல்யா, “அத்தை”

என்று சொல்லிச் சமத்தாக கீர்த்தியின் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டது.

சாப்பிட்டு முடித்தவுடன் சிறிது நேரம் அமர்ந்து பேச நேரம் கிடைக்க, கீர்த்தி அவளாகவே அரவிந்திடம்,

“எங்கண்ணா கிட்ட நம்ம கல்யாணம் விஷயம் பேசினீங்களா.”

“நான் பேசலாம்னு இருந்தப்போ தான் அப்படி ஆகிடுச்சு” என்றான் மெல்லிய குரலில்.

“போய் அவ்வளவு நாள் கூட தானே இருந்தீங்க என்னைப் பத்திப் பேசவேயில்லையா?”

பேசவேயில்லை என்பது தான நிஜம். ஆனால் எப்படிச் சொல்வது. “உன்னைப் பத்தி நிறைய பேசினோம் கீர்த்தி. ஆனா நம்ம கல்யாணம் பத்திப் பேச சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தேன். அதுக்குள்ள...” என்று நிறுத்தினான்.

‘ஓ’ என்றாள் ஏமாற்றமாக...

அவள் அண்ணன் திருமணம் செய்யாமலேயே ஒரு பெண்ணோடு வாழ்ந்தான் என்பதை இவள் எப்படி

எடுத்துக் கொள்வாள் என்றே எண்ணத்தில் ஓடிக் கொண்டிருந்தது அரவிந்திற்கு.

வேறு மடியில் அமர்ந்திருக்க அகல்யா தான், "அத்தை நீங்க ரொம்ப அழகா இருக்கீங்கன்னு அம்மா சொன்னாங்க" என்றாள்.

"பட்டு குட்டி! நீங்க கூட ரொம்ப அழகு" என்று பதிலுக்குச் சொன்னாள் கீர்த்தி... "நீங்க எந்த க்ளாஸ் போறீங்க" என்றாள்.

"ஃபர்ஸ்ட் ஏ."

"ஓ! ஃபர்ஸ்ட் ஏவா நீங்க" என்று கீர்த்தி அகல்யாவிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருக்க... குழந்தை எல்லாவற்றிற்கும் அவளிடம் பதில் கொடுத்துக் கொண்டே வந்தது.

பின்பு எல்லோரும் வீட்டிற்குக் கிளம்ப ஆளுக்கொரு பக்கம் கிளம்பினர். கீர்த்திக்கு அரவிந்த் ஏன் இப்படி இருக்கிறான் என்று தோன்ற ஆரம்பித்தது. லண்டன் சென்று வந்ததில் இருந்து தன்னிடம் இருந்து ஒதுங்கியே இருக்கிறான். தண்டபாணியின் இறப்பு காரணமா இல்லை வேறு ஏதாவது என்று

யோசிக்க ஆரம்பித்தாள்.

லிசாவிடமும் ஹரிஷிடமும் தனக்கு திருமணம் நிச்சயமான விஷயத்தைக் கூறினான் அரவிந்த். இருவருமே வாழ்த்துக்கள் கூறினர்.

இவ்வளவு அவசரமாக திருமணம் செய்ய வேண்டிய அவசியம், அரவிந்திற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அது நாளை குழந்தையைத் தத்தெடுக்க வேண்டி வந்தால், அதற்கு அவன் திருமணமானவனாக இருக்க வேண்டும். அதன் பொருட்டும் திருமணத்தைத் துரிதப்படுத்தினான்.

சில சமயம் யோசித்தான், கீர்த்தியிடம் மட்டுமாவது அவள் அண்ணன் குழந்தை என்று சொல்லலாமா என்று. பிறகு திருமணத்திற்குப் பிறகு குழந்தை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டான்.

நாட்கள் வேகமாக ஓடின, திருமண வேலைகள் இன்னும் வேகமாக நடந்தன. சம்மந்தியும் சம்மந்தியும் நிறைய பேசிக் கொண்டார்கள். ஆனால் மணப்பெண்ணும் மணமகனும் பேசுவது

அரிதாக இருந்தது.

ரொம்ப அவசியம் என்றால் ஓரிரு வார்த்தை பேசினர், மற்றபடி இருவரும் பேசுவதே இல்லை. ஏன் இப்படி இருக்கிறான் ஏதாவது பிரச்சனையா என்று கேட்போமா என்று கூட பல சமயம் கீர்த்தி நினைப்பாள். ஆனால் அரவிந்தின் இறுகின முகம் அவளை எதும் கேட்க விடாது. அவன் ஒரு பயத்திலேயே பேசாமல் இருக்கிறான் என்று அவளுக்குப் புரியவில்லை.

பிறகு திருமண ஷாப்பிங் அது இது என்று அவள் சற்று பிசியானதால், அவள் வேலைக்கும் செல்லவில்லை. லீவு எடுத்துக் கொண்டாள். அதனால் அரவிந்தைப் பார்க்க அதிக வாய்ப்பும் கிட்டவில்லை.

தண்டபாணியும் இல்லாததால் மனம் அரவிந்தை மிகவம் தேடியது. அதன் பிறகு தண்டபாணியைப் பற்றி ஏதாவது கேட்க விழைந்தாலும் அரவிந்;த் சரியாக பதிலளிக்கவில்லை. அரவிந்த் ஏதாவது ஒன்றிரண்டு வார்த்தை நன்றாக பேசியிருந்தால் கூட கீர்த்தியின் மனம்

அமைதியாகியிருக்கும். அதற்கான வாய்ப்மையே அரவிந்த் கொடுக்கவில்லை.

திருமண நாள் நெருங்க நெருங்க, லிசாவின் டெலிவரி நாளும் நெருங்கியது. மறுபடியும் அரவிந்த் விசாவிற்கு அப்ளை செய்திருந்தான். இந்த முறை தொழில் நிமித்தம் என்று அப்ளை செய்திருந்தான். ஹரிஷ{ம் அதற்கான பேப்பர்ஸ் எல்லாம் அனுப்பியிருந்தான்.

அனால் வீட்டில் லண்டன் செல்வதாக மறுபடியும் எப்படிக் கூறுவது என்று பயமாக இருந்தது. அதுவும் டெலிவரி கட்டாயம் திருமண சமயத்திற்கு அருகில் இருப்பதால், திருமணம் முடிந்த் கையோடு லண்டன் செல்வது மாதிரி இருக்கும் என்பது இன்னும் அவனுக்கு டென்ஷனைக் கொடுத்தது.

வீட்டில் மட்டுமல்ல கீர்த்தியிடமும் காரணம் சொல்ல வேண்டுமே என்றிருந்தது. கீர்த்தி தன்னைப் புரிந்து கொள்வாளா. அது தண்டபாணியின் குழந்தை என்று தெரிந்தால் அவள் அந்தக் குழந்தையை தங்கத் தாம்பாளத்தில்

வைத்து தாங்குவாள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் அதைதான் அரவிந்த் சொல்லப் போவது இல்லையே. தன் குழந்தை என்று தானே கூறப்போகிறான். ஏனென்றால் தன் தாய் தந்தைக்கு இது தன் குழந்தை இல்லை என்று தெரிந்தால் கட்டாயம் வளர்க்க விட மாட்டார்கள் என்று தெரியும்.

அதற்காகவேணும் இதை தன் குழந்தை என்று சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்தான். எதையும் யோசிக்க வேண்டாம் முதலில் குழந்தை நன்றாக பிறக்க வேண்டும். அதை லிசா தன்னை நம்பி கொடுக்க வேண்டும். பிறகு எல்லாவற்றையும் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும் என்று முடிவெடுத்தவன், லிசாவின் அன்னையை தொலைபேசியில் அழைத்து மீண்டும் ஒருமுறை அவர் குழந்தையை தன்னிடம் கொடுக்க செய்வாரா என்று கேட்டு, அவர் கொடுக்கச் செய்வேன் என்று சொல்லிய பிறகே நிம்மதியாக மூச்சு விட்டான்.

முதல் நாள் நிச்சயதார்த்தம்

மறுநாள் திருமணம் என்ற நிலையில், நிச்சயதார்த்த விழா சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. அழகுப் பதுமையாக அமர்ந்திருந்தால் கீர்த்தி. இவ்வளவு அழகாக கீர்த்தி அலங்காரம் செய்து அமர்ந்திருக்கும்போது அரவிந்த் எப்படி அவளைப் பார்க்காமல் இருப்பான். நெடுநாளைக்குப் பிறகு கீர்த்தியை விழியெடுக்காமல் பார்த்தான்.

அரவிந்தின் பார்வையை உணர்ந்த கீர்த்தியும் முகம் சிவந்தாள். இந்தக் கல்யாணம் முடிவான தினத்தில் இருந்து அரவிந்த் முதல் முறையாக ஒரு காதல் பார்வை பார்க்க... அதை உணர்ந்த கீர்த்தியும் நாணினாள்.

அவர்களின் இல்லறம் நல்லறமாக இனிதே துவங்கும் என்று நினைத்த வேளையில் மறுபடியும் எங்கோ மணியடித்தது.

எங்கு – அரவிந்தின் செல்போனில் அடித்தது. ஹரிஷ் அழைத்திருந்தான். லிசாவிற்கு வலியெடுத்து ஹாஸ்பிடலில் அட்மிட் செய்திருப்பதாக.

அரவிந்தின் உற்சாகம் மொத்தமும்

வடிந்து டென்ஷன் ஏறிக் கொண்டது. போன் வந்தது, அரவிந்த் பேசியது பின்பு அவன் முகத்தில் டென்ஷன் ஏறியது என்று அனைத்தையும் கீர்த்தி பார்த்துக் கொண்டுதானிருந்தாள். இவ்வளவு நேரம் நன்றாகத் தானே இருந்தான், இப்போது என்னவாயிற்று இவனுக்கு என்று பாராமல் அவனைப் பார்த்து... அவனை தன் கண் பார்வையிலேயே வைத்திருந்தாள்.

அதன் பிறகு ஏறிய டென்ஷன் இறங்கவில்லை அரவிந்திற்கு. நிச்சயம் முடிந்து பெண் அழைப்பிற்கான நிகழ்வுகள் துவங்க... கிடைக்கும் சந்தர்ப்பத்தில் கீர்த்தி அவன் முகம் பார்க்க, அது அவளுக்கு ரெஸ்ட்லெஸ்ஸாகத் தெரிந்தது.

பொறுக்க மாட்டாமல் அவன் தொலைபேசிக்கு அழைத்த கீர்த்தி, "ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க, ஏதாவது டென்ஷனா" என்றாள் நேரடியாக.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை கீர்த்தி."

"இல்லை, நான் பார்த்துட்டு

இருந்தேன். ஒரு போன் வந்தது பேசினீங்க, இப்படி ஆயிட்டீங்க."

"எப்படி ஆயிட்டேன். எப்படியும் ஆகலை, மே பி மேரேஜ் டென்ஷனா கூட இருக்கலாம்."

"ஏன் நான் உங்களை என்ன பண்ணப்போறேன்னு இவ்வளவு டென்ஷன்."

"அதுதான் எனக்கும் தெரியலை" என்று சற்று ஜோவியலாகப் பேச முயன்றாலும், குழந்தை பிறந்திருக்குமோ இல்லையோ என்றுதானிருந்தது.

எப்போது கீர்த்தி தொலைபேசியை வைப்பாளோ என்றிருந்தது. கீர்த்தி பேச ஆர்வம் காட்டினாலும், "இங்க நிறைய பேர் இருக்காங்க. நான் அப்புறம் பேசறேன் கீர்த்தி" என்று போனை வைத்தான்.

15

கீர்த்தி அவன் பார்வையிலேயே சற்று திருப்தியாகி இருந்ததால், மேலும் எதுவும் கேட்கவில்லை. நடக்க வேண்டிய

சடங்குகள் எல்லாம் விமரிசையாக நடந்தன.

அரவிந்திற்கு உடனே லண்டன் போக வேண்டும் போல இருந்தது. கல்யாணம் முடிந்தவுடன் அடுத்த நாளே டிக்கெட் இருக்குமா என்று பாருங்கள் என்று ட்ராவல் ஏஜன்சிக்கு போன் செய்தான். அது எவ்வளவு விலையானாலும் பரவாயில்லை. உடனே டிக்கெட் வேண்டும் என்றான்.

இரவு விசேஷம் முடிந்து உறங்க போகும் மறுபடியும் ஹரிஷ் போன் செய்தான், லிசாவிற்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறது, தாயும் சேயும் நலம் என்று.

அரவிந்திற்கு சந்தோஷம் பிடிபடவில்லை. 'டேய் பாணி, நீ அப்பாவாகிட்டடா' என்று மனதிற்குள்ளேயே நண்பனிடம் பேசினான். வேறு யாரிடமும் பகிர முடியவில்லை என்றாலும் அவன் முகத்தில் இருந்த டென்ஷன் வடிந்து கல்யாணக்களை வந்து விட்டது.

மறுநாள் காலை அதனால்

திருமண சடங்குகளில் உற்சாகமாக கலந்து கொண்டான். அவன் முகம் சந்தோஷமாக இருப்பதை பார்த்து கீர்த்தியின் முகமும் மலர்ந்து இருந்தது.

இவ்வளவு நாட்கள் இருந்த இறுக்கம் மறைந்து சந்தோஷமான மணமகனாகவே காட்சியளித்து, கீர்த்தியின் அழகுக் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான்.

பிறகு வந்த விளையாட்டுகளிலும் சந்தோஷமாகவே கலந்து கொண்டான். அவனுடைய உற்சாகம் கீர்த்தியை தொற்றினாலும், அவள் விளையாட்டுகளில் ஜெயிக்க ஆர்வம் காட்டவில்லை. அவனையே ஜெயிக்க வைத்தாள்.

“ஏன்” என்று ஒற்றை புருவம் உயர்த்தி கேட்டவனிடம் பதிலுக்கு சிரிப்பையே உதிர்த்தாள். அதில் ஒரு நிறைவு தெரிந்தது.

வீட்டிற்கு வந்தவுடனேயே டிக்கெட் கன்பர்ம் ஆன நியூஸ் வர... அவன் அப்பாவிடம், “நாளைக்கு லண்டன் போறேன் அப்பா” என்றான்.

அவன் தந்தை அதிர்ச்சியாக அவனை பார்த்தார். “என்னடா சொல்ற இன்னைக்கு தான் கல்யாணம் முடிஞ்சிருக்கு, நாளைக்கு லண்டன் போறன்னு சொல்ற, ஒரு வேளை கீர்த்தியை கூட்டிட்டு ஹனிமூன் ஏதாவது போறயா.”

“இல்லைப்பா நான் மட்டும் தான் போறேன்.”

“என்னடா அவசியம் நீ லண்டன் போறதுக்கு.”

“ஒரு பிஸினெஸ் டீலிங் அப்பா, முடிஞ்சபிறகு விவரம் சொல்றேன்.”

“என்னடா, எனக்கு தெரியாம என்ன பிஸினெஸ் டீலிங் உனக்கு விவரம் பத்தாது. என்ன ஏதுன்னு என்கிட்ட சொல்லுடா, எதையாவது இழுத்துவிட்டுக்காத.”

“சொல்ற மாதிரி இருந்தா, சொல்லமாட்டேனா அப்பா, இது முடிஞ்சா தான் சொல்ல முடியும்.”

“நீ என்ன இழுத்து வைக்கப்போறியோ தெரியலை, எனக்கு

பயமாயிருக்கு.”

“நீங்க பயப்படற மாதிரி எதுவும் இல்லை.”

“மருமக கிட்ட சொல்லிட்டியா, அவ சரின்னு சொல்லிட்டாளா.”

“உங்க கிட்ட தான் முதல்ல சொல்றேன்.”

“ஏன்டா, இன்னைக்கு கல்யாணமான பொண்ணை நாளைக்கு விட்டுட்டு போறேன்னு சொல்ற, உனக்கு நல்லாயிருக்கா, அவங்கப்பாம்மா கேட்டா என்னடா சொல்வோம்.”

இவர்களின் பேச்சை எல்லோரும் அதிர்ச்சியோடு பார்த்திருந்தனர். நளினி, அவள் கணவர், கீர்த்தி, அரவந்தின் அம்மா என்று எல்லோரும் பார்த்திருந்தனர்.

“நான் அவங்ககிட்ட சொல்லாமயா லண்டன் போவேன் எல்லாம் நான் சொல்லிக்கறேன்.”

“நீ போன தடைவ லண்டன் போயிட்டு வந்ததுல இருந்து ஒரு மார்க்கமாத்தான் இருக்க. இன்னும் இந்த தடைவ லண்டன் போயிட்டு என்ன

கொண்டு வரப்போறியோ.”

எல்லாவற்றையும் கீர்த்தி ஒரு அதிர்ச்சியோடு கேட்டிருந்தாள்.

“என்ன லண்டன் போகிறானா எதற்கு. என்ன பிஸினெஸ் டீலிங். ஒன்றும் புரியவில்லையே. அவன் தந்தை சொன்ன மாதிரி இவன் லண்டன் சென்று வந்ததில் இருந்து சரியாக ஒன்றும் இல்லையே.”

மனம் எதை எதையோ நினைத்தது கீர்த்திக்கு. ஒரு தடவ லண்டனில் நாங்கள் தண்டபாணியை இழந்தது பத்தாதா. மீண்டும் மீண்டும் இவன் வேறு ஏன் போக வேண்டும் என்று சொல்கிறான். அதுவும் திருமணம் முடிந்த அடுத்த நாளே பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்.

இவர்கள் பேசுவதையே, மனதில் இருந்த இந்த எண்ண ஓட்டங்களோடு பார்த்திருக்க... அரவிந்திடம் பேசிக் கொண்டிருந்த சிதம்பரம் திரும்பி கீர்த்தியை பார்த்தார். அவள் முகம் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது.

அரவிந்திடம், “அவ முகமே சரியில்லை, நீ முதல்ல கீர்த்தியை

சமாதானப்படுத்து போ" என்று அனுப்பினார். பின்னர் வீட்டில் இருந்தவர்களிடம் எல்லாம், "இந்தப் பையன் ஏன்தான் இப்படி பண்றானோ தெரியலையே. என்னவோ பண்ணிட்டு வந்திருக்கான்டி லண்டன்ல. அதுதான் இவ்வளவு அவசரமா போறான். என்ன பண்ணி வச்சிருக்கானோ தெரியலையே" என்று புலம்பினார்.

எல்லோரையும் பதட்டம் தொற்றியது. "இன்று கல்யாணமாகி, நாளையே தனியாக லண்டன் போகிறானா" என்று இருந்தது.

அரவிந்த் அவனின் அறைக்கு கீர்த்தியை அழைத்து உள்ளே வந்தவன், "சாரி கீர்த்தி, முன்னமே சொல்ல முடியலைன்னு இல்லை. திடீர்னு நேத்துதான் முடிவு பண்ணினேன். அதான் சொல்ல முடியலை."

"எதுக்கு திடீர்னு இப்போ லண்டன் போறீங்க... நாங்க லண்டன்ல ஒருத்தனை இழந்தது பத்தாதா, நீங்க வேற ஏன் அங்கேயே போறீங்க."

"நான் திரும்ப வரும்போது நீயே

தெரிஞ்சுக்கவ கீர்த்தி.”

“என்ன ஏதாவது பிரச்சனையா. எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லுங்க, பார்த்துக்கலாம்.”

“ஒண்ணுமில்லை கீர்த்தி, எதுவா இருந்தாலும் உனக்கே தெரிஞ்சிடும். நான் உன்கிட்ட சொல்லாம, வேற யார்கிட்ட சொல்லப்போறேன், சொல்லு” என்றான் சமாதானமாக...

“நீங்க எதுவும் என்கிட்ட மறைக்கலையே...”

“நான் தான் எதுவா இருந்தாலும் உனக்கு தெரிஞ்சிடும்ன்னு சொல்றேன் இல்லையா” என்றான் மறுபடியும்.

அவன் பதில் புரியாதவளாக அவனையே பார்த்தவாறு நின்றிருந்தாள்.

“தெரிஞ்சிடும் தெரிஞ்சிடும்னா அப்போ தெரியற மாதிரி ஏதாவது இருக்கா.”

“இந்த மாதிரி வார்த்தை விளையாட்டெல்லாம் எனக்கு வராது கீர்த்தி, விட்டுடு. இப்போதான் நமக்கு கல்யாணம் ஆகியிருக்கு. வாழ்க்கை

பூராவும் நாம பேசத்தான் போறோம். இப்போ வேற ஏதாவது பேசுவோமே.”

“என்ன” என்பது போல அவள் பார்க்க... “ஏதாவது பேசு கீர்த்தி.”

“எனக்கு ஒரு மாதிரி இருக்கு. ஐ திங்க் ஐ அம் டையர்ட். நான் கொஞ்சம் தூங்கட்டா” என்று பேச்சை ஒத்திப் போட்டாள்.

“ஓ.கே. நீ தூங்கு” என்று அவள் தூங்குவதற்கு வசதி செய்து கொடுத்து வெளியே வந்து, அவன் அப்பாவின் அருகில் அமர்ந்து டி.வி பார்க்க துவங்கினான்.

“என்னடா சொல்றா கீர்த்தி நீ ஊருக்கு போறதுக்கு.”

“யார் என்ன சொன்னாலும் நான் போயே ஆகணும்பா எதுக்குன்னு கூடிய சீக்கிரமே தெரிஞ்சுக்குவீங்க.” என்றான் பீடிகையோடு.

“என்னவோ போடா, என்னை டென்ஷன் பண்ற நீ, பார்க்கலாம், என்ன செய்யறன்னு” என்று அந்த இடத்தை விட்டு அவர் அகன்றார்.

அவர் போவதையே அரவிந்த் பார்த்திருந்தான்.

பின்பு குளித்து முடித்து, கோவிலுக்கு சென்று வந்து, இருவரும் தனிமையில் விடப்பட... இருவருக்குமே பெரிய எதிர்பார்ப்பு எதுவும் இல்லை.

கீர்த்தி என்ன சொல்கிறாள் என்று பார்ப்போம் என்று அரவிந்த் காத்திருக்க... அரவிந்த் என்ன சொல்கிறான் பார்ப்போம் என்று கீர்த்தி காத்திருந்தாள். இருவரும் சற்று நேரம் மௌனத்தில் கழிக்க... "பால் குடுக்க சொன்னாங்க" என்று ஞாபகம் வந்தவளாக பாலை எடுத்து நீட்டினாள்.

கையில் வாங்கியவன், "உனக்கு" என்றான்.

"இது தான் குடுத்து விட்டாங்க" என்று அவன் கையில் இருந்த சொம்பை காட்ட...

"நான் குடிச்சிட்டு குடுத்தா குடிப்பியா" என்றான் அரவிந்த்.

இது என்ன அசட்டுத்தனமாக கேள்வி என்பது போல அவள் அவனை பார்க்க...

அவன் ஒருவேளை அவள் குடிக்க மாட்டாளோ அதுதான் அப்படி பார்க்கிறாளோ என்று நினைத்தவன்... “நீ குடிச்சிட்டு குடேன் நான் குடிக்கிறேன்” என்றான் புத்திசாலித்தனமாக கூறுவதாக நினைத்து...

“நான் நீங்க குடிச்சா குடிக்க மாட்டேன்னு சொன்னனா இல்லை சொன்னனா, குடிச்சிட்டு குடுங்க” என்றாள் உரிமையோடு.

“அப்புறம் நீ குடிச்சதை நான் எப்படி குடிக்கறது” என்றான் லேசாக கண்ணடித்து.

அவனை பார்த்து வெட்கியவள், “அதெல்லாம் குடுப்போம், நீங்க குடிங்க” என்றாள்.

பாதி குடித்து கொடுத்தான், அவன் கொடுத்ததில் பாதி குடித்து, மறுபடியும் அவன் புறமே நீட்டினாள்.

“ஓ இதுதான் டெக்னிக்கா, எனக்கு தெரியாம போச்சே” என்று அவன் குரல் பரிதாபப்பட, முகம் சிரித்தது.

அவளுக்கும் முகம் புன்னகையை

பூசியது.

“என்னை பிடிச்சிருக்கா கீர்த்தி உனக்கு” என்றான்.

என்ன மறுபடியும் ஒரு அசட்டுத்தனமான கேள்வி என்பது போல் ஒரு பார்வை பார்த்தாள்.

அவள் பார்வை புரியாதவன், என்ன, என்பது போல் பார்க்க...

“நமக்கு பேரன் பேத்தி பொறந்ததுக்கு அப்புறம் இந்தக் கேள்வி கேட்காம போனீங்களே.”

“ஓ. ரொம்ப சீக்கிரமா கேட்டுட்டனா.”

“ஆமா ரொம்ப... சீக்கிரம் கேட்டுட்டீங்க” என்றாள் கிண்டலாக...

அவள் கிண்டலை பார்த்து அரவிந்திற்கு சிரிப்பு வந்தது. வாய்விட்டு சிரித்தான். பெரிய எதிர்பார்ப்பு எதுவும் இல்லாமல் வந்த இருவருக்கும், இப்போது மனநிலை சந்தோஷமாக இருந்தது.

சந்தோஷமாக இருக்கும்போதே பேசிவிட வேண்டும் என்று நினைத்தவன்,

“உங்க அப்பா, அம்மாகிட்ட நாளைக்கு காலையில போய் நான் லண்டன் போறதை சொல்லிட்டு வந்துடலாம் கீர்த்தி, ஏன்னா நாளைக்கு சாயந்தரம் எனக்கு ஃப்ளைட்.”

அவன் நாளை ஊருக்கு போகிறான் என்று கேட்டதும், அவளின் சந்தோஷமான நிலைமை சற்று மட்டுப்பட... “போகாம தவிர்க்க முடியாதா” என்றாள் ஏக்கத்தோடு.

“கட்டாயம் போகணும் கீர்த்தி தள்ளிப் போடக் கூட முடியாது. எப்போ திரும்ப வருவேன்னு தெரியலை. பத்து நாள்லயும் வருவேன், ஒரு மாசம், ரெண்டு மாசம் கூட ஆகலாம், நீ இருந்துப்பல்ல.”

“இருந்துப்பேன்” என்பது போல் அவள் தலையாட்ட, அவள் அருகில் வந்தவன் அவளை மென்மையாக அணைத்து, அவளை சமாதானப்படுத்தும் விதமாக நின்றிருந்தான்.

கீர்த்தியும் விலக முற்படவில்லை. அப்படியே நின்றிருந்தாள்.

“முடிஞ்ச வரைக்கும் சீக்கிரம் வந்துடுவேன் கீர்த்தி.”

“இப்பத்தான் உங்க காதலை சொல்லி நாலு நாள்லயே போனீங்க. போனதுக்கு அப்புறம் ஒரு தடவ போன் பண்ணுனீங்க. அவ்வளவு தான். அதுக்குள்ள அண்ணா என்னை விட்டுட்டு போய்ட்டான்” என்று கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

தண்டபாணியை நினைத்த அரவிந்தின் அணைப்பு இறுகியது.

“அது எதிர்பாராம நடந்த ஒரு ஆக்ஸிடென்ட் அதை மறக்க முயற்சி செய்.”

அவனுக்குள்ளேயே புதைந்து கொண்டவள்... கதற ஆரம்பித்தாள். “என்னால முடியலை. இன்னும் திடீர்ன்னு ஒரு நாள் அண்ணா வந்து நிக்கமாட்டானான்னு தோணுது. ஐ மிஸ் ஹிம் ய லாட்.”

“அத்தனை பேர் இருக்கும்போது, என் அண்ணா ஒருத்தன் மட்டும் ஏன் இறக்கணும், நாங்க என்ன தப்பு செஞ்சோம், அண்ணா என்ன தப்பு செஞ்சான், கடவுள் ஏன் அவனை தண்டிச்சிட்டார்” என்றாள்

அழுகையோட...

அவளை சமாதானப்படுத்தும் வகை அறியாமல் அணைத்தவாறே அரவிந்த் நின்றிருந்தான்.

"ஏன் அண்ணா எங்களை விட்டு போகணும்? அதுவும் அந்த சமயத்துல நீங்க வரக்கூட இல்லை. எனக்கு சொல்லி அழ கூட யாருமில்லை. அப்பாவும் அம்மாவுமே ரொம்ப மனசொடிஞ்சு இருந்தாங்க. அவங்களை தேத்தறதுல என்னால அழக்கூட முடியலை. நீங்க ஏன் அப்ப வரலை, நான் உங்களை தேடுனேன். அப்போ தான் நீங்க எனக்கு எவ்வளவு முக்கியம்னு புரிஞ்சது" என்றாள் மனசை திறந்து...

"உங்களுக்கு தெரியுமா அண்ணா ரொம் ஸ்வீட், ஆனா நான் அவனை தண்டம் சொல்லி எப்பவுமே டீஸ் பண்ணிட்டே இருப்பேன். கோபமே படமாட்டான். ரொம்ப ரேரா தான் கோபப்படுவான்."

"அதுவும் நீங்க அவனுக்கு ப்ரண்ட் ஆகிறவரைக்கும் நானும் அவனும் ரொம்ப க்ளோஸ். நீங்க அவன் ப்ரெண்ட்

ஆனதுக்கு அப்புறம் தான் என்னை விட்டு விலகினான். அப்போ எல்லாம் உங்க மேல ரொம்ப பொறாமையா கூட இருக்கும்" என்றாள்.

"அண்ணாகிட்ட நீங்க ஏன் சொல்லலை. நீங்க நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ண இஷ்டப்படறோம்னு சொல்லியிருந்தா அவன் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பான்."

"என்னது நாம ரெண்டு பேரும் இஷ்டப்பட்டோமா, நான் மட்டும் தான் இஷ்டப்பட்டேன் மேடம், நீ எங்க உன் விருப்பத்தை சொன்ன..."

"அதெல்லாம் யாரும் சொல்ல மாட்டாங்க, தானா தெரிஞ்சிக்கணும்."

"ஏன் நீ பேசமாட்ட, போறதுக்கு முன்னாடி ஒரு ஐ லவ் யூக்கு உன்கிட்ட எவ்வளவு கெஞ்சியிருப்பேன், சொன்னியா நீ. இப்போ இந்த பேச்சு பேசற."

"உங்க மேல விருப்பமில்லாமையா, உங்களை பார்க்க ஏர்போர்ட் ஓடி வந்தேன். நீங்க போனவுடனே எனக்கு அழுகை அழுகையா வந்துச்சு. ஆனா

அண்ணாகிட்ட தானே போறீங்கன்னு என்னை நானே சமாதானப்படுத்திக்கிட்டேன். ஆனா இன்னும் நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்காதது ஏதேதோ நடந்துடுச்சு" என்றாள் துக்கத்துடன்.

அவள் நாலு வார்த்தை பேசினால், அதில் ஒரு வார்த்தை தண்டபாணியைப் பற்றி இருந்தது. அரவிந்த் லண்டனில் இருந்து வந்ததற்கு பிறகு அதிகம் கீர்த்தியிடம் பேசாததால் அவளின் மனவுணர்வுகள் அவனுக்கு புரியவில்லை. ஆனால் பேச்சிலிருந்தே அவள் அரவிந்தை மிஸ் செய்தது, அரவிந்திற்கு நன்கு புரிந்தது.

தான் நினைத்ததை விட அவள் அதிகம் தன்னை நினைத்திருப்பாள் என்று உணர்ந்து கொண்டான். கீர்த்தி தன் மேல் இவ்வளவு காதலை வைத்திருப்பாள் என்று அவனே எதிர்பார்க்கவில்லை. அதுவும் தண்டபாணி இறந்தபோது தன்னை அவள் மிகவும் தேடியிருக்கிறாள் என்பதை நன்கு உணர்ந்து கொண்டான்.

"தேங்க்ஸ் கீர்த்தி, தேங்க்யூ வெரி

மச், நீயும் என்னை இந்தளவு விரும்பியிருக்க, என்னை மிஸ் பண்ணியிருக்கன்னு எனக்கு தெரியாது கீர்த்தி, நான் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன்" என்றான் உணர்ந்து அரவிந்த்.

நன்றாக பேசிக்கொண்டிருந்தவர்கள் இடத்தில் திடீரென்று ஒரு மௌனம் வந்து சூழ்ந்தது. இன்னும் தான் அரவிந்தின் அணைப்பிலேயே இருப்பதை உணர்ந்த கீர்த்தி, மெதுவாக தன்னை விடுவித்துக் கொண்டு அருகில் இருந்த கட்டிலில் அமர, அரவிந்தும் அமர்ந்தான்.

நேரம் வெகுவாக கடந்து விட்டிருந்ததை உணர்ந்த கீர்த்திக்கு தூக்கம் வந்தது. ஆனால் அரவிந்த் அமர்ந்திருப்பதை பார்த்து முயன்று அவளும் அமர்ந்திருந்தாள். அரவிந்திற்கு உறக்கம் வரவில்லை. முதன் முறையாக ஒரு பெண்ணை அணைத்தது அவனை தடுமாற செய்திருந்தது. அவள் அருகாமையை மனம் விரும்பியது.

இந்த அறைக்குள் அவன்

வரும்போது கூட எந்த வகையான எண்ணமும் இல்லாமல் தான வந்தான். ஆனால் அவளை அணைத்த பிறகு, மனமும் அவள் தனக்கு வேண்டும் என்றது, உடலும் அவள் தனக்கு வேண்டும் என்றது.

இந்த மாதிரி எந்த உணர்வுக்கும் ஆட்படாமல் கீர்த்தி இருந்தாள். அரவிந்திடம் தன் எண்ணங்களை சொல்வதிலேயே இருந்ததினால், அவனுடைய அணைப்பை, அது தரும் உணர்ச்சிகளின் தூண்டுதலை அவள் உணரவேயில்லை.

தூக்கம் கண்ணை சொக்க அமர்ந்திருந்தாள். அவளை எப்படி அணுகுவது என்ற தெரியாமல், அவளை பார்ப்பதும், வேறு இடம் பார்ப்பதுமாக இருந்தான்.

இவன் இப்போதைக்கு தூங்கப்போவதில்லை என்று உணர்ந்த கீர்த்தி, நான் தூங்கட்டுமா" என்று கேட்டு அவன் பதிலை எதிர்பாராமல் உறங்க ஆயத்தமாக...

"உறங்கப் போகிறாளா இவள்"

என்பது போல அரவிந்த் பரிதாபமாக அவளை பார்த்தான்.

“என்ன” என்றாள் வாய்விட்டே கீர்த்தி, அவள் அருகில் நெருங்கி அமர்ந்தவன், “இன்னைக்கு நமக்கு ஃபர்ஸ்ட் நைட் கீர்த்தி” என்றான் தடுமாறிய குரலில்...

“அதுக்கு” என்றாள் தயங்கிய குரலில்...

“அதுக்குன்னா என்னன்னு உனக்கு புரியலையா.”

“நாளைக்கு நீங்க ஊருக்கு போறீங்க.”

“நாளைக்கு தானே போறேன், இப்ப ஒண்ணும் போகலையே...” என்று அவள் முகம் பார்த்தவன்...

“நான் கூட இன்னைக்கே நம்ம வாழ்க்கையை தொடங்க வேண்டாம்ன்னு நினைச்சு தான் வந்தேன். ஆனா இப்போவே தொடங்கினா என்னன்னு தோணுது.” என்றான் அவளையே பார்த்தபடி...

“உங்க விருப்பம்” என்றாள்

அவனைப் பார்த்து பயந்தபடியே, வந்த தூக்கம் எல்லாம் அரவிந்தின் வார்த்தைகளால் கீர்த்திக்கு பறந்து போனது.

தன்னையே பயத்தோடு பார்த்து கொண்டிருந்த கீர்த்தியை பார்த்து முன்னேறியவன், "ஃபர்ஸ்ட் நைட்ல என்ன நடக்கும்னு தெரியாமயா வந்த, இவ்வளவு பயத்தோட பார்க்குற, இதுல பயப்படறதுக்கு ஒண்ணுமேயில்லை" என்று மெதுவாக இன்னும் அவளை நெருங்கி அமர்ந்தான்.

அவனுடைய அருகாமை கீர்த்திக்கு இனம் புரியாத அவஸ்தையை கொடுக்க... அவனுள் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது. அது கொடுத்த மயக்கம் அவனுடைய தயக்கத்தை உடைக்க, கீர்த்தியை தன் வசமாக்கினான். கீர்த்தியும் மெதுவாக அவளை இழந்து அவன் வசமானாள்.

இரவு கடந்து விடியல் வந்த போது இருவரும் உறங்க முற்பட, அதற்குள் விழத்தெழ வேண்டிய கட்டாயம் அரவிந்திற்கு ஞாபகத்திற்கு வந்தது.

“எழுந்துறேன் கீர்த்தி. நம்ம உங்க வீட்டுக்கு போயிட்டு வந்து பேக் பண்ற வேலையெல்லாம் இருக்கு” என்று அவளை எழுப்ப...

“ப்ளீஸ் ஒரு பத்து நிமிஷம், என்னால எழுந்திரிக்கவே முடியலை” என்று தூங்கி வழிந்தாள் கீர்த்தி.

“சரி பத்து நிமிஷத்துல எழுந்துரு” என்று சொல்லி, அரவிந்த் குளித்து ரெடியாக எடுத்துக் கொண்ட அரைமணி நேரமும் அவள் விழிக்கவில்லை.

ஒருவழியாக அவளை எழுப்பி பாத்ரூமிற்குள் தள்ளுவதற்கள் போதும் போதும் என்றானது. அப்போதும் சிணுங்கிக் கொண்டே தான் சென்றாள் கீர்த்தி.

16

அவர்கள் இருவரும் ரூமை விட்டு வெளியே வந்ததே, குளித்து முடித்து ப்ரெஷ் ஆக தான். வீடே அமைதியாக இருந்தது. கல்யாண அலுப்பில் இருந்து இன்னும் யாரும் வெளியே வரவில்லை போல.

மணி பார்த்தால் ஏழு என்றது. கீர்த்தியே உள்ளே சென்று இருவருக்கும் வேண்டியதை குடிக்க தயாரித்து எடுத்து வந்தாள்.

“நல்லாதான் இருக்கு உன் டீ கீர்த்தி, ஆனால் எனக்கு இது போதாதே பசிக்குதே கீர்த்தி” என்றான் நிறைய உழைத்தவனாக அவளைப் பார்த்து புன்னகைத்து.

“காலைல அங்க அம்மா வீட்டுக்கு டிபனுக்கு போகணும், இன்னும் டைம் இருக்குதே, என்ன பண்ண, ஏதாவது சிம்பிளா செஞ்சு தரட்டா” என்று கேட்டுக் கொண்டிருக்கும்போது தான் ராணி, சிதம்பரம், நளினி என்று ஒருஒருவராக விழித்து எழுந்து வந்து கொண்டிருந்தனர்.

“காலைலயே ரெடியா” என்று கேட்டு அவனை ஆச்சரியமாக பார்த்தாள் நளினி.

“சாயந்தரம் லண்டன் ஃப்ளைட் கொஞ்சம் ரெடி பண்ணனும் அதான்” என்றான்.

அவனருகில் வந்தமர்ந்த அவன் தங்கை நளினி, “என்கிட்ட மட்டும் சொல்

அண்ணா... எதுக்கு இவ்வளவு அவசரமா லண்டன் போற என்ன விஷயம்”

“ம், எனக்கு அங்க ஒரு குழந்தை இருக்கு கூட்டிட்டு வரப் போறேன்” என்றான்.

“விளையாடாத அண்ணா, சீரியஸா சொல்லு எதுக்கு போற...”

“நான் முன்ன சொன்னது உனக்கு நிஜமா தெரியலையா.”

“சும்மா என்ன முட்டாளாக்காத போ” என்று சொல்லிச் சென்றாள் நளினி.

‘நிஜமாவே நான் ஒரு குழந்தையோடு வரும்போது இவர்களின் மனநிலை எப்படி இருக்கும்’ என்று தன்குள்ளேயே எண்ணிக் கொண்டான் அரவிந்த்.

ஒரு வழியாக காலையில் அவர்கள் வீட்டுக்கு விருந்துக்கு சென்றனர்.

அங்கே சென்றவன் கீர்த்தியின் தந்தையிடம், “மாமா நான் இன்னைக்கு லண்டன் போறேன்” என்றான்.

அவர் அதிர்ச்சியாக பார்த்தார்,

“என்ன மாப்பிள்ளை சொல்றீங்க.”

“முன்னமே முடிவு பண்ணலை, நேத்து தான் மாமா முடிவு பண்ணினேன்” அவர்கள் தனியாக தான் பேசிக் கொண்டிருந்தனர்.

“என்ன மாப்பிள்ளை திடீர்ன்னு.”

“நான் எல்லார்கிட்டயும் வேற வேற காரணங்கள் தான் மாமா, சொல்லியிருக்கேன். உங்க கிட்ட நிஜத்தை சொல்றேன். தண்டபாணியோட சாமான்கள், சில உடமைகள் அங்க இருக்கு கொண்டு வரபோறேன்” என்றான்.

“அவனே எங்களை விட்டு போயிட்டான், இன்னும் அதை வச்சு நாங்க என்ன பண்ண போறோம்.”

“அப்படி விட முடியாது மாமா. அவனோட உடமைகளை முறையான இடத்துல சேர்க்க வேண்டியது என் பொறுப்பு. என் நண்பன் மாமா அவன். அப்படியெல்லாம் நான் விடமாட்டேன்” என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சாப்பிட அழைக்க கீர்த்தி வர... பேச்சு நின்றது.

சாமான்கள், உடைமைகள் என்றவுடன், கீர்த்தியின் தந்தைக்கு, அவன் ஏதாவது வாங்கியிருப்பான் இந்தியாவிற்கு கொண்டு வர, அவன் பணம் ஏதாவது வந்திருக்கும் என்று இப்படி தான் யோசித்தார்.

சாப்பிட்டு முடித்தவுடன், "நீ இங்கேயே இரு கீர்த்தி நான் போய் டிக்கெட்ஸ் வாங்கிட்டு வரேன்" என்று கிளம்பினான் அரவிந்த்.

அவன் மறுபடியும் லண்டன் போகிறான் என்பதே கீர்த்திக்கு மிகுந்த சஞ்சலத்தை கொடுத்தது. ஒரே நாளில் அவனை பிரிவது இவ்வளவு கஷ்டத்தை கொடுக்குமா என்றிருந்தது. அவனை விட்டு இருக்க முடியாது என்பது போலவே தோற்றமளித்தது.

இந்த முறை அவனை விமானம் ஏற்ற வீட்டில் எல்லோருமே கிளம்பிக் கொண்டிருந்தனர். அரவிந்தின் வீட்டிலும், கீர்த்தியின் வீட்டிலும்.

அதனால் தனிமை என்பது அதற்கு பிறகு இருவருக்குமே கிடைக்கவில்லை. முயன்று தனிமையை ஏற்படுத்திக்

கொண்டு அவளை ஒரு ஐந்து நிமிடம் ரூமிற்குள் தள்ளிச் சென்றவன், "நான் எப்படி வந்தாலும் என்னை ஏத்துப்பதானே" என்றான்.

புரியாமல் பார்த்த கீர்த்தியிடம், "என்ன பிரச்சனைன்னாலும் என் கூட நிற்ப தானே கீர்த்தி" என்றான்.

"ஏன் பிஸினஸ் பண்ணி நமக்கு ஏதாவது ஹெவி லாஸ் வரவச்சிட்டீங்களா" என்றான்.

ஒன்றும் பேசாமல் அவளை அணைத்து ஒரு நீண்ட முத்தத்தை அவள் இதழில் பதித்தான். பிறகு ஒன்றும் பேசாமலேயே அவளை அழைத்து வெளியில் வந்தவன், ஏர்போர்ட் கிளம்பிவிட்டான்.

கீர்த்தி அவன் முத்தத்தை கூட அனுபவிக்க முடியாமல், அவன் ஊருக்கு செல்லும் ஏக்கத்திலேயே இருந்தாள்.

பிறகு எல்லோருமாக சென்று அவனை லண்டனுக்கு வழியனுப்பி வைத்தனர். எல்லோர் மனதிலும் ஒரே கேள்வி எதற்கு இவ்வளவு அவசரமாக அவன் லண்டன் செல்கிறான்.

அவன் மனைவி பத்திரமாக அவன் திரும்பி வரவேண்டும் என்று நினைத்திருக்க, என்ன தண்டபாணியின் உடமையை எடுத்து வரப்போகிறான் என்று அவன் மாமனார் நினைத்திருக்க, நினைத்திருக்க... "ஜாக்கிரதை அரவிந்த், பத்திரமா போயிட்டு வா" என்று அவன் அன்னை ராணி சொல்ல, ஒரு வழியாக கிளம்பினான், கனத்த மனதோடு. திரும்பி வரும் போது என்ன வரப்போகிறதோ என்று...

விமானம் ஏறியதும் எல்லோரும் அரவிந்திற்கு மறந்து விட்டனர். அவனுக்கு ஞாபகம் இருந்ததெல்லாம் குழந்தை எப்படி இருக்கும், லிசா அவளை தன்னிடம் கொடுப்பாளா, இல்லை மறுத்துவிடுவாளா. என்ன இருந்தாலும் அவள் குழந்தையின் தாய், அதனை அவளிடம் இருந்து பிரிப்பது சரியா... இந்த மாதிரியான எண்ணங்களும் சிந்தனைகளும் அரவிந்தனுள் ஓடிக் கொண்டிருந்தது.

லண்டனில் கால் வைக்கும் போதே இவனை அழைக்க ஆளை அனுப்பியிருந்தான் ஹரிஷ். நேரே

ஹாஸ்பிடல் போக அரவிந்த் ஆர்வம் காட்ட... “வீட்டுக்கு போய் ரெஃப்ரெஷ் ஆகிட்டு கூட்டிட்டு வரச் சொன்னாங்க” என்றான் வந்தவன்.

பிறகு ப்ளாட்டிற்கு போய் அவசரமாக குளித்து முடித்து அரவிந்த் ஹாஸ்பிடல் போனான். அங்கே லிசா ஒரு ரூமிலும் குழந்தை ஒரு ரூமிலும் இருந்தார்கள். குழந்தை பிறந்து மூன்று நாட்கள் ஆகியிருந்தது. பெண் மகவு.

சிறிது மூச்சு திணறல் இருந்ததால் குழந்தையை இன்குபேட்டரில் வைத்திருந்தனர்.

குழந்தையை தூரத்தில் இருந்து கண்ணாடி வழியாக பார்த்த பிறகு தான் லிசாவையே பார்க்கப் போனான்.

“கன்க்ராட்ஸ் லிசா ஃபார் த கேர்ள் பேபி” என்றான்.

“தேங்க்யூ” என்ற லிசா, “ஹவ் அபௌட் யுவர் மேரேஜ்” என்றாள்.

“பைன், வென்ட் வெல்.”

“ஸோ, தண்டுவோட தங்கை உன் மனைவியா” என்றாள் லிசா. அந்தப பேச்சு

ஹரிஷிற்கு ரசிக்கவில்லை. எப்படியாவது அவளை தண்டபாணியின் நினைவுகளில் இருந்து வெளியே வரவைக்க வேண்டும் என்று மிகவும் விரும்பினான்.

ஆனால் லிசாவிடம் குழந்தை இருக்கும் வரை அது எள்ளளவும் சாத்தியமில்லை என்று அவனுக்கு நன்கு புரிந்தது. அதனால் குழந்தையை எப்படியாவது அரவிந்திடம் கொடுத்தனுப்பி விட வேண்டும் என்று அவனும் மிகுந்த ப்ரயத்தனப்பட்டு கொண்டிருந்தான்.

இத்தனை நாட்களாக லிசாவின் அம்மாவும், ஹரிஷ{ம் சேர்ந்து அவளை சிறிது சிறிதாக மூளைச்சலவை செய்து கொண்டிருந்தனர்.

ஒரு சமயம், "தண்டபாணியின் பெற்றோரிடத்தில் குழந்தையை கொடுத்துவிடலாம்" என்றாள் லிசா.

மறு சமயம், "என் குழந்தை, நான் வளர்த்துக் கொள்வேன், யாருக்கும் கொடுக்க மாட்டேன்" என்றாள். என்ன செய்யப் போகிறாள் என்று இன்னும் சரிவர யாருக்கும் தெரியவில்லை.

ஹரிஷிடம் நட்பை மட்டும் பாராட்டினாள். அதை மீறி ஒரு சிறு நெருக்கம் கூட தென்படவில்லை. இப்போதைக்கு நட்பு மட்டுமே போதும் என்று ஹரிஷ{ம் மனம் தளராமல் லிசாவின் பின் சுற்றினான். மனம் மாற நாளாகும் என்று தெரியும், ஆனால் மாறுவாளா என்றும் சந்தேகமாக இருந்தது. என்ன எண்ணத்தில் இருக்கிறாள் என்று ஹரிஷால் அனுமானிக்கவே முடியவில்லை.

அரவிந்த் லிசாவிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்க... ஹரிஷ் தன் எண்ணத்திலேயே உளன்று கொண்டிருந்தான்.

“உன் ப்யூச்சர் ப்ளான் என்ன லிசா” என்றான் அரவிந்த்.

“மாடலிங் பண்ணலாம்னு இருக்கேன் அர்வி.”

“என்ன” என்று ஆச்சரியமாக அரவிந்த் உரக்க குரல் கொடுக்க...

அப்போது தான் ஹரிஷ் நனவிற்கு வந்தான்.

“என்ன லிசா சொல்ற” என்று அரவிந்த் கேட்க...

“யெஸ் அர்வி, மாடலிங் பண்ணலாம்னு இருக்கேன். முன்ன எனக்கு நிறைய ஆஃபர்ஸ் வந்தது. ஆனா எனக்கு விருப்பம் இல்லை. அப்புறம் தண்டுவோட என் லைஃப் கமிட் ஆகிடிச்சு. சுத்தமாவே அதை மறந்துட்டேன்.”

“இப்போ இந்த ஹாஸ்பிடல், அட்மிட் ஆகறதுக்கு இரண்டு நாள் முன்னாடி தான், எனக்கு முன்னாடி மாடலிங் ஆஃபர் பண்ணின ப்ரெண்ட்ஸ் பார்த்தேன். கொஞ்சம் பழைய மாதிரி ஆனதும் வர சொன்னாங்க... போகலாம்னு இருக்கேன்” என்றாள்.

குரல் தீர்மானமாக ஒலித்தது மாதிரி தான் அரவிந்திற்கும், ஹரிஷிற்கும் தோன்றியது.

லிசா, இந்திய தகப்பனுக்கும், இங்கிலாந்து தாய்க்கும் பிறந்த கலவை. மிக அழகானவள் என்பது நாம் சாதாரணமாக அழகான பெண்களை வர்ணிக்கும் வார்த்தை...

அதையும் மீறி மிக, மிக, மிக

அழகானவள் லிசா. அதிரூபசுந்தரி என்று கூட சொல்லலாம். அதனால் மாடலிங் உலகில் கட்டாயம் அவளுக்கு நல்ல எதிர்காலம் இருக்கும் தான். ஆனால் குழந்தை பிறகு எந்த அளவிற்கு அது சரிவரும் என்று அரவிந்த் யோசனையோடு பார்க்க...

என்ன இவள் அடுத்ததை ஆரம்பித்து விட்டாளா என்று அதிர்ச்சியோடு ஹரிஷ் பார்த்தான். அவனுக்கு இது மிகப் பெரிய அதிர்ச்சிதான்.

தண்டாபாணியோடான, லிசாவின் சந்திப்பிற்கு முன், அவளை மாடலிங் செய்ய நிறைய பேர் கேட்டு இருந்தது, ஹரிஷிற்கே தெரியும். ஆனால் லிசா ஒத்துக்கொள்ளவில்லை என்றும் தெரியும்.

இப்போது எதற்கு திடீரென்று இதை ஆரம்பிக்கிறாள், அதுவும் குழந்தை பிறந்துள்ள இந்த நிலையில்.

“சாரி ஹரிஷ்” என்று அவனிடம் கூறியவள், “மாடலிங் பண்றேன். சரி வரலான்னா இருக்கவே இருக்கு எனக்கு ஸ்டோர்ல வேலை வந்துடறேன்”

என்றாள்.

அரவிந்த் இருப்பதையும் ஹரிஷ் பொருட்படுத்தாமல் “ஸ்டோர்ல மட்டும் தானா வேலையிருக்கு உனக்கு... நான் இல்லையா... என்னை தெரியலையா இல்லை என்னை புரியலையா” என்றான் சற்று கோபமாக...

லிசா என்ன பதில் சொல்வது என்று புரியாமல் அமைதியாக இருக்க...

“டு மி ப்ராங்க், ஒரு தடவை உன்னை மிஸ் பண்ணிட்டேன் லிசா, இனிமே மிஸ் பண்ண மாட்டேன். அட் எனி காஸ்ட்” என்றான் கடுமையாக.

“அப்போ நீ என்னை மாடலிங் பண்ணக்கூடாது சொல்றியா” என்றாள் லிசா.

“நீ மாடலிங் பண்ணு, எதுவேணா பண்ண, எனக்கு எந்த அப்ஜக்ஷனும் இல்லை. உன்னோட வாழ்க்கை மட்டும் என்னோட தான் லிசா. இது இன்னைக்கு நேத்து வந்த ப்ரியமோ, காதலோ இல்லை. பல வருஷமா எனக்குள்ள இருக்கிறது. நானே நினைச்சும் என்னால மாத்தவே முடியலை” என்றான் உணர்ச்சி

வசப்பட்டு.

அரவிந்த் அமைதியாக அனைத்தையும் வேடிக்கை பார்த்திருந்தான் பேசவில்லை. அவனுக்கு லிசா மாடலிங் துறையில் நுழைய இருப்பதால் எப்படியும் குழந்தையை தன்னிடம் கொடுத்துவிடுவாள் என்ற நம்பிக்கை இருந்தது.

ஏதாவது செய்து ஹரிஷ் அதை கெடுத்துவிடக் கூடாதே என்று கடவுளை வணங்கியபடியே இருந்தான்.

ஹரிஷ் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு இருப்பதை லிசா உணர்ந்து கொண்டாள். என்ன இருந்தாலும் தனக்கு சிறுவயது முதலே நல்ல நண்பன். அவன் அப்படி இருப்பது பொறாமல், “கிவ் மி சம் டைம் ஹரிஷ், பட் எனி ஹவ் அட்லீஸ்ட் ஃபார் சம் டைம் ஐ வாண்ட் டுபி இன் மாடலிங் ஃபீல்ட்” என்றாள் அவனை நோக்கி பெருமூச்சொன்றை விடுத்து.

ஹரிஷ{ம் அவள் குழந்தை பெற்று மூன்று நாட்களே ஆகியிருப்பதால், இந்த நிலைமையில் அவளை அதிகம் குழப்ப

விரும்பாமல் அமைதியாக விடுத்தான்.

பிறகு எல்லோருடைய பேச்சும் குழந்தையை பற்றி திரும்ப... லிசாவின் முகம் மிகவும் சோபை இழந்தது.

நேரடியாகவே அரவிந்தை கேட்டாள். "எப்போ நீ இந்துவை கூட்டிட்டு போகப் போற" என்றாள்.

"இந்துவா யாரது" என்பது போல பார்க்க... "அது தானே தண்டுவோட அம்மா பேரு. அதனால அதை தான் சர்ட்டிபிகேட்டுக்கு கொடுத்திருக்கேன். அதோ என் மனசாட்சியையும் மீறி இன்னொரு வேலை செஞ்சிருக்கேன்" என்றாள்.

என்னவோ ஏதோவென்று பயந்து அரவிந்த் பார்க்க...

"குழந்தையோட அப்பா ப்ளேஸ்ல உன்னோட நேம் குடுத்திருக்கேன் அர்வி" என்றாள்...

அரவிந்த் வியப்போடு சந்தோஷமாய் லிசாவை பார்க்க... "உனக்கு அப்போதான் அவளை இங்கிலாண்ட் விட்டு கூட்டிட்டு போக

ஈஸியா இருக்கும். இல்லைன்னா கூட்டிட்டு போறது கஷ்டம். ஏன் முடியாதுன்னே சொல்லலாம். நிறைய ஃபார்மாலிட்டீஸ்” என்றாள்.

அவள் எந்த மாதிரி மனநிலையில் இதை சொல்கிறாள் என்று அரவிந்த் அவளை பார்த்து அறிய முற்பட, அவள் முகத்தில் இருந்து எதையும் அறிய முடியவில்லை.

“தேங்க்ஸ் லிசா, தேங்க்யூ வெரி மச்” என்றான்.

“நீ என் குழந்தையை நல்லா பார்த்துப்பே இல்லை” என்று லிசா கேட்க...

“அது என் குழந்தை நீ தாராளமா நம்பலாம். எப்போவும் எந்த ப்ரச்சனையும் வராது. யு கேன் ட்ரஸ்ட் மீ.”

இவள் எடுத்திருந்த முடிவு அவள் ஹரிஷிடம் கூட பகிரவில்லை. அரவிந்திடம் எல்லா விஷயத்தையும் சொன்ன பிறகு, “நான் செய்தது சரியா” என்றாள் லிசா ஹரிஷை பார்த்து...

“சரியோ, தப்போ... நீ என்ன

பண்ணினாலும் நான் உன் கூட இருக்கேன்" என்றான் ஹரிஷ், லிசா பக்கத்தில் வந்து மெதுவாக அவளை அணைத்து பிடித்தபடி...

அவன் சொன்னதை கேட்டவள், "அப்போ குழந்தையை நம்மளே வளர்க்கலாமா" என்றாள் ஹரிஷை பார்த்து...

அரவிந்த் அதிர்ந்தான். இதுவரை வேறு மாதிரி பேசியவள் இப்போது ஏன் மாற்றிப் பேசுகிறாள் என்று. அவனுக்கு புரிந்தது. ஒரு பக்கம் குழந்தையை கொடுத்து விடலாம் என்றாலும் மறுபக்கம் தாய் மனது தடுக்கிறது" என்று.

"நீ எப்படி சொல்றியோ அப்படி" என்றான் ஹரிஷ் லிசாவை பார்த்து...

"ஆனா தண்டபாணியோட பேரண்ட்ஸ், அவங்க கிட்ட குழந்தையை சேர்க்கணுமே, அவங்க குடும்ப வாரிசு அப்படி இப்படின்னு அர்வி சொல்றானே" என்றாள்.

"அவங்களுக்கும் குழந்தை முக்கியம், உனக்கும் முக்கியம், உனக்கு எது தோணுதோ செய்" என்றான் ஹரிஷ்.

“ஒரு சமயம் கொடுக்கலாம்ன்னு இருக்கு... குடுத்துடு மாடலிங் போ, உன் எதிர்காலத்தை பாருன்னு மனசு சொல்லுது, இன்னொரு சமயம், இது உன் குழந்தை இதை வளர்க்க நீதான் கடமைப்பட்டிருக்கன்னு சொல்லுது ஒரே குழப்பமா இருக்கு, நான் ஏதாவது தப்பு பண்றனோன்னு” என்றாள் கண்களில் தேங்கிய கண்ணீருடன் லிசா.

அவள் தாய் மனதின் அலைபுருதல், அங்கே இரு;நத ஹரிஷிற்கும், அரவிந்திற்கும் நன்கு புரிந்தது.

தாய் எங்கிருந்தாலும் தாய்தான். இருந்தாலும் இந்தியாவில் இருக்கும் ஒரு தாயிடம் இந்த மாதிரி ஒரு குழந்தையை கொடு என்று கேட்க முடியாது. அப்படியே கேட்டாலும் அவள் கொடுக்க மாட்டாள்.

லிசாவின் தந்தை இந்தியராக இருந்தாலும், அவள் வளர்ப்பு எல்லாம் இங்கிலாந்தை கொண்டே இருந்தது. அவள் இங்கிலாந்தை விட்டு வேறு இடம் செல்ல பிரியப்படவில்லை.

அவள் தண்டபாணியிடம் போட்ட இரண்டு கண்டிஷனே, ஒன்று திருமணம்

செய்து கொள்ள மாட்டேன். இன்னொன்று இந்தியாவிற்கு வரமாட்டேன். அந்தளவு அவள் இங்கிலாந்தில் கலாச்சாரத்தில் ஊறிப் போயிருந்தாள்.

அந்த இங்கிலாந்து கலாச்சாரமே அவளை குழந்தையை அரவிந்திடம் கொடுத்துவிடு என்று சொல்லியது, இன்னொரு பக்கம் அவள் தாய் மனது கொடுக்க வேண்டாம் என்றது.

அவள் மனம் இந்த மாதிரி அலைபுருதலில் இருக்க... ஹரிஷ{ம், அரவிந்தும் என்ன ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினர்.

லிசாவை ஹரிஷிடம் விட்டு, அரவிந்த் வெளியே வந்து மறுபடியும் குழந்தை இருந்த இடத்திற்கு வந்து, கண்ணாடி வழியாக பார்த்தான். குழந்தை படுத்திருப்பது மட்டுமே தெரிந்தது. வேறு எதுவும் தெரியவில்லை.

வெண்பஞ்சு பொதிகையாய் வெள்ளை வெளேர் என்று இருந்தது. அருகில் பார்க்க வேண்டும் என்று துடித்த மனதை முயன்று கட்டுப்படுத்தினான்.

“இது என் நண்பனின் குழந்தை, இனி இது என் குழந்தை” யாரை நம்பியும் இதை நான் விடமாட்டேன். நானே இதை வளர்ப்பேன். என் குழந்தை இது, என் குழந்தை இது, இது என் தண்டபாணியின் குழந்தை, என் குழந்தை, நானே வளர்ப்பேன்” என்று மனதில் உருபோட்டுக் கொண்டான்.

கீர்த்தியிடம் இதை தண்டபாணியின் குழந்தை என்று சொல்லிவிடுவோமா, சொல்லும்போது என் அப்பா, அம்மாவுக்கு தெரிந்துவிட்டால், என்னை வளர்க்க விடமாட்டார்கள், இல்லை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், கீர்த்தியோ, என் பெற்றோர்களோ, அவள் பெற்றோர்களோ, குழந்தையிடத்தில் உண்மையை சொல்ல வாய்ப்புண்டு.

யாரும் உண்மையை சொல்ல வேண்டியதில்லை. நானே யாரிடத்திலும் சொல்லப்போவதில்லை, சொன்னால் தானே அவர்களுக்கு தெரியும். அவர்களுக்கு தெரியவே விடப்போவதில்லை. இது என் குழந்தை, என் குழந்தை மட்டுமே, என்

தண்டபாணியின் குழந்தை, தகப்பன் இல்லாத குழந்தையாக வளரக்கூடாது, நானே அவள் தகப்பன், நானே அவள் தகப்பன் என்று உறுதி எடுத்துக் கொண்டான்.

புது உற்சாகத்தோடு மறுபடியும் லிசாவின் ரூம் வர... அதற்குள் ஹரிஷ் லிசாவை சற்று சமாதானப்படுத்தி இருந்தான், அதற்குள் லிசாவின் தாயும் வர, அவர் அரவிந்தை வரவேற்றார்.

குழந்தையின் பாஸ்போர்ட்டை பற்றி அவரிடம் பேசினான். அதற்கு குழந்தையின் பர்த் சர்ட்டிபிகேட் வேண்டும் என்றார். மேரேஜ் சர்ட்டிபிகேட், அது, இது, என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று யோசித்து, பர்த் சர்ட்டிபிகேட்டை வைத்து மட்டுமே வாங்க முடிவு செய்தனர்.

“முடியும்” என்றான் அரவிந்த். இன்னும் முகம்கூட பார்க்காத அந்த குழந்தையின் மேல் இனம் புரியாத பாசம் அரவிந்திற்கு, அந்த பாசமே, ஒரு பதிமூன்று மணிநேர பயணத்தை, லண்டனில் இருந்து சென்னைக்கு

குழந்தையுடன் தனியாக கழித்து விடுவேன் என்று அரவிந்தை சற்றும் பயமில்லாமல் சொல்ல வைத்தது.

“முடியும்” என்று சொன்ன நிமிடத்தில் அவனே தாயுமாகி, தந்தையுமாகி நின்றான் அரவிந்த்.

இன்குபேட்டரில் இருந்த குழந்தையை, அதன் அன்னையான லிசாவிடம் கொடுத்தனர்.

17

அழகு தேவதையாக இருந்தால் குழந்தை, சற்று லிசாவை கொண்டு, சற்று தண்டபாணியை கொண்டு, அவள் அன்னையின் கலரோடு, தண்டபாணியை போல் கருகருவென்ற முடியோடு, ஒரு ஆங்கிலோ-இந்திய கலவையாக இருந்தாள் குழந்தை இந்து.

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பாளோ லிசா என்று பயந்து கொண்டே இருந்தான். ஆனால் அவள் அங்கே இருந்த சிஸ்டர் சொன்ன விதத்தில் பவுடர் பாலே கலந்து கொடுத்தாள்.

எல்லாவற்றையும் கவனமாக பார்த்துக் கொண்டான் அரவிந்த். குழந்தையின் தந்தையாக அவன் அடையாளம் காட்டப்பட்டதால், அவனையும் வைத்து குழந்தையை எப்படி தூக்குவது, பிடிப்பது, எப்படி அதற்கு பால் கலந்து கொடுப்பது என்று செய்முறை விளக்கமாக சொல்லினர்.

தன் கவனத்தை அதிகம் குழந்தை மேல் வைக்காமல், எல்லாவற்றையும் லிசா அரவிந்திடமே விட விழைந்தாள், அது அவளுக்கு மிகவும் சிரமமாக இருந்தபோதிலும், கண்ணீரை வரவழைத்த போதும், தான் மிகவும் குழந்தையிடம் ஒட்டிக் கொண்டால், பிறகு பிரிவது சிரமமாக போய்விடும் என்றுணர்ந்து சற்று தள்ளியே நின்றாள்.

அதற்கு தகுந்த மாதிரி அரவிந்தும் குழந்தையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். குழந்தையை கையில் வைத்திருப்பது அவனுக்கு உலகத்தையே கையில் வைத்திருப்பது போன்ற சந்தோஷத்தை கொடுத்தது. ஹாஸ்பிடலில் இருந்து அடுத்த நாள் டிஸ்சார்ஜ் செய்தனர். குழந்தைக்கு

பாஸ்போர்ட், விசா வாங்கும் பொறுப்பை ஹரிஷ{ம், லிசாவின் தாயாரும் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

அரவிந்த் முழு நேரத்தையும் குழந்தையுடனே கழித்தான். அவனே அதற்கு மெதுவாக பால் புகட்டினான். அவனே அதற்கு டையபர் மாற்றினான். குழந்தையும் சமத்தாக அவன் கைகளுக்கு பழகிக் கொண்டது. அதிகம் அழுது சிரமப்படுத்தவில்லை சமத்தாக இருந்தது.

லிசா ஒரு நாளைக்கெல்லாம் சிறிது நேரமே குழந்தையை வைத்திருந்தாள். ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போல் மனதை குழந்தையிடம் அலைபாய விட வில்லை. குழந்தை அழுதால் அரவிந்திற்கு குரல் கொடுத்தாள்... " அர்வி, பேபி அழுகுது பாரு" என்று... அவள் ஓடிச்சென்று தூக்க முயலவில்லை. அரவிந்த் தான் ஓடினான்.

லிசாவிற்கு மனது துடித்தாலும், அதிகம் வெளிக்காட்டவில்லை. எல்லாம் என் தண்டபாணிக்காக, அவன் பெற்றோருக்காக என்று நினைத்துக் கொண்டாள். அதிகமாக குழந்தை உறங்கும் போது அதை வந்து பார்த்துக்

கொண்டிருப்பாள்.

லிசாவின் நிலைமை அரவிந்திற்கு புரிந்தாலும், எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தான். அவள் இப்படி ஒரு சித்திரவதையை அனுபவிப்பதை விட, சீக்கிரம் குழந்தையை அவளிடம் இருந்து கொண்டு போவதே மேல் போலத் தோன்ற... பாஸ்போட்டிற்கு ஹரிஷிடம் அவசரப்படுத்தினான்.

ஹரிஷ{ம் அவனை புரிந்து கொண்ட மாதிரி, சீக்கிரம் வேலைகளை பார்த்தான்.

இதனிடையில் கீர்த்தியிடம் தொலைபேசியில் பேசினாலும் அதிகமாக பேசவில்லை. குழந்தையை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்றே இருந்தது. கீர்த்தியும் அவன் வெகுதொலைவில் இருந்து பேசுவதால் இப்படி ஒன்றிரண்டு வார்த்தை மட்டும் பேசுகிறான் என்று நினைத்துக் கொள்வாள். அவளுக்கு வித்தியாசமாக எதுவும் தோன்றவில்லை.

அவளுக்கு அரவிந்திடம் நிறைய பேசவேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. ஆனால் அரவிந்த் சீக்கிரம்

வைத்துவிடுவான்.

புது இடம், பழக சற்று சிரமமாக இருந்தது கீர்த்திக்கு. வழக்கம் போல் ஷோ-ரூம் செல்வதே அவளுக்கு பெரிய ரிலீஃப். அரவிந்த் இருந்தால் அதிகம் தெரிவிக்காது. இப்போது அவனும் இல்லாததால் நிறைய தனிமையாய் உணர்ந்தாள்.

ஓரளவிற்கு மேல் என்ன பேசுவது என்று அவளது மாமியாருக்கும் தெரியவில்லை. அவளுக்கும் தெரியவில்லை நன்றாக பார்த்துக் கொண்டனர் அவளை. அவளும் கலகலப்பாக இருக்க முயற்சித்தாள் தான். அரவிந்தின் ஞாபகம் அதிகமாக இருந்தது. தான் அவனை இந்தளவிற்கு விரும்புகிறோமா என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் மீதான காதலை சந்தோஷமாக அனுபவித்தாள். இங்கே அவள் அரவிந்தை பற்றியே நினைத்துக் கொண்டிருக்க...

அரவிந்திற்கு யாரைப் பற்றியும் நினைக்க நேரமேயில்லை... அவன் அவளின் மகளோடு அவ்வளவு பிஸியாக

இருந்தான். அவனுக்கு சரியான தூக்கம் என்பதே இல்லை. அவனின் மகள் சீக்கிரம் சீக்கிரம் உறக்கத்தில் இருந்து விழித்துக் கொள்வாள்.

அப்போது தான் உறங்கியிருப்பான் எழுந்து சிணுங்குவாள், எப்படி இந்தப் பெண்கள் எல்லாம் குழந்தையை நன்றாக பார்த்துக் கொள்கிறார்களோ என்று வியப்பதே அரவிந்தின் வேலையாய் போயிற்று.

யாரிடமும் உதவி கேட்கவும் மனம் ஒப்பவில்லை. அவனுக்கு பயம். ஒரு சமயம் லிசா குழந்தையை கவனிக்க ஆரம்பித்த பிறகு, குழந்தையை கொடுக்க மறுத்துவிட்டால்... அந்த பயத்திலேயே, குழந்தைக்கான எல்லா வேலையையும் அவனே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான்.

குழந்தை பிறந்த பதினான்காவது நாள், குழந்தைக்கு பாஸ்போர்ட் கிடைத்தது. பின்பு விசாவிற்கு அப்ளை செய்ய... அதுவும் அதிர்ஷ்டவசமாக நான்கைந்து நாட்களிலேயே கிடைத்தது.

பிறந்து இருபதே நாட்களான

குழந்தையை தூக்கிக் கொண்டு பறந்து இந்தியாவிற்கு செல்ல ஆயத்தமானான் அரவிந்த். இவ்வளவு நாட்கள் இல்லாமல் மனது லிசாவிற்கு மிகவும் இறுக்கிப் பிடித்தது. தான் எதுவும் தவறு செய்கிறோமோ.

தன் குழந்தையை அடுத்தவரிடம் கொடுத்து என்ற எண்ணம் வேறு அவளை ஆட்டுவிக்க... அழுகையிலேயே கரைந்தாள்.

அரவிந்திற்கு வேறு இன்னும் பயமாகிப் போயிற்று... ஒரு வேளை குழந்தையை கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டால்... அப்படி எல்லாம் எதுவும் சொல்லவில்லை லிசா...

லிசாவும், ஹரிஷ{ம். லிசாவின் அம்மாவும் ஏர்போர்ட்டிற்கே வந்து விடை கொடுத்தனர். ஹரிஷிடம் வந்த அரவிந்த் "டேக் கேர் ஆஃப் லிசா" என்றான்.

"அவ தப்பு பண்ணிட்டேன்னு என்னைக்கும் ஃபீல் பண்ணாத அளவுக்கு குழந்தையை பார்த்துக்கோ அரவிந்த்" என்றான் ஹரிஷ்.

தோளில் ஒரு பேகை

மாட்டிக்கொண்டு, குழந்தையை தூக்கிக்கொண்டு கிளம்பிட்டான் அரவிந்த். அவனோடு தண்டபாணியின் பொருட்கள் அனைத்தும் பார்சல் செய்யப்பட்டு இருந்தது. ஹரிஷ் லிசாவிற்கு தண்டபாணியை ஞாபகப்படுத்தும் பொருட்கள் அனைத்தையும் பேக் செய்து அரவிந்துடன் இந்தியாவிற்கு அனுப்பி கொண்டிருந்தான். லிசாவும் பெரிதாக தடை எதுவும் சொல்லவில்லை.

உயிருள்ள குழந்தையையே பிரிகிறாள், இன்னும் உயிரில்லாத பொருட்கள் எம்மாத்திரம் என்று விட்டு விட்டாள்.

ஃப்ளைட் ஏறும் வரை லிசா எந்தப் பிரச்சனையும் செய்து விடக் கூடாதே என்ற கவலையில் இருந்த அரவிந்த், ஃப்ளைட் ஏறிய பிறகு வீட்டினரை எப்படி சமாளிக்கப் போகிறோம், கீர்த்தியை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று இருந்தது.

தண்டபாணியின் குழந்தை என்று சொன்னால் சற்று பிரச்சனைகள்

மட்டுப்படும் தான். ஆனால் சொன்னால் அவன் பெற்றோர் குழந்தையை அவனிடம் வைத்திருக்க விடமாட்டார்கள், அவனை வளர்க்க விடமாட்டார்கள். அது அவன் குழந்தை என்ற பட்சத்தில் தான் அவனை வளர்க்க விடுவார்கள்.

இனி அம்முவை எக்காரணம் கொண்டும் பிரிய முடியாது என்றே அரவிந்திற்கு தோன்றியது. குழந்தை இந்துவை அவன் அம்மு என்றே அழைத்தான். ஏனோ அவன் பெற்றோரை பார்த்த அரவிந்த், குழந்தையை வளர்க்க வேண்டும் என்ற நினைத்த அரவிந்த், கீர்த்தியை – அவள் எப்படி நினைப்பாள், உணருவாள் என்பதை பற்றி அதிகம் யோசிக்க மறந்து விட்டான். அது தண்டபாணியின் குழந்தை என்பதால் அதிக சலசலப்பு இராது என்பதே அவன் எண்ணம். ஆனால் அவன் தான் அதை சொல்ல விழையப் போவது இல்லையே, பிறகெப்படி அவள் சமாதானமாவாள் என்பதை மறந்தான்.

அம்முவும் சமர்த்தாக ஃப்ளைட்டில் அதிகமாக அழுது ஆர்ப்பாட்டம் செய்யாமல் உறங்கிக் கொண்டே வந்தாள்.

இரண்டு முறை பாலை கலக்கி குடிக்க வைத்தான், ஏர்ஹோஸ்டஸ்ஸின் உதவியோடு.

அவன் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பாங்கை, ஃப்ளைட்டில் இருந்த முக்கால்வாசி பேர் வியந்து பார்த்தனர். சிறு குழந்தையை அவன் வைத்திருப்பதை பார்த்து உதவிக்கு கூட இரண்டு மூன்று ஃப்ளைட்டில் இருந்த இந்தியப் பெண்கள் வர, மறுத்துவிட்டான்.

தனியாளாகவே அந்த பதிமூன்று மணிநேர பிரயாணத்தையும் சமாளித்தான். அவன் வரப்போவதை தண்டபாணியின் தந்தையிடம் தெரிவித்து யாரிடமும் சொல்லாமல் வருமாறு மிகவும் வேண்டியும் கூறியிருந்தான், கண்டிப்புடனும் கூறியிருந்தான்.

ராஜேந்திரனுக்கு என்ன ஏது என்று தெரியாவிட்டாலும், புரியாவிட்டாலும், இனி தனக்கு மகன் ஸ்தானத்தில் இருக்க போகிற மருமகனின் சொல் தட்டாமல், மனைவியிடம் கூட கூறாமல் வ்நதிருந்தார்.

ஃப்ளைட் வந்து நின்று கடைசி

ஆளாக வந்தான் அரவிந்த், ராஜேந்திரன் என்னவோ ஏதோவென்று காத்திருக்க... கைகளில் பூக்குவியலாய் குழந்தையுடன் வரும் அரவிந்தை பார்த்து அதிர்ந்தார்.

அவன் வந்ததும் அனிச்சை செயலாய் கை நீண்டது. கையில் வாங்கிய பிறகே, "யார் குழந்தை மாப்பிள்ளை இது" என்றார்.

"என் குழந்தை மாமா."

"என்ன" என்று அதிர்ந்தார், அவனை நம்பாத பார்வை பார்த்தார்.

"என் குழந்தைன்ற வார்த்தையை தவிர என் வாயில இருந்து, நான் சாகற வரைக்கும் வேற வார்த்தை வராது மாமா" என்றான்.

அவன் சொன்ன விதமே, இது என் குழந்தை இல்லை, ஆனால் என் குழந்தை என்று தான் சொல்வேன் என்று சொல்லாமல் சொல்லியது.

தண்டபாணியின் உடமைகளை எடுத்து வரப் போகிறேன் என்று அவரிடம் மட்டும் ஏற்கனவே அரவிந்த் சொல்லியிருந்ததால், அவருக்கு இது

தண்டபாணியின் குழந்தையாக இருக்குமோ, என்று மெதுவாக தோன்றியது.

மெதுவாக அவர் கைகள் நடுங்க ஆரம்பிக்க... குழந்தையை அரவிந்திடமே கொடுத்தவர், அங்கே இருந்த இருக்கையில் அப்படியே அமர்ந்துவிட்டார்.

அமர்ந்தவர் மறுபடியும், "கொடுப்பா, கொடு" என்று உணர்ச்சி வசப்பட்டு கேட்டு, அக்குழந்தையை வாங்கி அதன் ஜாடையை ஆராய, அவருக்கு அவ்வளவாக ஜாடை எல்லாம் பார்க்க தெரியவில்லை. அதுவுமில்லாமல் தண்டபாணியின் ஜாடை சிறிது இருந்தாலும், லிசாவின் பதிப்பே அதிகமாக இருந்தது. அதனால் லிசாவையும் பார்த்திருந்தால் ஒரு வேளை கண்டு பிடித்திருக்கலாம். இப்போது லிசாவை பார்க்காததால் எதுவும் சரிவர அவருக்கு தெரியவில்லை.

முயன்று அரவிந்திடம், "மாப்பிள்ளை! இது தண்டபாணியோட குழந்தையா" என்றார்.

மாமனார் புத்திசாலிதான் கண்டுபிடித்து விட்டாரே என்று இருந்தது. “ஆமாம்” என்பது போல தலையை மட்டும் ஆட்டினான். வேறு எதுவும் பேசவில்லை.

அவர்கள் பேசுவதற்கு எந்த தடையுமில்லாமல், அம்மு நல்ல உறக்கத்தில் இருந்தாள்.

அரவிந்த் தலையசைத்தும், ராஜேந்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை. “நம்ம தண்டபாணியோட குழந்தையா” என்றார் மறுபடியும்.

“ஒரு தடைவ உங்க வாயால சொன்னது போதும் மாமா, இனி எப்பவும் சொல்லாதீங்க” என்றான் அரவிந்த்.

“ஏன்னா இந்த விஷயத்தை நான் யார்கிட்டயும் சொல்லப்போறது இல்லை. உங்ககிட்ட மட்டும் ஏன் சொல்றேன்னா... நீங்க தண்டபாணியோட இழப்புல இடிஞ்சு போயிருக்கீங்க... நீங்களும் தண்டபாணியும் ரொம்ப நெருக்கம்னு தெரியும், அதனால தான் அதுமட்டும் இல்லாம... நான் இந்தக் குழந்தையோட அம்மாகிட்ட உங்ககிட்ட சேர்ப்பிக்கறேன்னு சொல்லிதான்

வாங்கிட்டு வந்திருக்கேன். இது உங்க குடும்ப வாரிசு, உங்க கிட்ட கட்டாயம் குடுக்கணும் அது இதுன்னு சொல்லி குழந்தையை கொண்டு வந்துட்டேன். அதனால நீங்க நான் இப்போ அவளுக்கு பேசப்போறேன், அவகிட்ட குழந்தையை பார்த்துட்டேன்னு சொல்லணும்" என்றான்.

அவன் பேகில் இருந்த லேப்பை எடுத்து, அங்கேயே ஸ்கைப்பில், லிசாவுடன் பேசினான். தண்டபாணியின் தந்தையை லிசாவிற்கு தெரியும். முன்பும் தண்டபாணி ஸ்கைப்பில் பேசும்போது மறைந்திருந்து பார்த்திருக்கிறாள்.

குழந்தையுடன் அவர் கேமரா முன் வந்த போது, லிசா அவரைப் பார்த்து அதிர்ந்தாள். கம்பீரமாக சிரித்த முகத்தோடு அவரைப் பார்த்திருக்கிறாள். இப்போது இளைத்து, கருத்து, பொலிவில்லாத முகத்தோடு பார்க்கவே பரிதாபமாக இருந்தார்.

லிசாவை ராஜேந்திரன் மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார். இவ்வளவு அழகான பெண், இவனோடு வாழ நம்

தண்டபாணிக்கு கொடுத்து வைக்கவில்லையே என்றிருந்தது.

இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் சிறிது நேரம் பார்த்தவர்கள், பின்பு, "ரொம்ப நன்றிம்மா, எங்க குடும்ப வாரிசை எங்ககிட்ட கொடுத்ததுக்கு" என்றார் கண்களில் நீர் தழும்ப...

அமைதியாக லிசாவும் கண்ணீரோடு அவரையே பார்த்திருந்தாள், பின்பு "தண்டுவோட குழந்தை அங்கிள் அது, தண்டுவோட ஃபேமிலிகிட்டயே சேர்ந்துடுச்சு."

"இருந்தாலும் என்னைவிட உனக்கு தான்மா இவள்மேல உரிமை அதிகம், இருந்தாலும் இவளை விட்டுக்கொடுத்ததுக்கு ரொம்ப ரொம்ப நன்றிம்மா" என்றார் மறுபடியும்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே குழந்தை சிணுங்க, "ஓ.கே. லிசா, நாம அப்புறம் பேசலாம்" என்று காலை கட் செய்தவன், குழந்தையை அவசரமாக கவனித்தான்.

மளமளவென்று பாலை கலக்கி அவன் பால் பாட்டில் மூலம், குழந்தைக்கு

கொடுக்கும் பாங்கை வியந்து பார்த்துக் கொண்டிருந்தார் ராஜேந்திரன். கடவுள் தனக்கு அரவிந்தை மருமகனாக கொடுக்கவில்லை, இன்னொரு மகனாகத்தான் கொடுத்திருக்கிறார் என்று உணர்ந்து கொண்டார்.

குழந்தையை லிசாவிடம் இருந்து தங்களுக்காக கேட்டு வாங்கி வருவது என்பது சாதாரண விஷயமில்லை என்று உணர்ந்தே இருந்தார். தாய் தன் குழந்தையை கொடுப்பது, அதுவும் மனமறிந்து கொடுப்பது என்பது மிகப்பெரிய விஷயம். அதை தங்களுக்காக நடத்திக் காட்டியிருக்கிறான் அரவிந்த்.

கண்கள் பனிக்க தன்னை பார்த்துக் கொண்டிருந்தவரிடம், சீரியஸாக பேச ஆரம்பித்தான் அரவிந்த்.

“இந்த விஷயம் நம்ம குடும்பத்தையோ, இல்லை இங்க இந்தியாவிலோ, நம்மளைத் தவிர வேற யாருக்கும் தெரியக்கூடாது மாமா. கண்டிப்பா தெரியக்கூடாது. அத்தைக்கோ கீர்த்திக்கோ கூட கண்டிப்பா தெரியக்கூடாது” என்றான் மறுபடியும்.

“ஏன் மாப்பிள்ள, அவங்களுக்கு தெரிஞ்சா என்ன?”

“அவங்களுக்கு தெரிஞ்சா ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில என்னை பெத்தவங்களுக்கு தெரிய வாய்ப்பிருக்கு. அவங்க அது தண்டபாணியோட குழந்தையா இருந்தாலும் நான் வளர்க்கறத விரும்பமாட்டாங்க. அம்மு என் குழந்தையா தான் வளரணும் மாமா. அப்பா இல்லாத குழந்தையா அது வளர்றத நான் விரும்பலை. அது என் தண்டுவோட குழந்தை. எனக்கும் தண்டபாணிக்கும் நிறைய வருஷ பழக்கம் இல்லைன்னாலும் இருந்த கொஞ்ச வருஷத்துல நாங்க ரெண்டு பேருமே ஒருத்தருக்கொருத்தர் இன்றியமையாதவங்க.”

“அம்மு என் குழந்தை மாமா, அதை கீர்த்திக்காக கூட நான் மாத்த விரும்பலை.”

“ஆனா கீர்த்தியை எப்படி சமாளிப்பீங்க மாப்பிள்ள.”

“கொஞ்சம் கஷ்டம் தான். அவ அந்த வீட்லயே இருந்தா கூட போதும்,

சமாதானப்படுத்திடுவேன். ஆனா என்னை விட்டு பிரிஞ்சு போய்டுவாளோ என்ற பயம்தான் எனக்கு.”

“உண்மைய சொல்லி எங்க அப்பா அதெல்லாம் முடியாது, நீ குழந்தைய வளர்க்கக்கூடாது போன்னு சொல்லிட்டா அதுவும் பிரச்சனை. இனி நான் புதுசா வேலைக்கு போய் எண்ணி எண்ணி செலவு பண்ணல்லாம் முடியாது. எனக்கு எங்கப்பாவோட தொழிலும் வேணும்” என்றான் தீர்மானமாக.

அவன் பலதையும் எண்ணிப் பார்த்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறான் என்று ராஜேந்திரன் புரிந்து கொண்டார். இப்போதைக்கு அவன் போக்கிலேயே போவோம் என்று முடிவு செய்தவர், தண்டபாணியின் வாரிசாக ஒன்று வந்ததே என்று சந்தோஷமாக இருந்தார்.

பின்பு தண்டபாணியின் பொருட்களை எல்லாம், அவரிடம் கொடுத்து விட்டவன், குழந்தையை தூக்கிக் கொண்டு தன் வீட்டிற்கு சென்றான்.

காலை ஒன்பது மணி எப்படியும்

இன்னும் அப்பாவும், கீர்த்தியும் கிளம்பி இருக்க மாட்டார்கள் என்று தெரியும்.

வாட்ச்மேன் கேட்டை திறந்து விட, சிறிது தூரம் அந்தக் குழந்தையை தூக்கிக்கொண்டு நடப்பதே சிரமமாக இருந்தது. கால்கள் பின்னியது. என்ன வந்தாலும் பார்த்து விடலாம் இது என் குழந்தை என்று மனதை திடப்படுத்திக் கொண்டான்.

யாரும் வெளியில் காணவில்லை. உள்ளே நுழைந்து ஹாலில் உள்ள சோபாவில் குழந்தையை படுக்க வைப்பதற்கும், அவன் அம்மா ஹாலிற்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

அரவிந்த் பார்த்தவர், "அரவிந்த் எப்போடா வந்த" என்று ஏறக்குறைய சந்தோஷத்தில் கத்தினார்.

அவர் கத்திய கத்தலில் அம்மு என்னவோ ஏதோவென்று பயந்து அழ ஆரம்பித்தது. குழந்தையின் அழுகையை பார்த்த பிறகுதான், "யாருதுடா குழந்தை" என்று வேகமாக குழந்தையின் அருகில் வந்தார்.

அரவிந்த் ஒன்றும் பேசாமல்

அமைதியாக நின்றிருந்தான். “யாருதுடா சொல்லு” என்று மறுபடியும் ஒரு அதட்டல் போட்டார்.

அதற்குள் இந்த அமளி துமளி சத்தத்தை கேட்டு சிதம்பரமும், கீர்த்தியும் வந்தனர். அதற்குள் குழந்தையின் அழுகை இன்னும் அதிகமாகியது.

வெளியில் வந்த கீர்த்தி, ஹாலில் ஒரு குழந்தை அழுது கொண்டிருப்பதை பார்த்தாள். பக்கத்தில் அரவிந்த் நின்று கொண்டிருப்பதையும் ராணி அவனிடம் கேள்வி கேட்டுக்கொண்டு நிற்பதையும் பார்த்தவள், குழந்தையின் அருகில் சென்றாள்.

அது இரண்டு கைகளையும், கால்களையும் விரித்து, வீரிட்டு அழுது கொண்டிருந்தது. பொறுக்க முடியாமல், குழந்தையை கையில் பக்குவமாக எடுத்து அணைவாக பிடித்தாள், கீர்த்தி. குழந்தையின் அழுகை சற்று மட்டுப் பட்டது.

அழுகை சற்று குறைந்தவுடன், கீர்த்தியும், “யார் குழந்தைங்க இது” என்றாள் அரவிந்தை நோக்கி...

அரவிந்த், “என் குழந்தை இது” என்றான்.

புன்னகைத்தாள் கீர்த்தி, “சும்மா விளையாண்டு அத்தையை டென்ஷன் பண்ணாதீங்க, யார் குழந்தை இது” என்றாள்.

சிதம்பரமும், “டேய் அரவிந்த்! எதுல எதுல விளையாடறதுன்னு உனக்கு விவஸ்தையேயில்லை. யார் குழந்தைடா இது” என்றார்.

எல்லோரும் கேள்வி கேட்க, ராணி அவனை சந்தேகமாக பார்த்தார். அதற்குள் குழந்தையின் அழகில் லயித்திருந்தாள் கீர்த்தி.

“யார் குழந்தைங்க இது ரொம்ப அழகா இருக்கு, இங்கிலிஷ் பேபி மாதிரி இருக்கு...”

“அம்மா இங்கிலிஷ், அப்பா இந்தியன்” என்று சொன்ன அரவிந்த் குழந்தையின் பாஸ்போர்ட்டையும், பெர்த் சர்ட்டிபிகேட்டையும் எடுத்து சிதம்பரத்திடம் கொடுத்தான்.

அதில் தாய் என்ற இடத்தில் லிசா

என்றிருந்தது. தந்தை என்ற இடத்தில் அரவிந்த் என்று இருந்தது. அவன் விளையாடவில்லை சீரியஸாகதான் சொல்கிறான் என்று அப்போது தான் சிதம்பரத்திற்கு உரைத்தது. அப்படியே அமர்ந்து விட்டார்.

குழந்தையை மறுபடியும் சோபாவில் கிடத்திய கீர்த்தி வேகமாக வந்து பர்த் சர்ட்டிபிகேட்டையும், பாஸ்போர்ட்டையும் வாங்கிப் பார்க்க... அதிர்ந்தாள்.

அரவிந்தை பார்த்து, "இல்லை நான் இதை நம்ப மாட்டேன்" என்றாள். அவள் கூறிக்கொண்டிருக்கும் போதே குழந்தை அழ, அரவிந்த் அதற்கு பாலை பக்குவமாக கலக்கி கொடுக்க ஆரம்பித்தான். அதை அதிர்ச்சியோடு மொத்த குடும்பமும் பார்த்திருந்தது.

18

சிதம்பரம் மெதுவாக, "இந்தக் குழந்தையோட அம்மா" என்றார்.

"அவ வரமாட்டா, நானும் அவளும் பிரிஞ்சிட்டோம், அதனால தான்

குழந்தையை என்கிட்ட குடுத்துட்டு அவ விலகிட்டா" என்றான்.

அவளருகில் வந்த கீர்த்தி, "இல்லை, நான் நம்பமாட்டேன் பொய் சொல்றீங்க நீங்க, நீங்க என்னை ஏமாத்தமாட்டீங்க."

"இல்லை கீர்த்தி. நான் உன்னை ஏமாத்தலை, நீதான் என் மனைவி, அதே மாதிரி இதுவும் என் குழந்தை தான்" என்றான்.

"இந்தக் குழந்தையோட அம்மா எங்க இருக்கா..."

"லண்டன்ல."

"நீங்க லண்டன் போனதே எய்ட் மந்த்ஸ் முன்னாடி தான் அப்புறம் எப்படி குழந்தை பிறக்கும்" என்று மடக்கி கேள்வி கேட்டாள் கீர்த்தி.

'அய்யோ இவளை சமாளிப்பது பெரும்பாடாய் இருக்கும் போலிருக்கிறதே' என்று மனதிற்குள்ளேயே நினைத்த அரவிந்த், "இவ எய்ட் மந்த்ஸ்லயே பொறந்துட்டா, இப்போ ட்வென்டி டேஸ் பேபி இவ, பேர்

இந்து, நான் கூப்பிடறது அம்மு” என்றான்.

“லிசான்றது யாரு” என்றாள் பாஸ்போர்ட்டைப் பார்த்து.

“குழந்தையோட அம்மா.”

“இப்போ எங்கே அவ.”

“அதான் சொல்றேனே லண்டன்ல.”

“நீங்க எப்ப அவளைப் பிரிஞ்சீங்க.”

“இங்க வர்றதுக்கு முன்னாடியே பிரிஞ்சிட்டேன், குழந்தை எனக்கு வேணாம் நீயே வளர்த்துக்கோன்னு அவ சொன்னா. அதனால குழந்தையை வாங்க தான் லண்டன் போனேன். இப்போ நாங்க பிரிஞ்சிட்டோம். சட்டப்படி அவ என் மனைவி கிடையாது. அதனால எந்தப் பிரச்சனையும் வராது” என்றான் நீளமாக அரவிந்த்.

“அப்போ, எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க” என்றாள் ஆவேசமாக கீர்த்தி...

நடப்பதை எல்லாம் ஒரு

பார்வையாளராக சிதம்பரமும் ராணியும் பார்த்திருந்தனர். ஒரு குழந்தை பெற்று இங்கே கொண்டு வரும் அளவுக்கு தன் மகன் யாரோடும் பழகியிருப்பான் என்பதை சிதம்பரத்தால் நம்ப முடியவில்லை. என்ன சொல்வது, என்ன செய்வது என்றே தெரியவில்லை.

“என்னைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பப்படறேன்னு சொல்லி தானே லண்டன் போனீங்க. அப்புறம் எப்படி இன்னொரு பொண்ணோட பழக முடிஞ்சது. நீங்க பொய் சொல்றீங்க. நீங்க அப்படி எல்லாம் செஞ்சிருக்க மாட்டீங்க... இது பொய் தானே” என்றாள் மறுபடியும் ஆத்திரத்தோடு.

“இல்லை கீர்த்தி, இது பொய் இல்லை. இது என் குழந்தை, அம்மு என் குழந்தை. அதே மாதிரி நீ மட்டும் தான் கீர்த்தி இனிமே என் மனைவி. நம்பு கீர்த்தி. இது என் குழந்தை, இல்லையில்ல நம் குழந்தை” என்றான்.

“எப்படி உங்களால இப்படி எல்லாம் பேசமுடியுது” என்றாள் கண்ணீருடன்...

சிதம்பரத்திற்கும் ராணிக்கும் அதுவரையுமே என்ன பேசுவது என்று தெரியவில்லை. புது இடம், புது சீதோஷ்ண நிலை என்பதாலோ என்னவோ மறுபடியும் அம்மு அழ ஆரம்பித்தாள்.

எல்லோர் பார்வையும் குழந்தையின் மேல் திரும்பியது. அது 'வீல் வீல்' என்று அழுதது. பொறுக்க முடியாமல் அரவிந்த், சென்று கையிலெடுக்க, இப்போது அழுகை குறைந்தது.

கீர்த்திக்கு ஒன்றுமே புரியவில்லை, தான் இப்போது என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்கக் கூட அவளால் முடியவில்லை. பிரமை பிடித்த மாதிரி இருந்தது.

அங்கிருந்த சோபாலேயே மடிந்து அமர்ந்து விட்டாள்.

"இந்தக் குழந்தை, இதை என்ன பண்றது" என்றார் அரவிந்தின் அம்மா ராணி.

"இதென்னம்மா கேள்வி என் குழந்தை என்னோடதான் இருக்கும். முடியாதுன்னு சொன்னா, நானும் என்

மகளும் போய் வாசல்ல தான் நிற்போம்" என்றான் அரவிந்த்.

"நீயேன்டா போய் வாசல்ல நிக்கற, நீ பண்ணியிருக்கிற காரியத்துக்கு, நாங்க தான்டா எல்லோர் முன்னாடியும் தலைகுனிஞ்சு நிக்கணும். ஊர்ல இருக்கிறவங்களுக்கு என்னடா பதில் சொல்வ. அத விட, உன் பொண்டாட்டி அவ கிட்ட என்ன பதில்டா சொல்லப் போற."

"இனிமே இப்படி பண்ண மாட்டேன். இந்த ஒரு தடைவ மன்னிச்சிடச் சொல்லு."

"என்னடா நீ என்ன சாதாரண காரியமா பண்ணியிருக்க, அசால்டா மன்னிக்கச் சொல்ற. இதுகூட ஒரு கொலைக் குற்றத்திற்கு சமம்தான்டா, ஒரு பொண்ணோட உணர்ச்சியை நீ கொன்னு இருக்க" என்றார் சிதம்பரம்.

கீர்த்தி சும்மா இருந்தாகூட இவங்க பேசிப் பேசியே அவளை உசுப்பேத்தி விடறாங்களே என்று இருந்தது அரவிந்திற்கு.

கீர்த்தி எல்லாவற்றையும் பார்த்து

சோர்ந்து அமர்ந்திருக்க, சம்மந்தி வீட்டில் தெரிவிப்பது தான் உத்தமம் என்று நினைத்த சிதம்பரம், ராஜேந்திரனுக்கு... போன் செய்து அவரையும் அவரது மனைவியையும் வீட்டிற்கு வரமாறு அழைத்தார்.

ராஜேந்திரன் இதை ஒரு மாதிரி எதிர்பார்த்திருந்தார். அதனால் போன் செய்ததுமே மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பி வந்தார்.

அவருக்கு எந்த விஷயமும் தெரியும் என்பது போல் காட்டவில்லை. வீட்டில் மனைவியிடம் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. தண்டபாணியின் உடமைகளைப் பார்த்து அப்போதான் இந்துமதி ஒரு பாட்டம் அழுது முடித்திருந்தார்.

சம்மந்தி வீட்டில் இருந்து போன் வரவும், என்னவோ என்று கிளம்பி வந்தால், குழந்தையைப் பார்த்து இந்துமதி அதிர்ந்தார். ராஜேந்திரன் அதிர்ந்த மாதிரி காட்டிக் கொண்டார். அவர்கள் இருவரையும் பார்த்த அரவிந்தும் ஒன்றும் தெரியாதவன் மாதிரி “என்னை

மன்னிச்சிடுங்க” என்றான் பொதுவாக.

“மன்னிப்புன்னு ஒரு வார்த்தை கேட்டா எல்லாம் சரியாயிடுமா” என்று இந்துமதி கேட்க...

“அதைத் தவிர வேற வார்த்தை என்கிட்ட இல்லை, இனி மேல இப்படி ஆகாம பாத்துக்கறேன்” என்றான் அரவிந்த்.

“செய்யறது எல்லாம் செஞ்சிட்டு இப்படி இனிமே ஆகாம பாத்துக்கறேன்னு சொன்னா என்ன அர்த்தம்” என்றார் ஆவேசமாக.

“இந்து உணர்ச்சி வசப்படாத” என்றார் ராஜேந்திரன்.

“எப்படி? எப்படி? உணர்ச்சி வசப்படாம இருக்க முடியும், என் பொண்ணோட வாழ்க்கை” என்றார் ராஜேந்திரனைப் பார்த்து இந்துமதி.

“மாப்பிள்ளை செஞ்சது தப்பாவே இருக்கட்டும், ஆனா அந்த தப்பை எத்தனை பேர் ஒத்துக்கறாங்க... அதுக்காகவாவது நாம மாப்பிள்ளைய பாராட்டணும்” என்றார்.

“ஏன் நீங்களும் ஆண் வர்க்கம் அப்படின்றதால அவருக்கு சப்போர்ட் பண்றீங்களா” என்று அவரிடமும் சண்டைக்கு வந்தார் இந்துமதி.

“என்ன இந்து இப்படி பேசற, ஊர்ல எத்தனையோ நடக்குது, அதுல இது ஒண்ணுமேயில்ல, கல்யாணத்துக்கு முன்னாடி ஏதோ தப்பு பண்ணிட்டார். இப்போ தான் இனிமே அந்த மாதிரி நடக்காதுன்னு உத்திரவாதம் கொடுக்கறாரே.”

“இந்த குழந்தை, அதை என்ன பண்ண.”

“அவங்க அவங்க பண்ணதுக்கு குழந்தை என்ன பண்ணும், அது மேல எல்லாம் நாம் எதையும் காட்டக் கூடாது” என்றார் ராஜேந்திரன்.

அந்த நேரம் பார்த்து சரியாக அம்மு அழ, மறுபடியும், பால் கலக்கி அரவிந்தே குடிக்க வைத்தான்.

பார்த்த அரவிந்தின் அம்மா, “ஏன்டா குழந்தை அழுதா உடனே பாலைக் கலக்கி, பாலைக் கலக்கி குடிக்க வச்சிடுவியா, அதுக்கு ஜீரணமாக

வேண்டாம். என்னடா பண்ற” என்று அரவிந்திடம் சலித்தார். ஆனாலும் வந்து குழந்தையை கையில் வாங்கவில்லை. தூர இருந்தே தான் சொன்னார்.

வேறு என்ன செய்வது என்று தெரியாமல் அரவிந்த் குழந்தையை வைத்துக் கொண்டு சற்று தடுமாற...

“குழந்தைய வாங்கு கீர்த்தி” என்றார் அவளைப் பார்த்து ராஜேந்திரன்.

என்ன தன் தந்தை இப்படிச் சொல்கிறார் என்று கீர்த்தி அதிர்ந்து பார்க்க...

“நடந்ததை யாராலையும் மாத்த முடியாது, நடக்கப் போறதைப் பேசலாம். முதல்ல குழந்தையைப் பாரு” என்றார் ராஜேந்திரன் திரும்பவும்,

இந்த முறை சிதம்பரமும், ராணியும் கூட அவரை வியந்து பார்த்தனர். “என்னடா இது, வந்து பெரிய பிரச்சனையை கிளப்புவார்கள் என்று பார்த்தால், அரவிந்திற்கு சாதகமாகவே இவர் பேசுகிறாரே. நல்ல மாமனார், நல்ல மருமகன்” என்று மனதில் ஒரே மாதிரி இருவருக்கும் தோன்ற, சிதம்பரமும்,

ராணியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

குழந்தை மறுபடியும் அழ, தன் தந்தை சொல்லை மதித்து, கீர்த்தி குழந்தையை வாங்கினாள். வாங்கி அதைச் சற்று அணைத்த மாதிரி பிடிக்க, குழந்தையின் அழுகை நின்றது.

இப்போது அது லேசாக உதடசைக்க, அது தன்னைப் பார்த்து சிரிக்கிறதோ என்று கீர்த்திக்கு தோன்றியது. அதன் அழகில் மறுபடியும் லயித்தாள்.

பிறகு தன் தந்தையைப் பார்த்து, “எப்படிப்பா இவ்வளவு சாதாரணமா பேசறீங்க... நீங்க இப்படி பேசுவீங்கன்னு நான் எதிர்பார்க்கலைப்பா” என்றாள் அழுகையோடு.

“இப்போ இந்த விஷயத்தையே மறைச்சு, மாப்பிள்ளை தன்னை உத்தமனா காட்டிக்கிட்டு உன்னோட வாழ்ந்திருந்தா நீ என்னம்மா பண்ணியிருப்ப, குழந்தைய எங்கயாவது ஆசிரமத்துல விட்டுட்டு உன்னோட வாழ்ந்திருக்கலாமே மா, எதுக்காக அதைத்

தூக்கிட்டு வந்து இத்தனை பிரச்சனையை சந்திக்கணும்" என்றார்.

அவர் சொல்வது அரவிந்தை நூறு சதவிகிதம் நல்லவனாகவே காட்டியது. என்ன இதற்கு பதில் சொல்வது என்று கீர்த்திக்கு தெரியவில்லை.

"அப்போ என்னை என்னப்பா செய்யச் சொல்றீங்க... இவரோட துரோகத்தை மறந்து, இவர் என்னை ஏமாத்தினதை மறந்து இவரோட வாழச் சொல்றீங்களா."

"வாழ்ந்தா
தப்பொண்ணுமில்லைன்றது என்னோட எண்ணம். இல்லை வாழமுடியாது, நான் உங்களோட வந்துடறேன்னு சொன்னாலும் எனக்கு சம்மதம்."

இப்போது அதிர்வது அரவிந்தின் முறையாயிற்று, என்ன இவர் இப்படிப் பேசுகிறார் என்று அவரை அரவிந்த் பரிதாபமாகப் பார்க்க, அவர் மேலும் தொடர்ந்தார்.

"ஆனா, நீ என்னோட வந்தா, இவரை முழுமையா விட்டுடணும், விவாகரத்து வாங்கிடணும், இரண்டாம்

கல்யாணம் பண்ணிக்கணும். அதுக்கு சம்மதம்னா வா" என்றார்.

இப்போது அதிர்வது கீர்த்தியின் முறையாயிற்று. என்ன விவாகரத்து, இன்னொரு கல்யாணமா, தன்னால முடியுமா என்று அதிர்ச்சிக்குள்ளானாள்.

அவர் பேச்சிலேயே தன்னுடைய மகளை மடக்கி விட்டது. அங்கிருந்த எல்லோருக்கும் புரிந்தது. அரவிந்திற்கு இப்போது தான் மூச்சே சரியாக வந்தது. எங்கே கீர்த்தி தன்னைப் பிரிந்து சென்று விடுவாளோ என்று அச்சப்பட்டுக் கொண்டே இருந்தான். ஆனால் அவள் அதிர்ந்த முகம், அவள் அப்படி எல்லாம் செய்ய மாட்டாள் என்று அரவிந்திற்கு உணர்த்தியது.

அரவிந்திற்கு அவளைப் பார்க்க பாவமாக இருந்தது. இருந்தாலும் அம்முவிற்காக இதை தான் செய்துதான் ஆக வேண்டும் என்று அமைதியாக இருந்தான்.

எல்லோரும் முடிவு கீர்த்தியின் கையில் என்பதுபோல, கீர்த்தியையே பார்ப்பது புரிந்தது.

“என்னால இவரோட வாழ முடியாதுப்பா, என்னை ஏமாத்தினவரோட எப்படிப்பா நான் வாழ்வேன். அதுக்காக இன்னொரு கல்யாணம் எல்லாம் நினைச்சுக்கூட பார்க்க முடியாதுப்பா” என்றாள் அழுகையுடன்.

“இருந்தா இங்கேயே இரும்மா, எங்களோட வரதுன்னா, கண்டிப்பா நீ மொத்தமா இவங்களை விட்டு வந்துடணும், இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கணும்” என்றார் மிகவும் கண்டிப்புடன் ராஜேந்திரன்.

என்ன செய்வது என்று அறியாமல், கீர்த்தி மௌனமாக கண்ணீர் விட, அதைப் பார்த்தும் பொறுக்க முடியாத தந்தை மனது, “ஒரு ரெண்டு நாள் நம்ம வீட்ல வந்து இரும்மா, பிறகு எதுன்னாலும் பேசிக்கலாம்.” என்றார் கீர்த்தியை சமாதானப்படுத்தும் பொருட்டு.

தன் சம்மந்தியிடமும் அதே சொன்னார். “ஒரு ரெண்டு நாள் கீர்த்தியை கூட்டிட்டுப் போறோம் சம்மந்தி. பொண்ணு மனசு கொஞ்சம் ஆறட்டும்” என்றார்.

“தாராளமா கூட்டிட்டுப் போங்க சம்மந்தி, என் பையன் பண்ணியிருக்கிற வேலைக்கு, நான் தலை நிமிர்ந்து நடக்க முடியுமான்னு தெரியலை.”

“என் பொண்ணுக்கு சொன்னதே தான் உங்களுக்கும், அவர் இதை மறைச்சிருந்தார்னா, நமக்குத் தெரியப்போகுதா இல்லை நான் காரணமேயில்லைன்னு சொன்னாலும் நம்பியிருக்கத்தான் போறோம். அவரே மன்னிச்சுடுங்க சொல்றாரு, இனிமே நடக்காதுன்னும் சொல்றாரு, ஒரு சந்தர்ப்பம் குடுங்க சம்மந்தி” என்று சொன்னார்.

ராஜேந்திரனுக்கு சற்று பயமாகக் கூட இருந்தது. நாளை என்றாவது இது தண்டபாணியின் பிள்ளை என்று தெரிய வரும்போது, சிதம்பரம் தன்னை எப்படி எடுத்துக் கொள்வாரோ என்று.

எதுவாகினும் வரும்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போது குழந்தை முக்கியம் என்று விட்டு விட்டார்.

எதுவும் எடுக்கவில்லை ஒன்றுமில்லை, “வாங்கப்பா போகலாம்”

என்று அப்படியே கிளம்பினாள் கீர்த்தி;.

“குழந்தையை எடுக்காம கிளம்புறியேம்மா” என்றார் ராஜேந்திரன்.

கீர்த்தியும், இந்துமதியும் அவரை அதிர்ந்து பார்க்க... அரவிந்தும் அதிர்ந்து பார்த்தான்.

“என்னை விட்டுட்டு அம்மு இருக்க மாட்டா, மாமா...” என்றான் பதட்டத்தோடு.

“அதெல்லாம் இருப்பா விடுடா, அவ தூக்கிட்டு போனா போகட்டும், அவளோட துணையில்லாம நீ வளர்த்துருவியா” என்று ராணி ஒரு அதட்டல் போட... அனுப்புவதா, வேண்டாமா என்று தடுமாறினான் அரவிந்த்.

“தூக்கிக்கோ கீர்த்தி குழந்தையை” என்று மறுபடியும் ராஜேந்திரன் சொல்ல, கீழே வைத்த குழந்தையை மறுபடியும் தூக்கிக் கொண்டாள் கீர்த்தி.

“இருங்க அவளோட திங்க்ஸ், பால் பவுடர் எல்லாம்” என்று அதையெல்லாம் எடுத்துக் கொடுத்த அரவிந்த், அவளுக்கு

பால் எப்படி கலக்க வேண்டும் என்று சொல்ல, வேண்டா வெறுப்பாக கேட்டாள் கீர்த்தி.

பின்பு குழந்தையைத் தூக்கிக் கொண்டு செல்ல, புயலடித்து ஓய்ந்தது போல இருந்தது ராணிக்கும், சிதம்பரத்திற்கும், அப்படியே அமர்ந்து விட்டனர். தூக்கம் வெகுவாகக் கண்களை சுழற்ற, அரவிந்தும் பிறகு தன் தாய் தந்தையிடம் ஒன்றும் பேசாமல், சென்று படுத்துக் கொண்டான்.

கீர்த்தி தன் தந்தை இப்படி ஒரு முடிவை எடுப்பார் என்று நினைக்கவேயில்லை. தன் அண்ணன் இறந்த பிகு அவர் உருக்குலைந்து விட்டார் என்று தெரியும். தண்டபாணி இறந்ததற்கு பிறகு அவர் அதிகமாகப் பேசியதே இன்று தான். அவர் மனம் நோகச் செய்ய அவளுக்கு இஷ்டமில்லை. அவரை எதிர்த்தும் அவளுக்கு எதுவும் செய்ய விருப்பமில்லை. இதனாலேயே அவர் சொல் கேட்டு நடந்தாள்.

திடீரென்று தான் அம்மா ஆகிவிட்டோமோ. அந்த உணர்வு தனக்கு

இயற்கையாக வரவேண்டாமா என்றிருந்தது கீர்த்திக்கு. தன்னால் இந்தக் குழந்தையை தன் குழந்தையாக நினைக்க முடியுமா, வளர்க்க முடியுமா என்று சந்தேகமாக இருந்தது.

அரவிந்த், அவனைப் பற்றி இன்னும் அவளால் தப்பாக நினைக்க முடியவில்லை. எப்படி தன்னிடம் காதல் சொல்லிவிட்டு லண்டன் ஃப்ளைட் ஏறுகிறான். ஏறி இறங்கி ஒரு வாரத்திற்குள்ளேயேவா ஒரு பெண்ணுடன் உறவு கொண்டிருப்பான்.

இப்படி கணக்குப் போட்டால் தான் அவன் சொல்லும் எட்டு மாதத்தில் பிறந்த கணக்கு சரி வருகிறது. இது ஃபுல் டெர்ம் பேபி என்றால், அவனுக்கு பிறந்திருக்க வாய்ப்பேயில்லை, இல்லையென்றால் அந்த நேரத்தில் அந்தப் பெண் இந்தியாவில் இருந்திருக்க வேண்டும். எப்படி இது சாத்தியமாயிற்று என்று கணக்குப் போட்டு, கணக்குப் போட்டு மூளையைக் குழப்பிக் கொண்டாள்.

எது எப்படி இருந்தாலும்

எங்கேயோ ஏதோ சரியில்லை என்று அவள் உள்ளுணர்வு கூறியது. தன் தந்தை எப்படி அவன் செய்கையை ஒத்துக் கொண்டு அதற்கு நியாயம் கற்பிக்கிறார் என்று அவளுக்குப் பிடிபடவேயில்லை.

சமர்த்துக் குழந்தையான இந்து (எ) அம்மு, லண்டனில் இருந்து இந்தியா வந்த பிறகு, அதன் சீதோஷ்ண நிலை மாறியதால் சற்று சிணுங்கிக் கொண்டே இருந்தாள்.

சில சமயம் கையில் வைத்திருந்தால் அழாமல் இருந்தாள், சில சமயம் கீழே படுக்க வைத்திருந்தால் அழாமல் இருந்தாள், எந்த நேரம் எப்படி இருப்பாள் என்று அனுமானிக்க முடியவில்லை. குழந்தையை கீர்த்தி பார்த்தே அரை நாள் தான் ஆகி இருந்தது.

கீர்த்தியை விட இந்துமதி தான் முகத்தை அதிகமாகத் தூக்கி வைத்திருந்தார். தன் கணவர் ராஜேந்திரனிடம் சண்டை வேறு போட்டார். “எப்படி நீங்க இந்த குழந்தையைத் தூக்கிட்டு வரச் சொல்றீங்க. எவளோ பெத்ததை என்

பொண்ணுக்கு பார்த்துக்கணும்னு என்ன தலையெழுத்தா” என்று அவரிடம் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார்.

“என்ன பாவம் பண்ணினோமோ, அவ்ளோ பெரிய பையனைத் தூக்கிக் கொடுத்துட்டு நிக்கறோம். மறுபடியும் பாவம் எதுவும் பண்ண வேண்டாம்டி, எது எப்படி இருந்தாலும் சின்னக் குழந்தை அதை பழி சொல்லாதே” என்றவர் குழந்தையைத் தூக்கி கையில் வைத்தார். “பாருடி நம்ம தண்டு மாதிரியே கொஞ்சம் கொஞ்சம் இருக்காடி, பாருடி” என்று அவரை சமாதானப்படுத்த ஆரம்பித்தார்.

தண்டபாணி என்ற வார்த்தை சிறிது இந்துமதியை அசைத்தது. அதே சமயம் ஆக்ரோஷம் கொள்ளவும் வைத்தது. “அப்போ நான் பாவம் பண்ணியிருக்கேன், அதான் பையன் போயிட்டான்னு சொல்றீங்களா.”

“நான் அப்படிச் சொல்லுவனாடி, அப்படிச் சொல்லலடி, இப்போல்லாம், நோயும், சாவும் எதைக் கொண்டு வருதுன்னு யாராலயும் கணிக்க முடியாது. முன்னதான் பாவம் செஞ்சா அதாகும்

இதாகும்னு சொல்வாங்க. இப்போல்லாம் என்ன பாவம் செஞ்சாலும் சரி, நல்லது செஞ்சாலும் சரி, வர்றதை யாராலையும் தடுக்க முடியாது. விதின்னு சொல்றதைத் தவிர வேற வார்த்தை என்கிட்ட கிடையாது" என்றார் உணர்ச்சி மயமாக.

"சின்னக் குழந்தை அதுகிட்ட நீ வேற்றுமை பாராட்டக் கூடாதுன்னு ஏதோ உணர்ச்சி வசப்பட்டு சொல்லிட்டேன். மனசுல வச்சுக்காதம்மா."

அதற்குள் கீர்த்தி வந்தவள், "அம்மா அவ உடம்பு ஃபுல்லா கொசு கடிச்சி தடிப்பு தடிப்பா ஆகிடிச்சும்மா, அது வேற அழறா" என்று குழந்தையைத் தூக்கி வந்தாள்.

ராஜேந்திரனும், ராணியும் பார்க்க, உடம்பு தடிப்பு தடிப்பாக இருந்தது. குழந்தையின் வெண்மையான உடம்பில், சிகப்பு சிகப்பு புள்ளிகளாய் தெரிந்தது.

"அம்மா, டாக்டர் கிட்ட போவோமா" என்றாள் கீர்த்தி.

"இதுக்கெல்லாமா டாக்டர்கிட்ட போவாங்க, கொஞ்சம் தேங்காய் எண்ணெய் தடவிப் பார்க்கலாம்" என்று

சொன்னார்.

சிறிது தேங்காய் எண்ணெய் தடவினர். நேரம் ஆக ஆக தடிப்பு அதிகம் தான் ஆகியது கம்மியாகவில்லை.

அவள் டாக்டரிடம் போகலாமா வேண்டாமா என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தபோது அரவிந்த் வந்தான்.

அவனைப் பார்த்தவுடனே முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கீர்த்தி. ஆனால் அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டவனாக தெரியவில்லை அரவிந்த்.

அவன், "அம்மும்மா" என்று கூப்பிட்டுக் கொண்டே விரைந்து குழந்தை அருகில் வர... அப்படியே அவன் கையில் குழந்தையைக் கொடுத்து விட்டு இடத்தை விட்டு நகர்ந்தாள்.

குழந்தையைப் பார்த்தவன், "கீர்த்தி" என்று ஒரு கத்து கத்த, எல்லோரும் ஓடி வந்தனர். "என்ன இது" என்றான் குழந்தையைப் பார்த்து அதிர்ச்சியாக.

அவன் முகம் அவ்வளவு

கோபத்தைக் காட்டியது. “அது கொசு கடிச்சதால ரேடிஸ்” என்றாள் திக்கி திணறி அவன் கோபத்தை பார்த்து பயந்து போனவளாக.

“என்ன கொசு கடிச்சதா, ஏன் எனக்கு உடனே போன் பண்ணலை” என்று கத்தினான்.

ராஜேந்திரன் தான் சமாதானப்படுத்தினார். “இல்லை மாப்பிள்ளை, டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போகலாம்னு கீர்த்தி சொல்லிட்டு தான் இருந்தா, நாங்க தான் தேங்காய் எண்ணெய் தடவிப் பார்க்கலாம்னு பார்த்தோம்” என்றார்.

“என்ன மாமா நீங்க, சின்ன விஷயம்னாலும் கவனிக்கணும் பெருசா ஏதாவது வந்துட்டா, நான் வேற டூவீலர்ல வந்தேன். நீங்க ஒரு கால் டாக்ஸிய வரச் சொல்லுங்க, குழந்தைய ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போகலாம்” என்றவன் உடனே நளினிக்கு அழைத்தான்.

“நளினி இங்கே நல்ல சில்ட்ரன்ஸ் ஸ்பெஷலிஸ்ட் சொல்லு” என்றான். அவளுக்கு அதற்குள் விஷயம்

தெரிந்துள்ளது போலும்...

"என்ன, ஏது" என்று கேட்காமல் விவரம் சொன்னாள்.

"நான் காலைல குடுத்த பேபி பேக்ல, அவ லண்டன் ஹாஸ்பிடல் கார்ட் இருக்கும் கீர்த்தி, எடுத்துக்கோ" என்றான் அரவிந்த்.

செய்வதையெல்லாம் செய்துவிட்டு, என்ன அதிகாரம் தூள் பறக்குது என்று கீர்த்திக்கு கத்த வேண்டும் போல ஆத்திரமாக வந்தாலும், குழந்தை அந்த ரேஷஸ்ஸால் சிரமப்படுவதை உணர்ந்து பதில் பேசாமல், அவன் சொன்னதை செய்து அவனுடன் ஹாஸ்பிடல் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

அங்கே ஹாஸ்பிடலில் பயங்கர கூட்டம், "இருக்கிற அப்பாயிண்மெண்ட்ஸ் எல்லாம் பார்த்த பிறகுதான் பார்ப்பார் டாக்டர்" என்று சொல்ல...

குழந்தையோ சிணுங்கிக் கொண்Nடு இருந்தாள். அவளை எப்படி அவ்வளவு நேரம் வைத்திருப்பது என்று

தெரியாமல்,

“வேற டாக்டர்கிட்ட போகலாமா” என்றான் அரவிந்த் கீர்த்தியைப் பார்த்து...

“எல்லா டாக்டர்ஸ்கிட்டயும் இவ்வளவு கூட்டம்தான் இருக்கும், பேசாம இருங்க... கொஞ்ச நேரம் வெயிட் பண்ணினா இவர் கிட்டயே பார்த்துக்கலாம்” என்றாள். “ஃபேமஸ்

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேர காத்திருப்புக்குப் பிறகு, டாக்டரை பார்க்க முடிந்தது. டாக்டர் குழந்தை பற்றி கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் அரவிந்தே பதில் சொன்னான்.

டாக்டர் அவனை அதிசயமாகப் பார்த்தார். “பொதுவா எல்லா கேள்விகளுக்கும் பெண்கள் தான் பதில் சொல்லுவாங்க. இங்கே நீங்க சொல்றீங்க பரவாயில்லை” என்றார்.

“இவ லண்டன்ல பொறந்தா டாக்டர். இப்போ தான் இந்தியா வந்தா, இங்க அவளுக்கு நாங்க என்னென்ன ப்ரிகாஷன் எடுக்கணும். என்ன மில்க் இங்கே குடுக்கலாம்” என்று விவரமாக எல்லாவற்றையும் டாக்டரிடம் கேட்டாள்

கீர்த்தி.

டாக்டர், “அந்த ரேஷஸ் தானாக செட்டில் ஆகிடும்மா பயப்படத் தேவையில்லை” என்றார்.

பிறகு, எப்போது? என்ன வாக்சின் போட வேண்டும்” என்று கீர்த்தி கேட்க... “உங்களுக்குக் குடுத்த கார்ட்லயே இருக்குமே” என்றார் டாக்டர்.

19

“கார்ட் எதுவும் கொடுக்கலையே டாக்டர்” என்றாள் கீர்த்தி.

“வெளில கார்ட் இருக்கும் நீங்க போய் வாங்கிட்டு வந்துடுங்க சார்” என்றார் டாக்டர்.

அரவிந்த் கார்ட் போடுவதற்காக வெளியே போக, அந்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டாள் கீர்த்தி.

“டாக்டர் இந்தக் குழந்தை எய்ட் மந்த்ஸ்ல பொறந்த ப்ரீ மெச்சூர்ட் பேபியா டாக்டர்” என்று கேட்டாள்.

“இல்லையேம்மா, அப்படிப் பார்த்தா தெரியலையே” என்று குழந்தையை ஆராய்ந்து பார்த்தவர் கூறினார்.

“எனக்கு அந்த மாதிரி தெரியலை, இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அதற்கான வாய்ப்புகள் ரொம்ப ரொம்ப ரொம்ப கம்பி” என்றார்.

அதற்குள் அரவிந்த் வந்துவிட கீர்த்தி சாமர்த்தியமாக பேச்சை மாற்றி விட்டாள்.

இது ஏதுவும் அறியாதவனாக அரவிந்த், டாக்டரிடம் கார்ட் கொடுத்து, என்ன? ஏது? என்று தடுப்பூசியைப் பற்றிய விவரம் கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது அரவிந்த் பொய் சொல்லுகிறானா. இது அவன் குழந்தை இல்லையா இல்லை இந்தியாவில் இருக்குமபோதே அந்தக் குழந்தை உருவாகி விட்டதா. அந்தப் பெண் இந்தியாவில் இருந்தாளா.

அவளுடன் இருந்து கொண்டே தன்னிடம் காதல் சொன்னானா? எப்படி இது சாத்தியம். கீர்த்தியின் உள்ளுணர்வு

சொல்லியது. அரவிந்த் பொய் சொல்லுகிறான். இது அவன் குழந்தை அல்ல என்றே அவளுக்குத் தோன்றியது.

ஹாஸ்பிடலில் இருந்து வீடு திரும்பும்போது அரவிந்த் கீர்த்தியிடம், "சாரி கீர்த்தி நான் உன்கிட்ட ரொம்ப கத்திட்டேன். அது அம்மு மேல அவ்வளவு ரேஷஸ் திடீர்னு பார்த்ததும் என்னால கோபத்தைக் கன்ட்ரோல் பண்ண முடியலை" என்றான்.

"நீங்க என்னை ஏமாத்தினதை விடவும், இந்தக் கத்தல் ஒண்ணும் பெருசில்லை."

"ப்ளீஸ் கீர்த்தி, அதை மறந்துடு, அதை விட்டுடு."

"அதை எப்படி விட முடியும், உயிரோட என் கைல இவ அசஞ்சிட்டு நான் இருக்கேன்னு சொல்றாளே"

"உனக்கு என்ன கோபம் வந்தாலும் எம் மேல மட்டும் காட்டு கீர்த்தி, அம்மு கிட்ட எப்பவும் காட்டாத" என்றான்.

"ஓ, என்னைப் பார்த்தா

உங்களுக்கு சின்னக் குழந்தைய கொடுமை பண்றவ மாதிரி தெரியுதா.”

“நான் அப்படிச் சொல்லலை கீர்த்தி, புரிஞ்சுக்கோ.”

“அதெல்லாம் புரியாம என்ன, என்னை நீங்க ஏமாத்திட்டீங்கன்னு நல்லா புரியுது” என்றாள்.

“இன்னும் எவ்வளவு கேட்கவேண்டி வருமோ” என்று மனதிற்குள்ளேயே வருத்தப்பட்டுக் கொண்டான் அரவிந்த்.

கீர்த்திக்கு அவன் பொய் சொல்லுகிறான் என்று உள்மனது சொல்லியதால், அதிகமாக அவன் மேல் கோபத்தை இழுத்து வைக்க முடியவில்லை. அதற்காக அவன் செய்ததை மறக்கவும் முடியவில்லை. ஒரு மாதிரியான எரிச்சலில் இருந்தாள். அவனை அப்படியே நாலு அறை விட வேண்டும் போல எண்ணம் ஓங்கியது.

அதற்குப் பிறகு பேச்சில்லா மௌனத்தோடு வீடு வந்து சேர... வந்ததும் குழந்தையை கவனிக்கவே கீர்த்திக்கு நேரம் சரியாக இருந்தது.

அரவிந்தும் உதவினான்.

கீர்த்தியின் அம்மா அதற்குள் குழந்தைக்குத் தூளி கட்டி இருந்தார். அதில் போட்டு குழந்தையைத் தூங்க வைத்தாள் கீர்த்தி.

பின்பு வெளியே வந்து பார்க்க, அப்போதும் ஹாலிலேயே அமர்ந்திருந்தான் அரவிந்த். "என்ன" என்பது போல் கீர்த்தி பார்க்க...

"சொல்லிட்டு கிளம்பலாம்னு வெயிட் பண்ணினேன்" என்றான்.

"சொல்லியாச்சுள்ள கிளம்பு" என்று ஒரு பார்வை பார்த்தபடி கீர்த்தி நிற்க... அங்கே வந்த ராஜேந்திரன், "என்ன கீர்த்தி இவ்வளவு நேரமாயிடுச்சு. ஹாஸ்பிடல் வேற போய் அலைஞ்சிட்டு வந்திருக்கீங்க. மாப்பிள்ளைய சாப்பிட்டுப் போகச் சொல்லு கீர்த்தி" என்று அவளை கடிந்தார்.

"இன்னும் இது வேறயா" என்றபடி கீர்த்தி ஒரு பார்வை பார்க்க... "இல்லை மாமா நான் வீட்ல போய் சாப்பிட்டுக்கறேன்" என்று அரவிந்த் கிளம்ப...

“நீங்க இருங்க மாப்பிள்ளை” என்றவர் கீர்த்தியை பார்க்க...

“வாங்க” என்று அவளை ஒற்றை சொல்லாய் அழைத்தாள். “இந்த அப்பா என் உயிரை எடுக்கிறார்” என்று அவனிடம் பார்வையால் பேசியபடி.

“போங்க மாப்பிள்ளை” என்று மறுபடியும் ராஜேந்திரன் கட்டாயப்படுத்த வேற வழி இல்லாமல் போனான் அரவிந்த் அவன் அழகு மனைவியின் பின்னே.

ஆமாம்! அவள் மிக அழகாக அரவிந்தின் கண்களுக்குத் தோன்றினாள். அதுவும் கண்களால் அவள் அரவிந்திடம் கதை பேசும்போது, அரவிந்திற்கு அவளையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போலத் தோன்றியது.

இப்போதைய சூழலில் அவளைப் பார்க்க விடுவதே மேல் என்று மனதைத் தேற்றிக் கொண்டான். பரவாயில்லை, தான் ராஜேந்திரனிடம் உண்மையைச் சொன்னதால், அவர் கொஞ்சம் சமாளித்து விட்டதால் தப்பித்துக் கொண்டோம். இல்லையென்றால் கோபத்தில் இவள் நம்மை விட்டுப் போயிருப்பாள் போல

என்று அவனையறியாமல் ஒரு பெருமூச்சு எழ, அதன் உஷ்ணக் காத்து, முன்னால் சென்று கொண்டிருந்த கீர்த்தி மேல் பட்டு அவளைக் கூச வைக்க, திரும்பிப் பார்த்து அவனை முறைத்தாள்.

அவள் எதற்கு தன்னை முறைக்கிறாள் என்று தெரியாதவனாக் அரவிந்த் தடுமாற, "செய்யறத எல்லாம் செஞ்சிட்டு எப்படி ஒண்ணுமே தெரியாதவன் மாதிரி முகத்தை வச்சிருக்கான் பாரு முகத்தை" என்று மனதிற்குள்ளேயே நொடித்தாள்.

சூடாக இட்லி, சட்னி, சாம்பார் என்று இருக்க, இருந்த பசியில் ஒரு வெட்டு வெட்டி விட்டு தான் நிமிர்ந்தே பார்த்தான். ஒரு வேளை இடையில் நிமிர்ந்து பார்த்திருந்தால், கீர்த்தி தன்னையே விடாமல் பார்த்துக் கொண்டிருப்பது தெரியும். அவன் தான் சாப்பிடுவதிலேயே குறியாய் இருந்தானே, நிமிரவேயில்லையே.

அவனுக்கு கீர்த்தியோட இருந்துவிட வேண்டும் என்று ஏக்கமாக இருந்தது. வீட்டிற்குப் போகவே

மனமில்லை. ஒருவாறாக “நான் கிளம்பவா கீர்த்தி” என... “கிளம்பேன்டா இன்னும் ஏன் நிக்கற” என்பது போல் கீர்த்தி ஒரு பார்வை பார்க்க... வேறு வழியில்லாமல் கிளம்பினான். அவன் மனது கீர்த்தியையே அதிகமாக நாடியது. “எப்போது வீட்டுக்கு வர்ற” என்று கேட்கத் துடித்த மனதை அடக்கி ஒரு வழியாக வீட்டிற்குச் சென்றான்.

இவ்வளவு நாட்களாக குழந்தை ஞாபகமாகவே இருந்த அரவிந்திற்கு, குழந்தையை கீர்த்தியிடம் ஒப்படைத்த பிறகு கீர்த்தி ஞாபகமாகவே இருந்தது. மிகவம் பெரியதாக எதுவும் பிரச்சனை பண்ணாமல், முகம் கொடுத்துப் பேசா விட்டாலும், பார்க்கவாவது செய்கிறாளே என்று அவனை அவனே சமாதானப்படுத்திக் கொண்டான்.

வீட்டிற்கு வந்தால் இவனுக்காகவே அவன் அன்னையும், தந்தையும் காத்திருந்தனர்.

“நாளைக்கு எவளாவது அந்தக் குழந்தையோட அம்மான்னு உன் வாழ்க்கைக்குள்ள வந்தா, என்னடா

பண்ணுவ” என்று அவர் கோபமாகக் கேட்க...

“கட்டாயம் வரமாட்டாப்பா, அவளும் நானும் பிரிஞ்சிட்டோம். குழந்தையே வேண்டாம்னு என்கிட்டக் குடுத்துட்டா. இனி எங்க வரப்போறா, வரமாட்டாப்பா” என்றான்.

“எப்படி அரவிந்த் எனக்கு பையனாப் பொறந்து இப்படி ஒரு காரியத்தைப் பண்ணின... அதை மறைச்சு இன்னொரு பொண்ணை வேற கல்யாணம் பண்ணியிருக்க... நாங்க உன்னi இப்படியா வளர்த்தோம்.”

“ஏதோ அந்தப் பொண்ணோட அப்பா ரொம்ப நல்லவனா இருக்கவும், உன்னை மன்னிச்சு, கீர்த்தியை வேற உன்னோட வாழறதுக்கு சமாதானப்படுத்தறார். இதே வேற யாராவது இருந்தா உன்னை மட்டும் இல்லை, எங்களையும் சேர்த்து இன்னேரம் கம்பி எண்ண வச்சிருப்பார்.”

“அந்தப் பொண்ணை நீ ஏமாத்திப் பெரிய கொடுமை பண்ணியிருக்க, அந்தக் குழந்தைய என்ன பண்ணப் போற”

என்றார் மறுபடியும்.

“எங்குழந்தைப்பா, என்னோடதான் இருப்பா. வேற பேச்சே கிடையாது.”

“யாரோ பெத்த குழந்தைய வளர்க்கணும்னு அந்தப் பொண்ணுக்கு என்ன தலையெழுத்தாடா...”

“யாரோ பெத்த குழந்தையில்லைப்பா, என் குழந்தை, மறுபடியும் நீங்க இதைப்பத்தி பேசாதீங்க... கீர்த்தி வளர்ப்பா நான் பார்த்துக்கறேன். நீங்க உங்க பேரப்பிள்ளையா மட்டும் அவளைப் பாருங்கப்பா. அவகிட்ட எந்த பாரபட்சமும் காட்டாதீங்க. அவ என் குழந்தை, உங்க பேரக் குழந்தை” என்றான் வேண்டிய குரலில்...

“எப்படிடா எவளோடயோ நீ பெத்த குழந்தை, எங்க பேரக் குழந்தையா?”

“தப்பா பேசாதீங்கப்பா... அவளும் ரொம்ப கௌரவமான சூழ்நிலைல இருக்கிற பொண்ணுதான். அவங்க கலாச்சாரம் அப்படி, அதைத் தப்புன்னு

சொல்ல முடியாது. அவங்க வளர்ந்த விதமே அப்படிதான்.”

“என் குழந்தையை நீங்க பேரக் குழந்தையா பார்க்கலைன்னா நான் இங்க இருக்கிறதுல அர்த்தமே இல்லைப்பா... நீங்க அவகிட்ட சின்ன முகச் சுணக்கம் காட்டினா கூட என்னால பொறுக்க முடியாதுப்பா, என் பொண்ணு உங்களுக்கு வேண்டாம்னா, அப்ப நானும் உங்களுக்கு வேண்டாம்னு தான் அர்த்தம். அப்புறம் நம்ம பிரியறத தவிர வேற வழியில்லை” என்று தீர்மானமாகச் சொல்லிச் செல்ல, விக்கித்து அமர்ந்திருந்தனர் பெற்றோர் இருவரும்.

நேற்று பிறந்த பெண்ணுக்காக தங்களைத் தூக்கி எறியத் தயாராகி விட்டானே மகன் என்று அவர்களின் மகனை நினைத்து வருத்தப்படுவதா இல்லை சந்தோஷப் படுவதா என்று அந்த பெற்றோருக்குத் தெரியவில்லை.

எது எப்படி இருந்தாலும் அந்தக் குழந்தையை அவன் மிகவும் நேசிக்கிறான் என்பது புரிய, தாங்களும் நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று

முடிவெடுத்தனர். கீர்த்தியை நினைத்து தான் பயமாக இருந்தது. அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று.

ஆனால் அந்த பயம் அவசியமில்லாதது என்று அவர்களுக்குப் புரியவில்லை. ஏனென்றால் எல்லோரையும் வசியப்படுத்தும் சக்தி அம்முவிற்கு இருந்தது.

இவ்வளவு நாட்களாக அரவிந்த் பார்த்துக் கொண்டபோது, கிடைக்காத ஒரு சுகம், குழந்தைக்குக் கீர்த்தியினிடத்தில் கிடைக்க, ஒரே நாளில் கீர்த்தியிடம் நன்கு ஒட்டிக் கொண்டது.

தூங்கிக் கண் விழித்ததுமே கீர்த்தியை தேடி அழுதது. அவள் வந்து கையில் தூக்கியதுமே அழுகையை நிறுத்தியது. கீர்த்தியே சிறிது சிறிதாக அம்முவிடம் தன் மனதைத் தொலைத்தாள். அவளுக்குமே குழந்தை மிகவும் பிடித்து விட்டது.

தினமும் காலை ஒரு முறை ஒரு ஐந்து நிமிடம் வந்து அம்முவைப் பார்த்துச் செல்லும் அரவிந்த், இரவும் ஒரு ஐந்து நிமிடம் வந்து அம்முவைப் பார்த்துச்

சென்றான்.

அதற்கு மேல் இருக்கவில்லை. ஏன் இருப்பானேன். பிறகு கீர்த்தியைப் பார்த்து ஏங்குவானேன் என்று நினைத்தவன், தினமும் இதே முறையைப் பின்பற்றினான்.

கீர்த்திக்கு அரவிந்த் மேல் இருந்த சந்தேகங்கள் அப்படியே இருந்தாலும் எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை. அதிகம் அவனிடம் பேசவும் இல்லை. நான்கு நாட்கள் இப்படியே கழிய, ஐந்தாவது நாள் அரவிந்தின் பெற்றோர்களே கிளம்பி வந்தனர். தன் மருமகள் எப்போது வீடு வருகிறாள் என்று கேட்க...

சிதம்பரமும், ராணியும் வர... "வாங்க மாமா, வாங்க அத்தை" என்றாள். "ஏன்மா ஷோரூம் வரவேயில்லை" என்று சிதம்பரம் கேட்க...

"அம்முவை விட்டுட்டு எப்படி மாமா வர்றது. கொஞ்ச நேரம், கொஞ்ச நேரம் தான் தூங்கறா, எழுந்ததுமே என்னைத் தேடுறா" என்றாள் குழந்தையின் அம்மா போல்

பெருமையாக...

கீர்த்திக்கு குழந்தையிடம் சற்று பிடிப்பு வந்துவிட்டது என்று சிதம்பரமும், ராணியும் உணர்ந்து கொண்டனர்.

அப்போது சரியாக குழந்தை விழித்துக் கொண்டு சிணுங்க, கீர்த்தி தூக்கியதும் அம்மு சிணுங்களை நிறுத்தி விட்டாள்.

கீர்த்தி குழந்தையைக் கொண்டு வந்து ராணியிடம் கொடுக்க... கைமாறியவுடன் சிணுங்க ஆரம்பித்துவிட்டது.

"அம்மும்மா, அழக்கூடாது, அழக்கூடாது, யார் வந்திருக்காங்க பாரு, தாத்தா வந்திருக்காங்க... நீங்க பாட்டி கைல இருக்கீங்க" என்று உறவுகளுக்கு பழக்கப்படுத்த ஆரம்பித்தாள் கீர்த்தி.

அவள் அந்தக் குழந்தைக்கு பழக்கப்படுத்துவதைப் பார்த்து, அரவிந்தின் பெற்றோர் இருவருக்கும் தன் மகனின் செய்கையை நினைத்து குற்றவுணர்ச்சியாக இருந்தது.

இதையெல்லாம் கீர்த்தியின்

அம்மா மௌனமாக பார்த்திருந்தார்.

பிறகு சிதம்பரம் கீர்த்தியிடம், “அரவிந்த் பண்ணினது சரி கிடையாதும்மா, பெரிய மன்னிக்க முடியாத தப்பு தான், இருந்தாலும் எங்களுக்காக மன்னிச்சு வீட்டுக்கு வாம்மா” என்றார்.

“அவர் பண்ணினதுக்கு நீங்க என்ன மாமா பண்ணுவீங்க... நீங்க போய் எதுக்குப் பெரிய வார்த்தையெல்லாம் பேசறீங்க விட்டுடுங்க” என்றாள் அவரிடம் சமாதானமாக.

பிறகு சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க... ராணி மறுபடியும் கீர்த்தியிடம், “எப்போம்மா வர்ற” என்று கேட்டார்.

அதற்கு ராஜேந்திரன், “இன்னும் ஒண்ணு ரெண்டு நாள்ல நான் அனுப்பி வைக்கிறேன் சம்மந்தி” என்றவர்... “என்னம்மா நான் சொல்றது சரிதானே” என்று கீர்த்தியையும் துணைக்கு அழைக்க... “சரி” என்பதை போல தலையை தலையை ஆட்டி வைத்தாள் கீர்த்தி.

அவர்கள் கிளம்பும் சமயம் அரவிந்த் வர... அவர்களை அங்கே பார்த்ததும் முகம் மலர்ந்தான். “அம்முவைப் பார்க்க வந்தீங்களாப்பா” என்று உற்சாகமாகக் கேட்க...

“கீர்த்தியைப் பார்க்க வந்தோம்” என்றார் ராணி பட்டென்று... நிமிடத்தில் உற்சாகம் அரவிந்திற்கு வடிய... அதைப் பார்த்த சிதம்பரம் தன் மகனை சமாதானப்படுத்தும் பொருட்டு, “ரெண்டு பேரையும் தான்டா பார்க்க வந்தோம்” என்றார்.

அவர் தனக்காகச் சொல்கிறார் என்று அவ்வளவு கூடவா அரவிந்திற்குப் புரியாது. அவனுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் புரிந்தது.

அதற்குள், “அம்மும்மா என்ன பண்றீங்க” என்று குழந்தையிடம் கவனத்தை திருப்பினான். அவன் குரலைக் கேட்டதும் அம்மு உற்சாகத்தில் கையைக் காலை வேகமாக அசைத்தாள்.

குழந்தையை அவன் கையில் கொடுத்த கீர்த்திக்கு, தந்தை மகள் உற்சாகத்தைப் பார்த்து, இது தங்களுக்கு

பிறந்த குழந்தையாக இருக்கக் கூடாதா என்று மனம் ஏங்கியது. அரவிந்தின் செய்கைக்கு அவனை வெறுக்க வேண்டும். வெறுக்க வேண்டும் என்று மனம் நினைத்தாலும், கீர்த்தியால் அது முடியவில்லை.

அவன் பொய் சொல்லுகிறான், பொய் சொல்லுகிறான் என்று தனக்குத் தானே கூறி மனதை தேற்றிக் கொண்டாள்.

முழுமையாக பொய் சொல்லுகிறான் என்றும் நம்ப முடியவில்லை, அவன் கூறுவது உண்மை என்றும் நம்ப முடியவில்லை. இருதலைக் கொல்லி எறும்பாகத் தவித்தாள். அரவிந்தின் மீது காதல் கொண்ட கீர்த்தியின் மனம் அவனை நல்லவனாக்க ஏதாவது காரணம் கிடைக்காதா என்று தேடியது.

அவர்கள் எல்லோரும் சென்றதும், தினமையை நாடிச் செல்ல மனம் விழைய, அதற்குள் அவளை அழைத்த அவள் தந்தை, “எப்போம்மா போற?” என்றார்.

அவர் அவள் அரவிந்தின் வீட்டிற்கு

எப்போது போகிறாள் என்று கேட்கிறார் என்று தெரிந்தாலும், புரியாத மாதிரி, “எங்கேப்பா” என்றாள்.

“உங்க வீட்டுக்கும்மா, அரவிந்த் வீடுதான் உன் வீடு” என்றார் அழுத்தத்துடன்.

“ஏன்பா நீங்க அரவிந்த்துக்கு இவ்ளோ சப்போர்ட் பண்ணறீங்க, அவர் பண்ணினது உங்களுக்கு தப்பாத் தெரியலையா.”

“தெரியுதும்மா, இருந்தாலும் அவர் இந்த விஷயத்தை நம்மகிட்ட மறைச்சிருந்தா, நாம என்ன செஞ்சிருப்போம் சொல்லு.”

அவள் அவரையே பார்த்திருக்க, இன்னும் பேசிக் கொண்டே போனார்... “தப்பு செய்யறது மனித இயல்பு. மன்னிக்கறது தேவ குணம். நான் என் பொண்ணை அப்படிதான் வளர்த்திருக்கேன். இப்போ தப்பு செய்யறது பெரிய விஷயமில்லை. ஆனா செஞ்ச தப்பை ஒத்துக்கறது, ரொம்ப பெரிய விஷயம். நீ அங்க போய் அவரோட வாழறதை தான்மா நான்

விரும்புவேன்” என்று சொல்லிச் சென்று விட்டார்.

ராஜேந்திரனுக்குப் பேசாமல் கீர்;த்தியிடம் உண்மையைச் சொல்லி விடலாமா என்றிருந்தது. ஆனால் ஏனோ அரவிந்த் பிடிவாதமாக வேண்டான் என்றான். அதனால் சமாதானத்திற்கு எத்தனை காரணங்கள் சொல் வேண்டியிருக்கிறது என்று தன்னைத் தானே நொந்து கொண்டார்.

யோசித்து யோசித்த கீர்த்திக்கும் மூளை குழம்பியது தான் மிச்சம். பேசாமல் இப்போதைக்கு எதையும் யோசிக்க வேண்டாம் வாழ்க்கை போகிறபடி போவோம் என்று நினைத்தவள்...

மறுநாள் மதியம் போல் வீட்டிற்குப் போகலாம் என்று முடிவு செய்தாள். அரவிந்த் காலையில் அம்முவைப் பார்க்க வந்தபோது கூட எதுவும் சொல்லவில்லை. அமைதியாகவே இருந்து விட்டாள்.

மதியம் இவள் குழந்தையை தூக்கிக்கொண்டு அரவிந்தின் வீட்டிற்குச் சென்று விட்டாள், இது எதுவும் அறியாத அரவிந்த் எப்பொழுதும் போல் மாலையில்

வீட்டிற்கு வர... அங்கே அவர்கள் இருக்கவில்லை.

“கீர்த்தி உங்ககிட்ட சொல்லலையா மாப்பிள்ளை” என்று ராஜேந்திரன் கேட்க...

“சொன்னா மாமா நான்தான் மறந்துட்டேன்” என்று சமாளித்து வீடு வந்தான். வந்து அம்முவை பார்த்து விட்டே மறுபடியும் ஷோ-ரூம் கிளம்பினான். ஏன் ஒரு வார்த்தை என்னிடம் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லியிருந்தால் என்ன குறைந்திருக்கும் என்று கீர்த்தி மேல் பயங்கர கோபம்... இருந்தாலும் அடக்கி அவளை தவிர்த்து குழந்தையை மட்டும் பார்த்துச் சென்றான்.

கீர்த்திக்குப் புரிந்தது, அரவிந்திற்கு பயங்கர கோபம் என்று... அவனைக் கோபப்படுத்தியதற்கு சந்தோஷம் எதுவும் எழவில்லை. மாறாக ஒரு வெறுமையே சூழ்ந்தது.

அவன் தனக்கு இவ்வளவு பெரிய கொடுமை செய்தும், தன் மனம் அவன் பின்னே சுற்றுகிறதா என்று தன்னையே வெறுத்தாள்.

கீர்த்தியை அரவிந்தின் மனம் மிகவும் தேடினாலும், தன்னை பைத்தியக்காரன் மாதிரி அலைய விட்ட கீர்த்தியின் செயல் அரவிந்திற்கு மிகுந்த கோபத்தைக் கொடுத்தது.

தன் மீது தவறை அவனாகவே தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தாலும், இயற்கையிலேயே தவறு செய்யாத அவன் மனதிற்கு கீர்த்திக்கு அது அவன் அண்ணன் குழந்தை என்று தெரியாது என்பது மறந்து போனது. அவள் அண்ணன் குழந்தையை நாம் பார்த்துக் கொண்டால், இவள் என்ன இந்த முருக்கு முருக்குகிறாள் என்று கோபம் வந்தது.

வந்த கோபத்தை யார் மேல் காட்டுவது என்று தெரியாமல் உணவு மேல் காண்பித்தான். அன்று ஏழு மணி போலயே வீட்டிற்கு வந்தவன், இரவு உணவை உண்ணவேயில்லை. ராணி, “ஏன்டா, சாப்பிடலை, வாடா, வாடா...” என்று பலமுறை கூப்பிட்டும், டி.வி. முன் அமர்ந்தவன் எழவேயில்லை.

“என்னவோ பண்ணு போடா, நீயாச்சு உன் பொண்டாட்டியாச்சு” என்று

சொல்லி கீர்த்தியை அனுப்பினார்.

“அவன் சாப்பிட்டா எனக்கென்ன, சாப்பிடடாட்டி எனக்கென்ன” என்று அவள் மனம் நினைத்தாலும், கால்கள் தானாக அவனிடம் சென்றது.

“டிபன் எடுத்து வைக்கவா” என்றாள்.

“தேவையில்லை” என்றான் அரவிந்த்.

“ஏன் தேவையில்லை, வெளில சாப்பிட்டிட்டு வந்துட்டீங்களா.”

அவளை திரும்பிப் பார்த்து ஒரு முறை முறைத்தான். அது சொன்னது அவன் வெளியே சாப்பிடவில்லை என்று.

“அப்புறம் என்ன சாப்பிட வாங்க” என்றாள்.

அரவிந்த் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.

சிறிது நேரம் அதே இடத்திலேயே அவனை முறைத்து பார்த்துக்கொண்டு நின்றாள். பின்னர் வேகமாக அவள் மாமியாரிடம் இருந்த அம்முவை வாங்கி,

உள்ளே சென்று விட்டாள்.

இதைப் பார்த்த ராணி, கோபமாக அரவிந்திடம் வந்து கத்தினார். “ஏன்டா, ஏற்கனவே அவ கோபமா இருக்கா... அவ கூப்பிட்டா நீ போய் சாப்பிட வேண்டியது தானே. ஏன் பிரச்சனையை பெருசாக்குற. பாரு, இப்போ சாப்பிடாம போயிட்டா.”

அப்போதும் இருந்த இடத்தை விட்டு அசைய வில்லை அரவிந்த். “அரவிந்த் பண்ற தப்பையெல்லாம் பண்ணிட்டு இப்போ பிடிவாதம் வேற பிடிக்காத, நீயும் சாப்பிடலை, அவளும் சாப்பிடலை... ஒழுங்கா ரெண்டு பேரும் சாப்பிட்டுட்டு தூங்குங்க... நான் தூங்கப் போறேன்” என்று சொல்லிச் சென்றார்.

அரவிந்திற்கும் பசித்தது. அவள் வேறு சாப்பிடாமல் இருக்கிறாள் என்ற எண்ணம் உந்த... எழுந்து ரூமிற்குள் சென்று பார்த்தான். அம்முவை பக்கத்தில் போட்டு, அவள் படுத்துக் கொண்டிருந்தாள். அம்மு கை காலை வேகமாக அசைத்துக் கொண்டிருந்தாள். கீர்த்தி அவளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சென்று அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றான் அரவிந்த் பார்ப்பது தெரிந்தாலும், கீர்த்தி அவனைப் பார்க்கவில்லை. மெதுவாக தன் மகளின் புறம் சென்று அமர்ந்தவன், "அம்மும்மா என்ன பண்றீங்க, அப்பாக்கு பசிக்குது, உங்க அம்மா கிட்ட சொல்லுங்க பார்ப்போம்" என்றான்.

அரவிந்தின் குரலைக் கேட்டதும், கையைக் காலை வேகமாக அசைத்தது குழந்தை.

"நீங்களும் உங்கம்மாவும் எதுக்கு தாத்தா வீட்ல இருந்து என்கிட்ட சொல்லாம வந்தீங்க... நான் சாயந்தரம் அங்கே போய் உங்களைத் தேடுனேனே" என்றான்.

"ஓ அதுதான் இப்படி முருக்கிக் கொண்டிருக்கிறானா. இவன் என்னிடம் சொல்லிவிட்டு தான் எல்லாவற்றையும் செய்தானா, நான் மட்டும் எதற்கு சொல்ல வேண்டும்" என்று அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

"ஓகே. செல்லம் முதல் தடைவ பண்ணனதால அப்பா விட்டுடறேன்.

இனிமே எங்க போனாலும் அம்மாவும், பொண்ணும் சொல்லிட்டுப் போங்க... திடீர்னு நீங்க இல்லைன்னா அப்பா ரொம்ப ரொம்ப டென்ஷனாயிடறேன்" என்றான்.

'அய்யோ, ரொம்ப தான் அக்கறை வழியுது' என்று மனதிற்கள் அவனை சகட்டு மேனிக்கு திட்டிக் கொண்டிருந்தாள்.

"பசிக்குதுடி செல்லம்" என்றான் பாவமாக அம்முவைப் பார்த்து...

"போய் கொட்டிக்க வேண்டியது தானே, இவனை யார் கையைப் பிடிச்சி நிறுத்தினா" என்பதை அவள் பார்வையால் காட்ட...

"நான் மட்டும் கொட்டிக்கிட்டா எனக்கு வயிறு வலிக்கும் செல்லம். அம்மாவையும் வரச் சொல்லுங்க" என்றான் இந்த முறை கீர்த்தியைப் பார்த்துக் கொண்டே...

இப்போது கீர்த்தியும் அவனைப் பார்த்து நேரடியாக முறைத்தாள். "அதெல்லாம் வரமுடியாது" என்பது போல...

அவள் நேரடியாக முறைக்கவும், அவனும் நேரடியாக “பசிக்குது கீர்த்தி” என்றான் அவளைப் பார்த்து பாவம் போல முகத்தை வைத்து.

பதில் பேசாமல் எழுந்தவள், டைனிங் ஹால் நோக்கிப் போக, குழந்தையைத் தூக்கிக் கொண்டு அரவிந்த் பின்னாலேயே போனான்.

மௌனமாக அவனுக்கு டிபனை பரிமாறி, குழந்தையை அவள் கைகளில் வாங்கிக் கொண்டாள்.

“நீயும் உட்கார்ந்து சாப்பிடேன் கீர்த்தி” என்று அவன் சொல்ல, அவனை நோக்கி ஒரு அனல் பார்வையை வீசினாள், வேறு வழியில்லாமல், அவன் உண்டு முடித்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு ரூம் போன பிறகே, அவள் உண்ண அமர்ந்தாள்.

20

அரவிந்தும், கீர்த்தியும் பேசிக் கொள்வது மிகவும் குறைவு. அரவிந்த் ஏதாவது கேட்டாலும் கீர்த்தி பதில் பேச மாட்டாள். ஏதாவது அவசியமாக

குழந்தையின் பொருட்டு பேச வேண்டும் என்றாள் மட்டும் பேசுவாள்.

இப்படியே ஆறு மாதந்கள் ஒடிவிட்டன. இப்போது குழந்தைக்கு எல்லோர் முகமும் நன்றாக அடையாளம் தெரிவதால் அம்மு கீர்த்தியை விட்டுப் பிரிவதேயில்லை.

அம்மு உறங்கும் நேரமே. கீர்;த்தி ஏதவாது வேலை செய்ய முடியும். அவள் விழித்திருக்கும் நேரமெல்லாம், கீர்த்தியிடமே இருப்பாள். ராணியிடம், சிதம்பரத்திடம் போனாலும் கீர்த்தி பக்கத்தில் இருந்தால் மட்டுமே அமைதியாக இருப்பாள், இல்லையென்றால் அழ ஆரம்பித்து விடுவாள்.

அரவிந்த் வீட்டிலிருக்கும் நேரமே, கீர்த்திக்கு சற்று ரெஸ்ட், அரவிந்திடம் சமத்தாக இருந்து கொள்வாள். தனது பேத்தியைப் பார்க்கப் பார்க்க ராஜேந்திரனுக்கு பெருமை. அவ்வளவு அழகாக இருந்தாள். லிசாவைத் தெரிந்தவர்கள் அவளை வைத்துப் பார்த்தால், லிசாவின் ஜாடை

குழந்தையிடத்தில் நான்றாகத் தெரிந்தது. தண்டபாணியின் ஜாடையும் சிறிது சிறிது இருப்பதாக ராஜேந்திரன் கண்களுக்குத் தோன்றியது. அரவிந்திற்கும் தண்டபாணியின் ஜாடை, அம்முவிடத்தில் இருப்பதாகவே தோன்றியது. கீர்த்தி ஒரு வேளை தண்டபாணியை மனதில் வைத்து பார்த்திருந்தால் தெரிந்திருக்குமோ என்னவோ... ஆனால் அவள் தான் அரவிந்தின் ஜாடையை அல்லவா குழந்தையிடத்தில் தேடிக் கொண்டிருந்தாள்.

இன்னும் அரவிந்த் ஒரு குழந்தையின் தகப்பானாக, அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவனை மன்னித்து அவனோடு சுமுகமாக வாழ்ந்தால் என்ன? இந்தப் பிரச்சனைகளை இழுத்துப் பிடித்து வைத்திருப்பதில் என்ன பயன் என்று நிறைய முறை தோன்றும் தான். ஆனால் என்னவோ தடுத்தது. எதற்காகக் காத்திருக்கிறாள் என்று அவளுக்கே தெரியவில்லை. பேச நினைக்கும்போது ஏதோ ஒன்று தடுத்துவிடும்.

இதில் அரவிந்திற்கு தண்டனை

கொடுப்பதாக நினைத்து, அவளும் தண்டனையை அனுபவித்தாள். தவறே செய்யாமல் நல்லது நினைத்தே இருவரும் தண்டனையை அனுபவித்தனர்.

அதுவும் திருமணமாகி அவளோடு வாழ்ந்துவிட்ட அரவிந்திற்குக் கேட்கவே வேண்டாம். அவள் கொடுப்பது மிகப் பெரிய தண்டனையே. உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி, மனதை வென்று, அதை அலைபாயாமல் வைத்திருந்தான்.

கீர்த்தி அவனிடம் எப்படி மிகவும் அவசியம் என்றால் பேசுகிறாளோ, அது போலவே அரவிந்தும் பழக்கப்படுத்திக் கொண்டான். கீர்த்தியின் அண்மைக்காக மனது ஏங்கியது தான் இருந்தாலும் அம்முவிற்காக எல்லாம் பொறுத்துக் கொண்டான். எப்போது அவளாக தன்னோடு இசைந்து வாழ வருகிறாளோ வரட்டும், அதுவரை காத்திருப்போம் என்ற விட்டு விட்டான். வராமல் எங்கே போய் விடுவாள் என்ற தைரியம் தான் அவனுக்கு ஏனென்றால் கீர்த்தி தன்னைப் பார்க்கும் பார்வையில் காதல் இருக்கிறதோ இல்லையோ கட்டாயம் வெறுப்பு இல்லை என்று அவன் அறிவான். அதனால்

பொறுமையாக கீர்த்திக்காகக் காத்திருந்தான்.

நாட்கள் வேகமாக ஓடின. இந்த இயந்திரத்தனமான வாழ்க்கைக்கு கீர்த்தியும் பழக்கப்பட்டு விட்டாள், அரவிந்தும் பழக்கப்பட்டு விட்டான்.

சிதம்பரத்திற்கு, ராணிக்கும் தன் தங்கள் மகன், மருமகளின் வாழ்க்கையை நினைத்து கவலையாக இருந்தது. அவர்கள் அனைவருக்கும் இருந்த ஒரே ஆறுதல் அம்முதான். இவ்வளவு நாட்களாக தன் பொக்கை வாய் சிரிப்பால் கொள்ளை கொண்ட அம்முவிற்கு இப்போது லேசாக பல் வர துவங்கியிருந்ததால் எதை எடுத்தாலும் வாயில் வைத்தாள்.

இப்படி கண்டதையும் வாயில் வைக்க... அம்முவிற்கு வயிற்றுப் போக்கு ஆரம்பித்தது. ராத்திரி ஆரம்பித்தது. இரண்டு, மூன்று முறை தொடர்ந்து போகவும் பயந்துவிட்டாள் கீர்த்தி.

அரவிந்திற்கு இது எதுவும் தெரியவில்லை, நல்ல உறக்கத்தில் இருந்தான். அவனை எழுப்புவதற்காக

“என்னங்க, என்னங்க” என்று அழைத்தும் அன்று பார்த்து அரவிந்த் அசையவேயில்லை.

அவனைத் தொட்டு உலுக்கி எழுப்பினாள், அவளே வந்து எழுப்பவும் பயந்து விட்டான் அரவிந்த்.

“என்ன கீர்த்தி...”

“அவளுக்கு லூஸ் மோஷன் போல போகுது, நாலஞ்சு தடவை போயிட்டா, அழறா வேற” என்றாள்.

குழந்தையின் அழுகைக்குக் கூட விழிக்காத தன்னை நொந்து கொண்டே, “சாரி” என்றபடியே எழுந்தான். “அம்மும்மா” என்று கைகளில் அவளை தூக்கவும், காய்ச்சல் வேற அடித்தது.

“டாக்டர் காலைல பத்து மணிக்கு தானே க்ளினிக் வருவாறு, சமாளிக்க முடியாதா” என்றான். “தெரியலை” என்றாள் பதட்டமாக. விட்டால் அழுது விடுவாள் போல இருந்தாள் கீர்த்தி.

“இதுக்கு எதுக்கு கீர்த்தி இவ்வளவு பயப்படற. சரியாகிடும். இப்போதைக்கு கைல பேரசிடமால் மட்டும் இருந்தா

காய்ச்சலுக்கு குடு, காலைல பார்த்துக்கலாம் ஒண்ணும் ஆகாது" என்றான். காய்ச்சலுக்கு மருந்து கொடுக்கவும், உறங்கினாள் அம்மு.

அப்போதும் தலை சாய்த்தாள் இல்லை கீர்த்தி... கீர்த்தி உறங்காத போது, தான் மட்டும் எப்படி உறங்குவது என்று அவனும் எழுந்து அமர்ந்து கொண்டே இருந்தான்.

"நீங்க தூங்குங்க நான் பாத்துக்கறேன்" என்றாள் கீர்த்தி.

"இல்லை, நீ ரொம்ப பயப்படற, நானும் முழிச்சிட்டு இருக்கேன்" என்று அவனும் அமர்ந்தே இருந்தான்.

விடியும் வரை கிட்டத்தட்ட நான்கைந்து மணி நேரம் இருவரும் அமர்ந்தே இருந்தனர். பேச்சென்பது இல்லை. அந்த இரவின் நிசப்தத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் பாராதபோது பார்த்துக் கொண்டு அமர்ந்தே இருந்தனர்.

அம்முவிற்கு காய்ச்சல் சற்று விட்டிருந்தாலும், வயிற்றுப்போக்கு மட்டும், நிற்கவில்லை. குழந்தை மிகவும் துவண்டு விட்டாள். கையில் தூக்கினால்

துவளையாக தோள் மேல் சரிந்தாள்.

கீர்த்தி, நம்ம இப்பவே ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போகலாம்" என்று சொல்ல, பக்கத்தில் இருந்த சற்று பெரிய ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போக... அவர்கள் குழந்தைக்கு ட்ரிப்ஸ் போட வேண்டும் என்றனர்.

அம்முவை அட்மிட் செய்யவேண்டும் என்றதும், கீர்த்தியை இன்னும் பதட்டம் தொற்றிக் கொண்டது. அப்போது ரௌண்ட்ஸ் வந்த குழந்தைகள் டாக்டரும் கூறினார். "ரொம்ப பயப்படற மாதிரி ஒண்ணும் இல்லை. இருந்தாலும் குழந்தை ரொம்ப சோர்வா தெரியறா. நிறைய டீஹைட்ரேட் ஆகியிருப்பா போல இருக்கு. அதுக்கு தான் ட்ரிப்ஸ் போடச் சொல்றேன்." என்றார்.

இருந்தாலும் அட்மிஷன் என்றதும் கீர்த்தி பயந்து விட்டாள். வீட்டிற்கு போன் செய்ய உடனே சிதம்பரமும், ராணியும் வந்து விட்டனர். இங்கே ராஜேந்திரனும், இந்துமதியும் வந்து விட்டனர். தனது தாத்தாக்கள், பாட்டிகள் புடைசூழ அம்மு ஹாஸ்பிடலில் அட்மிட் ஆனாள்.

குழந்தைக்கு ட்ரிப்ஸ் போட, கையில் வெயின் தேடினால், அது கிடைக்கவில்லை. அம்மு வேறு பயங்கரமாக அழுதாள். கீர்த்தி அம்முவை கையில் வைத்திருக்க... அப்படியே தான் வெயின் தேடினர் சிஸ்டர்கள். அரவிந்த் அம்மு கையை அசையாமல் பிடித்து கொள்ள, பின்பே சிஸ்டர்களால் வெயின் கண்டுபிடித்து ட்ரிப்ஸ் போட முடிந்தது.

அம்முவை விட அதிகமாக கீர்த்தி துடித்தாள். அம்மாவும் பொண்ணும் துடிப்பதைப் பார்த்த அந்த சிஸ்டர் கூட கிண்டல் செய்துவிட்டுப் போனார். "இப்படி ஒரு நாலு பேஷண்ட் வந்தா போதும், நாங்க ஒரு வழி ஆகிடுவோம்" என்ற சிஸ்டர் சும்மா இராமல், கீர்த்தியிடம், "ஏன்மா நீயெல்லாம் எப்படி பிரசவ வலி தாங்கின" என்று கிண்டலடித்துப் போக...

கீர்த்தி அரவிந்தை பார்த்து முறைத்து விட்டு அந்தப்புறம் நகர, அரவிந்த் சத்தமாகவே கீர்த்திக்கு கேட்கும் படியே "இங்கு குழந்தைக்கே வழியக் காணோம், இதுல எங்க பிரசவ வலி" என்று குறைபட்டு திரும்ப...

படுக்கையில் குழந்தையைக் கிடத்தி விட்டு வந்த கீர்த்தி அவனுக்கு நேருக்கு நேர் நின்று முறைத்தாள். நிறைய பேர் ரூமில் இருக்கக் கூடாது என்றதால் பாட்டிகள், தாத்தாக்கள் எல்லாம் வெளியில் நின்றனர்.

“எதுக்கு இப்போ முறைக்கிற, உண்மையைத் தானே சொன்னேன்.” என்றான் அரவிந்த்.

அப்போதும் கீர்த்தி விடாமல் முறைக்க... “ஆ, ஊன்னா, ஒரே முறைப்ஸ். இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை” என்று மறுபடியும் கூறினான் அரவிந்த்.

“என்னவாயிற்று இவனுக்கு இன்று என்னிடம் இவ்வளவு வம்பு வேண்டுமென்றே வளர்க்கிறான்” என்று எண்ணிய கீர்த்தி, இன்னும் நின்றால் அதுதான் சாக்கு என்று பேச்சை வளர்ப்பான் என்று அறிந்தவள், அமைதியாக குழந்தையின் புறம் சென்று அமர்ந்து கொண்டாள்.

“இவ்வளவு பேசறேன், சண்டை போடறதுக்காகவாவது வாயைத் தொறக்கிறாளான்னு பாரேன்” என்று

முணுமுணுத்தான் அரவிந்த்.

ஆனால் எதற்கும் கீர்த்தி, அசையவில்லை.

குழந்தைக்காக அவள் அப்படி துடிப்பதைப் பார்த்த அரவிந்திற்கு அவளோடு பேச வேண்டும் என்று மிகுந்த ஆர்வமாக இருந்தது. அதுவும் அந்த சிஸ்டர், "நீ எல்லாம் எப்படித்தான் பிரசவ வலி தாங்குனியோ" என்று சொல்லவும், அவனையறியாமல் பேசத் துவங்கி விட்டான்.

அதற்குள், அரவிந்தின் பெற்றோர்களும், கீர்த்தியின் பெற்றோர்களும் ரூமிற்குள் வர, பேச்சு நின்றது. கீர்த்தியோட அவள் அம்மா இந்துவும், ஹாஸ்பிடலிலேயே இருந்து கொள்ள, ஒரு வழியாக மற்றவர்கள் எல்லாம் கிளம்பினர்.

கீர்த்தியின் பாராமுகம் அரவிந்திற்கு பழகியிருந்தாலும், இன்று ஏனோ வலித்தது. அவனுக்கு அம்முவோடே இருக்க வேண்டும் போல இருந்தது. ஆனால் இருவருக்கு மேல் இருக்கக் கூடாது என்றதால் வேறு

வழியில்லாமல் கிளம்பினான் சலித்தபடியே.

அரவிந்தின் முகம் சரியில்லை என்று கீர்த்தி உணர்ந்தாள் தான். இருந்தாலும் அவனைச் சமாதானப்படுத்த ஏதும் செய்ய விழையவில்லை.

இரண்டு நாட்கள் அம்மு கீர்த்தியைப் படுத்தி எடுத்து விட்டாள். கீர்த்தியால் ஒன்றும் முடியவில்லை. அவளை விட்டு இம்மியும் அம்மு நகரவில்லை. வேறு வழியில்லாமல் அம்முவைப் பார்க்க வந்த அரவிந்தை, "நீங்க இன்னிக்கு ஹாஸ்பிடலிலேயே இருக்கீங்களா" என்றாள் திருவாய் மலர்ந்து...

அரவிந்த் ஆச்சரியமாகப் பார்க்க... "கொஞ்ச நேரம் கூட என்னை விட்டு நகர மாட்டேங்கறா, நீங்க இருந்தா இன்னும் கொஞ்சம் சுலபமா அவளை சமாளிக்கலாம்" என்று கேட்டாள்.

அரவிந்த் மனதிற்குள்ளேயே, 'அம்மும்மா நீதான் என் செல்லம். அப்படியே உங்கம்மாவை என்னோட சேர்த்து வச்சிரும்மா" என்று மனதிற்குள்

அவளிடம் வேண்டுதல் வேறு வைத்தான்.

அம்முவும் அதை உணர்ந்தாளோ என்னவோ, கீர்த்தியின் கைகளில் இருந்து அரவிந்தின் கைகளுக்கு தாவியதுமே சமர்த்தாக கைகளில் அமர்ந்து, அவன் மேல் சாய்ந்து கொண்டு கீர்த்தியைப் பார்த்து சிரித்தாள்.

"என்னை அவ்வளவு பாடுபடுத்திட்டு, உங்கப்பா மேல ஏறின உடனே சிரிக்கறியா, நீ உன்னை..." என்று கீர்த்தி அவளை அதட்டினாள்.

அம்முவிற்கு என்ன புரிந்ததோ என்னவோ, மறுபடியும் கைதட்டிச் சிரித்தாள். அவள் அம்மா சொல்லிக் கொடுத்த புதுப் பழக்கம். அம்மாவை நோக்கியே செய்யவும்... பதறினாள் கீர்த்தி.

"அம்மும்மா" கைகளைப் பிடித்தவள், அரவிந்தை திட்டினால், "அவ கையை அந்த ஆட்டு ஆட்டறா, அதைப் பிடிக்காம சும்மா வேடிக்கைப் பார்த்துட்டு இருக்கீங்க." என்று அதட்டினாள்.

அந்த அதட்டல் கூட அரவிந்திற்குப் பிடித்திருந்தது. அவள்

உரிமை எடுத்துக் கொள்வது அவனுக்கு சுகமானதொரு வலியைக் கொடுத்தது.

கீர்த்தி குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டிருக்க... அரவிந்த் அவளையே பாhத்துக் கொண்டிருந்தான்.

'பண்றதையெல்லாம் பண்ணிட்டு இந்தப் பார்வைக்கு ஒண்ணும் கொறைச்சலில்லை' என்று மனதிற்குள்ளேயே அவனை மறுபடியும் திட்டினாள் கீர்த்தி.

'எதற்கு இவ்வளவு பிரச்சனை பேசாமல் இது தண்டபாணியின் குழந்தை' என்று கீர்த்தியிடம் சொல்லி விடுவோமா என்று தோன்றியது. ஆனால் உடனே என் குழந்தை தான் அம்மு, என் குழந்தையாகவே வளரட்டும் என்று மனதை மாற்றிக் கொண்டான்.

அவன் முகம் யோசனையில் இருப்பதை உணர்ந்த கீர்த்தி, வேறு ஒன்றும் பேசவில்லை. ரௌண்ட்ஸ் வந்த டாக்டரிடம், "எப்போ டிஸ்சார்ஜ் டாக்டர்" என்று அரவிந்த் கேட்டான். "நாளை செய்து விடலாம்" என்றார் அவர்.

"அப்போ இன்னும் ஒரு நாள்

இருக்கணுமா” என்று கீர்த்திக்கு தோன்ற இன்னும் ஒரு நாள் தானா இருக்கணும்” என்ற அரவிந்திற்கு தோன்றியது. இருவர் முகங்களும் வெள;வேறு உணர்ச்சியை வெளிப்படுத்தியது.

சிறிது நேரத்தில் அம்மு உறங்கிவிட, “ஏதாவது பேசேன் கீர்த்தி. எவ்வளவு நேரம் இப்படியே உட்கார்ந்து இருக்கிறது” என்று அரவிந்தே கீர்த்தியிடம் பேச்சை ஆரம்பித்தான்.

அவனை ஒரு பார்வை பார்த்த கீர்த்தி, அவன் பேசியது கண்டு கொள்ளாதது போல திரும்பிக் கொள்ள...

அவள் அம்முவிற்கு பக்கத்தில் உட்கார்ந்திருக்க... அவளுக்கு அருகில் வந்தமர்ந்தவன், கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகப் போகுது எனக்கு மன்னிப்பே கிடையாதா” என்றான் உருக்கமாக.

“நீ மன்னிக்கிற மாதிரி என்ன தப்பு செஞ்சீங்கன்னு என்கிட்ட சொல்லவே இல்லையே” என்றாள் கீர்த்தி.

அரவிந்த் புரியாமல் பார்க்க...

“ஊருக்குப் போன, ஒரு குழந்தைய

தூக்கிட்டு வந்த, அவ அம்;மாவும் நானும் பிரிஞ்சிட்டோம்ன, இந்தக் குழந்தைய வளர்க்கறது என் கடமைன்றது மாதிரி தூக்கிக் குடுத்துட்ட... வேறென்ன செஞ்ச இல்ல சொன்ன. இதுல எங்கப்பா வேற ப்ளாக்மெயில் பண்ணி என்னை உன்னோட இருக்க வெச்சிட்டார். வேற என்ன நீங்க செஞ்சீங்க" என்று மரியாதையில்லாமலும் கொடுத்தும் பேசினாள்.

"என்னை சமாதானப்படுத்த தான் முயற்சி பண்றீங்களே தவிர என்ன நடந்ததுன்னு சொல்லவே இல்லையே."

"நீ சொன்னதே தான் கீர்த்தி, நானும் அவளுமே பிரிஞ்சிட்டோம், இனி அதைப் பத்தி பேசி என்ன பிரயோஜனம்."

"ப்ரயோஜனம் இருக்கா இல்லையான்னு நான் முடிவு பண்றேன், நீங்க சொல்லுங்க."

"எனக்கு இப்போ அந்த நினைவகள் கூட இல்லை கீர்த்தி." என்றான் பாவமாக.

"ஒரு குழந்தை, உங்களோடு வாழ்ந்து பெத்த பொண்ணையே

மறந்துட்டீங்கன்னா... என்னையெல்லாம் எப்படி ஞாபகம் வச்சிருப்பீங்க" என்றாள் பட்டென்று.

"எல்லாரும் நீயும் எனக்கு எப்பவுமே ஒண்ணில்லை கீர்த்தி. நீ எனக்கு எப்பவுமே ஸ்பெஷல்."

"உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா தெரியலை, இது சொல்ற விஷயமில்லைங்க, புரிய வைக்கிற விஷயம்."

"எனக்கு எப்படிப் புரிய வைக்கிறதுன்னு தெரியலையே."

"இனி எப்படி புரிய வைக்க முடியும். உங்க வாழ்க்கைல இன்னொரு பொண்ணுக்கு இடம் கொடுத்திருக்கீங்க, அதுவும் என்கிட்ட காதல் சொல்லிட்டு போய் குடுத்திருக்கீங்க, எப்படி உங்களால முடிஞ்சது" என்றாள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு, கண்களில் கண்ணீரைத் தேக்கி...

இதற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை அரவிந்திற்கு.

அரவிந்தை பார்த்த கீர்த்தி, மிகவும்

உணர்ச்சி வசப்பட்டு. பட்டென்று உடைந்தவள் குமுறிக் குமுறி முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அவளே அழுகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தான் நினைத்தாள், முடியவில்லை. நெடுநாளைய மனதில் போராட்டம் பெரும் துக்கப் பந்தாகத் தொண்டைக் குழியில் இருந்து கிளம்பியது.

அரவிந்த் அவளருகில் அமர்ந்து, "அழாதே கீர்த்தி" என்ற சமாதானப்படுத்து விழைய ஆரம்பித்தது தான் தாமதம். அவன் மார்பிலேயே முகம் புதைத்தவள், ஏன் இப்படி பண்ணுனீங்க" என்று கதறித் தீர்த்தாள்.

அரவிந்தால் சமாதானப்படுத்த முடியவில்லை. அமைதியாக அவளை அணைத்தபடியே இருந்தான். அவளின் கதறல் அவன் மனதை வெகுவாக அசைத்திருக்க... அப்படியே அமர்ந்திருந்தான்.

அழுது கொண்டிருந்தவள் திடீரென்று நிமிர்ந்து, "நீங்க என்னவோ என்கிட்ட பொய் சொல்றீங்கன்னு என்

உள்மனசு சொல்லுது. அம்மு ப்ரிமெச்சூர்ட் பேபி எல்லாம் இல்லை, நல்ல ஆரோக்யமான பேபின்னு டாக்டர் சொன்னாங்க.”

“நீங்க லண்டன் போன பீரியட் வைச்சு பார்த்தா, இவ உங்களுக்கு பொறந்தா குழந்தையா இருக்க வாய்ப்பேயில்லை. நீங்க என்கிட்ட பொய் சொல்றீங்க தானே” என்றாள் ஆக்ரோஷமாக...

மெல்ல அதிர்ந்தான் அரவிந்த். அந்த உடல் அதிர்வு கீர்த்திக்கு எதையோ உணர்த்த... “என்மேல ப்ராமிஸ் பண்ணி சொல்லுங்க இது உங்க குழந்தைன்னு” என்றாள் ஆவேசமாக அவன் கையை எடுத்து தன் தலையில் வைத்து.

அரவிந்த் இப்படி அவள் தன்னைக் கார்னர் பண்ணுவாள் என்று எதிர்பார்க்கவில்லை. அவள் பூ முகத்தைப் பார்த்தபடி, தலையில் கை வைத்தபடி அமர்ந்திருந்தான்.

“நீங்க இன்னைக்கு உண்மையைச் சொல்ற வரைக்கும் நான் விடப் போறதில்லை” என்றாள் தீர்மானமாக.

உண்மையைச் சொல்லும் முடிவை நிமிஷ நேரத்தில் எடுத்த அரவிந்த், “என்ன உண்மை உனக்குத் தெரியணும்” என்றான்.

“அம்மு என் பொண்ணுன்ற வார்த்தை தான் என் வாயிலயிருந்து வரும். அவ பிறப்பால என் பொண்ணா இல்லைன்னாலும், என் பொண்ணுதான்” என்றான் பெருமூச்சை வெளிப்படுத்தி.

கீர்த்தி இதை சேட்டு சமாதானமாவாள் என்று அவன் எண்ணியிருக்க... அவள் முகம் கோபத்திலும், ஆக்ரோஷத்திலும் இன்னும் சிவந்தது.

“அப்போ என்கிட்ட பொய் சொல்லியிருக்கீங்க, என்னை நம்பலை நீங்க அப்படிதானே. அப்படி பொய் சொல்லி உங்க குழந்தையா வளர்க்க வேண்டிய அவசியம் என்ன, யார் குழந்தை அது” என்றவள், இந்த முறை அவன் கையைப் பிடித்து அம்முமேல் வைத்து, “இவ மேல நீங்க உண்மையைச் சொல்லணும்” என்று சொன்னாள்.

“நீ எப்பவும் யார்கிட்டயும்

எதுக்காகவும் நீ சொல்லமாட்டேன்னு சொன்னா சொல்றேன். இதைப் பத்தி நம்ம கூட மறுபடியும் பேசக்கூடாது, அப்படின்னா சொல்றேன்" என்றான் அவளையே தீர்க்கமாகப் பார்த்தபடி.

"அப்படி யாருக்கும் தெரியக்கூடாத அளவுக்கு அவ யார் குழந்தை" என்றாள் கண்களில் சந்தேகத்தை தேக்கி...

"தண்டபாணியோட குழந்தை" என்றான்.

கேட்ட கீர்த்தி, பயங்கர அதிர்ச்சியடைந்தாள். அவள் இதை எதிர்பார்;க்கவில்லை. "என்ன... என்ன சொன்னீங்க" என்றாள் மறுபடியும்.

21

"தண்டபாணியோட குழந்தை" என்றான் இன்னும் தெளிவாக.

"எப்படி, யாரோட, ஏன் எங்ககிட்ட சொல்லலை" என்ற அவள் அதிர்ச்சியிலேயே வரிசையாக கேள்விகளை அடுக்க...

அம்முவைப் பார்த்தான் அரவிந்த்... அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க... லண்டன்ல நடந்ததையெல்லாம் சொல்ல ஆரம்பித்தான்.

தண்டபாணியும், லிசாவும் ஒருவரை ஒருவர் விரும்பி, திருமணம் செய்யாமல் இணைந்து வாழ்ந்தது. லிசா கருவுற்றது. அவளை திருமணத்திற்கு தண்டபாணி கட்டாயப்படுத்தியது. திடீரென்று நடந்த கலவரத்தில் ஒரு பைத்தியக்காரன் தண்டபாணியை சுட்டது. நிமிஷ நேரத்தில் தண்டபாணி உயிரிழந்தது. கருவை அழிக்க லிசாவின் அம்மா நினைத்தது. முடியாது குழந்தை வளர்ந்து விட்டது என்று டாக்டர் மறுக்க... தன் நண்பனின் குழந்தையை அவர்கள் குடும்பத்திடம் சேர்க்கும் பொருட்டு, தண்டபாணியின் பெயரை உபயோகித்து தான் கேட்டது, முதலில் மறுத்த லிசா பிறகு சம்மதித்தது. அதற்கு லிசாவின் அம்மாவும், ஹரிஷ{ம் துணை புரிந்தது என் அனைத்தையும் சொல்லி முடித்தான்.

கேட்ட கீர்த்தி அப்படியே அமர்ந்துவிட்டாள். தன் அண்ணனா திருமணம் செய்யாமல் ஒரு பெண்ணோடு

சேர்ந்து வாழ்ந்தான். அதனால் ஒரு குழந்தை உருவாகியிருக்கிறது. மேலை நாட்டில் பிறந்த லிசாவிற்கு வேண்டுமானால் இது சாதாரண விஷயமாக இருக்கலாம், ஆனால் என் அண்ணன் அவன் எப்படி இப்படி ஒரு வாழ்க்கையை தேர்ந்தெடுத்தான். ஆச்சரியம், அதிர்ச்சி என்பதைவிட, இப்படி எப்படி தன் அண்ணன் செய்ய முடியும் என்ற ஆதங்கமே அதிகமாக இருந்தது.

“சரி அதை ஏன் எல்லார்கிட்டயும் சொல்லாம மறைச்சீங்க” என்றாள் கீர்த்தி.

“அவங்க ரெண்டு பேரும் திருமணம் செய்யாம வாழ்ந்திருக்காங்க. அவங்களுக்குப் பொறந்தது இல்லீகல் சைல்ட். அந்த மாதிரி ஒரு நிலமை தண்டபாணியோட குழந்தைக்கு வரக்கூடாதுன்னு நெனச்சேன். என் நண்பனோட குழந்தை தகப்பன் இல்லாத குழந்தையா வளரக்கூடாது;னனு நெனச்சேன். அதனால யார்கிட்டயும் சொல்லலை, உங்கப்பாவைத் தவிர.”

“என்ன எங்கப்பாக்குத் தெரியுமா,

அதான் அவ்வளவு சப்போர்ட் பண்ணினாறா" என்றாள் ஆச்சரியமாக.

"ஆமாம்" என்பது போல தலையாட்டியவன், "எங்கப்பா, அம்மாவுக்கு தெரிஞ்சா கண்டிப்பா என்னை வளர்க்க விட மாட்டாங்க, ஒண்ணு உங்கப்பா கிட்ட குடுக்கச் சொல்வாங்க இல்லை அவங்கம்மாவையே வளர்க்கச் சொல்லி குடுன்னு சொல்வாங்க. ரெண்டுமே என்னால முடியாது. ஏன்னா அவ என் நண்பனோட குழந்தை. என் குழந்தை" என்றான் உருக்கமாக.

"என்கிட்ட என்கிட்ட ஏன் சொல்லலை" என்றாள் ஆவேசமாக அரவிந்தைப் பார்த்து...

"எனக்கு யார் மூலமாவது விஷயம் எங்கப்பா, எங்கம்மாக்குத் தெரிஞ்சிட்டா என்னன்ற பயம், அதைவிட அம்முக்கு அவ அப்பாவும், அவ அம்மாவும் இல்லைன்ற விவரம் பெரியவளானாலும் தெரியக்கூடாதுன்னு நினைச்சேன்."

"எப்படி என்னை உங்களால வேத்து மனுஷியா நினைச்சு எல்லார்கிட்டயும் மறைச்ச மாதிரி மறைக்க

முடிஞ்சது. அதுவும் என் தண்டுவோட குழந்தையை, நீங்க என்னை நம்பலை, அதை விட நீ என்னை ஒரு பொருட்டாவே நினைக்கலை.”

“யாரோ ஒரு குழந்தையைக் கொண்டு வந்து என் குழந்தைன்னு சொன்னா எனக்கு வளர்க்கணும்னு என்ன, அதுக்காக கூட நீங்க என்னை மதிக்கலை.”

“நான் உங்க மனைவின்றதுக்கு ஒரு அர்த்தமேயில்லை. அர்த்தமேயில்லாம செஞ்சிட்டீங்க. எனக்கு இப்போ தான் இன்னும் வலிக்குது. உங்க வாழ்க்கைல ஒரு பொண்ணு இருக்கான்னு சொல்லி, பொண்ணேயில்லாம, என்னை பிரிஞ்சு ஒரு வருஷம் இருந்திருக்கீங்க.”

“நான் உங்களுக்குத் தேவைன்னு நினைச்சிருந்தா, உண்மைய சொல்லியிருக்க மாட்டீங்க. அந்த அளவுக்கு நான் தேவையில்லாதவளா போயிட்டேன். ஒரு சின்ன குழந்தையால இந்த அளவுக்கு அசைக்க முடிஞ்ச மனச ஒரு மனைவியா என்னால தொடக்கூட முடியலை” என்றாள் ஆக்ரோஷமாக.

இது என் குழந்தை என்று அரவிந்த் குழந்தையைத் தூக்கி வந்தபோதுகூட இவ்வளவு கோபத்தைக் கீர்த்தி காட்டவில்லை.

இப்போதும் அரவிந்த் செய்த தவறு. அவளை சமாதானப்படுத்துவதை விட்டு, "யார்கிட்டயும் இதைச் சொல்லிடாத கீர்த்தி" என்றதுதான்.

"இப்பவும் நீங்க என்னை நம்பலைல்ல" என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

அதற்குள் அம்மு சிணுங்க, "ச்சீ போடா" என்று அவனை அப்படியே தள்ளி குழந்தையிடம் சென்றாள்.

அந்தக் குரலில் அப்படி ஒரு கோபம். ஒரு நிமிடம் பயந்துவிட்டான் அரவிந்த். இவ்வளவு வெறுப்பாகக் கூட கீர்த்தி நடந்து கொள்வாளா என்றிருந்தது.

குழந்தையைத் தூக்கிய கீர்த்தி, ஒரு நிமிடம் கண் மூடி கட்டுக்குள் கொண்டு வந்தவள், "என் செல்லமில்ல அம்முகுட்டி, எதுக்கு அழறீங்க, அம்மாவைத் தேடினீங்களா, அம்மா இங்க இருக்கன்டா செல்லம்" என்றவுடன் அது சிணுங்களை

நிறுத்தி அவளைப் பார்த்துச் சிரித்தது.

அந்தச் சிரிப்பில் தன்னைத் தொலைத்தவள், அதில் தண்டபாணியின் சாயலைத் தேடினாள். அரவிந்தின் குழந்தையாக பார்க்கத் தொடங்கிய அம்மு, சிறிது நாட்களில் தன்னுடைய குழந்தையாக மாறிய விந்தை, தன் அண்ணனின் உயிர் குருத்து என்பதால் தானோ என்றிருந்தது.

தன் அண்ணனின் வித்து என்றறிந்தவுடன், மறுபடியும் ஆசையாக அம்முவை உச்சி முகர்ந்தவள், அரவிந்தைப் பார்க்க, அவன் இவர்களையே பார்த்திருந்தான். சுற்றும் உணர்ச்சிகள் இல்லாத பார்வை.

‘செய்யறதை எல்லாம் செஞ்சிட்டு எப்படி கல்லு மாதிரி நிக்கிறான் பாரு’ என்று அரவிந்தை முறைத்துப் பார்க்க... அவன் அதே உணர்ச்சிகளற்ற பார்வை பார்த்தான்.

அப்படியே வேகமாக அவனருகில் வந்தவள், “எப்படி இப்படி அம்முவை அவங்கம்மா கொடுக்க ஒத்துகிட்டா, யாராவது குழந்தைய கொடுக்க

ஒத்துப்பாங்களா. எப்படி அவ சம்மதிச்சா. ஒண்ணு அவ சரியில்லாத பொண்ணா இருக்கணும். குழந்தையப் பார்க்க முடியாம உன்கிட்ட கொடுத்திருக்கணும், இல்லை நீ ஒரு குழந்தைய அவ அம்மாகிட்ட இருந்த பிரிக்கிற அளவுக்கு திறமைசாலியா இருக்கணும். அவ்வளவு திறமைசாலியா நீ அம்மாகிட்ட இருந்து குழந்தைய பிரிச்சிட்ட" என்றாள்.

இவ்வளவு நாட்களாக உண்மையைச் சொல்லாததால் ஒரு பாரம் எப்போதும் அரவிந்தின் மனதை அழுத்திக் கொண்டே இருந்தது. இப்போது கீர்த்தியிடம் உண்மையைச் சொல்லி விட்டதால், பெரும் ஆசுவாசமாக உணர்ந்தான்.

அவன் அந்த மனநிலைமையை அனுபவித்துக் கொண்டு இருக்கும்போதே... கீர்த்தி அவன் மீது தாயிடமிருந்து குழந்தையைப் பிரித்து விட்டான் என்ற குற்றச்சாட்டை வைக்க... அவனுள் லேசாக கோபம் கிளம்ப ஆரம்பித்தது.

அதற்கேற்றாற் போல அவள்

மறுபடியும், “என்ன உண்மையச் சொன்னவுடனே பதில் பேச முடியலையோ” என்று அவள் அலட்சியமாக கேட்க... அந்த அலட்சியம் அவனுள் கிளம்ப ஆரம்பித்த கோபத்தை முடுக்கிவிட...

“தோ பார், என்னை என்ன வேணா சொல்லிக்கோ, திட்டிக்கோ, எனக்கு பிரச்சனை கிடையாது. ஆனா அம்மு என் குழந்தை அதுல எந்த மாற்றமும் இருக்கக் கூடாது. யார்கிட்டயும் நீ அம்மு தண்டபாணியோட குழந்தைன்னு சொல்லக்கூடாது. உங்கப்பா கிட்ட கூட உனக்கு விஷயம் தெரிஞ்ச மாதிரி காட்டிக்க வேண்டாம் புரிஞ்சதா” என்றான் மிரட்டும் தொனியில்.

என்னடா இவன் இந்த எகிறு எகிறான் என்பது போல கீர்த்தி பார்த்தாள்.

அவள் பார்வையை சற்றும் லட்சியம் செய்யவில்லை அரவிந்த். “என்ன சொன்னது புரிஞ்சதா” என்றான்.

“ஓ புரிஞ்சதோ, அம்மு உங்க குழந்தை... உங்க குழந்தை” என்றாள்

வேண்டுமென்றே, “உங்க குழந்தையில் அழுத்தம் கொடுத்து.

ஆனால் அரவிந்திற்குப் புரியவில்லை, அவள் தன்னை குத்திக் காட்டுகிறாள். தன் குழந்தை என்று சொன்னதற்கு என்று.

“ஆமாம், ஆமாம் என் குழந்தைதான்” என்றான் மறுபடியும் சண்டை போடுவது போல்.

“அப்போ இவ எனக்கு யாரு” என்றாள் கைகளைக் கட்டியபடி நக்கலாக கீர்த்தி.

“உனக்கு... உனக்கு...” என்று தடுமாறியவன், அப்போது தான் தன் தவறை உணர்ந்து, “உனக்கும் குழந்தைதான்” என்றான்.

“தெரிஞ்சா சரி” என்று நொடித்தவள்... கோபம் மாறாதவளாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அரவிந்திற்கு அவன் கோபத்தில் வித்தியாசம் தெரிந்தது. முன்பிருந்த கோபத்தில் ஒரு வார்த்தை கூட அவனை நோக்கி வராது. அரவிந்தாகப்

பேசினாலும் பதில் பேச மாட்டாள். இப்போது இருப்பது வேறு மாதிரியான கோபம்.

சலசலவென்று பேசி, திட்டிக் கொண்டு இருந்தாள். சமாதானப் படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை சிறிது முளைத்தது அரவிந்திற்கு.

பழைய தைரியமான கீர்த்தி சற்று எட்டிப் பார்ப்பது போலத் தோன்றியது. என்னை என்ன செய்யப் போகிறாள் தெரியவில்லையே என்று சற்று பயமாகவும் இருந்தது.

சிறிது நேரம் அப்படியே இருவரும் அமர்ந்திருக்க, மறுபடியும் அவனிடம் "எப்படி அவங்கம்மா குழந்தையைக் கொடுத்தா எப்படி" என்று ஆரம்பிக்க...

"சும்மா நொய் நொய்ங்காத, அத அவ அம்மாகிட்டதான் கேட்கணும்."

"அவ அம்மா எங்க இருக்கா, சொல்லு நான் கேட்கறேன்" என்றாள்.

"நீ ஒண்ணும் கேட்காத கொஞ்சம் வாயை மூடிட்டு இரு" என்று எரிந்து விழுந்தான்.

“ஏன்... ஏன்... கேட்டா என்ன...”

“கேட்டா என்னவா, அவ பாட்டுக்கு வந்து குழந்தையைக் குடுன்னு கேட்டா என்ன செய்வ... சும்மா இரு... நம்ம பேசுனத இத்தோட மறந்துரு... அம்மு நம்ம குழந்தை அதை மட்டும் ஞாபகம் வச்சிக்கோ” என்றான் இந்த முறை தெளிவாக.

“பெரிய இவன், இவன் சொல்லலைன்னா எனக்கு தெரியாதா” என்று மறுபடியும் நொடித்தாள். ஒரு கலவையான உணர்ச்சியில் இருந்தாள் கீர்த்தி... அம்மு தன் அண்ணன் குழந்தை என்று தெரிந்த சந்தோஷம் ஒருபுறம்... அரவிந்தின் குழந்தை இல்லை என்று தெரிந்த சந்தோஷமும் ஒருபுறம்... இவ்வளவு நாட்களாக பொய் சொல்லி தன்னை பொம்மையாக அரவிந்த் ஆட்டி வைத்திருக்கிறானே என்ற துக்கம் ஒருபுறம், தான் அரவிந்தை பாதித்ததை விட அந்தக் குழந்தை அவனை அதிகமாகப் பாதித்ததால் தான் தன்னிடம் பொய் சொன்னான் என்ற துக்கம் ஒருபுறம்... கலவையோ கலவை அவளை கலக்கிக் கொண்டிருந்தது.

இத்தனை நாட்களாக பேசாத கீர்த்தி, இப்போது தொணதொணவென்று பேசினாள். அரவிந்திற்கு பயமாக இருந்தது. இவள் பேசிப் பேசியே எல்லோருக்கும் காட்டிக் கொடுத்து விடுவாளோ என்ற கவலை எழுந்தது. இதில் லிசாவை பற்றி அவள் கேட்டது அதிகம்.

“ஒரு போட்டோவாவது காட்டுங்களேன்” என்று கடைசியாக அரவிந்திடம் வந்தாள்.

“இதுக்கு தான் நான் உன்கிட்ட எதுவுமே சொல்லலை. இந்த விஷயத்தை மறந்துரு. எத்தனை தடவை உன்கிட்ட சொல்றது. அம்மு உன் குழந்தை நீதான் அவளுக்கு அம்மா. இதுக்கு மேல கேட்காதே” என்று வள்ளென்று எரிந்து விழுந்தான்.

அது சற்று வேலை செய்தது. கீர்த்தி முகத்தைத் தூக்கி வைத்து அமைதியாக அமர்ந்து விட்டாள். அம்முவிற்கு இப்போது சற்று உடம்பு நன்றாக ஆகி விட்டதால், அவள் அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டே இருக்க,

அவளை பார்க்கவே நேரம் சரியாக இருந்தது.

ஒரு வழியாக ஹாஸ்பிடலில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தனர். தன்னைவிட அவனுக்கு குழந்தை தான் முக்கியமோ என்ற கோபம் மட்டும் கீர்த்திக்கு ஆறாமல் இருந்தது.

அதற்காக குழந்தையிடமெல்லாம் எந்த வித்தியாசமும் காட்டவில்லை. முன்பைவிட இப்போது பாசம் அதிகரித்தது, என்றே லெ;ல வேண்டும். முன்பெல்லாம் இவன் குழந்தையை நான் ஏன் வளர்க்க வேண்டும் என்று அரவிந்தைப் பற்றி நினைத்துக் கொண்டே இருப்பாள். இப்போது தண்டபாணியின் குழந்தை என்றவுடன் பாசம் மிகவும் அதிகரித்தது. இன்னும் உயிராக குழந்தையை பார்த்துக் கொண்டாள்.

ஆனால் அவளுக்குள்ளும் அரவிந்திற்குள்ளும் இருந்த பிரிவு அப்படியே இருந்தது. உடலளவிலும், மனதளவிலும் மனைவி என்ற முறையில் அவன் தன்னை சிறப்பு செய்யாதது போலவே உணர்ந்தாள்.

ஊரிலிருந்து வந்து ஒரு மாதம் கழித்தே தன்னை திருமணம் செய்திருக்கிறான். அப்போதே குழந்தையை வளர்ப்பது பற்றி முடிவு செய்து தான் வந்திருக்கிறான்.

ஆனால் தன்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. தண்டபாணியின் குழந்தையை அவன் குழந்தை என்ற பொய் வேறு. வேறு ஒரு பெண்ணுடன் இவனுக்கு தொடர்பு இருந்தால் என் மனம் என்ன பாடுபடும் என்று எண்ணாமல் போனானே என்ற கோபம் கீர்த்தியின் மனதில் அப்படியே தான் இருந்தது.

அவனுடன் ஒன்றாமல் அந்தக் கோபத்தை வெளிப்படுத்தினாள். அவளாகப் பேசினாள் பேசுவாள் அரவிந்திடம். அவன் பேசினால் பதிலே பேசமாட்டாள். அவன் யாரென்றே தெரியாதது போல ஒரு பார்வை பார்த்து வைப்பாள்.

இதனிடையில் குழந்தைக்கு பதினோரு மாதம் ஆக, குழந்தைக்கு முடியெடுத்து காது குத்துவது பற்றி ராணி,

வீட்டில் பேசினார். தன் மாமியார் கூறியதையே ஆமோதித்த கீர்த்தியும், மொட்டையடித்து காது குத்தி விடலாம் என்று சொல்ல, அரவிந்த் ஆட்சேபித்தான்.

“சின்னக் குழந்தைம்மா வேண்டாம்மா” என்றான் அன்னையிடம்.

“எல்லாரும் இந்த வயசுல செய்யறதுதான்டா, அதுக்கு ஏன்டா தடை போடற” என்று அவர் கடிய... லேசில் அரவிந்த் சமாதானமாகவில்லை.

“உங்களுக்கு மட்டுமில்லை எனக்கும் அவ குழந்தை தான். என் குழந்தைக்கு நான் இப்போதான் மொட்டையடிச்சு காது குத்துவேன்” என்று கீர்த்தி அவனிடம் சண்டையிட்டாள்.

“அவ நம்ம குழந்தைன்னு நீங்க நினைச்சீங்கன்னா நான் சொல்றதுக்கு சரின்னு சொல்லுங்க. இல்லை என் குழந்தைன்னு நீங்க நினைக்கறதுன்னா என்னவோ பண்ணுங்க” என்று குழந்தையைக் கொண்டு வந்து அவன் கையில் திணித்துவிட்டு கீர்த்தி போக... அரவிந்த் பரிதாபமாக அவன் அன்னையைப் பார்த்தான்.

“ஏன்டா அவ தான் அவ்வளவு நல்லா அவ குழந்தை மாதிரி தான் பார்த்துக்கறா. அவ என்ன சொல்றாளோ செய்ய வேண்டியது தானேடா” என்றார் ராணி.

“அம்மா, சின்ன குழந்தைம்மா...”

“டேய், ஒண்ணும் ஆகாதுடா, நளினியோட குழந்தைகளுக்கு உன் மடியில் உட்கார வெச்சு தானேடா அடிச்சோம்” என்று ராணி அரவிந்திற்கு ஞாபகப்படுத்த, சற்று சமாதானமானான்.

அவன் அன்னை சென்றவுடன், கீர்த்தியை தேடி அரவிந்த் வந்தான்.

“என்ன கீர்த்தி, பேசிட்டு இருக்கும்போதே குழந்தையை என் கைல குடுத்துட்டு வந்துட்ட, என்னவோ, ஏதோன்னு பயந்து அம்மு எப்படி என்கிட்ட உட்கார்ந்திருக்கா பாரு.”

கீர்த்தி திரும்பிப் பார்க்க... அம்மு பயந்து தன் தந்தையின் கழுத்தை இறுக்கக் கட்டிக் கொண்டிருந்தாள்.

பார்த்த கீர்த்திக்கே ஒரு மாதிரி ஆகிவிட்டது. கையை நீட்டியது தான்

தாமதம், தாவி அவளிடம் வந்தாள் அம்மு.

“அம்மும்மா பயந்துட்டீங்களா, சாரிடா செல்லம்...” என்று கீர்த்தி குழந்தையை முத்தமிட்டு கொஞ்ச, அதையே ஏக்கமாக பார்த்திருந்தான் அரவிந்த்.

இவன் என்னடா நம்மை இப்படி பார்க்கிறான் என்று கீர்த்தி பதிலுக்கு அரவிந்தை பார்க்க... அரவிந்த் பார்வையை அவசரமாகத் திருப்பி வேகமாக வெளியே சென்று விட்டான்.

கீர்த்திக்கு அரவிந்தைப் பார்க்க பாவமாக இருந்தது. “உன் அண்ணனின் குழந்தைக்காக அவன் இவ்வளவு பாடுபட்டிருக்கிறான். நீ ஏன் அவனிடம் இப்படி நடந்து கொள்கிறாய். விஷயத்தை உன்னிடம் இருந்து மறைத்ததைத் தவிர அவன் செய்த தவறு என்ன?” என்று அவள் மனசாட்சி அவளை இடித்துரைக்க ஆரம்பித்தது.

வெளியே எட்டிப் பார்க்க அரவிந்த் சோபாவில் அமர்ந்திருந்தான். அவன் அமர்ந்திருந்த கோலம் அவள் மனதை அசைத்தது. தலைக்குப் பின்புறம்

கைகளைக் கொடுத்து, கண்களை மூடி அமர்ந்திருந்தான்.

தன் அண்ணனுக்காக என்னென்ன செய்திருக்கிறான் என்று அவனையே பார்த்திருந்தாள். தன் அண்ணன் இவன் நட்பைப் பெற நிச்சயம் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்றே தோன்றியது.

சிறிது நேரம் அவனையே பார்த்திருந்தவள், அம்முவை தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள்... வந்தவள் அவனிடம் போய், "இவளைக் கொஞ்சம் பார்த்துக்கோங்க. எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு" என்று அவனிடம் பேச்சுக் கொடுப்பதற்காக வேண்டி சொல்லிச் சென்றாள்.

22

ஒரு வழியாக அரவிந்தை சமாதானப்படுத்தி, மொட்டையடித்து, காது குத்துவது என்பது முடிவாக... யாரையும் அழைக்க வேண்டாம்... அவர் குடும்பமும் கீர்த்தியின் அம்மாவும், அப்பாவும் மட்டும் செல்வது என்று

முடிவானது.

கீர்த்தி தான் யாரையும் அழைக்க வேண்டாம் என்று விட்டாள். “இன்னும் யாருக்கும் குழந்தையைப் பற்றித் தெரியாது. இப்போது அழைத்தால், யார் குழந்தை, என்ன என்பது மாதிரியான பேச்சுக்கள் எல்லாம் உறவுகளிடத்தில் வரும். இன்னும் ஒரு இரண்டு வருடம் தன் குழந்தையாக யாருக்கும் தெரியாமல் வளர்த்து விட்டால், பிறகு தங்கள் குழந்தையாகவே மாறிவிடும்” என்றாள்.

மற்றவர்களுக்கும் அது சரியாகவே தான் பட்டது. நளினியும், தானாகவே வரவில்லை என்று விட்டாள். தான் வந்தால் தன்னுடைய மாமனார், மாமியார் கூட வருவர். ஏதாவது பேச்சு வரும். அதனால் உங்கள் வீடு வரை செய்து கொள்ளுங்கள் என்று விட்டாள்.

நளினி வராதது அரவிந்த் வீட்டினருக்கு சற்று வருத்தம்தான், இருந்தாலும் அம்முவிற்காக சரி சரி என்று விட்டு விட்டனர்.

ஒரு அதிகாலையில் இன்னோவாவில் அரவிந்தின்

குலதெய்வம் கோவிலுக்கு எல்லோரும் கிளம்பிச் சென்றனர்.

இன்னும் தனக்கு விஷயம் தெரியும், அம்மு தண்டபாணியின் குழந்தை என்று, என்ற விஷயத்தை ராஜேந்திரனிடம் கீர்த்தி சொல்லவில்லை. அரவிந்திடமும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி விட்டாள். இருப்பது, இருப்பது மாதிரியே இருக்கட்டும் என்று விட்டாள். அரவிந்திற்கே அவள் செய்கையைக் குறித்து ஆச்சரியம் தான். அவளே சொல்லும்போது, தனக்கென்ன என்று விட்டு விட்டான். கீர்த்தி என்ன சொன்னாலும் கேட்கும் மனநிலையில் அரவிந்த் இருந்தான். அவளுடைய பார்வைக்காக அவ்வளவு ஏங்கிப் போயிருந்தான்.

கீர்த்தியை ஏன் பிடித்தது, எதற்குப் பிடித்தது... எதற்கும் அரவிந்திடத்தில் பதில் கிடையாது. திருமணம் என்று அவன் தந்தை சொன்னதுமே... அவன் மனக்கண்ணில் தோன்றியது கீர்த்திதான்.

நடுவில் தண்டபாணி இறந்தது... அம்முவை இங்கே கொண்டு வர

வேண்டியிருந்தது... நடுவிலும் கீர்த்தியோடு தன் திருமணத்தை நடத்திக் கொண்டான்.

எங்கே தன் சொல்லப் போகும் காரணங்களால் அவள் தன்னை விட்டுப் போய்விடுவாளோ என்று அன்றே ஒரு உறவையும் அவளோடு ஏற்படுத்திக் கொண்டான்.

இப்போது அவளின் அருகாமை, அவளின் நினைவுகள் அவனைக் கொன்றன. இதை எதையும் அறியாத கீர்த்தி, அவன் தன்னிடம் பொய்யுரைத்து விட்டான், காரணம் சொல்லவில்லை, உண்மையைச் சொல்லவில்லை என்று வீம்பு கொண்டு அவனைத் தள்ளியிருந்தாள்.

இன்னோவாவை ஓட்டிக் கொண்டிருந்த அரவிந்த் ரிவ்யூ மிர்ரர் வழியாக கீர்த்தியைப் பார்த்தவாறே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அன்று கோவிலுக்குப் போகிறோம் என்று கீர்த்தி வேறு தன்னை விசேஷமாக அலங்கரித்துக் கொண்டிருக்க... அரவிந்தால் அவள் மீது இருந்து

பார்வையை அகற்றவே முடியவில்லை. அப்படியே அவளை மட்டும் அழைத்துக்கொண்டு ஒரு லாங் ட்ரைவ் போக மாட்டோமா என்று இருந்தது.

அரவிந்த் கீர்த்தியையே கண்ணாடி வழியாகப் பார்த்து வண்டி ஓட்டிக் கொண்டிருக்க... கீர்த்தி முதலில் அதை கவனிக்கவில்லை. சிறிது நேரம் கழித்து சரியாக அரவிந்த் பார்க்கும்போது கீர்த்தி பார்த்துவிட... அப்போதுதான் அவன் கண்ணாடியை தன்னை நோக்கி வைத்திருப்பதைப் பார்த்தாள்.

தானாக அவள் முகம் சிறிது வெட்கத்தைப் பூசியது... அது இன்னும் அவளை அழகாக்கிக் காட்டியது. பிறகு கண்ணாடியை பார்க்காமல் வெகு சிரத்தையாய் அம்முவைப் பார்த்துக் கொண்டும். வெளியே பார்த்துக் கொண்டும் வந்தாள்.

அவள் தான் பார்ப்பதை உணர்ந்துதான் இப்படி செய்கிறாள் என்று அரவிந்தும் புரிந்து கொண்டும், பாதி நேரம் அவளைப் பார்த்தும், மீதி நேரம் ரோட்டைப் பார்த்தும் வண்டியை

ஓட்டினான்.

கோவிலுக்கு வந்து வண்டியை பார்க் செய்து, "இரு கீர்த்தி" என்று அவளையும் இருக்க வைத்து அவளோடு சேர்ந்து தம்பதி சமேதராய் தான் கோவிலுக்குள் சென்றான். திருமணத்திற்கு பின் முதன் முதலில் குலதெய்வம் கோவிலுக்கு வருகிறான்.

மனைவியோடும், மனளோடும் இறைவன் சன்னதிக்குள் நுழைவது அரவிந்திற்கு, உற்சாகமான மனநிலையைக் கொடுத்தது.

"அம்மும்மாக்கு மொட்டையடிக்கப் போறோமே" என்று குழந்தையிடம் பேசியவாறே அவளைத் தூக்கிக் கொண்டு மொட்டையடிப்பவரை பார்க்க...

அரவிந்த் அவன் மடியிலேயே அம்முவை உட்கார வைத்துக் கொண்டான். யாரிடமும் கொடுக்கவில்லை. அம்முவும் பாதி மொட்டையடிக்கும் வரை அழவே இல்லை. பின்பு கடைசியாக தான் சற்று அழுதாள். அவள் தலையை அசையாமல் அரவிந்த் பிடித்துக் கொள்ள... அவள் கை

கால்களை உதறாமல் கீர்த்தி பிடித்துக் கொண்டாள்.

ஒரு வழியாக அவளுக்கு மொட்டையடித்து, அவளை குளிக்க வைத்து, காது குத்துபவரிடம் அழைத்துச் சென்றனர். இவர்கள் இருவரும் எல்லா வேலைகளையும் செய்வதை கண்டு பெரியவர்கள் நால்வரும் ஒதுங்கி நின்று கொண்டனர்.

கீர்த்தியும், அரவிந்திடத்தில் அம்முவின் பொருட்டு சற்று சகஜமாகப் பேசி எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தாள். காது குத்துவதற்குள் அம்மு திமிறு திமிறு என திமிற... கெட்டியாக அரவிந்த் ஒரு பக்கமும், கீர்த்தி ஒரு பக்கமும் பிடித்துக் கொள்ள ஒரு வழியாக காது குத்தி முடித்தனர்.

அம்முவைவிட அரவிந்தின் முகம் வலியின் வேதனையைக் காட்டியது. கீர்த்திக்கே ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவ்வளவு பாசத்தை இவனால் அம்முமேல் காட்ட முடிகிறது என்று. அம்முவை யாரிடமும் விடாமல் அரவிந்தே அணைத்துப் பிடித்து வைத்திருக்க...

அம்முவும் அன்று பார்த்து அவள் அம்மாவைத் தேடாமல், அவள் அப்பாவிடமே செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

சாமிக்கு அபிஷேகம் ஆராதனை என்று ஏற்பாடு செய்திருந்தார்கள். கீர்த்தியாக அரவிந்திடம், "கொஞ்சம் நேரம் குடுங்க நான் வெச்சிருக்கேன்" என்று கேட்டு வாங்கி வைத்திருந்தாள்.

தலையில் முடியில்லாததை வேறு எல்லோரிடமும் அம்மு தொட்டுக்காட்டி தொட்டுக்காட்டி, அவர்கள் மனதையெல்லாம் கொள்ளை கொண்டு கொண்டிருந்தாள்.

பிறகு சற்று பால் குடிக்க வைத்தவுடன், அப்படியே கீர்த்தி மேல் உறங்கிவிட... மறுபடியும், "கொடு" என்று அம்முவை தான் வாங்கி வைத்துக் கொண்டான்.

எப்படி குழந்தையைத் தாங்குகிறான் என்று கீர்த்தி மட்டுமல்ல, அவன் பெற்றோரும், கீர்த்தியின் பெற்றோரும் நினைத்துக் கொண்டனர். அதுவும் ராஜேந்திரன் சொல்லவே

வேண்டாம், தண்டபாணி இருந்திருந்தால் கூட இவ்வளவு சிறப்பாக அம்முவைப் பார்த்துக் கொண்டிருப்பானா என்று நினைத்தார்.

எல்லோரும் சாமி தரிசனத்தைச் சிறப்பாக முடித்துக் கிளம்பினர். அரவிந்திடம் இருந்து அம்முவை வாங்கிய கீர்த்தி, மெதுவாக அவனிடம், "ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க" என்றாள்.

அவளைச் சீண்டிப் பார்க்கும் எண்ணம் வர... அரவிந்தும் "ரோட்டைப் பார்க்காமல் யாரைப் பார்த்து ஓட்டினேன்" என்றான்.

அவனை முறைத்த கீர்த்தி... "நீங்க ரோட்டைப் பார்த்து ஓட்டின லட்சணத்தை தான் நானும் பார்த்தேனே, அப்புறம் சும்மா ஏன் கதை விடறீங்க... எனக்குக் கொஞ்சம் தூக்கம் வருது. நீங்க என்னையே பார்த்துட்டு இருந்தீங்கன்னா எனக்கு தூங்கவே முடியாது. காலைல சீக்கிரம் எழுந்தது. ஒழுங்கா ரோட்டை மட்டும் பார்த்து ஓட்டுங்க..." என்றாள் மிரட்டுவது போல சொல்ல முயன்று, முடியாமல்.

அவளையே அரவிந்த் பார்க்க... அவசரமாகப் பார்வையை திருப்பினாள். “இப்படிப் பார்த்துப் பார்த்தே இன்னும் எத்தனை நாள் ஓட்டணுமோ” என்ற பெருமூச்சை அவளையறியாமல் வெளியேற்றியவன், அமைதியாக நடக்கத் துவங்கினான்.

“நல்லாதானே பேசிட்டு இருந்தான், ஏன் இப்படி திடீரென்று மூட்-அவுட் ஆகிவிட்டான்” என்று யோசித்தவாறே பின் தொடர்ந்தாள் கீர்த்தி. அவன் மூட்-அவுட்டின் காரணம் தான் என்று அறியாமல்.

அம்மாவும், மகளும் ஏறின சற்று நேரத்திற்கெல்லாம் உறங்கிவிட... அவர்கள் தூக்கம் கலைந்து விடாமல் நிதானமாக ஒரே சீராக வண்டியை ஓட்டி வந்தான் அரவிந்த். முடிவில்லாமல் போய்க் கொண்டிருக்கும் ரோட்டைப் போல அவன் பார்வையும் முடிவில்லாமல் அம்மாவையும் மகளையும் தழுவியது.

இப்போதெல்லாம் அரவிந்தின் பார்வை தன்னை அதிகம் தொடர்வதை கீர்த்தியும் உணர்ந்தே இருந்தாள்.

பார்வையின் வித்தியாசத்தையும் உணர்ந்தே இருந்தாள். அவனோடு ஒன்றி வாழ்வதற்கு நாட்கள் எடுத்தாலும்... அவனோடு சகஜமாகவாவது பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

அரவிந்த் ஏதேதோ கோல்மால் செய்து பணம் கொடுத்து, கீர்த்தி அம்முவின் அம்மா என்றும் அரவிந்த் அவளுடைய அப்பா என்று, குழந்தை இந்தியாவில் பிறந்தது போல பர்த் சர்ட்டிபிகேட் வாங்கி விட்டான். வாங்கியவன் நேராக அதைக் கீர்த்தியிடம் கொண்டு வந்து காட்டினான்.

“என்னங்க இது, ஏன் மாத்திட்டீங்க, எப்படி வாங்குனீங்க.”

“நம்ம பொண்ணுன்னா, அவ முழுசா நம்ம பொண்ணா மாறிடணும் கீர்த்தி, பணம் செலவு பண்ணினேன், கொஞ்சம் சிரமம் தான். இருந்தாலும் வாங்கிட்டேன்” என்றான் எதையோ சாதித்துவிட்ட உணர்வுடன்.

“பின்னாடி ஏதும் பிரச்சனை வராதா, அதுவும் இவ பாஸ்போர்ட்

எல்லாம் லிசா அம்மான்னு போட்டிருக்கு.”

“இவ பாஸ்போர்ட் நம்ம எதுக்குமே காட்டப் போறதில்ல. புது பாஸ்போர்ட் நம்ம அப்பா, அம்மான்னு போட்டு எடுத்திடலாம்.”

“அதுலயும் நீங்கதானே அப்பான்னு இருக்கீங்க.”

“ஒண்ணும் பிரச்சனை வராது கீர்த்தி, நம்ம அந்த ஆதாரங்களை எல்லாம் காட்டப் போறதேயில்லை.”

இருந்தாலும் கீர்த்திக்கு மனது சஞ்சலமாகவே இருந்தது. ஏதோ தப்பு செய்வதாகவே பட்டது. “கடவுளே எந்த பிரச்சனையும் கொடுத்துடாதப்பா” என்று கடவுளை வேண்டினாள்.

“அவ அம்மா, அவ அம்மா, ஒண்ணும் சொல்லமாட்டாளா.”

“நீதான் அவ அம்மா” என்றான் கண்டிப்புடன்.

“நான் லிசாவைக் கேட்டேன்.”

“தெரியலை. நான் அதிகமா அவகிட்ட தொடர்புல இல்லை. இப்போ

பேசியே ரெண்டு மாசம் இருக்கும். அம்மு போட்டோஸ் கொஞ்சம் அனுப்பினேன். நான் அதிகமா தொடர்பு வெச்சிட்டா... அவளுக்கு குழந்தை ஞாபகம் வந்துட்டா என்ன பண்றதுன்னு அதிகம் தொடர்புல இல்லை. ஹரிஷ{ம் அப்படிதான் ஃபீல் பண்ணறான்."

"யார் அது ஹரிஷ்."

"அவளோட சின்ன வயசுல இருந்தே ப்ரண்ட். இப்போ அவளை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறான். இந்தியன் தான். இவ தான் மாடலிங் அது, இது பிடிகொடுத்தே பேச மாட்டேங்கறா. எப்படியாவது அவ கல்யாணம் நடந்து... அவ இன்னொரு குழந்தைக்கு அம்மா ஆகிட்டா... அதைவிட வேற எனக்கொண்ணும் வேணாம். சில சமயம் ஏதாவது தப்பு பண்ணிட்டமோ, அம்மாவை குழந்தைகிட்ட இருந்து பிரிச்சன்னு ஒரே குற்ற உணர்ச்சியா இருக்கு" என்று மனம் விட்டு கீர்த்தியிடம் சொன்னான்.

அப்படி அவனும் குழந்தையை அம்மாவிடம் இருந்து பிரித்ததில்

சந்தோஷமாக இல்லை. பெரும் மனபாரத்தை அவனும் சுமந்து கொண்டிருக்கிறான் என்று கீர்த்தி உணர்ந்து கொண்டாள். இதில் தான் வேறு அவனை... அவனிடம் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கிறோம் என்று அறிந்தவள்...

"விடுங்க... எல்லாம் சரியாகிடும்" என்று அவன் கையைப் பிடித்துச் சொல்ல... அது தான் சாக்கென்று அவளை இழுத்து அப்படியே அணைத்துக் கொண்டான். கீர்த்தி விலக முற்பட்டாலும் விடவில்லை. "ப்ளீஸ் கீர்த்தி, கொஞ்ச நேரம், நான் வேற ஒண்ணும் பண்ண மாட்டேன்" என்று கேட்க... கீர்த்தியும் விலகாமல் நின்றாள்.

வெகு நேரம் கழித்தே அவளை விடுவித்தவன், "தேங்க்யூ கீர்த்தி" என்று சொல்லிச் சென்றான்.

'இதுக்கெல்லாமா தேங்க்ஸ் சொல்லுவாங்க, லூசுப் பய' என்று மனதிற்குள்ளேயே கீர்த்தி திட்டினாலும் அவன் தன் அருகாமைக்காக மிகவும் ஏங்குகிறான் என்று புரிந்து கொண்டாள்.

“கடவுளே, எங்கள் வாழ்வில் எல்லாம் சீக்கிரம் சரியாகி விடவேண்டும்” என்று கடவுளிடம் கோரிக்கை வைத்து, தன் வேலையைப் பார்க்கச் சென்றாள். தன் கையில் தான் அது உள்ளது என்று தெரியும். ஆனால் அதற்கான வேளை எப்போது வரும் என்றுதான் தெரியவில்லை.

இதற்குள் அம்முவின் முதல் பிறந்தநாள் வந்தது. அம்முவின் பிறந்த நாளின் அடுத்த தினம் அவர்களது திருமண நாளும் கூட... அரவிந்திற்கு அது நன்கு ஞாபகத்தில் இருந்தது.

கீர்த்தியிடம் சென்றவன்... “இன்னும் பத்து நாள்ல அம்முவோட பிறந்த நாள் வருது கீர்த்தி” என்றான் அரவிந்த்.

“அப்படியா, நான் நோட் பண்ணவேயில்ல... என்ன பண்ணலாம்” என்றாள் ஆர்வமாக.

“என்ன பண்ணலாம், எதுவும் க்ராண்டா பண்றதுக்கு இல்லையே... காலைல கோவிலுக்குப் போகலாம், சாயந்திரம் நம்ம மட்டும் வீட்லயே கேக்

கட் பண்ணிடலாம். என்ன சொல்ற” என்றான்.

இப்போதெல்லாம் கீர்த்தி சற்று இன்னும் சகஜமாக அரவிந்திடம் பேச ஆரம்பித்திருந்தாள்.

“நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படி” என்று அவனையே தாங்கிப் பேசினாள்.

அவளுக்கு சற்று தூரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த அரவிந்த் அவளுக்கு இன்னும் அருகில் வந்தான். எதற்கென்று தெரியாமல் அவனையே பார்த்தபடி கீர்த்தி நிற்க... மிக நெருங்கி வந்தவன்...

“வேற என்ன கீர்த்தி ஸ்பெஷல்” என்றான்.

வேறே என்ன ஸ்பெஷல் என்று கீர்த்திக்கு நிஜமாகவே தெரியவில்லை.

“வேற என்ன? வேற ஒண்ணும் இல்லையே” என்றாள்.

“யோசி கீர்த்தி, வேற ஏதாவது முக்கியமான நாள் வருதா யோசி...”

கீர்த்திக்கு எவ்வளவு

யோசித்தாலும், அவர்களுடைய திருமண நாள் அவளது எண்ணத்தில் உதிக்கவேயில்லை. “இல்லை எனக்குத் தெரியலை” என்றாள்.

அவளை ஒட்டி, உரசிக் கொண்டு நின்றவன், அவள் நெற்றியில் மென்மையாக தன் இதழ்களைப் பதித்து... “அம்மு, பிறந்த நாளுக்கு அடுத்த நாள் நம்ம கல்யாண நாள்” என்றான்.

“ச்” என்று உதடு கடித்தவள், “எனக்கு அது ஞாபகமேயில்லை. நமக்குக் கல்யாணம் ஆகி ஒரு வருஷம் ஆகிடுச்சா, நாள் போனதே தெரியலை” என்றாள் உண்மையாகவே...

கடிபட்ட அவள் உதடுகளையே ரசனையோடு பார்த்திருந்தான் அரவிந்த். அவனது பார்வையின் மாற்றத்தை உணர்ந்தவள்... “நான் போறேன்” என்று நகரப்போக... கைபிடித்து நிறுத்தினான்.

“அம்முவோட பர்த்டேக்கு நான் ப்ளான் பண்ணிட்டேன்... நம்ம வெட்டிங் டேக்கு நீதான் ப்ளான் பண்ணனும்” என்றான்.

“நானா... நான் என்ன ப்ளான்

பண்றது. நீங்களே பண்ணுங்க... எனக்கு ஒண்ணும் தோணலை."

"நமக்குக் கல்யாணமாகி ஒரு வருஷம் ஆகுது. உனக்கு எதுவுமே நினைவில்லையா" என்றான் அவர்களின் திருமண இரவை, உறவை நினைத்துதான் கூறுகிறான் என்று கீர்த்திக்கு நன்கு புரிந்தது.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் கீர்த்தி அசையாமல் நிற்க... "நீயே ப்ளான் பண்ணேன் கீர்த்தி. நம்ம வெட்டிங் டேவ" என்றான் கண்களில் எதிர்பார்ப்புடன்.

கீர்த்தி எதற்கும் பதில் பேசாமல் நின்றாள். அவள் முகத்தையே ஆராய்ந்து கொண்டிருந்தான் அரவிந்த், ஏதாவது எதிர்மறையான உணர்வுகள் தோன்றுகிறதா என்று.

அவனால் எதையும் குண்டுபிடிக்கவே முடியவில்லை. "என்ன கீர்த்தி சொல்ற" என்றான் மறுபடியும். அவள் பதில் சொன்னால்தான் கையை விடுவேன் என்பது போல கையை இறுக்கமாகப் பற்றிக் கொண்Nடு போக...

“வலிக்குது விடுங்க” என்றாள்.

அப்போதுதான் கையை இறுக்கியதை உணர்ந்து அவசரமாக “சாரி” என்றபடியே விடுவித்தான். இதுதான் சாக்கென்று பதில் சொல்லாமல் வேகமாக இடத்தை விட்டு நகர்ந்தாள் கீர்த்தி.

அவளிடம் உண்மையை மறைத்ததைத் தவிர அவன் செய்த தப்பொன்றும் கிடையாது என்ற அறிந்தால்தான். ஆனாலும் தன்னை நம்பாமல் போனானே என்ற வலி நிறைய கீர்த்திக்கு இருந்தது. இருந்தாலும் முயன்று ஒரு சுமுகமான உறவை அவனுடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவளே நினைத்தாள்தான். ஏதோ தடுத்தது. அந்த இடத்தைவிட்டு அகன்றவள், அவளுக்கு அவளே திட்டிக் கொண்டாள்.

“நீ பண்றது சரியில்லை கீர்த்தி. அப்பா சொன்னது போல எத்தனை ஆயிரம் தப்புக்கள் இந்த உலகத்தில் நடக்குது. இதுல அவன் மறைச்சு பொய் சொன்னான்றது பெரிய தப்பில்ல. அதுவும்

யாருக்காக சொன்னான். உன் அண்ணன் குழந்தைக்காக சொன்னான். அதனால ரொம்ப பண்ணாத" என்று அவளுக்கு அவளே கடிந்து கொண்டாள்.

அதன் பிறகு அரவிந்த் அதிகமாக அவளிடம் பேச விழையவில்லை. கீர்த்தி அவன் முகம் பார்த்து நடந்தாள். புதிதாக அவன் குளித்து வந்தால், உடைகளை எடுத்து வைத்தாள். ஆச்சரியமாக அவள் செய்கையை ஒரு நிமிடம் பார்த்தானே தவிர, ஏன் எதற்கு என்று கேட்க வில்லை. அந்த உடையே அணிந்தான்.

அவளே அவனுக்குப் பார்த்துப் பார்த்து பரிமாறினாள். முன்பும் செய்வாள்தானே. அதில் கடமை உணர்ச்சி தான் இருக்கும்.

இதில் கடமையையும் மீறி ஒரு அக்கறை தெரிந்தது. அவனுக்காகப் பார்த்துப் பார்த்து சமைத்தாள். அரவிந்தும் சாப்பாட்டு பிரியன் என்பதால் அதை ரசித்தே உண்டான். இதையெல்லாம் மீறி கீர்த்திக்கு அரவிந்திடம் பேச நிறைய விஷயங்கள் இருந்தன. அத்தனை விஷயங்களையும் கொடுத்தவள் அம்மு.

வளர வளர நிறைய குறும்பு செய்தாள்.

அரவிந்த் சாப்பிட அமரும்போது பரிமாறியபடியே அம்முவின் செய்கைகள் அனைத்தும் சொல்லிக் கொண்டிருப்பாள். எல்லாவற்றிற்கும் “உம்” கொட்டிக் கொண்டிருப்பான் அரவிந்த். அவனுக்குத் தெரியும் அவனாகப் பேசினால், கீர்த்தி பேசுவதை நிறுத்தி விடுவாள் என்று. அவள் பேசுவதை எல்லாம் மௌனமாக ரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் மாலை, அவன் கடையில் இருக்கும்போது கீர்த்தி, அரவிந்திற்கு போன் செய்தாள். கீர்த்தி அவனை அழைத்ததேயில்லை. அவள் போன் என்றதும் என்னவோ ஏதொவென்று பதறி விட்டான்.

போனை எடுத்ததும், “என்ன கீர்த்தி” என்று பதட்டமாக விசாரிக்க... அவன் பதட்டத்தை உணர்ந்தவள் “பதறாதீங்க ஒண்ணுமில்லை” என்றாள்.

“என்ன ஒண்ணுமில்லையா, ஒண்ணுமில்லாம, நீ என்னைக் கூப்பிட மாட்டியே, என்ன விஷயம்” என்றான் சீரியஸாக...

“நிஜமாகவே ஒண்ணுமில்லைங்க” என்றாள். வேறு என்ன சொல்லுவாள், “எனக்கு உங்ககிட்ட பேசணும் போல இருந்தது என்றா” சொல்லுவாள். ஆனால் நிஜம் அதுதான். என்னவோ அவன் ஞாபகம் அதிகமாக இருக்க... அவளாக அழைத்தாள்.

பிறகு என்ன பேசுவது என்று தெரியாமல், ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக, “அம்மு இன்னைக்கு என்ன பண்ணினா தெரியுமா” என்றாள்.

“என்ன பண்ணினா கீர்த்தி... சொன்னாதானே தெரியும்.”

“அது... அது...” என்று இழுத்தவள்... “இன்னைக்கு கை விட்டுட்டு நிறைய ஸ்டெப்ஸ் எடுத்து வச்சா. எதையும் பிடிக்காம அவளா நடந்தா.”

“கீழ எதுவும் விழலையே” என்றான் அக்கறையாக அரவிந்த்.

“குழந்தைங்கன்னா விழாமயா நடை பழகுவாங்க.”

“அப்போ விழுந்துட்டாளா.”

“அச்சோ! இல்லைங்க, அவ யாரு... உங்க பொண்ணாச்சே... விழுவாளா... விழப்போறோம்னு தெரிஞ்சவுடனே அதெல்லாம் சோபாவை பிடிச்சிட்டு நின்னுட்டா” என்றாள் பெருமையாக கீர்த்தி.

அவள் சொன்ன விதம் அரவிந்திற்கு சிரிப்பு வந்தது. சந்தோஷமாகவும் இருந்தது. பிறகு அவனே... “அடுத்த வாரம் அம்முக்கு பர்த்டே வருது. இன்னும் நம்ம எதுவுமே பர்ச்சேஸ் போகலையே கீர்த்தி” என்றான்.

“போகலாமே” என்றாள் சந்தோஷமாகவே.

“என்ன சொல்லுவாளோ” என்று பயந்து கொண்டே தான் கேட்டான். அவள் போகலாம் என்றதும், “இப்போவே போகலாமா” என்றான் ஆர்வத்தை அடக்க முடியாமல்...

“இப்போவேவா வேண்டாம்... அம்மு தூங்கறா... அவ எழுந்து ரெடி பண்ணி போறதுன்னா நிறைய டைம் ஆகும்... நாளைக்கு அவ முழிச்சிருக்கிற டைமா போகலாம்” என்றாள்.

“அரை மனதாக சரி” என்றான்... ஏதோ இந்த மட்டிலுமாவது ஒத்துக் கொண்டாளே என்று. எப்போதும் அம்முவிற்கு வேண்டியதை... இவள் தனியாக வாங்குவாள்... அவன் தனியாக வாங்குவான். சேர்ந்து வாங்கியதே இல்லை.

“இப்போதுதான் கொஞ்சம் முகம் பார்த்தே பேசுறா... அதுக்குள்ளே நீயேண்டா அலையுற” என்று அவனுக்கு அவனே கடிந்து கொண்டான்.

அடுத்தநாள் அரவிந்தும், கீர்த்தியும், அம்முவோடு பர்சேஸ் கிளம்பினர்.

கீர்த்தி எல்லோர் மாதிரியும் நிறைய நேரம் பண்ணவில்லை. போனாள்... பார்த்தாள். ஐந்து நிமிடத்தில் செலக்ட் செய்து விட்டாள்.

“எப்படி கீர்த்தி, லேடீஸ் எல்லாம் அவ்வளவு நேரம் பண்ணுவாங்க... இவ்வளவு நேரம் பண்ணுவாங்கன்னு எல்லாம் க்ரிடிசைஸ் பண்றாங்க... நீ நிமிஷத்துல செலக்ட் பண்ணிட்ட...”

“உங்களையே அப்படிதான்

செலக்ட் பண்ணினேன். இந்த ட்ரஸ் எம்மாத்திரம்" என்றாள்.

"இதை நீ பாராட்டா சொல்றியா, திட்டுற மாதிரி சொல்றியா..."

"நீங்க எப்படி எடுத்துக்கறீங்களோ அப்படி" என்றாள் சின்ன சிரிப்போடு...

"ம்கூம்..." எனக்கு இந்த பதில் எல்லாம் வேண்டாம். உண்மையான பதில் தான் வேணும்."

"உண்மையான பதில் எனக்கே தெரியாது. இப்பத்திக்கு பாராட்ற மாதிரியே வச்சிக்கோங்க" என்றாள் கிண்டலாக.

"பொண்டாட்டியையே வச்சிக்க காணோம் நான். இன்னும் வேற எதை வச்சிக்கிறது" என்று வாய்க்குள்ளேயே முணுமுணுத்தான் அரவிந்த்.

"என்ன வாய்க்குள்ளேயே பேசறீங்க" என்று சிறு அதட்டலோடு கீர்த்தி கேட்க...

"ம்! நீ ரொம்ப அழகா இருக்கன்னு சொன்னேன்" என்று பதிலுக்கு அரவிந்த் கிண்டலடிக்க...

“அப்போ நான் அழகா இல்லைன்னு சொல்றீங்களா” என்று கீர்த்தி முறுக்க...

“நீ ரொம்ப அழகுதான் கீர்த்தி” என்று உண்மையான குரலில் அரவிந்த் கீர்த்தியை காதல் பார்வை பார்க்க... முகம் சிவந்தாள் கீர்த்தி.

அதற்குள், “நான் உள்ளேன் அம்மா” என்று கீர்த்தியிடம் அட்டெண்டென்ஸ் போட்டாள் அம்மு. மேஜை மேல் இருந்த அட்டைப் பெட்டியை ஒரே தள்ளாகக் கீழே தள்ளி...

“அம்மும்மா” என்று கீர்த்தி கடிய... மறுபடியும் மறுபடியும் அதை இழுத்து விடுவதிலேயே குறியாக இருந்தாள்.

அம்முவின் தந்தை பொறுமையாக பணியாளர்களுடன் சேர்ந்து எல்லாவற்றையும் மேஜை மேல் எடுத்து வைத்தான்.

அம்முவின் அழகைப் பார்த்து வியந்து அங்கிருந்த எல்லோரும் “பரவாயில்லை சார் நாங்க எடுத்து வைக்கறோம்” என்றவர்கள்... அதில் மட்டும் நில்லாமல்... “இங்கலீஷ்காரங்க

குழந்தை மாதிரி என்ன கலரா இருக்கு சார்" என்று வியந்தனர்...

'போனவுடனே சுத்தி போடணும்' என்று மனதிற்குள்ளேயே கீர்த்தி நினைத்தாள்.

கடையை விட்டு வெளியே வரும்வரை பார்ப்பவர் எல்லோருக்கும் அம்மு இலவசமாக டாட்டா வேறு வைத்தாள்.

"சும்மாயிரு அம்மு" என்று அவளைப் பார்க்கவே நேரம் சரியாக இருந்தது கீர்த்திக்கு...

பில் பண்ணியவுடன் போகலாமா என்று வேறு கீர்த்தி அவசரப்பட... "உனக்கு எடுக்க வேண்டாமா" என்றான் அரவிந்த்.

"எனக்கா எனக்கெதுக்கு" என்றாள்.

முதன் முறையாக அரவிந்த் அவளபை; பார்த்து முறைத்தான்.

"எதுக்கு நீதான் கண்டு பிடியேன்" என்றான் குத்தலாக...

எதற்கென்று கீர்த்திக்கு நிஜமாகவே ஞாபகத்தில் வரவில்லை. அவள் விழிப்பதைப் பார்த்ததுமே அரவிந்திற்கு தெரிந்து விட்டது. அவளுக்கு ஞாபகம் இல்லை என்று. அது அவனுக்கு வலித்தது.

“அவளுக்கு பர்த்டே மட்டும்தான் வருதா... நமக்கு எதுவும் வரலையா” என்று கேட்ட பிறகே அவளுக்கு அவள் திருமண நாள் ஞாபகத்தில் வந்தது.

அவனைப் பார்த்துப் பரிதாபமாக, “சாரி” என்றாள். “தினமும் இவளை மட்டும் பார்க்கறதால, இவ பர்த்டே மட்டுமே எனக்கு ஞாபகம் இருக்கு” என்றாள் அசட்டுத்தனமாக.

“என்னை நீ பார்க்கறதேயில்லையா” என்றான் அரவிந்த்.

“பார்க்கறேன் தான்... இருந்தாலும் மறந்துட்டேன்... சரி” என்று மறுபடியும் கேட்க... முறைத்துப் பார்த்தான் அரவிந்த்.

“ரொம்ப சிம்பிளா சொல்லணும்னா, நீ என்னை ஞாபகம் வைக்கிற மாதிரி நான் எதுவும் செய்யறதே

இல்லை. அப்படித்தானே...” என்றான்.

“அப்படித்தான்” என்றா சொல்ல முடியும் என்று கீர்த்திக்கு தோன்றியது. சண்டை வரும் போலத் தோன்ற அமைதியாகி விட்டாள் கீர்த்தி.

திருமண நாளை மறத்து விட்டாளே என்ற ஆற்றாமை தீராமல் அரவிந்த் வாசலை நோக்கி நடக்க...

“வாங்க எடுக்கலாம்” என்று மறுபடியும் உள்ளே நடந்தாள் கீர்த்தி... பிறகு வேறு வழியில்லாமல் பின் தொடர்ந்தான் அரவிந்த்.

அவளுக்கும் அழகான, நிறைய வேலைப்பாடு செய்த புடவையை வேகமாக தேர்ந்தெடுத்து விட்டாள் கீர்த்தி.

பிறகு பில் பண்ணி வெளியே வந்தனர். தன்னை எடுக்கச் சொல்வாளா என்று அரவிந்த் ஆர்வமாகப் பார்க்க... அதை எதையும் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை கீர்த்தி...

அவள் எடுக்கச் சொல்லாமல், புதுத் துணி எடுக்க மனம் ஒப்பாமல், அரவிந்த் ஏமாற்றத்தோடு அவளோடு நடந்தான்.

இன்னும் ஏதேதோ வாங்க வேண்டும் என்று நினைத்தவன் ஒன்றும் வாங்காமல் வீடு வந்து சேர்ந்தான்.

23

வீட்டிற்கு வந்தவர்களை பார்த்த ராணி, "என்னடா அதுக்குள்ள வந்துட்டீங்க... அம்மு ரொம்ப படுத்திட்டாளா" என்று கேட்க...

"இல்லை, உன் மருமகதான் படுத்தினா" என்று வெளியே சொல்லவா முடியும். "இல்லைம்மா கீர்த்தி சீக்கிரம் செலக்ட் பண்ணிட்டா" என்று சொல்லி காட்டினான்.

எடுத்த துணிகளை எல்லாம் காட்ட... "உனக்கெங்கடா" என்றார் அன்னையாக ராணி.

அப்போதுதான் அவனுக்கெடுக்காதது கீர்த்திக்கு உரைத்தது. 'ஐயோ! மறந்துட்டோமே... இன்னைக்கு என்ன கீர்த்தி இப்படி மாத்தி மாத்தி சொதப்பிட்டே இருக்க' என்று மனதிற்குள் அவளை அவளே கடிந்து கொண்டு பரிதாபமாக அரவிந்தைப்

பார்த்தாள்.

“நான்தான்மா இன்னொரு நாள் எடுத்துக்கலாம்னு கூட்டிட்டு வந்துட்டேன்.”

“ஏன்டா, போனதுதான் போனீங்க... இன்னைக்கே எடுத்துட்டு வந்திருக்கக் கூடாது... அம்முக்கு இன்னும் நகை வேற வாங்கலாம்ன்னு இருக்கோம், நானும் அப்பாவும்... அதுக்கு வேற ஒரு நாள் போகணுமேடா” என்றார் ராணி.

“போகலாம்மா” என்று சலிப்பாகச் சொல்லிவிட்டுப் போனான் அரவிந்த்... அவனின் குரலில் பேதம் ராணி கவனிக்கவில்லை என்றாலும் கீர்த்திக்கு நன்கு தெரிந்தது.

அம்முவை அவள் அத்தையினிடத்தில் கொடுத்து விட்டு அரவிந்தின் பின்னேயே அவன் ரூமிற்குள் சென்றவள்...

“சாரி மறந்துட்டேன்... அதிகமா நம்ம வெளியவே போனதேயில்லையா... அதான் சொதப்பிட்டேன்” என்றாள் அசடு வழிந்து...

“பரவாயில்லை, அட்லீஸ்;ட் சொதப்பிட்டேன்னாவது நினைக்கிறா” என்று மனதிற்குள் நினைத்தாலும், அவளை ஒரு வெற்று பார்வையே பார்த்து வைக்க...

“அதான் மறந்துட்டேன்னு சொல்றேன்ல, கொஞ்சம் சிரிச்சாதான் என்னவாம்” என்று கேட்க...

அவளிடம் விளையாடிப் பார்க்க ஆசை வந்து, அரவிந்த் அவனுக்கு சிரிப்பு வந்தாலும் அதை அடக்கி... வேண்டுமென்றே எல்லாப் பற்களும் தெரியுமாறு வாயை இழுத்துப் பிடிக்க...

“அம்மாடியோ! இதுக்கு நீங்க சிரிக்காமலேயே இருந்திருக்கலாம்...

பரவாயில்லை... அம்முவை நான் அத்தை கிட்டயே விட்டுட்டு வந்துட்டேன்... இல்லைன்னா பயந்திருப்பா” என்று அவனைப் பார்த்து வாயடிக்க...

அதற்கு மேலும் பொறுக்க முடியாமல் அவளை இழுத்த அரவிந்த்... “இவ்வளவு பேசற உன் வாயை என்ன செய்யறேன் பாரு” என்று அவள்

இதழ்களை தன் இதழ்களால் சிறை செய்தான்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத கீர்த்தி, முதலில் திமிறினாலும் பின்பு அவனுள் அடங்கி... இசைந்து கொடுத்தாள்.

அதற்குள் ராணி, "கீர்த்தி... அம்முக்கு இப்போ பால் குடிக்க வைக்கட்டுமா இல்லை இட்லி ஊட்டட்டுமா" என்று குரல் கொடுக்க...

அவளை விலக்க மனமில்லாமல் விடுவித்தான் அரவிந்த். கீர்த்தி அவன் முகம் பார்க்க வெட்கியவளாக ஓடியே போனாள்.

முன்பு இருந்த வெறுமையான மனநிலை நிமிடத்தில் அரவிந்திற்கு மாறி விட்டது.

"டேய் தண்டபாணி பண்ற குறும்பைப் பார்க்க" என்று சம்மந்தமில்லாமல் தண்டபாணியின் ஞாபகம் அவனை அதிகமாகத் தாக்கியது. உற்ற நண்பன் அல்லவா... அடிக்கடி அவனையறியாமல்... தண்டபாணியின் ஞாபகங்கள் அவனைத் தாக்கத்தான்

செய்தன.

தனக்கே இப்படி இருக்கிறதே... லிசா என்ன செய்வாள் என்று லிசாவைப் பற்றிய நினைவும் அன்று அரவிந்திற்கு அதிகமாக இருக்க... ஹரிஷை அழைத்தான் அரவிந்த்.

“ஹாய் ஹரிஷ் எப்படியிருக்கே.”

“நல்லாயிருக்கேன்... வாட் எ சர்ப்ரைஸ் ரொம்ப நாள் கழிச்சு போன் பண்ணியிருக்க அரவிந்த்...”

“சும்மாதான் போன் பண்ணினேன்... நீ அந்தளவுக்கு முன்னேறியிருக்கன்னு தெரிஞ்சுக்கத் தான்.”

“இப்போ தான் ஐ லவ் யூ சொல்ற அளவுக்கு முன்னேறி இருக்கேன்.”

“அப்பா... சொல்லிட்டியா... லிசா என்ன சொன்னா...”

“அவளா... அவ எங்க சரி சொல்லுவா. இருந்தாலும் நான் விடாம சொல்லிட்டுதான் இருப்பேன்.”

“லிசா எப்படி இருக்கா... இப்போ

என்ன பண்ணறா.”

மாடலிங் மூலமா இப்போ அவளுக்கு ஒரு டாக்-ஷோ வாய்ப்பு கிடைச்சிருக்கு... இப்போ அது மூலமா லண்டன்ல இருக்கிற வி.ஐ.பி. கூட எல்லாமே இனிமே ஷூட் பண்ணப் போறா” என்றான்.

“வாவ்... இது ரொம்ப பெரிய விஷயம்... நான் அவளை கூப்பிட்டு கங்க்ராஜுலேட் பண்ணவா.”

“அதுக்கு எதுக்கு அரவிந்த் என்னை கேட்கற, தாராளமா பண்ணு.”

“இல்லை, நான் கூப்பிட்டா அவளுக்குக் குழந்தை ஞாபகம் வந்துடுச்சுன்னா...”

“வர மாதிரி இருந்தா, இந்நேரம் வந்திருப்பா அரவிந்த்... இப்போதைக்கு அவளோட எண்ணம் எல்லாம் டாக்-ஷோ தான். நீ கூப்பிட்டு பேசு... ஒண்ணுமில்லை. அப்படியே என் பெருமைகளையும் சொல்லு.”

“உன் ப்ரெண்டுக்கு தெரியாத பெருமையை நான் என்ன சொல்லப்

போறேன். நான் சொன்னா உதைப்பா... அவளா ஏதாவது உன்னைப் பத்தி சொன்னா சொல்றேன்" என்று சொல்லிச் சிரித்தான் அரவிந்த்.

"ஏதோ ஒண்ணு பண்ணு, ஆனா ஏதாவது பண்ணு" என்று சொல்லி அவன் போனை வைக்க... அரவிந்த் தான் வியந்தான்... "இவன் என்னடா தமிழ்நாட்ல இருக்கிறவனைவிட அதிகமா டைலாக் பேசுறான்" என்று.

அரவிந்த் ஹரிஷிடம் போன் பேசி வைத்தவுடனேயே லிசாவை அழைத்தான். இவன் என்னைப் பார்த்ததும் உடனே எடுத்த லிசா, "என்ன அர்வி, ஏதாவது முக்கியமான விஷயமா" என்றாள்.

"இல்லை லிசா... உன்கிட்ட பேசி ரொம்ப நாள் ஆச்சேன்னு தான் கூப்பிட்டேன்" என்றான்.

"இப்போ நான் கொஞ்சம் பிஸியா இருக்கேன் அர்வி...நான் உன்னை அப்புறம் கூப்பிடட்டா" என்றாள்.

"சரி" என்று போனை வைத்தான் அரவிந்த்...

இரவு அம்முவை அருகில் போட்டு படுக்க வைத்து... தானும் உறங்க அப்போதுதான் ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

கீர்த்தி என்ன செய்கிறாள் என்று பார்த்தும் பார்க்காத மாதிரி அங்கேயே தான் இருந்தான் அரவிந்தும். சரியாக அந்த நேரம் பார்த்து அழைத்தாள் லிசா. போன் மணியடிக்கும்போதே யாரது இந்த நேரத்தில் கூப்பிடுவது என்று கவனிக்க ஆரம்பித்தாள் கீர்த்தி.

அதற்குத் தகுந்த மாதிரி... போனை எடுத்ததுமே அரவிந்தும் "சொல்லி லிசா" என... அவன் பேசுவதையே கவனிக்க ஆரம்பித்தாள் கீர்த்தி.

"எப்படியிருக்க அர்வி."

"நல்லாயிருக்கேன். நீ எப்படி இருக்கே."

"ஓஹ் ஐ அம் ஃபைன்."

"கங்க்ராஜுலேஷன்ஸ்."

"எதுக்கு?"

"நீ ஒரு டாக்-ஷோ சைன்

பண்ணியிருக்கியாமே.”

“அதுக்குள்ள உனக்கு யார் சொன்னா.”

“ஹரிஷ் சொன்னான்.”

“என் கிட்ட பேசாம அவன் கிட்ட மட்டும் பேசறியா நீ.”

“இல்லை லிசா... இன்னைக்கு தான் அவன்கிட்டயும் பேசினேன்.”

“தேங்கயூ ஃபார் த கங்க்ராட்ஸ். அதைவிட இந்து எப்படி இருக்கா... நல்லா இருக்காளா.”

“நல்லா இருக்கா... கீர்த்தி அவளை நல்லா பார்த்துக்கறா.”

“கீர்த்தி எப்படி இருக்கா.”

“நான் அவகிட்ட பேசினதே இல்லை. நீதான் பேசவிடவே மாட்டேங்கறியே.”

“அப்படி இல்லை. இப்போகூட பக்கத்துல தான் இருக்கா பேசறியா...”

“நீ ஸ்கைப்ல வா, நான் பேசறேன்.”

“சரி நீயும் வா” என்று சொன்ன அரவிந்த்... சென்று கம்ப்யூட்டரை ஆன் செய்ய... எல்லாவற்றையும் மௌனமாக பார்த்திருந்தாள் கீர்த்தி.

ஸ்கைப்பில் லிசா வந்தவுடனே, “இந்து எங்கே” என்றுதான் முதல் கேள்வி கேட்டாள்.

“இந்து தூங்கறா லிசா” என்ற அரவிந்த்... கீர்த்தியைப் பார்த்து... “அவ தூக்கம் கலையாம தூக்கிட்டு வாயேன் கீர்த்தி” என்று அவளைப் பணித்தான்.

“நீயே தூக்கிக்கோ” என்பது போல கீர்த்தி சைகை செய்ய... கண்களாலேயே அவளிடத்தில் கெஞ்சினான்.

பிறகே கீர்த்தி இந்துவை தூக்கி கம்ப்யூட்டர் முன்னால் வர... அங்கே முதன் முறையாக லிசாவைப் பார்த்தாள்.

பார்த்தாள்... பார்த்தாள்... பார்த்துக் கொண்டே இருந்தாள். இவ்வளவு அழகான பெண்ணா என்று.

லிசாதான் கீர்த்தியிடத்தில் முதலில் பேசியது...

“ஹாய் கீர்த்தி எப்படியிருக்கே...”

“நல்லாயிருக்கேன்.”

“தண்டு எப்பவுமே உன்னைப் பத்திதான் பேசுவான். சின்னச் சின்ன விஷயத்துக்குக் கூட உன்னை தான் ஞாபகப்படுத்துவான்” என்றாள் லிசா...

சற்று நேரம் தண்டபாணியின் நினைவில் லிசாவுக்கும் பேச்சு வரவில்லை... கீர்த்திக்கும் பேச்சு வரவில்லை.

இருவரும் தண்டபாணியை நினைக்கிறார்கள் என்றுணர்ந்த அரவிந்த்... இந்துவை லிசா பாhக்கும்படி செய்தான்.

பிறகு “இப்போல்லாம் நிறைய குறும்பு பண்ணறா அம்மு” என்று லிசாவிடம் பேச்சை மாற்றினான்.

“நடக்கறாளா” என்று லிசா விசாரிக்க...

“கொஞ்ச தூரம் கைவிட்டு நடக்கறா” என்று கீர்த்தி அதற்கு பதிலளித்தாள்.

கீர்த்தியே பிறகு லிசாவிடம்... “நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க...”

என்றாள்.

“ஓஹ்! தேங்க்யூ கீர்த்தி” என்ற லிசா... “இந்து ரொம்ப குறும்பா” என்றாள்.

“ரொம்பக் குறும்பு தான்... ஆனாலும் பிரச்சனையில்லை. எல்லாக் குறும்பும் ரசிக்கும்படியாதான் இருக்கும். அதட்டவே மனசு வராது” என்றாள்.

“ஸம் டைம்ஸ் நீங்க ரெண்டு பேரும் இந்துவை தூக்கிட்டு லண்டன் வாங்களேன். நான் தான் வர முடியாது. நீங்களாவது வாங்களேன்” என்றாள்.

“இப்போ முடியாது லிசா... இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் பார்க்கலாம். உன் லைப்ல ஏதாவது முக்கியமான நிகழ்ச்சி வந்தா சொல்லு. கட்டாயம் வர்றோம்.” என்றான் அரவிந்த்.

“என் வாழ்க்கைல என்ன முக்கியமான நிகழ்ச்சி வரும். ஒண்ணும் வராது.”

“அப்படிச் சொல்லாதே லிசா... உனக்காக ஹரிஷ் வெயிட் பண்ணறான். ஒரு ஓரமா அதை ஞாபகத்துல வச்சிக்கோ”

என்றான் அரவிந்த். இதற்கு எந்த பதிலும் சொல்லாத லிசா... பிறகு அரவிந்திடம் பேசுவதை விடுத்து... கீர்த்தியிடமே பேசிக் கொண்டிருந்தாள். அதில் அம்முவைப் பற்றிக் கேட்டுக் கொண்டது அதிகம். லிசாவின் பேச்சில் இன்னும் தண்டபாணியின் தாக்கம் அதிகம் இருந்தது. அது கீர்த்திக்கும் புரிந்தது.

தாலியில்லாமல் குடும்பம் நடத்தினாலும், லிசாவும் தண்டபாணியும் அன்னியோன்யமான தம்பதிகளாக வாழ்ந்திருப்பார்கள் என்று லிசாவின் பேச்சில் இருந்தே புரிந்தது.

வெகு நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகே சென்றாள் லிசா ஸ்கைப்பை விட்டு.

கம்ப்யூட்டரை ஆஃப் செய்தவுடனேயே கீர்த்தி அரவிந்திடம், "எவ்வளவு அழகா இருக்கா..." என்று சிலாகிக்க...

"ஸ்கைப்ல பார்த்துட்டே நீ இப்படி சொல்றியே... இன்னும் நேர்ல பார்த்தா என்ன சொல்லுவ... ரொம்ப ரொம்ப அழகா இருப்பா" என்றான்.

“அவளோட வாழ என் அண்ணனுக்குக் கொடுத்து வைக்கலியே.”

“கொஞ்ச நாளாவது அவளோட சந்தோஷமா வாழ்ந்தானேன்னு சந்தோஷப்படு கீர்த்தி” என்றான் அரவிந்த்.

தண்டபாணியின் நினைவுகள் மிகவும் கீர்த்தியை தாக்க... “அவனுக்கு மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்கணும்... இந்த செல்லத்தைப் பார்க்கற பாக்கியம் கூட இல்லாம போச்சே” என்றாள் அம்முவை வருடிக் கொண்டே... அரவிந்திடம்.

“நடந்ததை நினைக்கறதால நமக்கு வருத்தத்தைத் தவிர எதுவும் மிஞ்சாது. அவன் கடைசி நிமிஷம் வரைக்கும் அவன் சந்தோஷமா இருந்து செத்திருக்கான். அதையே நினைச்சுக்கோ” என்று கீர்த்தியை சமாதானப்படுத்தினான் அரவிந்த்.

அரவிந்த் இல்லையென்றால் இந்த நேரம் அம்மு தங்கள் கைகளில் இருக்க வாய்ப்பே இல்லை என்று நன்கு உணர்ந்தே இருந்தாள் கீர்த்தி...

“ரொம்ப தேங்க்ஸ்... நீங்க இல்லைன்னா அம்மு நம்மளோட வந்திருக்க வாய்ப்பே இல்லை” என்றாள் உணர்ந்து.

அவளையே விடாது பார்த்தவன்... “உனக்கு நீயே தேங்க்ஸ் சொல்லிப்பியா என்ன?” என்றான்.

“இல்லை அது அப்படியில்லை... நீங்க... உங்களால தானே அம்மு இங்க வந்தா” என்று தடுமாறினாள்...

அவள் தடுமாறுவதைப் பார்த்தவுடன்... “இங்கே வா” என்பது போல தலையசைத்துக் கூப்பிட்டான்... அவள் அருகில் சென்றதும் கட்டிலில் அமர்ந்திருந்தவன் தள்ளி அவள் அமர்வதற்கு இடம் விட்டான்.

உட்காரலாமா... வேண்டாமா... என்று கீர்த்தி பட்டிமன்றம் நடத்த... அவள் கைபிடித்து இழுத்து அருகமர்த்திக் கொண்டான்.

“லிசா நல்ல பொண்ணு தான் கீர்த்தி... ஆனா அவளோட கலாச்சாரமே வேற... அவகிட்ட அம்மு வளர்றது எனக்கு என்னவோ... ஒத்துக்கவே முடியலை.

நான் தப்பாகூட இருக்கலாம். இல்லைன்னு சொல்லலை.”

“தண்டபாணி இறந்தவுடனே லிசாவோட அம்மா குழந்தையை அழிச்சிடலாம்னு சொன்னாங்க... அப்போவே நான் குழந்தையை நம்மளோட கூப்டுக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன். அதுக்கு லிசா ஒரு வேளை ஒத்துக்காம கூட இருந்திருக்கலாம். இல்லைன்னு சொல்லலை... என்னவோ என்னால தண்டபாணியோட குழந்தையை அப்படி விட முடியலை.”

“லிசா என் கைல கொடுக்கற வரைக்கும்... குழந்தையை என் கைல வாங்கற வரைக்கும்... அவ கொடுப்பாளா மாட்டாளா எனக்கு சந்தேகம் தான். நம்பிக் கொடுத்துட்டா... அவகிட்ட இருக்கிறதை விட நம்மகிட்ட இன்னும் சிறப்பா வளரணும் அம்மு. அது உன் கைல தான் இருக்கு கீர்த்தி...”

“நீ கேட்கலாம்... ஏன் இங்கிலாந்துல குழந்தைங்க வளர்றது இல்லையான்னு... இவ சின்ன

பொண்ணு... கல்யாணமாகாமயே தண்டபாணியோட குடும்பம் நடத்தியிருக்கா... அவளுக்கு கொஞ்சம்கூட அது தப்பான விஷயமே கிடையாது... இந்த மாதிரி ஒரு சூழல்ல அம்மு வளரக்கூடாதுன்னு நெனைச்சேன். அதான் அவளைப் பேசி... கொஞ்சம் எமோஷனலா தண்டபாணியோட குழந்தை... அவன் வாரிசு... அவன் குடும்பத்துக்கிட்ட சேரணும் அது இது பேசி கூட்டிட்டு வந்துட்டேன்."

"அவ நான் தான் குழந்தையை வளர்ப்பேன்னு என்கிட்ட சொல்லியிருந்தா என்னால ஒண்ணும் பண்ணியிருக்க முடியாது... ஆனா அவளுக்கே இப்போதைக்கு ஒரு குழந்தையை ஏத்துக்கற அளவுக்கு மனப்பக்குவம் கிடையாது. நிறைய நேரங்கள்ள அவ கூட இருந்தபோது நான் உணர்ந்திருக்கேன். அதான் இந்த முடிவு. அதுல அவ என் குழந்தையா வளரணும்னு ஆசை... தகப்பன் இல்லாத குழந்தையா வளரக்கூடாதுன்ற வெறி... எல்லாமா சேர்ந்து அதை என் குழந்தையாக்கி... உன்கிட்டயும் என்னைப் பொய் சொல்ல

வச்சிடுச்சு. அதைத் தவிர உன்னை நம்பாத தன்மை எல்லாம் கிடையாது. நீ என்னை நம்பணும் கீர்த்தி" என்று நீளமாகப் பேசி முடித்தான்.

கீர்த்திக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. "இவன் எத்தனை விளக்கங்கள் கொடுத்தாலும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம்" என்றே தோன்றியது.

அதைச் சொல்லிச் சொல்லி இனி ஆகப் போவது ஒன்றுமில்லை என்றுணர்ந்தவள்... அமைதியாகவே இருந்தாள்.

அரவிந்த் தன் பதிலுக்காக காத்திருப்பத புரிய... "எல்லாம் சரியாக்கிடலாம் விடுங்க" என்று தனக்கும் அவனுக்குமாய் சேர்த்து சொல்லிக் கொண்டாள்.

"ரொம்ப நேரமாகிடுச்சு தூங்கலாம்... காலைல உங்க பொண்ணு சீக்கிரம் முழிச்சு என்னைத் தூங்க விடமாட்டா... கிடைச்ச நேரம் தூங்கினாதான்" என்று அவனிடம் சொல்லிக் கொண்டே அம்மு பக்கத்தில்

படுத்துக் கொண்டாள்.

அரவிந்திற்கு அவனையறியாமல் ஒரு பெருமூச்சு வெளியேற... உறங்கும் தாயையும், மகளையும் பார்த்தவாறே உறங்க முற்பட்டான், "இவள் எப்போது என்னைப் புரிந்து கொள்வாள்" என்று எண்ணிக் கொண்டே...

கீர்த்தி உறங்குவது போல கண்ணை மட்டுமே மூடிக் கொண்டிருந்தாள்... உண்மையாக உறங்கவில்லை. திறந்திருந்த கண்கள் வழியாகப் பார்க்க... அவர்களையே அரவிந்த் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவளையறியாமல் உறக்கம் ஆட்கொள்ள, சிறிது நேரம் கழித்து கண் திறந்து பார்த்தால்... அப்போதும் அரவிந்த் அவர்களையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

இப்போது அவனுக்கு, தன் துணை மிக அவசியம் என்றுணர்ந்தவள்... நன்றாக கண்ணைத் திறந்து பார்க்க... அரவிந்த் பார்வையைத் திருப்பினான்.

எழுந்தமர்ந்தவள்... "ஏன் தூக்கம்

வரலியா” என்று அரவிந்தை கேட்க... “இல்லை” என்பது போல தலையாட்டினான்.

குழந்தையை ஒரு ஓரமாகப் போட்டவள்... மெதுவாக அவன் புறம் வந்து படுத்தவள்... அவன் கையை எடுத்து தன் மேல் போட்டுக் கொண்டாள். “இப்போ தூங்குங்க” என்றவள் அவளும் தூங்கிப் போனாள்.

அரவிந்திற்கு நிம்மதியான உறக்கத்தைக் கொடுக்க அதுவே போதுமானதாக இருந்தது. அவளை அணைத்துக் கொண்டே நிம்மதியான உறக்கத்தைத் தழுவினான்.

பின்பு தினசரி அதுவே வழக்கமானது. கீர்த்தியும் சற்று அக்கறையெடுத்து அரவிந்தை கவனித்தாள். அவன் தேவைகளைப் பார்த்துப் பார்த்து செய்தாள். சற்று சகஜ மனப்பான்மை இருவருள்ளும் வந்திருந்தது.

அன்று அம்முவின் பிறந்தநாள். காலையில் அவளைத் தூக்கிக் கொண்டு இருவரும் கோவில் சென்று வந்தனர்.

காலையிலேயே ராஜேந்திரனும் இந்துமதியும் வந்து விட்டனர். அம்முவிற்குத் தங்கச் சங்கிலியை கழுத்தில் அணிவித்து ஆசீர்வதிக்க... சிதம்பரம் இன்னும் ஒரு படி மேலே போய் குட்டி காசு மாலையை அம்முவிற்கு பரிசளிக்க... ராணி அதை அவள் கழுத்தில் அணிவித்தார். நளினியும் வெகுநாள் கழித்து அவள் அம்மா வீட்டிற்கு வந்திருந்தவள்... அவளும் ட்ரெஸ், பொம்மைகள் என்று அம்முவிற்கு நிறைய வாங்கி வந்திருந்தாள்.

மொத்தத்தில் அன்று வீடே கலகலவென்று இருந்தது. அம்முவும் நிறைய குறும்புகள் செய்து எல்லோரையும் ரசிக்க வைத்துக் கொண்டிருந்தாள். ஒரு இடத்தில் நில்லாமல் நடந்து கொண்டே இருந்தாள். அதனால் அவள் அடிக்கடி தட்டுத் தடுமாறி விழ... உடனே அரவிந்த் அவளைக் கையில் தூக்கி வைத்துக் கொண்டான்.

எல்லோரும் சிரித்தனர். “அரவிந்த் குழந்தைங்க விழாம் நடக்க மாட்டாங்க. அவளைக் கீழே இறக்கி விடு” என்று ராணி எவ்வளவோ சொல்லியும் தூக்கி

வைத்துக் கொண்டே திரிந்தான். அம்முவாக பொறுமை இழந்து அவன் கைகளில் இருந்த நழுவி கீழே இறங்கினாள். மறுபடியும் அவன் தூக்கவும், குழந்தை திமிறினாள். பிறகே விட்டான் அரவிந்த்.

கீர்த்தி அரவிந்தைப் பார்த்துச் சிரித்தவள்... "அவளை ஃப்ரீயா விடுங்க" என்று சொல்ல... அமைதியாக அமர்ந்தான்.

"இவ்வளவு நேரம் அம்மா சொன்னாங்க கேட்டியா நீ... எல்லாம் சொல்றவங்க சொன்னாதான் அடங்குற" என்று அவனை நளினி வேறு ஓட்டி எடுத்தாள்.

ஒரு சந்தோஷமான மனநிலையில், மாலையில் எல்லோரும் குழுமியிருக்க... அந்த வீட்டின் பெண்ணரசியாகிய அம்மு, உறவுகள் புடைசூழ கேக்கை வெட்டினாள். சிறு கேக் துணுக்கை மட்டுமே அவள் வாயில் வைத்தாள் கீர்த்தி. நளினி "இன்னும் சொஞ்சம் ஊட்டலாமே அண்ணி" என்றதற்குக் கூட "வேண்டாம் அண்ணி சளி பிடிச்சிடும்" என்றாள்.

பிறகு முதல் துண்டை எடுத்து அம்மு கையால் அரவிந்த் வாயில்தான் வைத்தாள் கீர்த்தி. பிறகு எல்லோருக்கும் கேக் விநியோகம் நடக்க... அம்மு எல்லோருக்கும் மிகவும் பிரியமானவளாகிப் போனாள்.

24

மறுநாள் கீர்த்தி, அரவிந்தின் திருமண நாள். இருவருக்குமே அது நன்கு ஞாபகம் இருந்தது. ஆனால் அதைப்பற்றி எதுவும் பேசிக் கொள்ளாமல் அமைதியாக உறங்க முற்பட்டனர் இருவரும்.

அம்மு ஓடி ஓடிக் களைத்து விட்டதால்... அன்று சீக்கிரமே உறங்கி விட்டாள். அவளை ஒர ஓரமாகப் போட்டு, புதிதாக முளைத்தப் பழக்கமாக... கீர்த்தி அரவிந்தின் அருகில் படுக்க... சிறிது நேரம் அமைதியாக படுத்திருந்தனர்.

அரவிந்த் தான் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான். “நாளைக்கு என்ன ப்ளான் கீர்த்தி” என்றான்.

அப்படியே அவனருகில் எழுந்தமர்ந்த கீர்த்தி “ப்ளானா என்ன

ப்ளான்.”

“அப்போ நாளைக்கு நம்ம வெட்டிங் டேக்கு ஒண்ணும் ஸ்பெஷல் இல்லையா.”

“என்ன ஸ்பெஷல் ஒண்ணும் ஸ்பெஷல் இல்லை. அப்படி ஏதாவது ஸ்பெஷல்ன்hன நீங்கதான் சொல்லணும்.”

“நானா... நான் என்ன சொல்றது. நீயே சொல்லு.”

“நீங்களே சொல்லுங்க.”

“நீயே சொல்லு.”

“அச்சோ நீங்க... என்ன பிடிவாதம்... கோயிலுக்குப் போகலாம்... எங்கயாவது வெளில சாப்பிடலாம்... போதுமா...”

“அவ்வளவுதானா.”

“அவ்வளவு தானான்னா... வேற என்ன.”

“வேற என்னவா... இப்படிக் கேட்டா நான் என்ன சொல்லுவேன்.”

“நீங்க என்ன அம்முவா...

உங்களுக்கு என்னன்னு சொல்லாமயே தெரியறதுக்கு... உங்களுக்கு என்ன வேணும்னு நீங்கதான் சொல்லணும். நீங்கதான் நடத்திக்கணும்" என்றாள் தெளிவாக.

"உனக்கு என் மேல கோபம் எதுவும் இல்லையே கீர்த்தி." அவனையே சிறிது நேரம் பார்த்தவள்... "கோபம் எல்லாம் எதுவும் இல்லை... முன்ன இருந்திச்சு... இப்போ இல்லை... ஆனா கொஞ்சம் வருத்தமிருக்கு... நாள்பட சரியாகிடும் நினைக்கிறேன்." என்றாள் சற்று புன்னகைத்தவாறே...

"எப்போ சரியாகும்."

"எப்போன்னு அதெல்லாம் சொல்ல முடியுமா... இப்போவே கூட சரியாகும். இல்லை இன்னும் நிறைய நாள் ஆகலாம். எதுவேணா நடக்கும். எனக்கு இதை பேசிப் பேசி போர் அடிக்குது. தூங்கட்டா" என்றாள் கறாராக.

"ம்" என்று மனமில்லாமல் தலையசைத்தான்.

கீர்த்திக்கு சிரிப்பு வந்தது... "உனக்கு வேணும்னா நீதான்

நடத்திக்கணும் பாலிவ்ட்டா சொல்லிட்டேன். இன்னும் சும்மா பார்த்துப் பார்த்தே டைம் வேஸ்ட் பண்ணறான். இவனை என்ன பண்றது தெரியலை" என்று சற்று சுத்தமாக முணுமுணுத்தவாறே கீர்த்தி படுக்க...

இப்போது படுக்கையில் இருந்து எழுந்தமர்ந்த அரவிந்த்... "என்ன? என்ன சொன்ன" என்றான்.

"ம், சொன்னேன் சுரக்காய்க்கு உப்பில்லைன்னு" என்றாள் சலிப்பாக...

"இல்லையில்லை நீ வேற என்னமோ சொன்ன" என்றான் சீரியஸாக...

கீர்த்திக்கு அவன் சொன்ன விதத்தில் பயங்கரமாக சிரிப்பு வந்தது. வாய்விட்டுச் சிரித்தவள், "ஒண்ணுமில்ல தூங்கங்க" என்று சொல்லி படுத்துக் கொண்டாள்.

"இவ என்னடா நம்மள வெச்சு காமெடி, கீமடி எல்லாம் பண்றா போல" என்று சத்தமாகச் சொல்லி அரவிந்த் படுக்க... கீர்த்தி சிரிப்பு வந்தாலும்... "ரொம்ப பண்ணாதடி. அப்புறம் எரிஞ்சு

விழுவான்” என்று அவளுக்கு அவளே நினைத்துக் கொண்டு அமைதியாக படுத்துவிட்டாள்.

மறுநாள் பொழுது இனிதாகவே புலர்ந்தது. கீர்த்தி முதலிலேயே விழித்து விட்டாள். அரவிந்தை பார்க்க அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். ‘நான் முழிச்சுட்டு இருக்கேன்... நீ தூங்கறியா’ என்று அவள் நினைக்கும் போதே அம்மு சிணுங்க... அம்முவை தூக்கி, அரவிந்த் மேல் விட்டாள்.

அம்மு அவன் மேல் இரண்டு கால்களையும் போட்டு அமர்ந்து கொண்டு, அவன் முகத்தை வருட, கண் விழித்தான். கண் விழித்தவன் பார்வையில் அம்முபட, “அம்மும்மா என்ன பண்ணறீங்க...” என்றான் மலர்ந்த முகத்தோடு.

அம்மு திரும்பி அவன் அம்மாவைப் பார்க்க... அப்போதுதான் கீர்த்தியைப் பார்த்தான். அவன் பார்ப்பதற்காகவே காத்திருந்தவள், ஹேப்பி வெட்டிங் ஆன்னிவர்ஸரி” என்று மலர்ந்த முகத்தோடு சொன்னவள்... அவன்

கன்னத்தில் முத்தமிட்டு அவள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

அரவிந்திற்கு இனம் புரியாத மகிழ்ச்சி பொங்கியது. அம்முவை தூக்கிக் கொண்டு எழுந்தவன்... கீர்த்தியின் நெற்றியில் முத்தமிட்டு "ஹேப்பி வெட்டிங் ஆன்னிவர்ஸரி" என்றான் பதிலுக்கு...

இருவரும் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ச்சியாக சிரித்துக் கொண்டனர்.

"எங்க போலாம் கீர்த்தி செலிபரேட் பண்ண" என்றான் உற்சாகமாக அரவிந்த்...

"நீங்க எங்க கூப்பிட்டாலும், நானும் அம்முவும் வருவோம்" என்றாள் சற்றும் குறையாத உற்சாகத்துடன் கீர்த்தி.

"காலைல கோயிலுக்கு நம்ம மூணு பேரும் போகலாம். அப்புறம் வீட்டுக்கு வந்து அம்முவை அம்மாகிட்ட விட்டுட்டு நாம மட்டும் எங்கயாவது போகலாமா" என்று அவளிடம் சம்மதம் கேட்டான்.

"அம்முவை விட்டுட்டா நம்ம மட்டுமா... அம்மு தேடுவாளே" என்றாள்

கீர்த்தி.

“ஒரு அரை நாள் ஒண்ணும் ஆகாது, நம்ம ரெண்டு பேர் மட்டும்தான் போறோம். நான் அம்மாகிட்ட சொல்றேன். அம்முவை அம்மா பார்த்துப்பாங்க.”

“சரி” என்பது போல் அரை மனதாக தலையாட்ட...

“அம்மும்மா நானும் அம்மாவும் வெளியே போறோம். நீங்க பாட்டிகிட்ட சமத்தா இருப்பீங்களாம்” என்று அம்முவிடம் பேசிக் கொண்டே ராணியிடம் சொல்வதற்காக வெளியே போனான்.

ராணியிடம் சென்று சொல்லி, “போகவா” என்று சம்மதம் கேட்க... “தாராளமா போயிட்டு வாங்க, நான் பாத்துக்கறேன் என் தங்கத்தை” என்று சந்தோஷமாகச் சொன்னார் அவர்.

அரவிந்த் தீர்மானித்தபடியே காலை கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கினர். இருவர் மனதுமே ஒருவருக்காக ஒருவர் பிரார்த்தனை செய்தது. இருவருமே தங்கள் திருமண

வாழ்வு என்றும் சிறப்புற்று பல ஆண்டுகள் தொடர மனமுருக வேண்டினர்.

பிறகு வீட்டிற்கு வந்து அம்மாவிடம் அம்முவை விட்டுச் சாப்பிட்டுக் கிளம்ப... அம்மு சமத்தாக அவள் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் டாட்டா கொடுத்தது. அதைப் பார்த்துதான் சற்று நிம்மதியாக அரவிந்தோடு, கீர்த்தி கிளம்பினாள்.

“உன் பொண்ணை நான் பத்திரமா பார்த்துக்கறேன்... நீ என் பையனை கவனி” என்று ராணிகூட கிண்டலடித்து கீர்த்தியையும், அரவிந்தையும் வழியனுப்பினார்.

அரவிந்த் அவளை அழைத்துக் கொண்டு காரிலேயே கிளம்பினான். “எங்கே போறோம் நம்ம” என்று கீர்த்தி கேட்டதற்கு கூட பதில் சொல்லாமல் சிரித்தான்.

அவன் கார் கிழக்கு கடற்கரை சாலையில் பறக்க, அதற்கு மேல் கீர்த்தியும் கேட்கவில்லை... அவனோடான பயணத்தை ரசிக்க ஆரம்பித்தாள்.

காரில் இளையராஜாவின்

இன்னிசை பாடல்...

“மலரே மலரே உல்லாசம்

உன்தன் நினைவே நினைவே சங்கீதம்

உன்னைத்தான் சந்தித்தால்

உள்ளத்தில் தித்தித்தால்

இதயம் எழுதும் கவிதை நீ...”

என்ற பாடல் வரிகள் ஒலிக்க... அதன் இனிமையையும், பொருளையும் உணர்ந்து ரசித்து... இருவருமே அந்த பயணத்தை அனுபவித்தனர்.

ஏறக்குறைய அவர்கள் இடத்தில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள முட்டுக்காடு படகு ஸ்தலத்தை அடைந்தனர். மதிய நேரம் அப்போதுதான் ஆரம்பித்திருந்தது. அதனால் கூட்டம் அதிகம் இல்லை.

சில்லென்ற காற்று மேனியைத் தழுவ... “ஸ்” என்று சிலிர்த்த கீர்த்தி புடவை தலைப்பை இழுத்துப் போர்த்தினாள். வெயிலுக்கு வெயிலும் அடித்தது... இதமான காற்றும் வீசியது.

‘என் மனநிலையைப் போலே இங்கே இயற்கையும் குழப்பி அடிக்கிறது’ என்று கீர்த்தி எண்ணிக் கொண்டாள்.

எதுவும் பேசாமல் அரவிந்த் தன் மனைவி செய்யும் அத்துணை செயல்களையும் இதமான பார்வையால் வருடி ரசித்தான் அரவிந்த்.

“என்னடா இவங்க இப்படிப் பார்க்கறாங்க” என்று தவித்தாள் கீர்த்தி. சிறிது நேரம் பொறுத்தவள், பின்பு “என்ன” என்பது போல அரவிந்திடம் ஒற்றைப் புருவம் உயர்த்திக் கேட்க... அவனும் பதில் பேசாமல் பார்வையாலேயே, “ஒன்றுமில்லை” என்றான்.

“ஏன் இப்படிப் பார்க்கறீங்க... எனக்கு அன்ஈஸியா இருக்கு” என்றாள் கீர்த்தி... வாயைத் திறந்து.

“நீதானே நான் பார்த்துப் பார்த்Nது டைம் வேஸ்ட் பண்றேன்னு சொன்ன, அதான் பார்த்துட்டு இருக்கேன்” என்றான் சின்ன சிரிப்போடு...

அப்போதுதான் கீர்த்திக்கு உரைத்தது, நேற்று பேசியதை இவன்

கேட்டு விட்டான் என்று... முகம் சிவக்க வேறுபுறம் திரும்பினாள்...

“அப்பா! என்ன வாய் என்ன வாய்... வேலைக்கொன்னும் ஆகலைன்னாலும் வாய் மட்டும் குறைச்சல் இல்லை” என்று அவளைச் சீண்டினான் அரவிந்த்.

“என்ன? என்ன? வேலைக்கு ஆகலை” என்று சிலுப்பினாள் கீர்த்தி...

“அதானே என்ன? என்ன? வேலைக்கு ஆகலை. அதையும் தான் இன்னைக்குப் பாத்துடலாம்” என்று அவளை ஒட்டியே சேம் சைட் கோல் போட்டான் அரவிந்த்.

கீர்த்தி அவனை முறைத்துப் பார்க்க முயன்று முடியாமல் தோற்றாள். அந்தத் தோல்வியும் அவளுக்குப் பிடித்தது.

பின்பு இருவரும் அந்த படகுத் துறையிலேயே அமர்ந்து விட்டனர். அமைதியாக அந்த நீரின் அழகை ரசித்தபடி, அங்கு வந்து போகும் பறவைகளை ரசித்தபடி... படகில் பயணிக்கும் இளம் ஜோடிகளை ரசித்தபடி அமர்ந்திருந்தனர்.

இருவர் மனமுமே உல்லாசமாக இருந்தது. ஒருவரின் அருகாமையை மற்றொருவர் விரும்பினர். அந்த மோன நிலையைக் கலைக்க விருப்பமில்லாமல் எல்லோரையும் வேடிக்கைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தனர்.

வெகுநேரம் கழித்து கீர்த்தி அரவிந்திடம், "நம்மளும் போட்ல போகலாமா" என்றாள். அவள் கேட்பதற்காகவே காத்திருந்தவன் போல உடனே எழுந்தான் அரவிந்த்.

அவன் போய் ஒரு போட்டை புக் செய்து, கீர்த்தியை அழைக்க... அவனோடு போட்டில் பயணிப்பது அவளின் உல்லாசமான மனநிலையை அதிகரித்தது தண்ணீரில் கையை அளந்தபடி சுற்றி இருக்கும் இடங்களைப் பார்வையிட்டபடியே வந்தவள்... "அது என்ன? இது என்ன?" என்று சுற்றியிருப்பவை பற்றியும், இயற்கையைப் பற்றியும் ஆயிரம் கேள்விகள் கேட்டாள் கீர்த்தி...

"இந்த ஒரு வருஷமா என்கிட்ட அதிகம் பேசாததை ஒNரு நாள்ல பேசித்

தீர்த்துருவா போல இருக்காளே" என்று அரவிந்தை நினைக்க வைத்தாள். திருமணத்திற்கு முன் தண்டபாணியுடன் பார்த்த கீர்த்தியைப் போல உற்சாகமாக இருந்தாள்.

திடீரென்று, "ஆயிரத்தி ஒண்ணாவது கேள்வி கேட்கட்டா" என்றாள் கீர்த்தி... அரவிந்த் விழிக்;க...

"இல்ல உங்க மனசாட்சி நான் இப்படி ஆயிரம் கேள்வி கேட்கறேன்னு உங்க கிட்ட சொன்ன மாதிரி என் காதுல விழுந்தது. அதான் ஆயிரத்தி ஒண்ணாவது கேள்வி கேட்கறேன் என்று அவனை அறுவையால் கடிக்க...

"கீர்த்தி, நிஜமாவே என்னால தாங்க முடியலை. உன் அறுவையை கொஞ்சம் நிறுத்தறேன்" என்றான் பாவமாக...

"நிறுத்திக்கறேன், எல்லாத்தையும் நிறுத்திக்கறேன்" என்று அதற்கும் சினிமா டயலாக் அடித்தாள் கீர்த்தி.

"போதும், கீர்த்தி போதும்" என்று அவளை மாதிரியே அரவிந்தும் சொல்ல... இருவருக்கும் சம்மந்தமில்லாமல் சிரிப்பு

வர... வாய்விட்டுச் சத்தமாகச் சிரித்தனர்.

வீட்டிற்கு வந்தும் அந்த உல்லாசமும், உற்சாகமும் அப்படியே இருந்தது. இரவு படுக்கையிலும் அதை நீட்டிக்க விரும்பி, அரவிந்த் முன்னேற... கீர்த்தி மறுப்பெதுவும் சொல்லாமல் அவனுக்கு இசைந்து கொடுக்க... அதற்குள் விடிந்து விட்டதா என்று இருவருக்குமே இருந்தது.

அரவிந்த் மேல் தான் கொண்டிருந்த சஞ்சலங்களை எல்லாம் ஒரே இரவில் மறக்கடித்து விட்டானேர் என்று தோன்றியது கீர்த்திக்கு. அந்த எண்ணம் எப்பொழுதும் அவள் முகத்தில் புன்னகையை தவழ விட... அவளைப் பார்க்க பார்க்க அரவிந்திற்குக் காதல் பொங்கியது.

அது அவர்களது காதல் வாழ்க்கைக்கு நல்லதொரு ஆரம்பத்தைக் கொடுத்தது...

நாட்கள் வேகமாக நகர ஆரம்பிக்க... அம்முவும் வேகமாக வளர்ந்தாள். அவள் வளர்வதைப் போல கீர்த்தியும் அரவிந்தும் ஒருவர் மேல் ஒருவர்

கொண்ட காதலும் வேகமாக வளர்ந்தது.

கீர்த்தியின் மேல் அரவிந்த் கொண்ட காதல்... அம்மு மேல் அவன் வைத்த பாசம்... அரவிந்தின் பொறுப்பற்ற தனங்களை விட வைத்து... அவனை பொறுப்புள்ள மனிதனாக்கியது.

இப்போதெல்லாம் தொழிலை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டான்... அது தொழிலில் நல்ல வளர்ச்சியையும், நிறைய லாபத்தையும் கொடுத்தது. வருமானம் பெருகப் பெருக... தனக்குள் நல்ல தன்னிறைவை உணர்ந்தான் அரவிந்த்.

எல்லாம் கீர்த்தி வந்த நேரம், அரவிந்தை பொறுப்புள்ளவனாக மாற்றி விட்டாள் என்று ராணியும், சிதம்பரமும் கீர்த்தியை சிலாகித்தனர்.

நிஜமும் அதுவே கீர்த்தி வந்த பிறகுதான் அவன் தொழிலை சற்று ஊன்றி கவனிக்க ஆரம்பித்தான். முதலில் கீர்த்தி இருக்கிறாள் என்பதற்காக தினமும் ஷோரூம் வந்த அரவிந்த்... பின்பு அவனாகவே ஈடுபாட்டுடன் தொழிலை கவனிக்க ஆரம்பித்து விட்டான். பணம்

வரும்போது அதை வேண்டாம் என்பவர் எவர் இவ்வுலகில்.

“அருளில்லார்க்கு
அவ்வுலகமில்லை... பொருளிளார்க்கு இவ்வுலகமில்லை” என்பதை நன்கு உணர்ந்து கொண்ட அரவிந்த் பொருள் பின்னோடும் சற்று ஓட... கீர்த்தியையும், அம்முவையும் கவனிக்கும் நேரம் கூட சற்று குறைந்தது.

லிசாவின் டாக்-ஷோ நன்றாக ஹிட் ஆக... அவள் லண்டன் முழுக்கத் தெரிந்த ஒரு முகமானாள். ஹரிஷ{ம் எவ்வளவு நாட்களானாலும் அவள்தான் தன் வாழ்க்கையில் என்று பொறுமையாகக் காத்திருந்தான்.

அரவிந்திற்கும், கீர்த்திக்கும் ஆரம்பத்தில் சற்று பயமாக தான் இருந்தது. எங்கே லிசா வந்து குழந்தையை கேட்டு விடுவாளோ என்று, ஆனால் லிசாவின் வாழ்க்கை முறையே வேறு அவள் வரமாட்டாள் என்று சீக்கிரமே உணர்ந்து கொண்டனர். லிசா டாக்-ஷோ மூலம் ஒரு பக்கம் பிரபலமாக... இன்னொரு பக்கம் மக்கள் தொண்டிலும்

தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டாள்.

போதைக்கு அடிமையான சிறுவர்களை மீட்கும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டாள்.

அது அவளுக்கு நல்ல பேரை ஈட்டித் தந்தது மட்டுமல்லாமல், அவளின் டாக்-ஷோ இன்னும் பிரபலமானது. என்ன ஹரிஷின் காத்திருப்பு மட்டும் லிசாவின் மனதில் ஓர் ஓரமாக உறுத்திக் கொண்டே இருந்தது. ஹரிஷ{ம் பொறுமையாக அவளுக்காகக் காத்திருந்தான். வருடங்கள் மறைந்தன...

25

வேகமாக ஐந்தாறு வருடங்கள் ஓடிவிட்டன. அம்மு இப்போது முதல் வகுப்பு போகிறாள். அவளுக்கு ஒரு தம்பி பிரணவ் வேறு இருந்தான். அது அரவிந்திற்கும் கீர்த்திக்கும் பிறந்த மகவு. அம்முவை விட பல மடங்கு குறும்பு செய்தான்.

அம்முவை வளர்ப்பது கீர்த்திக்கு என்றும் சிரமமாகவே இருந்ததில்லை.

ஆனால் ப்ரணவ்வை வளர்ப்பது அவளுக்கு ப்ரம்ம ப்ரயத்தனமாக இருந்தது. நிறைய குறும்பு செய்தான்.

இப்போதுகூட கீர்த்தியை அவன் பின்னால் சுத்த வைத்துக் கொண்டு இருந்தான்.

"டேய் ஓடாத நில்லு, போன் குடு, கீழ போட்டுடாத..." என்று கத்த கத்த... அவன் கையில் வைத்திருந்த அவளின் செல்போனை ஒரே வீசாக தரையில் வீசினான்.

அது பார்ட் பார்ட்டாக கீழே விழுந்து சிதறியது. அவன் முதுகில் ஒரு அடி வைத்தாள். அவள் அடித்தது என்னவோ மெதுவாகத் தான். ஆனால் அவன் போட்ட கூச்சல் வீட்டில் இருந்த எல்லோரையும் ஹாலுக்கு வரவைத்தது.

அவசரமாக அவனைத் தூக்கிய அரவிந்த், "என்ன கீர்த்தி" என்று கேட்க...

மகனை அதிகம் அடிக்க முடியாத கோபத்தில்... அரவிந்த் தோளில் ஒரு அடி வைத்தாள்... பலமாகவே வைத்தாள்.

தோளைத் தடவியபடியே

தந்தையும், மகனும் அவளைப் பார்த்து முறைத்தனர்.

“என்னோட எத்தனாவது போன் இதுன்னு கணக்கே இல்லை. அத்தனை போனை தூக்கிப் போட்டு உடைச்சிட்டான். இவனை என்ன பண்ண” என்று கண்களை உருட்டியபடி கேட்டாள்.

இது தினம் நடக்கும் வாடிக்கையான சண்டை என்பதால் ராணியும், சிதம்பரமும்... “ஆரம்பிச்சிட்டீங்களா” என்ற மாதிரி ஒரு பார்வை பார்த்து உள்ளே சென்றனர்.

அதற்குள் அங்கே வந்த அம்மு, “வாட் ஹாப்பன்ட் அம்மா” என்றாள். தமிழ் நன்றாகப் பேசினாலும், அதிகமாக அம்முவிற்கு ஆங்கிலமே வந்தது. அவள் பிறப்போ என்று சில சமயம் கீர்த்திக்கும் அரவிந்திற்கும் தோன்றும்.

கீழே கிடந்த செல்போனை கீர்த்தி காட்ட, “மறுபடியும் ஒடைச்சுட்டானா” என்றபடியே கீழே இருந்ததை அம்மு எடுக்க ஆரம்பித்தாள்.

அதைப் பார்த்த கோபத்தில் கீர்த்தி,

மறுபடியும் கண்ணை உறுத்தி, அவனை அடிப்பது போல வர... ப்ரணவ் தன் தந்தையின் கழுத்தை இறுக்கக் கட்டிக் கொண்டான்.

அரவிந்த் அப்படியே திரும்பிவிட, மறுபடியும் ப்ரணவ் மேல் விழுந்திருக்க வேண்டியஅ டி, அரவிந்த் மேல் விழுந்தது.

"ஏய், ராட்சசி எதுக்கு இப்படி அடிக்கற... போன் போனா போகுது போ, அடிக்காத" என்றான்.

"அடிக்காம என்ன செய்வாங்க... எவ்வளவு பொறுமையா அவன் கிட்ட சொல்லியிருக்கேன். கேக்கறானா... இனி அடிதான். வேற வழியேயில்லை" என்றாள் கோபமாக.

"எதையும் தூக்கி வீசக்கூடாதுன்னு பல தடவை சொல்லிட்டேன்... எதையும் கேக்கறது கிடையாது... நம்ம பொருளை மட்டும் போட்டா பரவாயில்லை. அந்த கிட்ஸ் ஸ்கூல்ல இருக்கிற மிஸ்ஸோட போனையும் தூக்கிப் போட்டுட்டான். அவங்களுக்கு புதுசு நான் வாங்கி கொடுத்தேன்" என்று பொரிய...

ப்ரணவ்வை இறக்கிவிட்ட அரவிந்த்... “ஐய்யே... என்ன கீர்த்தி, இவ்வளவு கோபம்... குழந்தைங்க அப்படித்தான்...” என்று அவள் தோள் மீது கைபோட...

“என்ன இது நடுவீட்ல தோள் மேல கை போட்டுட்டு, கைய எடுங்க” என்று அரவிந்தை கீர்த்தி அதட்டினாள்.

“அப்போ சரி, வா ரூமுக்குப் போகலாம்” என்று சீரியஸாக அவள் கைபற்றி அரவிந்த் இழுக்க...

“அச்சோ, என்ன இது இப்படி படுத்தறீங்க” என்று சிணுங்கியபடியே கையை விடுவித்தாள் கீர்த்தி.

“வா, கீர்த்தி” என்று சலுகையாக மறுபடியும், கீர்த்தியின் கையை... அரவிந்த் பிடிக்கப் போக... அப்போது பார்த்து தொலைபேசி தொல்லை செய்தது.

அழைத்தது ஹரிஷ்... “சொல்லு ஹரிஷ்” என்றபடி ஆர்வமாக அரவிந்த் பேச...

“டேய்! நான் அப்பா ஆகிட்டேன்டா” என்றான் சந்தோஷமாக

ஹரிஷ்.

“கங்க்ராட்ஸ் ஹரிஷ்” என்று அரவிந்த் கூறி, என்ன குழந்தைடா” என்றான்.

“பொண்ணுடா” என்று கூறிய ஹரிஷ், சரி நான் உன்னை அப்புறம் கூப்பிடுறேன்” என்று சொல்லி வைத்தான்.

ப்ரணவ்வை தோளில் இருந்து இறக்கிய அரவிந்த்... அப்படியே கீர்த்தியைத் தூக்கி... தட்டாமாலை சுற்றினான்.

“என்ன இது? விடுங்க! விடுங்க!” என்று அவள் கூற கூற மீண்டும் மீண்டும் சுற்றினான்.

“விடுங்க... அத்தையாவது, மாமாவாவது வந்துடுவாங்க” என்று அவள் கூறிய பிறகு, ஒரு வழியாக அவளை இறக்கியவன்... அவளை அப்படியே ரூமிற்கு தள்ளிச் சென்று “ஐ அம் ஸோ ஹாப்பி” என்றான்.

“என்ன” என்பது போல் கீர்த்தி பார்க்க...

“லிசாவிற்கு குழந்தை

பொறந்திருக்கு” என்றான் மிகவும் சந்தோஷமாக போன வருடம் தான் ஹரிஷின் வெகு நாளைய காத்திருப்பிற்கு பிறகு லிசா அவனை திருமணம் செய்ய ஒத்துக் கொண்டு இருவர் திருமணமும் நடந்தது.

“ஒரு வேளை நம்ம அம்முவை கேட்டுடுவாளோ லிசான்னு பயந்துட்டே இருந்தேன். இனிமே வரமாட்டா. அவளுக்கு இன்னொரு குழந்தை பொறந்துடுச்சே...”

“ஒரு வேளை வந்துட்டா” என்று கீர்த்தி கேட்க...

“வரமாட்டா என் உள் மனசு சொல்லுது” என்றான் அரவிந்த்.

அது கொடுத்த சந்தோஷம் கீர்த்தியை அணைத்துக் கொள்ள... அவன் கைகளில் அடங்கியவள்... வெகுநேரம் அப்படியே நின்றாள்.

இருவரும் ஒருவேளை லிசா வந்து விடுவாளோ என்று பயந்து கொண்டே இருந்தனர். இனி அந்த பயத்திற்கு அவசியமில்லை போல இருவருக்குமே தோன்றியது.

மனம் சொல்லொணா மகிழ்ச்சியில் திளைத்தது. அம்முவின் ரகசியம் அப்படியே தான் காப்பாற்றப்பட்டு வந்தது. அவள் அரவிந்தின் குழந்தையாக தான் சிதம்பரமும், ராணியும், ஏன்... தண்டபாணியின் அன்னையும் கூட நினைத்திருந்தனர்.

அதை... அந்த ரகசியத்தை உடைக்க கீர்த்தியோ, அரவிந்தோ... ஏன் ராஜேந்திரனோ கூட விரும்ப வில்லை.

காலம் அந்த ரகசியத்தை அப்படியே தான் கொண்டு சென்றது.

உள்ளே சென்று வெகு நேரமாகியும் வராத அம்மாவையும், அப்பாவையும் தேடி ப்ரணவும், அம்முவும் உள்ளே நுழைந்தனர்.

குழந்தைகள் வருவதைப் பார்த்து அவசரமாக கீர்த்தியும், அரவிந்தும் விலகினர்.

தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ப்ரணவை தூக்கி கீர்த்தி... "ப்ரணவ் குட் பாய் தானே அம்மா செல்போன் ஏன் உடைச்சீங்க" என்று கேட்க...

“அப்போதானே அம்மாக்கு புதுசு கிடைக்கும்” என்று பதிலளித்த அம்மு... தன் தந்தைக்கு ஹை-பை கொடுக்க...

“ஆமாம் ஆமாம்” என்பது போல ப்ரணவும் தலையாட்டினான்.

“அம்மும்மா அவன் தப்பு பண்ணினா சப்போர்ட் பண்ணக்கூடாது” என்று கீர்த்தி அம்முவிற்கு அறிவுறுத்த...

“சரி அம்மா, ஐ வில் ட்ரை” என்றாள் அம்மு.

“என்ன பேசினாலும் இந்த இங்க்லீஷ் இவளை விட்டுப் போகாதுடா” என்று அரவிந்தும், கீர்த்தியும் ஒருவரை ஒருவர் பார்த்து ரகசிய புன்னகை புரிந்தனர்.

அம்மாவும், அப்பாவும் புன்னகைக்க... அந்த புன்னகை மக்களையும் தொற்ற... அம்முவின் ரகசியம் அவர்களோடே புதைந்து போக... அம்மு சலுகையாக அரவிந்தின் மேல் ஏறிக் கொண்டு கீர்த்தியை நோக்கி புன்னகை புரிந்தபடியே... அரவிந்த் தோள் சாய்ந்தாள்.

அந்த இல்லறத்தில் சந்தோஷம் பொங்கியது. இருவர் பார்வையும் ஒருவரை ஒருவர் தழுவி நிற்க... அது, “உன் பார்வை நானறிவேன்” என்று உணர்த்தியது.

“எல்லாப் பிரச்சனையும் ஓரளவு சால்வ் ஆகிடிச்சி கீர்த்தி... இப்போ கூட நீ என்னைப் பார்த்து அந்த வார்த்தை சொல்ல மாட்டியா” என்றான் அரவிந்த்.

அவன் பார்வையைப் பார்த்தவள்... “ஐ லவ் யூ” என்றாள் சந்தோஷமாகவே. “இதை சொன்னாதான் உங்களுக்குத் தெரியுமா... இல்லைன்னா என்னை உங்களுக்குத் தெரியாதா...”

“அது அப்படியில்லை கீர்த்தி... நீ எத்தனை வருஷமா இந்த வார்த்தையை என்னைப் பார்த்துச் சொல்லாமயே இருக்கத் தெரியுமா... கல்யாணத்துக்கு முன்ன இருந்து கேட்கறேன்... நீ கல்யாணத்துக்கு பிறகு கூட சொல்லலை” என்றான் சற்று முறுக்கியபடி...

“அதான் இப்போ சொல்லிட்டேனே” என்று செல்லம் கொஞ்சினாள் அவன் மனைவி.

அவன் அசையாது நிற்க... “சரி வேண்டாம்னா திரும்ப குடுத்துடுங்க...” என்றாள்.

‘திரும்ப குடுக்கறதா எப்படி” என்று அவன் ஆராய்ச்சி பார்வை பார்க்க... “இப்படி பார்த்தே என்னைக் கொல்றான்டா’ என்று மனதிற்குள் நினைத்தவள்.

“என் ஐ லவ் யூ வ திரும்ப குடுங்க” என்றாள்.

அவன் விழிக்க... “ஐ லவ் யூ சொல்லுங்க” என்று கேட்டு... அவனை அதைச் சொல்ல வைத்து... “சொல்லிட்டீங்களா” என்று ரசித்துச் சிரிக்க... குழந்தையை விட்டு “போடி” என்று அவளை வளைத்துப் பிடிக்க... அவன் கைக்குள் சுகமாக அடங்கினாள்... இருவர் பார்வையும் குழந்தைகளைத் தழுவியது.